தமிழ்ப்புத்தகாலயம்

# ஈழத்தில் தமிழ் இலக்கியம்



ர் கா. சிவத்தம்பி

R. R. No 582/55/1
582
N78
102955

# ஈழத்தில் தமிழ் இலக்கியம்

0-
N78.

பேராசிரியர் :

Dr. கா. சிவத்தம்பி

தமிழ்ப் புத்தகாலயம்

576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

# ஈழத்தில் தமிழ் இலக்கியம்

528
24.4.78

பேராசிரியர், டாக்டர்
கார்த்திகேசு சிவத்தம்பி, M.A., (இலங்கை),
Ph.D. (பர்மிங்ஹாம்)
இணைத் தமிழ்ப் பேராசிரியர்
இலங்கைப் பல்கலைக்கழகம், வித்தியோதய வளாகம்
நுகேகொடை, இலங்கை

ASSISTANT REGISTRAR OF BOOKS
APR 1978
MADRAS 600 009
(I & PR) DEPARTMENT

தமிழ்ப் புத்தகாலயம்
576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

ஈழத்தில் தமிழ் இலக்கியம் (வரலாற்றுச் சக்திகள், வளர்ச்சி நெறிகள் பற்றிய கட்டுரைத் தொகுதி)

நாவல் நூற்றாண்டு விழா நினைவு வெளியீடு

முதற் பதிப்பு : ஏப்ரல், 1978

விலை ரூ. 6-00

O—
N78

EEZATHIL TAMIZ ILLAKKIYAM

a collection of essays on the historical factors and development methods of Tamil literature in Srilanka

by Dr. K. SIVATHAMBY

(C) Karthigesu Sivathamby, M.A., (Srilanka), Ph.D. (Birmingham) Associate Professor of Tamil University of Srilanka, Vidyodaya campus, Nugegoda.

First Edition : April, 1978

176 Pages

18×12·5 cms

10 Pt. Letters

11·6 kg. White Printing Paper

Cardboard Binding

Price : Rs. 6–00

TAMIL PUTHAKALAYAM

52, T. P. Koil Street,

Triplicane :: Madras–600 005

1029155

அச்சிட்டோர் :

அன்னை அஞ்சுகம் அச்சகம்

இராயப்பேட்டை

சென்னை-600014

என் குடும்பத்தினரின்
நன்றிக்கையுறையாகத்
திருமதி. மகாலட்சுமி நடராசாவுக்கு
இந்நூல் சமர்ப்பணம் -
கா. சிவத்தம்பி

## உள்ளே...


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 5 - 8 |
| 1. | ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக் கட்டங்கள்—1948 வரை | 9 - 38 |
| 2. | இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சியும் (1954-1970) | 39 - 85 |
| 3. | ஈழத்தின் ஆக்க இலக்கிய நூல் வெளியீடு (1948-1970) | 86 - 117 |
| 4. | 1970க்குப்பின் ஈழத்திலக்கியத்தில் தோன்றிய முக்கிய வளர்ச்சி நெறிகள் | 118 - 127 |
| 5. | ஈழத்தில் தமிழ் இலக்கிய விமரிசனம் | 128 - 139 |
| 6. | ஈழத்துத் தமிழ் நாடகங்கள் | 140 - 156 |
| 7. | யார் இந்த யாழ்ப்பாணத்தான்? | 157 - 176 |

# முன்னுரை

இலங்கையின் தனித்துவத்தையும் தமிழ் இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் ஓர் இலக்கிய மரபு இலங்கையில் தோன்றி வளர்ந்த முறையினைச் சிறப்பாக இந்திய வாசகர்களுக்கு எடுத்துக் காட்டுவதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். அப்பண்பு நன்கு முகிழ்க்கத் தொடங்கிய காலமான 1948—1970க் காலப் பிரிவையே இது விதந்து காட்டுகின்றதெனலாம்.

இலங்கையிலே தோன்றிய தமிழ் இலக்கியங்களை தமிழகத்து இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி அவற்றின் இலக்கியத்தரத்தை மட்டிடுவது இந்நூலின் நோக்கமன்று. இலங்கையினுள் இத்தகைய இலக்கியங்கள் தோன்றுவதற்குத் காலாக விருந்த சமூக பண்பாட்டு வரலாற்றுச் சக்திகளை இந்நூலிற் காணலாம். இவ்வாறு அச்சக்திகளை எடுத்துக் கூறும்பொழுது அத் 'தேசிய இலக்கியத்'

திற்கென முன்னின்றுழைத்த முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் பணிகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளனவெனினும், முற்போக்கு இலக்கிய இயக்கத்தினை எதிர்த்தோரின் முயற்சிகளை மூடி மறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது இயக்கங்களின் பிரதிநிதியாக விளங்கியோரின் பெயர்களே தரப்பட்டுள்ளன. இப் பண்பினைச் சிறப்பாக ஐந்தாவது அத்தியாயத்திற் காணலாம். நான்காவது அத்தியாயம் இலக்கிய வளர்ச்சிகளின் கால முழுமையைத் தருவதாக உள்ளது.

முதலாவது அத்தியாயமான "ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக் கட்டங்கள்—1948 வரை" எனும் பகுதி ஈழத்து இலக்கியத்தின் தேசியப் பரிமாணத்தை எடுத்துக் காட்டும் முறையிலேயே எழுதப்பெற்றுள்ளது. எனவே ஈழத்திலக்கிய வளர்ச்சி பற்றிய சகல தகவல்களையும் அதனுள் எதிர்பார்ப்பது தவறாகும். அத்தகைய தகவல்கள் வேண்டுவோர் கலாநிதி பொ. பூலோகசிங்கத்தின் "ஈழத்திலக்கிய அறிஞர்களின் பெருமுயற்சிகள்" எனும் நூலையும் கனக.செந்திநாதனின் ஈழத்திலக்கிய வரலாற்று நூலையும் வாசித்தல் வேண்டும்.

ஆறாவது அத்தியாயமாக அமைந்துள்ள கட்டுரை, ஈழத்துத் தமிழ் நாடக மரபினை எடுத்துக் காட்டுவதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. இறுதிக் கட்டுரை "யாழ்ப்பாணத்தமிழர்"களின் சமூக-பண்பாட்டுப் பின்னணியை விளக்குகின்றது. ஈழத்து ஆக்க இலக்கியங்கள் பலவற்றின் கதைப் பொருளை விளங்கிக் கொள்வதற்கு இக்கட்டுரை பயன்படும்.

இந்நூலமைப்பைப் பற்றி நோக்கும்பொழுது இரண்டாவது, மூன்றாவது, ஐந்தாவது, ஆறாவது,

ஏழாவது, கட்டுரைகளே இதன் முக்கிய அங்கங்களாக, ஆழமாக ஆராயப்பெற்றனவாக அமைவதைக் காணலாம். முதலாவதும், நான்காவதும் வரலாற்று முழுமையைத் தருவதற்காக இணைக்கப் பெற்றுள்ளன. எனவே இவற்றில் நூலாசிரியன் தானே பெரிதும் விழைந்த ஆய்வு ஆழத்தினைப் பூரணமாகக் காணமுடியாது. எனினும் பருமட்டான இலக்கிய வரலாற்று நோக்கினை அளிக்க இவை உதவுமென்றே கருதுகின்றேன்.

இந்நூல் அண்மையில் நான் தமிழகத்திற்குச் சென்றிருந்தபொழுது, அங்கு ஏற்பட்ட நட்புறவு நிலைப்பட்ட உரையாடல்களின்பொழுது எடுத்துக் கூறப்பட்ட ஒரு தேவையினைப் பூர்த்திசெய்வதற்காக, அங்கிருந்த காலத்திலேயே தொகுத்துத் தயார் செய்யப்பட்டதாகும். இந்நூலில் வரும் கட்டுரைகளை ஒருங்கு சேர்த்து அவற்றிற்கு இயைபும் ஒருமையும் உண்டாக்கும் பணியில் நான் படுபட்டிருந்தபொழுது எனக்குப் பலவகைகளில் பல நண்பர்கள் உதவிபுரிந்தனர். தமிழ்ப்புத்தகாலயத்தைச்சேர்ந்த திரு. கண. முத்தையா, திரு. வைத்தியலிங்கம் (கண்ணன்), பாட்டாளிகள் வெளியீட்டைச்சேர்ந்த திரு. இரா. பாண்டியன் ஆகியோரின் உதவிகள் மறக்கத்தக்கவையன்று, அவர்கட்கு என் நன்றிகள்.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக் கட்டங்கள் பற்றிய இச் சிறுநூலை எழுதி முடித்துள்ள இவ்வேளையில், இத்துறை பற்றி என்னை முதன் முதலிற் சிந்திக்கவைத்த என்னருமை ஆசிரியர் காலஞ்சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களை நினைவுகூருகின்றேன்; அத்துடன் ஈழத்தின் தேசிய இலக்கிய இயக்கத்தில் நாம் ஈடுபட்டிருந்தபொழுது எமக்குப்பேரூக்கமளித்து பலவகைகளிலும் உதவிய பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது தன்னல

மற்ற பண்புகளையும் மீண்டும் எண்ணிக்கொள்கின்றேன். இத்தகைய ஒரு நூலினை நான் எழுத வேண்டியதன் அத்தியாவசியத்தை அன்புரிமை கொண்டு வற்புறுத்திய நண்பர்கள் டொமினிக் ஜீவா, சி. மௌனகுரு, எம். சிறீபதி ஆகியோர்களையும் நினைவுகூருகின்றேன்.

இந்நூலின் இரண்டாவது அத்தியாயமாக இடம் பெறும் கட்டுரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1974 இல் நடத்திய தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டின்பொழுது வெளியிடப்பெற்ற மலரில் வெளியானது. மூன்றாவது கட்டுரையும் ஆறாவதுகட்டுரையும் மல்லிகையில் வெளியானவை. ஏழாவது கட்டுரை "அஞ்சலி" எனும் சஞ்சிகையில் வெளியானது. இப்பிரசுரங்களின் பொறுப்பாசிரியாளர்களுக்கு என் நன்றி.

சென்னை
30—1—78

கார்த்திகேசு சிவத்தம்பி

# 1

# ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக் கட்டங்கள்

## — 1948 வரை

---

## I

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் இன்று உலகின் பல பாகங்களிலும் வசிக்கின்றார்கள். அவ்வாறு வசிக்கும் தமிழர்களின் தொகை, அவர்கள் வசிக்கும் பிரதேசம், பிரதேசநிலைப்பட்ட நிலையான வாழ்க்கை காரணமாக அவர்களிடையே காணப்படும் சமூக அமைப் பிறுக்கம், வாழ்க்கை முறைமைகள், பண்பாட்டமிசங்கள் ஆகியனவற்றைக் கொண்டு பார்க்கும்பொழுது இந்தியா (தமிழ்நாடு அரசின் ஆட்சிப் பிரதேசம்), இலங்கை,

மலேசியா, தென்னுபிரிக்கா, பீஜி, மொரிஷியஸ் முதலான இடங்கள் மிக முக்கியமானவையாகும். இவற்றுள் இந்தியா இம் மக்கள் கூட்டத்தினரின் பாரம்பரிய வாழிடமாகும். இப்பிரதேசத்திலிருந்தே மற்றைய நாடுகளுக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்தனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுள் இலங்கை மிக முக்கியமானதாகும். ஏனெனில், இலங்கை தவிர்ந்த மற்றைய நாடுகட்கான புலப்பெயர்ச்சி கி. பி. பத்தொன் பதாம் நூற்ருண்டுக்குப் பின்னரே தொடங்கிற்று. ஆனுல் இலங்கையைப் பொறுத்தவரையில் இலப்புலப்பெயர்வு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நடைபெற்று வந்துள்ளது. புவியியல் அண்மையே இதற்குக் காரணமாகும். இப்புலப் பெயர்ச்சியின் அளவும் தொகையும் காரணமாக, இலங்கையிலே குடியேறிய தமிழ் மக்கள் அந்நாட்டில் தமக் கென ஒரு தனி வாழிடத்தைக் கொண்டனராகவுள்ளனர். அதுமாத்திரமல்லாது, தமிழகத்தினின்றும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளமையால், தமக்கெனப் பல தனித்தன்மைகளைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். தமிழ்மொழி என்ற பொதுத் தொடர்பொன்றினையும் அது வழியாகவும், புவியியல் அண்மைநிலை காரணமாகவும் வரும் பெரும்படி யான பொதுப் பண்புகளிடையே, தனித்துவத்தை வன்மை யுடன் எடுத்துக்காட்டும் பல்வேறு அமிசங்களையுடையோ ராய் வாழ்ந்து வருகின்றனர். இத் தனித்துவத்தை மொழி யமைதி முதல் சமூக அமைப்புவரை, உடை முதல் உணவு வழக்கங்கள் வரை, பொருளியலமைப்பு முறை முதல் உலக நோக்க வேறுபாடு வரை பல அமிசங்களிற் காணலாம்.

இலங்கையில் தமிழ் இலக்கியம் வளர்ந்துள்ள வரலாறு இப்பொதுமையையும் தனித்துவத்தையும் நிலைநாட்டுவதாக உள்ளது. தமிழ் இலக்கியம் எனும்பொழுது அது தமிழ் நாட்டில் மாத்திரம் தோன்றும் தமிழிலக்கியமாகவே இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆங்கில நாட்டு இலக்கியமும், அமெரிக்க இலக்கியமும் ஆங்கில மொழியில்

எழுதப்படினும் சொற்கள், மொழி நடை முதல் இலக்கியப் பொருள்வரை பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளது போன்று இந்தியாவில் தோன்றி வளர்ந்துள்ள தமிழ் இலக் கியத்துக்கும் இலங்கையில் தோன்றி வளர்ந்துள்ள இலக் கியத்துக்கும் வேறுபாடுகள் பல உள்ளன. அமெரிக்க வாழ்க்கை முறையும் பிரிட்டிஷ் வாழ்க்கை முறையும் வேறு பட்டன.

எனவே தமிழ் இலக்கியம் என்ற பொதுப் பொருளின் ஆய்வு இலங்கையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களையும் சேர்த்துக்கொள்ளாவிடின் பூர்த்தியாகாது. இத்தகைய ஒரு நிலை மலேசியாவிற்றேன்றி வளரும் தமிழ் இலக்கியத்துக்கும் ஏற்பட்டு வருகின்றது. ஆனல் இலங்கைத் தமிழ் இலக்கி யத்தின் தனித்துவப் பாரம்பரியம் பல நூற்ருண்டு வரலாற் றினடியாகத் தோன்றியது ஆகும்.

இலங்கையை "ஈழம்" எனக் கூறுதல் பழந்தமிழ் இலக்கிய மரபு. தமிழுடனுள்ள பொதுத் தொடர்பையும், அதேவேளையில் தனித்துவத்தையும் நன்கு எடுத்துக் காட்டு வதற்கு இப்பதப் பிரயோகம் பொருத்தமானதாக அமைந்துள்ளது. இதனல் தமிழிலக்கிய வளர்ச்சியைக் குறிப் பிடும்பொழுது "இலங்கை" எனும் சொல்லிலும் பார்க்க "ஈழம்" என்னும் சொல்லே பெருவழக்காகக் கையாளப்படு கின்றது. இப் பதப்பிரயோகத்தினை மீட்டெடுத்துச் சனரஞ் சகப் படுத்தியோர், 1954 முதல் இலங்கைத் தமிழிலக் கியத்தின் தேசியப் பரிமாணத்துக்காகப் போராடிய முற்போக்கு இலக்கிய இயக்கத்தினரே.

ஈழத் தமிழிலக்கியத்தின் சமூக அடிப்படை இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழ்மொழி பேசும் மக்கள் கூட்டத்தின் வாழ்க்கையமைப்பே ஆகும். இம் மக்கட்கூட்டத்துள் மூன்று முக்கிய பிரிவினரைக் காணலாம். அகமொழி வேறுபாடுகள், மதப் பண்பாட்டு வேறுபாடுகள், சமூக அமைப்பு வேறு பாடுகள் ஆகியன கொண்டு இம்மூன்று குழுவினரையும் பிரித்துக் காணலாம்.

1. இலங்கையில் பாரம்பரியமாக, வரலாற்றுக் காலம் முதல், வாழ்ந்துவரும் தமிழ்மக்கள். இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலே பெருந்தொகையினராகக் காணப்படுகின்றனர்.
2. இலங்கையில் வாழ்ந்துவரும் பாரம்பரிய இஸ்லாமிய மதத்தினர். இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளிலும் மத்திய பகுதி களிலும் வாழ்ந்து வருகின்றனர்.
3. பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுக் கூற்றுக் காலப் பிரிவில், பிரித்தானிய ஆட்சியினரால், இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப் பட்டு இலங்கையின் தேயிலை, இரப்பர்ப் பெருந் தோட்டங்களிலே வாழ்ந்துவரும் தென்னிந்தியத் தமிழ் மக்கள். இவர்கள் தமது பாரம்பரியத் தென் னிந்திய வாழ்க்கை முறைமைகளைத் தொடர்ந்து பேணி வருகின்றனர். இவர் பிரித்தானிய ஆட்சியின் முடிவில் இலங்கையரல்லாதவர் எனக் கொள்ளப் பட்டனர். இதனல் அவர்களுட் பெரும்பாலானேரை மீண்டும் தென்னிந்தியாவுக்கு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் கடந்த 25 வருடகால அரசியல் மாற் றங்கள் காரணமாக, இப்பிரிவினர் மூவரையும் மொழி கொண்டு ஒரே தொகுதியினராக நோக்கும் முறைமை வளர்ந்துள்ளது. மூன்றுவது பிரிவினரையும் முதலாவது பிரிவினரையும் இறுக இணைப்பதற்கான அரசியற் சமூக இயக்கங்களும் காணப்படுகின்றன.

ஆயினும் இலங்கையின் பண்பாட்டமைப்பில் இலங்கைத் தமிழர்களெனப் பெயர்பெற்றவர்கள் முதலாவது பிரிவினரே. இலங்கையின் வரலாறு தெளிவுறத் தெரியும் காலம் முதல், நடைபெற்று வந்த பல்வேறு தென்னிந்தியப் புலப்பெயர்வு காரணமாக இலங்கை வந்தடைந்து புவியியலடிப்படையி லும்,சமூக, பண்பாட்டு அடிப்படையிலும் தனித்துவத்துடன் வாழ்ந்துவரும் இவர்கள், இலங்கையின் முக்கிய சிறுபான்மை

யினராவர். புள்ளி விபரக் கணக்குப்படி கூறுவதானல் இலங்கையின் முழுச் சனத்தொகையில் (13, 700,000–1975) இலங்கைத் தமிழர்—11.2%இனர், இந்தியத் தமிழர் 9.3% இனர், இலங்கை முஸ்லிம்கள் 6·5% இனராவர். தமிழ்மொழி பேசுபவர்கள் முழுச்சனத் தொகையில் 27% விகிதத்தைக் குறிப்பிடலாம். இவர்களுள் மேற்கூறிய 11·2% இனருக்கு இலங்கையில் வரலாற்றுப் பழமையுண்டு. இதன் காரணமாக அவர்கள் பற்றிய ஆய்வுகள் முக்கியமாகின்றன.

## II

இலங்கையில் தமிழ் மக்களுக்குள்ள தேசிய இயைபையும் தனித்துவத்தையும் இலங்கையின் அரசியல் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் வரலாற்றைப் பின்வரும் காலப்பிரிவுகளாக வகுத்துக் கொள்ளுதல் வழக்கு.

**முக்கிய தலைநகரங்களின் பெயர்கள்**

அநுரதபுரக் காலம் — கி. மு. 3ம் நூற்றாண்டு முதல் கி. மு. 10–ம் நூற்றாண்டு வரை

பொலொன்னறுவைக் காலம் — கி.பி. 1017 முதல் 1215 வரை

கோட்டைக் காலம் — 13-ம் நூற்றாண்டு முதல் 15–ம் நூற்றாண்டு வரை

போர்த்துக்கேயர் காலம் — 1505 — 1658

ஒல்லாந்தப்பர் காலம் — 1658 — 1796

ஆங்கிலேயர் காலம் — 1796 — 1948

சுதந்திர ஆட்சிக் காலம் — 1948

கி.பி. 1215ல் கலிங்க நாட்டைச் சேர்ந்த மாகன் என்பான் இலங்கையைக்கைப்பற்றி அதன் வடக்கு, கிழக்குப் பாகங்களைத் தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான்

(1215–1255). அதன் பின்னர் மலாய்த் தீபகற்பத்து, அரசனான சந்திரபானு இப்பகுதிகளைத் தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான். அவனது ஆட்சியின் பின்னர், இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாண இராச்சியம் எனக் கிளம்பியது. 13-ம் நூற்றாண்டினிறுதியில் இப்பகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் கீழ் வந்தது. ஆரியச் சக்கரவர்த்திகள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிராமணப் படைத் தலைவர் பரம்பரையினர் என்பர். இவர்களது ஆட்சி கி. பி. பதின் மூன்றாம் நூற்றாண்டுமுதல் 17-ம் நூற்றாண்டுவரை, அதாவது போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப் பற்றும் வரை [1619] வரை நிலவிற்று. போர்த்துக் கேயரின் பின்னர் வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் தொடர்ந்து ஆட்சி நடத்தி வந்தனர்.

இதனால் இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல், சமூகத் தனித்துவம் இலங்கையின் வரலாற்றிற் பேணப்பட்டு வந்தது.

இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களுக்கும், சிறப்பாக வடக்குப் பகுதிக்கும் தென்னிந்தியாவுக்குமுள்ள தொடர்புகள், புவியியல் அண்மை காரணமாகத் தொடர்ந்து பேணப்பெற்று வந்துள்ளது. இலங்கை முழுவதையும் எடுத்துக்கொண்டால், மொழி மதம் பண்பாடு முதலிய துறைகளில் இத் தனித்துவம் பேணப்பட்டதெனலாம். கிறிஸ்துவத்தின் வருகை மத ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்துள்ளது எனலாம். ஆனால் இலங்கை முழுவதிலும் கிறித்தவர்களின் தொகை 7.9% ஆகையால், இம்மத வேறுபாடு பெருத்த சமுதாய வேறுபாடுகளுக்கு இடமளிக்கவில்லையெனலாம். இதனால் மொழி வழிப் பண்பாடு பேணப் பெற்றதெனலாம். இலங்கை முழுவதையும் ஒருங்குசேர வைத்து நோக்கும்பொழுது சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் சிங்கள மொழி — பௌத்த மத இயைபும், தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி-இந்துமத இயைபும் முக்கியமாகின்றன. முஸ்லிம் களைப் பொறுத்தவரையில் அவர்கள் நாடுமுழுவதிலும்

காணப்படுகின்றனர். அவர்கள் இலங்கையில் மொழியிலும் பார்க்க மதத்தையே தமது பண்பாட்டுத் தனித்துவத்துக் கான அடிப்படையாகக் கொண்டுள்ளனர். தெற்கு, மத்திய பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் பெரும்பாலும் வர்த்தகர் களாகவும் கிழக்கு, வடக்குப் (மன்னர்) பகுதிகளிலுள்ள முஸ் லிம்கள் பெரும்பாலும் விவசாயிகளாகவுமுள்ளனர். இலங் கைத் தமிழ்மக்களின் பாரம்பரிய பொருளாதார அமைப்புப் பற்றிய விபரங்களை எனது 'நாவலும் வாழ்க்கையும்' என்ற நூலில் காணலாம். வடபகுதித் தமிழரின் சமூக பொரு ளாதாரப் பண்புகளை இந் நூலில் வரும் இறுதிக் கட்டுரை மூலம் அறிந்து கொள்ளலாம்.

## III

மேலே விவரிக்கப்பெற்ற வரலாற்றடிப்படையில் இலங் கையின் தமிழ் இலக்கிய வரலாற்றை வகுக்கும்பொழுது சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. முதலாவது, இலக்கியச் சான்றுகளின் ஆட்சி நிலைச் சார்பாகும். பிரித்தானியர் ஆட்சிக் காலத்துக்கு முன்னர் தோன்றிய இலக்கிய ஆக் கங்கள் பற்றிய பட்டியலை நோக்கும்பொழுது அவை மேல் நிலை இலக்கிய ஆக்கங்களாக, அதாவது ஆட்சியாளரைச் சார்ந்த இலக்கிய ஆக்கங்களாகவே காணப்படும். அடிநிலை மக்களின் சமூக முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டு வனவாக அமையவில்லை. இது இலக்கியம் பேணப் படும் தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது. பல்லவர் காலம் முதல் விஜயநகர நாயக்கராட்சிக் காலம் வரை இந்நிலை தமிழ் நாட்டிலும் ஓரளவு நிலவுகின்றதென லாம். இரண்டாவது, பேணப்பட்டுள்ள இலக்கியங்களும் யாழ்ப்பாண அரசு நிறுவப்பட்ட பின்னரே பெரிதும் பேணப் பட்டுள்ளனவென்பது தெரிகின்றது. இதனால் பிரித்தானிய ஆட்சிக் காலம் வரையுள்ள காலப்பகுதியில் தமிழ் மக்களின் நிலைமையை இலக்கியச் சான்றுகள் மூலம் மாத்திரம் முற்று

முழுதாக அறிந்து கொள்ள முடியாத ஒருநிலை ஏற்படுகின்றது.

இவ்விரு முக்கிய வரையறைகளையும் மனதிற் கொண்டு ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பின்வரும் காலப்பகுதிகளாக வகுத்துக் கொள்ளலாம்.

1. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையுள்ள காலம்.
2. யாழ்ப்பாண இராச்சியக் காலம்—இது **ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்** என்றே எடுத்துக் கூறப்படல் மரபு.
3. போர்த்துக்கேயர் காலம்.
4. ஒல்லாந்தர் காலம்.
5. பிரித்தானியர் காலம்.

இதனை உபபிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

(அ) கிறித்தவத்தின் பரவலும் சமூக பண்பாட்டுத் தனித்துவப் பேணுகையும் (1796-1879). ஆறுமுக நாவலர் (1822-79) இக்காலகட்டத்தில் முக்கியத்துவம் பெறுவர்.

(ஆ) ஆங்கில ஆட்சி, மத்தியதர வர்க்கத் தோற்றக்காலம் (1900–1948). சுதந்திரம் வரை.

(இ) தேசிய இலக்கிய காலம் 1956—

## VI

யாழ்ப்பாண இராச்சியத்தின்தோற்றத்துக்குமுன்னுள்ள இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றி அறிந்து கொள்வதற்கு தமிழக வரலாற்றினடியாகக் கிடைக்கும் சில உதிரியான சான்றுகளே உள்ளன. அவற்றுள் முக்கியமானது சங்க இலக்கியப்புலவர் பட்டியலில் வரும் ஈழத்துப் பூதன் தேவனார் எனும் பெயராகும். இவரது செய்யுள்களாகக் குறிப்பிடப் பெறுவனவற்றில் ஈழம்பற்றிய எவ்விதக் குறிப்புமில்லை.

பூதன்றேவனர், ஈழத்துப்பூதன்றேவனர், மதுரை ஈழத்துப் பூதன்றேவனர் என்ற பெயர் விகற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் வரும் "ஈழம் என்னும் சொல் இலங்கை நாட்டினைத்தான் குறிப்பிடுகின்றது என்று சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதா என்பது சிந்திக்கத்தக்கது" எனக்கலாநிதி பூலோகசிங்கம் எச்சரிப்பர். எனினும் ஈழத்து இலக்கிய மரபின் 'ரிஷிமூலமாக' இவரைக் கொள்வது இன்று வழக்கு. தேவாரங்களில் வரும், திருக்கேதீச்சுரம், திருக்கோணேச்சுரம் சுதேச இலக்கிய முகிழ்ப்புக்கள் பற்றி எதுவும் குறிப்பிடா.

தமிழர்கள் வாழ்ந்தமை பற்றியும் அவர்தம் வாழ்க்கை முறை பற்றியும் இலக்கியச்சான்றுகள் இல்லையெனினும் மகாவமிசமும், கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

சிங்கள மன்னர்களின் தலைநகரமாக அமைத்திருந்த அநுராதபுரியிலேயே இதுவரை கிடைத்த இலக்கியச் சான்றுகளுள் காலத்தால் முந்தியதெனக்கருதப்படத்தக்க இலக்கிய வெளிப்பாடு, வெண்பா அமைப்பில், கல்வெட்டொன்றிற் காணப்படுகின்றது. இக் கல்வெட்டில் பொரித்தப் பெரியார் ஒருவர் போற்றப்படுகின்றார். "சிங்கள மன்னர் ஆட்சி புரிந்த பகுதிகளிலே தமிழ்ச்செய்யுள் வழக்கு போற்றப்படுவதை நோக்குமிடத்து, பாரம்பரியமாகத் தமிழ் பேசப்பட்ட பகுதிகளில் இலக்கிய முயற்சிகள் நடைபெற்றனவாதல் வேண்டும் எனக் கருதவதிற் பிழையிருப்பதற்கில்லை" எனப் பூலோகசிங்கம் கூறுவது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதே.

இவ்வுண்மையை மேலும் வலியுறுத்துவதாக அமைகின்றது, இலங்கையில் இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களுட் காலத்தால் முந்திய நூல் பற்றிய தகவல். கோட்டை இராச்சியத்தை ஆண்டுவந்த மூன்றும் பராக்கிரமபாகு காலத்தில் 1310 இல், அவனது அரசவையிலே அரங்கேற்றப் பெற்ற தேனுவரைப் பெருமாள் என அழைக்கப்பெறும், போசராஜர் என்பவர் இயற்றிய "சரகோதிடமாலை" எனும் சோதிட நூலே இன்றுள்ள, காலத்தால் முந்திய இலங்கைத் தமிழ் நூலாகும்.

இலங்கையிற் சோழராட்சியின் பின்னர், சிங்கள அரசவைகளிலே தமிழ் முக்கிய இடம் வகித்த தெனலா மெனப் பலர் கூறுவர். சிங்கள மக்களிடையே தமிழ் வியாப்தியுள்ளமைக்கு இலங்கையில் பௌத்தமத நடவடிக்கைகளில் தமிழகத்தைச் சேர்ந்த பிக்குகள் பெற்ற முக்கிய இடமும் இங்கு நோக்கப்பெறல்வேண்டும். தமிழ் பௌத்தப்பள்ளிகளிலே பயிற்றுவிக்கப்பட்டதென்பதற்குச் செல்வகினி சந்தேசம் சான்று பகரும்.

அநுரதபுரிக்காலத்தில் தலைநகரில் வாழ்ந்த தமிழ் வணிகர்கள் பற்றிய குறிப்புக்கள் இருக்கும் அதே வேளையில், வடபகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களது இலக்கிய வெளிப்பாடுகள் காணப்படாது போனமைக்கு இலக்கியப் பேண்முறையே காரணமாகக்கொள்ளப்படல் வேண்டும். சிங்கள இலக்கிய வரலாற்றிலும் இத்தகைய ஒருநிலை உண்டு.

## V

அடுத்துவரும் ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் ஈழத்தில் தனித்துவமான ஓர் இலக்கியப்பாரம்பரியம் தோன்றுவதற்கான அடிக்கல் நாட்டப்பெற்ற காலம் எனலாம்.

இவ்வமிசத்தில் முக்கிய இடம் பெறுவனவாக அமைவன இக்காலத்தில் தோன்றிய வரலாறு சார்ந்த நூல்களாகும். குறிப்பிட்ட ஒரு சமுகத்தினர் தமது சமுக நிலைபாடுபற்றியும் அதன் புவியியற்களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும் பொழுது "வரலாற்றுணர்வு" ஏற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக்கொள்ளும் பிரக்ஞை யேற்படும்பொழுதுதான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளரின் வர்க்கநிலைப்பட்ட உணர்வாக முகிழ்க்குமென்பர். இக்காலத்திலேயே யாழ்ப்பாணவரலாற்று மூலங்களென இன்று கொண்டாடப்பெறும் வையாபாடலும் கைலாயமாலையும் தோன்றின. கிழக்கு மாகாணத்துத் தமிழர்களது வாழ்க்கைக் களப்பிரக்ஞை கோணேசர் கல்வெட்டிலிருந்து

தெரிய வருகின்றது. இத்தகைய சூழ்நிலையிற்றோன்றும் நூல்கள் மதநம்பிக்கைப் போர்வைக்குள் வரலாற்றைத் திணித்துக் கூறுவது ஒரு மரபாகும். இந்தியப் புராண இலக்கியங்களின் வரலாற்று உட்கிடக்கையை ஆராய்ந் தெடுத்துக் கூறியுள்ள ராய்சௌத்திரி போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்தகைய மதவழிநின்ற வரலாற்றுணர்வின் வெளிப்பாட்டில் ஸ்தல புராணங்கள் முக்கிய இடம் பெறுமென்பதை விசயநகர நாயக்க மன்னர் காலத் தமிழிலக்கிய வரலாறு நன்கு தெளியப்படுத்தும் கோணேஸ்வரத்தின் வரலாற்றைப் பௌராணிக மரபு வழிநின்று கூறும் தட்சிண கைலாய புராணம் இக் காலத்திலேயே தோன்றிய தென்பர்.

ஆட்சியாளரின் பெயரால் அரசியலொருமைப்பாடு காணும் பண்பிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது பரராசசேகரனுலா.

தமிழர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தாலும், முழு இலங்கையுடனும் அவர்கட்கிருந்த பண்பாட்டியை பின் மதவழி வெளிப்படாகக் கதிரைமலைப் பள்ளினைக் கொள் ளலாம். கதிர்காமம் தென்னிலங்கையிலுள்ள தல மாகும்.

இவ்வாறு உயர்நிலை இலக்கியங்கள் இலங்கைத் தமிழர் களின் அரசியற் சமூக, மதக்களத்தை விளக்க முனையும் அதே வேளையில், அடிநிலை மக்களின் மத நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைவது கோவலனூர் கதை போன்ற கதைப்பாடல்களாகும். இது இக் காலத்திலே தோன்றிய தென்பர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தின் முக்கிய இயக்க வெளிப்பாடாக அமைவது அரசகேசரி இயற்றிய இரகுவமிச மாகும். இது காளிதாசனின் ரகுவம்சத்தை முதனூலாகக் கொண்டியற்றப் பெற்ற தமிழ்ச் செய்யுள் நூலாகும். இதன் இலக்கியச் சிறப்பு பலராற் புகழப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிக் கடைக்கூற்றில் போர்த்துக்கேயர் தமது நிலையை ஸ்திரப்படுத்த முனைகின்

றனர். மதமாற்றத்தினை இம்முயற்சிக்கான திறவுகோலாக அவர்கள் கொண்டனர். சிறப்பாக வட இலங்கையின் மேற்குப்புறமான மன்னார்ப் பகுதியில் இம்முயற்சிகள் தொடங்கப்பெற்றன. இவற்றினை வெளிப்படுத்தும் கத்தோலிக்கக் கிறித்தவ முயற்சிகள் இக்கால கட்டத்திலேயே தோன்றிவிடுகின்றன.

## VI

ஆட்சி வரலாற்றுக் கட்டங்களாக நோக்கும்பொழுது, போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிகள் தனித்தனியே எடுத்து நோக்கப்படுமெனினும், இலக்கிய வரலாற்றினைப் பொறுத்த வரையும் இவையிரண்டினையும் ஒருங்கு சேரவைத்து நோக்கும்பொழுது ஈழத்திலக்கிய வளர்ச்சியின் முக்கிய பண்புகள் சில துலக்கமாகத் தெரிவதைக் காணலாம். காலநிலை நின்று கூறுவதானால், 1619 முதல் 1796 வரை இக்காலப் பகுதி நீடிக்கும்.

இக்கால கட்டத்திலே கிறித்துவம் தமிழரிடையே பரவுவதைக் காணலாம். போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தினையும், ஒல்லாந்தர் "இறப்பிறமாது" (*Reformed church*) என வழங்கப்பெறும் ஒல்லாந்தப் புரட்டஸ்தாந்தக் கிறித்தவத்தினையும் பரப்பினர். இவ்வாறு பரப்பும்பொழுது தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் சிற்றிலக்கிய வடிவங்களாகப் போற்றப்பெறும், அடிநிலை மக்கள் தொடர்புடைய இலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளனர் எனும் உண்மையை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். ஞானப்பள்ளு, சந்தியோகுமையூர் அம்மானை என்பன போர்த்துக்கேயர் காலத்திலும் மருதப்பக் குறவஞ்சி, திருச்செல்வர் அம்மானை என்பன ஒல்லாந்தர் காலத்திலும் தோன்றியவை. மதம் மாறிய தமிழர்கள் தம் புதிய மதச் சிறப்புக்களைத் தமது பாரம்பரிய இலக்கிய வடிவங்கள் கொண்டும் பார்க்கும் பொழுது இலக்கியத்தின் பயன்பாடு நன்கு புலனாகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த லோறன்சுப்புலவர்

மக்கள் பாடுவதற்கான கிறித்தவ கீதங்களையும், மக்கள் நடிப்பதற்கான கிறித்தவ. நாடகங்களையும் எழுதினார். கத்தோலிக்கப் புலவர்களுள் முக்கியமான இன்னொருவர் பூலோக சிங்கமுதலியாரவர்கள்.

இதே காலப்பிரிவில், சிறப்பாக ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சைவத் தொடர்பை வற் புறுத்தும் இலக்கியங்கள் பல தோன்றத் தொடங்கின. போர்த்துக்கேயர் காலத்தில் அவர்களது ஆட்சியின் கொடுமை தாங்காது தமிழகம் சென்று தமது மத இலக்கியப் பணியை மேற்கொண்டோர் ஞானப்பிரகாச முனிவர், தில்லை நாதத்தம்பிரான், வைத்தியநாதமுனிவர் என்போராவர். ஆனால் ஒல்லாந்தர் காலத்திலோ சைவத் தமிழ்ப் புலவர்கள் தமது மதத்தினை விதந்து இலக்கியங்கள் இயற்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. நல்லூர்ச் சின்னத்தம்பி புலவர் பாடிய கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, பருளை விநாயகர் பள்ளு என்பனவும், வரத பண்டிதர் பாடிய சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாதசுவாமி கிள்ளை விடுதூது முதலியனவும், சின்னத்தம்பிப் புலவர் பாடிய இணுவை சிவகாமியம்மை பதிகம் முதலியனவும் உதாரணங்களாக எடுத்துக் கூறப்படத் தக்கனவாகும்.

கிழக்கிலங்கையின் முக்கிய கோயில்களுள் ஒன்றான வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் பற்றியும் பாடல் ஒன்று இயற்றப் பெற்றதென்பர்.

நல்லூர்ச் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய கரவை வேலன் கோவை எனும் நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதாகும். ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் முதலியாராகக் கடமையாற்றிய கரவெட்டி எனும் கிரா மத்தைச் சேர்ந்த வேலாயுத முதலியார் பற்றிய இந்நூல் உள்ளூர்ப் பிரபுத்துவப் பரம்பரை பற்றித் தோன்றிய முதல் ஈழத்து நூலாகும். சமயச் சார்பற்ற, தேசிய நிலை நின்ற இலக்கியத்தின் கால்கோலாக இந்நூலினைக் கொள்ளல் வேண்டும்.

எனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தார் காலங்களில் ஈழத்தில் தேசவரையறையுடைய நூல்கள் தோன்றத் தொடங்குகின்றனவெனலாம். கிறித்தவத்தின் பரவலும், சைவத்தைப் பேணுதலும் தனித்தனி இலக்கிய முயற்சிகளாகத் தோன்றுகின்றன. சைவமதத்தினர் கிறித்தவத்தை எதிர்க்கும் இயக்கத்தின் வெளிப்பாடாக அமைந்த இலக்கியங்கள் அடுத்த காலப்பிரிவிற்றோன்றுவது தர்க்க ரீதியான வளர்ச்சியேயாகும்.

## VII

அடுத்து வரும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் இலக்கிய வரலாற்றை நான்கு உப—கட்டங்களாக வரிசைப்படுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும்.

1. ஆங்கில ஆட்சி வழங்கிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி ஆங்கிலத் திருச்சபையும், அமெரிக்க மிசனரிமாரும் மேற்கொண்ட கிறித்தவ மதமயப்படுத்தும் இயக்கத்தின் இலக்கிய வெளிப்பாடுகள்.

2. இக் கிறித்துவ மதமயமாக்க முயற்சியினை எதிர்த்து ஆறுமுக நாவலர் (1822—79) நடத்திய எதிர்ப்பியக்கத்தின் இலக்கிய வெளிப்பாடுகள்.

3. நாவலர் காலத்தின் பின்னர், 1880 முதல் 1933 வரை (இலங்கைக்கு வரையறுக்கப்பெற்ற பொறுப்பாட்சி வழங்கப்பட்ட காலம் வரை) இலங்கைத் தமிழர்களிடையே தோன்றிய ஆங்கிலம் கற்றுக் கிளம்பிய மத்தியதர வர்க்கத்தினரின் இலக்கிய முயற்சிகள். பாவலர் துரையப்பப்பிள்ளையை (1872–1929) இவ்வியக்கத்தின் பிரதிநிதியாகக் கொள்ளலாம்.

4. வரையறுக்கப்பட்ட பொறுப்பாட்சி வழங்கப் பெற்றதன் காரணமாகத் தோன்றிய, அடிநிலை மக்களின் விழிப்பாகவும் அவ்விழிப்புக்கான உந்துத

லாகவும் விளங்கிய இயக்கத்தின் இலக்கிய முயற்சிகள் (1933—1948 வரை). இம்முயற்சிகள் "மறுமலர்ச்சி", "பாரதி" எனும் சஞ்சிகைகளையும் அவற்றினை நடாத்திய அ. செ. முருகானந்தம், அ. ந. கந்தசாமி ஆகியோரை மையமாகவும் கொண்டே இக்கால இலக்கியங்கள் ஆராயப்படுகின்றன. "ஈழகேசரி"ப் பத்திரிகை முக்கியமான சமகால ஏடாகும்.

முதலாவது உபகட்டத்தில், முக்கிய இடம் பெறுவது மேற்குறிப்பிட்ட கிறித்தவ இயக்கவாதிகளின் கல்வித்துறை முயற்சிகளே. இவர்களது முக்கிய "இலக்கியங்கள்" என ஆராயப்படவேண்டியவை, அவர்களது பாடபுத்தகங்களும் மொழிபெயர்ப்புக்களுமே. அச்சு முறைமையினை முக்கிய தொடர்பு வாயிலாகப் பயன்படுத்தும் முறைமை இவர்களாலேயே தொடங்கப் பெறுகின்றது. 1823-இல் நிறுவப் பெற்ற வட்டுக்கோட்டைச் செமிநரி இக்கல்வி முயற்சிகளில், சிறப்பாக கிறித்துவத்தைச் 'சுதேச' நிலைப் படுத்துதலில் முக்கிய இடம் பெற்றது. பாவலர் சரித்திர தீபகம் எனும் முதல் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தமிழ் நூல் இப்பரம்பரை வழியாகவே தோன்றியது. இக் கிறித்தவப் பரம்பரையில் தான், ஆக்க இலக்கியம் பாடியோர் உள்ளனர்.

அடுத்த உப-கட்டத்தினை நாவலர் காலமாகக் கொள்ளல் வேண்டும்.

ஆறுமுக நாவலரது சமய, இலக்கியப் பணிகளை எடுத்துக் கூறுவோர், அவர் சைவத்தையும் தமிழையும் மீண்டும் தழைக்க வைத்த பெரியார் என்று கூறுவர். அவரது "தொண்டுகள்" யாவற்றையும் 'சைவமும் தமிழும்' என்ற வட்டத்துள் அடக்கிவிடலாம். அதாவது, மதம் மொழி என்பன பற்றியே அவர் இயக்கம் நடத்தினர். மதம், மொழி என்பனவற்றைத் தனித்தனியான கூறுகளாக அவர் கொள்ள வில்லை. "தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்" என்று வற்புறுத்திய நாவலர், தமிழ்ப்

புலமைக்கும் சைவத்துக்குமுள்ள இன்றியமையாத் தொடர்பினை வற்புறுத்தியே வந்தார். கிறித்தவருக்குத் தமிழைப் போதித்தது மாத்திரமல்லாது விவிலியத்தையே தமிழில் மொழிபெயர்த்தவர் நாவலர். வைணவ சமயிகளுக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பினையும் நன்கு அறிந்திருந்தவர். எனவேதான் மொழியை மதத்துடன் இணைத்துக்காட்டுவதில் ஒரோவிடங்களிலே தயக்கம் காட்டியுள்ளார். ஆனால் தாம் நிறுவிய கல்விக்கூடங்களின் பாடவிதானத்தில் சைவத்துக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பை நன்கு வற்புறுத்தியுள்ளார்.

நாவலருடைய சமய, இலக்கியப் பணிகளின் சமுக முக்கியத்துவத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் பல அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளன. நாவலர் பொருளாதார முன்னேற்ற இயக்கங்களிலும் சமூகக் குறைபாட்டு நீக்க அலுவல்களிலும், அரசியற் இயக்கங்களிலும், ஊழல் தடுப்பு இயக்கங்களிலும் பெரும்பங்கு கொண்டிருந்தார் என்பது இப்பொழுது நன்கு தெரியவந்துள்ளது. எனவே "சைவமும் தமிழும்" என்ற இயக்க கோஷத்தையும் மேற்கூறியவற்றின் பின்னணியில் வைத்தே ஆராயவேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. அவ்வாறு பார்க்கும்பொழுது சைவமும் தமிழும் என்னும் கோஷம் தன்னுள் தான் முடித்தமுடிபாக அமையாது, மிகப்பாரிய சமுகத் தாக்கங்களைக்கொண்ட ஒரு முழுமையான "பண்பாட்டுக் கோஷம்" என்பது புலனாகும்.

சமுக வரலாற்றுக் கண்ணோட்டத்திற் கூறுவதானால் நாவலரது இயக்கம், யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேய ஆட்சி காரணமாக ஏற்பட்டுவந்த மாற்றங்கள் சிலவற்றுக்கு ஓர் எதிரான இயக்கமே. அதாவது மேனாட்டு மயப்படுத்தல் என்னும் தென்கிழக்காசிய வரலாற்று பொதுக்காரணி ஏற்படுத்திய ஒரு விளைவே, நாவலரது இயக்கமெனலாம்.

சுதேசச் சமுகங்களில், மேனாட்டு மயப்படுத்தலின் தீய சக்திகளை உணர்ந்திருந்தோர் ஏதோ ஒருவகையில் அதன் செல்வாக்கு வட்டத்துள் வந்தவரே. ஆங்கிலக் கல்வி ஏற்படுத்திய விழுப்புணர்வு, அக்கல்வி வழியாக வந்த

சமுதாய நோக்கு (சரித்திரம், புவியியல் போன்ற பாடங்களைப் படித்ததன் பயனாகவே இச்சமுதாய நோக்கு ஏற்பட்டது) ஆகியன மேனாட்டு ஆட்சியின் தீய பயன்களை அறியவைத்தது. இதனாலே ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள், அக்கல்வி கொடுத்த அறிவால் மேனாட்டு மயமாக்கும் அரசாங்கச் சக்திகளை எதிர்த்தனரெனலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இத்தகைய இயக்கங்கள் இந்தியாவிலே தோன்றின. இலங்கையில் நாவலர் காலத்திலே தோன்றின.

மேனாட்டு மயமாக்கப்படும் நிலையினை எதிர்த்தவர்களது அரசியல் நோக்கு பற்றியும் சமூக நிலை பற்றியும் சிறிது அறிந்து கொள்ளுதல் நலம்.

இவ்வியக்கத்திற்கு வித்திட்டவர்களும் இயக்கத்தை நடத்தியவர்களும் அக்காலத்து இந்திய இலங்கைச் சமுதாயங்களின் அமைப்பில் வாய்ப்பான நிலையினைப் பெற்றிருந்தோரே பாரம்பரிய சமுதாய முறைகொண்டு நோக்கும் பொழுது இவர்கள் அச்சமுதாயத்திற் கணிசமான முக்கியத்துவத்தை உடையோராகவே இருந்தனர். இது தவிர்க்க முடியாத வரலாற்று நிலையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆறுமுக நாவலரதும், தர்மபாலவினதும் குடும்ப அந்தஸ்து இவ்வுண்மையை நிறுவுகின்றது. ஆறுமுக நாவலர் பாரம்பரியச் செல்வாக்கும், ஆங்கில அறிவால் அதிகார வலுவுமுள்ள (உத்தியோகம் மூலம்) ஒரு குடும்பத்திற்றோன்றியவர். வர்க்க வாய்ப்பாட்டுப்படி கூறினால் நாவலர், நிலப் பிரபுத்துவ வழி வருபவர். மேனாட்டு ஆட்சியின் ஸ்தாபிதத்தால் குன்றிவிடவிருந்த பாரம்பரிய அதிகார வலுவை ஆங்கிலக் கல்வி தந்த உத்தியோகங்கள் மூலம் மீட்டுக்கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். எனவே வரலாற்று நியதிப்படி, அவரிடமிருந்து அந்தச் சூழ்நிலைக்கேற்ற சீர்திருத்தக் கருத்துக்களை எதிர்பார்க்கலாமே தவிர பரிபூரண சமதர்மப் புரட்சியை எதிர்பார்க்க முடியாது.

இக்காரணங்களினால் நாவலர் ஆங்கில ஆட்சியை, அதாவது ஆங்கிலேயருக்கு இலங்கை மீதிருந்த ஆட்சி யுரிமையை எதிர்க்கவில்லை. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் இன்று பின்னோக்காகப் பார்க்கும்பொழுது நாவலர் அன்று மேற்கொண்ட எதிர்ப்பியக்கம் அரசியல் விடுதலை இயக்கத்தின் மூலவேராகவமைந்துள்ளது என்பது தெரிய வருகின்றது.

நாவலர், ஆட்சியின் இரு அமிசங்களை வன்மையாக எதிர்த்தார்.

(அ) பாதிரிமார்களின் மதமாற்றக் கோட்பாடு,

(ஆ) பாதிரிமார்களை முதனிலையாளராகக் கொண்ட கல்விமுறை.

ஆங்கில அரசாங்கம் மதமாற்ற அங்கீகாரத்தை வழங்க வில்லையெனினும் தன்னைச் சார்ந்திருந்த கிறித்தவ திருப்பீடத் துக்கு நிதி வசதியும் செல்வாக்கு வாய்ப்பும் ஏற்படுத்திற்று. எனவே "அ" அமிசத்தையும் அரசாட்சிக்கெதிரான நடவடிக்கையாகவே கொள்ளலாம்.

நாவலரின் கிறித்தவ எதிர்ப்பைப்பற்றி ஆராய முனையும் பொழுது அவரது எதிர்ப்பு புரொட்டஸ்தாந்தப் பிரிவு மேலேயே—அதுவும் வெஸ்லியன் பிரிவு மீதே முனைப்பாக விழுந்தது என்பதை மனங்கொள்ள வேண்டும். போர்த்துக் கேயர் காலம் முதல் கத்தோலிக்கம் யாழ்ப்பாணத்தில் நிலவி வந்தது. அரசியல், சமூக நிலையினைப் பொறுத்தவனுயில் பெருத்த வலுவும் செல்வாக்குமற்ற ஒரு நிலையிலேயே கத்தோலிக்கம் அன்றிருந்தது. தனது செல்வாக்கு வட்டத்தை விஸ்தரித்துக் கொள்ளத்தக்க நிலையில் கத்தோலிக்கம் அன்றிருக்கவில்லை. இதன் காரணமாகவே நாவலர் தமது கல்வி இயக்கத்தில் ஈட்டிய வெற்றிகளை "சத்திய வேத பாதுகாவலன்" பத்திரிகை வாழ்த்திற்று.

நாவலரின் இயக்கம் எதிர்ப்பியக்கமே. அதாவது கிறித்தவப் பாதிரிமாரது நடவடிக்கைகளுக்கெதிராகவே அவர் தமது இயக்கத்தை ஆரம்பித்தார். தங்கள் நடவடிக்

கைகள் பற்றி இந்தக் கிறித்தவப் பாதிரிமார் தாமே கூறுவன கொண்டும், நாவலருக்கெதிராகக் கூறுவன கொண்டும் அவர்கள் எத்தகைய தாக்கத்தை நாட்டில் ஏற்படுத்தியிருந்தனரென்பதை அறியலாம்.

இவ்வகையில், றொபின்சன் பாதிரியார் எழுதிய *Hindu Pastors – A Memorial* என்னும் நூல் மிக முக்கியமானதாகும். (*Hindu Pastors – A Memorial – Rev. E. J. Robinson-Late Wesleyan Missionary in Ceylon, London 1867*) அந்நூலிற் காணப்படும் சில தகவல்களைப் பார்ப்போம்.

தங்கள் மதத்தைப் போதிப்பதற்கான சுதேசிப் போதகர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது றொபின்சன் கூறுவதாவது-

"சுதேசப் போதகர்களின் முக்கியத்துவத்தை வரையறுத்து கூறிவிடமுடியாது. **இந்தியாவை ஆள்வதற்குச் சிப்பாய்கள்** (இந்தியர்களான பட்டாள வீரர்) **தேவைப்படுவது போன்று, எமது ஆத்மீகச் சேனையிலும் சுதேசிகள் இருத்தல் வேண்டும்**" (பக். 107)

கையாளப்பட்டுள்ள உவமை பாதிரியாரின் மனநிலையை நன்கு விளக்குகின்றது.

இந்த நோக்கம் கொண்டே அவர்கள் சுதேசப் போதகர்களை ஊக்குவித்தனர்.

கல்விமூலம் அவர்கள் எவ்வாறு தங்கள் தொண்டினைச் செய்தார்கள் என்பதை அடுத்து வருகின்ற மேற்கோள் காட்டுகின்றது.

"அரசாங்க உதவிநிதி பெறும் பாடசாலைகள் உட்பட எல்லா ஆங்கிலப் பாடசாலைகளிலும் ஆங்கில - தமிழ் பாடசாலைகளிலும் முதலாவது மணித்தியாலம் வேதப்பயிற்சிக்குரியதாகும். அவ்வேளை வகுப்பில் இருத்தல் வேண்டுமென்பது மாணுக்கர்களின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஆனால் அவர்களது பெற்றோர்களோ, ஆங்கில விவிலியத்தைப் படிப்பது, எமது மொழியில் தேர்ச்சிபெறுவதற்குத் தேவையானது என்று கருதுகின்றார்கள். அதனால் அவர்கள்

விவிலியத்தில் ஆழமான ஆர்வத்தையுடையவர்களாக வுள்ளார்கள்" (பக். 107)

ஆங்கிலம் படிக்கவேண்டுமென விரும்புபவர்களிடத்துக் கிறித்தவம் திணிக்கப்பட்ட முறைமையை இம்மேற்கோள் காட்டுகின்றது.

இன்றைய அறிவு வளர்ச்சிப் பின்னணியில் நோக்கும் பொழுது அன்றைய புரொட்டாஸ்தாந்தப் பாதிரிமார்களது நடைமுறைகள், ஆங்கில அரசாங்கம் 1833க்குப் பின்னர் மேற்கொண்டிருந்த ஆட்சிக் கோட்பாட்டின் பண்பாட்டு அங்கம் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

நாவலர் அன்று கோரியது மாணவன் தனது மதச் சூழலிலேயே ஆங்கிலம் கற்க வசதியிருத்தல் வேண்டு மென்பதுதான். இன்றைய நிலையில் இது புரட்சிகரமான ஒரு நடவடிக்கையாகத் தோன்றுதுதான். ஆனால் இந்தக் கோரிக்கை காரணமாகவே **இலங்கை,** (மேற்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் இழந்தது போன்று) **தனது பாரம்பரியப் பண்பாட்டை இழக்காது நிற்கின்றது.**

மேனாட்டுமயப்படுத்தலினால் பண்பாட்டுச் சிதைவு ஏற்படாது தடுப்பதற்கு நாவலரது போராட்டம் உதவிற்று என்பதைக் கண்டோம்.

பண்பாட்டைப் பேண முனைந்த நாவலர் பாரம்பரியச் சமுதாய அமைப்பைப் பேண விரும்பினார். இந்து சமுதாயம் 'சதுர்வர்ணாசிரம தர்மத்'தை அடிப்படையாகக் கொண்டது. சாதியமைப்பு இச்சமுதாயத்தின் அச்சாணியாகும். இந்து மதத்தைப் பேண முயன்ற நாவலர் அச்சமுதாய அமைப்பும் பேண முயன்றாரென்பதில் ஆச்சரிய மேற்படல் முடியாது.

நாவலரும் அவரது சகாக்களும் நடத்திவந்த இயக்கத்தைப் பற்றி றொபின்சன் பாதிரியார் கூறுவது சமூக மாற்ற உண்மையினை எடுத்துக் காட்டுகின்றது.

ASSISTANT REGISTRAR OF BOOKS APR 1978

"பாதிரிமார்களினதும் அவர்களது உதவியாளர்களினதும் நடவடிக்கைகளால் சைவத்துக்கு ஏற்படும் கவலைக்கிடமான நிலைமையைக் கண்டும், பொதுமக்களிடையே கிறித்தவம் பெறும் ஆதரவைக் கண்டும், திறமை, நற்குணம், செல்வம், கல்விபடைத்தவர்கள் பலர் நாட்டின் பாரம்பரிய சமூக வேறுபாடுகளைக் கடந்து மேற்செல்வதைக் கண்டும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த உயர்தனத்துப் பெருமக்கள் 1842இல் தமது அமைதியின்மையைக் காட்டிக் கொண்டனர்...

அவ்வருடம் செப்டம்பர் மாதம் இறுதிநாளன்றுகூடி, தங்கள் மதத்தைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்குமென ஒரு பாடசாலை தொடங்குவதைத் தீர்மானித்தனர்."

(பக். 117 - 19)

சாதியமைப்பை தகர்த்து செல்வாக்கும் அதிகாரமுள்ள புதிய ஒரு மேன்மக்கள் கூட்டம் எவ்வாறு தோன்றிற்று என்பதை மேற்படி மேற்கோள் காட்டுகின்றது. இப்புதிய மேன்மக்கள் கூட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் நாவலரது இயக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் சக்தியாக அமைந்தது உண்மையே. எனவேதான் நாவலர் இதனை எதிர்த்தார் என்று கொள்ளலாம். நாவலரது மதக் கோட்பாடும் இந்நிலைக்கே அவரைத் தள்ளிற்று.

ஆனால் "சைவமும் தமிழும்" இயக்கம் சமூக இயக்கமாக வியாப்திபெற்று துவைனத்துரைக்கு எதிராக நடவடிக்கை இயக்கமாக மாறும்பொழுது, நாவலரின் சாதிக்கொள்கையிலும் சமயக்கொள்கையிலும் ஒரு முரண்பாடு ஏற்படுவதைக் காணலாம். "வெகுசனத் துரோகம்" என்னும் தலைப்பில் இலங்கை நேசனில் வெளியான ஆசிரியருக்குக் கடிதம் இத்தகைய நிலைமையைக் காட்டுகின்றது. அதில் நாவல் பென்சமின் சந்தியாகுப்பிள்ளை என்னும் கத்தோலிக்கரைப் புகழும் முறைமை நோக்கற்பாலது.

சாதிவேறுபாட்டை நிலைநிறுத்த விரும்பிய நாவலர் கத்தோலிக்கர்களுடன் சேர்ந்து வாந்தி நோய்த் தடுப்பியக்கத்தில் ஈடுபட்டதையும் நோக்குதல் வேண்டும்.

முற்றிலும் சைவக் கண்ணோட்டத்திற் பார்க்கும் பொழுது சாதி வித்தியாசம் பேசிய நாவலர் சமூக விடயங் களைப் பற்றிப் பேசவேண்டி வந்தபொழுது சாதி வித்தியா சத்தைக் கடைப்பிடிக்க முடியாத நிலையில் நிற்பதை நாம் காணலாம்.

மேலும் மத வரையறைக்குள்ளும் ஒழுக்கசீலம் பற்றிப் பேசும்பொழுது, தாழ்த்தப்பட்ட சாதி மக்களது உயர் சீலத்துக்கு மதக் கணிப்பீட்டில் மேலான இடம் உண்டு என்பதையும் நாவலர் குறிப்பிட்டுள்ளார் என்பதை அவதானித்தல் வேண்டும். (நாவலர் பண்டிதமணி சி. க 47 – 48)

நாவலருடைய மத, சமூக சீர்திருத்தக் கோட்பாடுகள் நிலப்பிரபுத்துவ சூழலில் அமைந்தவை என்பதும், தேசிய முதலாளித்துவ சக்தியின் முதல் தோற்றத்தைக் காட்டுவன என்பதையும் மனதிற்கொண்டால் மேற்கூறிய முரண்பாடு களுக்கு அமைதி கண்டுகொள்ளலாம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் தேசிய முதலாளித்துவ சக்தி களின் வரலாற்று முக்கியத்துவத்தை தென்கிழக்காசிய வரலாறு அறிந்தோர் அறிவர்.

தமது பண்பாடு பற்றிய உணர்வும், அப்பண்பாடு மூலம் தமது தனித்துவத்தைப் பேணும், வேட்கையும் மேனாட்டு ஆட்சி வழிவந்தவையாகும்.

இப்பண்பாட்டு உணர்வுக் கோட்பாட்டுக்கு அரசியல் உருவம் கொடுத்த பெருமையும் நாவலருக்குண்டு. பிறிட்டோவுக்கு எதிராக பொன்னம்பலம் இராமநாதன் ஆதரித்து வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்தில் இவ்வுண்மை புலப்படுவதை நாம் காணலாம். பொன்னம்பலம் இராம நாதன் தமது பிற்கால வாழ்வில் இந்துமத முன்னேற் றத்துக்குச் செய்த சமூக சமய, கல்விப்பணிகளை, இக் கோட்பாட்டின் தர்க்கரீதியான வளர்ச்சியென்றே கூறல் வேண்டும்.

நாவலரது போராட்டங் காரணமாகச் சுதேசப் பண்பாட்டு வளர்ச்சிக்கு பேரூக்கம் கிட்டிற்று. தமிழ் மக்களிடையே தலைவர்களாகவும் முக்கியஸ்தர்களாகவுமிருப்பவர்கள் அம்மக்களது பண்பாட்டின் வழி நிற்பவர்களாக இருத்தல்வேண்டும் என்ற ஒரு நிலைமை உருவாகத் தொடங்கிற்று.

இதனால் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றுண்டிலும் யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான ஒரு பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டது.

இந்துக்களாகவிருந்து கிறித்தவர்களாக மாறி முதன்மை நிலைபெற்றவர்கள் பலர் மீண்டும் இந்துக்களாக மதம் மாறினர். வைமன் கதிரவேற்பிள்ளை, தெயிலர் துரையப்பா பிள்ளை, போன்றோரை இப்பண்பாட்டு நெறியின் உதாரணங்களாக எடுத்துக் கூறலாம்.

இப்பண்பாட்டு நெறிகாரணமாக ஆங்கிலம் படித்தவர்களின் மேலாண்மை ஸ்திரப்படுத்தப்பட்டது என்பது உண்மையே. ஆனால் கல்வியமைப்பில் மாறுதல்கள் ஏற்பட்டு தாய்மொழிக் கல்விமுறை வந்ததும் புதியவொரு பரம்பரை உருவாகிற்று. அந்நிலையில் அடிநிலை மக்கள் முன்னேறினர். அம்முன்னேற்றம் நாவலர் காலத்திற் காணப்பட்ட சில முரண்பாடுகளை ஒழிக்க உதவிற்று.

இதுவரை கூறியவற்றால் நாவலர் தொடக்கிய இயக்கம், இலங்கையின் முற்போக்கான வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுவதொன்றென்பது புலனாகின்றது.

நாவலரின் இலக்கியப் பணிகளை இப்பண்பாட்டியக்கத்தின் பின்னணியில் வைத்தே விளங்கிக் கொள்ளல் வேண்டும். நாவலரின் முக்கிய இலக்கியத் தொழிற்பாடுகள் எனக் கூறப்படத் தக்கவை:

1. பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தமை.

2. பண்டைய தமிழ் நூல்களுக்கு உரையெழுதியமை.

3. பாடபுத்தகங்களை எழுதியமை.

இவையாவுமே ஈழத்தில் தமிழ்க்கல்வி "சைவமும் தமிழும்" என்ற வட்டத்துக்குள் தேசிய நிலைமையை ஏற்படுத்த உதவியனவாகும்.

நாவலர் காலத்து வாழ்ந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்திய லிங்கம் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோர் களது இலக்கியப் பணிகளும் இத்தேவைகளைப் பூர்த்தி செய்தன வெனலாம்.

தமிழ் இலக்கியக் கல்வியிலும், இலக்கியப் பாரம்பரியத் திலும், ஈழத்தின் தனித்துவத்தையும் நிலைநிறுத்துவதற்கு நாவலர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் முக்கியமானவை ஆகும். தமிழகத்தில் தம்மை யெதிர்த்தோரை யெதிர்த்து வெளியிட்ட பிரசுரங்களில் இவ்வுண்மை நிலை நிறுத்தப்படு கின்றது.

## VIII

அடுத்து வருங் காலப்பிரிவில், இலங்கைத் தமிழ் மக்களிடையேயுள்ள உயர் மத்தியதர வர்க்கத்தினரின் கலை, இலக்கியப் பணி முதன்மைப் படுகின்றது.

இக்கால கட்டத்தின் முக்கிய பிரதிநிதியாக அமைபவர் பாவலர் துரையப்பபிள்ளையாவர்.

ஆறுமுகநாவலர் காலத்தில் (1822–1879) 'சைவமும், தமிழும்' என்ற கோஷம், ஈழத்து வடபகுதியின் சமூக, அரசியற்றேவைகளை — ஒரு வரலாற்றுத் தேவையினைப் பூர்த்தி செய்வதாகவமைந்தது. நாவலருடைய கண்ணோட் டத்தில், சைவம் என்பது வெறும் மத ஆசாரத்தை மாத்திர மல்லாது அம்மத ஆசாரத்தைப் பின்பற்றுவோரை, சிறப்பாக விவசாயிகளையும் குறிப்பதாகவே இருந்தது. யாழ்ப்பாணத்துச் சமயநிலை போன்ற கட்டுரை உண்மை யிலே சமூகப் பிரச்சினை பற்றியனவே. நாவலரது கண்ணோட் டத்தில் தமிழ் என்பது சுதேசப் பண்பாட்டுக் கருவூலமாக

விளங்கியது. அப்பண்பாட்டுக் கருவூலம் பிறரது கையிற் சிக்கி, அவர்களால் ஆயுதமாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவே தமிழைச் சைவத்திலிருந்து பிரிக்கமுடியாதவொன்றாகக் கொண்டார்.

இந்தப் பண்புநெறி பிறழாது வளர்ந்திருக்குமேல் அது சைவமக்களை—அதாவது யாழ்ப்பாணத்துக் கமக்காரர்களை மேலும் மேலும் பிரதிபலிக்கின்ற, அவர்களது பிரச்சினைகளை எடுத்துக்கூறித் தீர்வுமுறை காட்டுகின்ற இலக்கியங்கள் தோன்றியிருக்கும். இயக்கங்களின் வரலாறுகளை நோக்கும் பொழுது, ஆரம்பநிலையிற் காணப்படும் நேரடிச் சமூகத் தொடர்பு பின்னர் படிப்படியாக மறைக்கப் படுவதையும், மறக்கப்படுவதையும் காணலாம். இது காலம் வழங்கும் "தண்டனை"களிலொன்று சமூகநிலைப்பட்டு நின்ற சைவ ஆர்வம், சைவத்திற்குக் கிட்டிய வெற்றியின் பின்னர் சாஸ்திரீயநிலை ஆர்வமாக முகிழ்க்கத் தொடங்குகின்றது. சைவச் சூழலில் ஆங்கிலம் கற்பதற்கான வாய்ப்புக்கள் பெருக (உத்தியோக வாய்ப்பினைத் தராத) தமிழ்க் கல்வி பற்றிய ஆர்வம் குன்றத் தொடங்கிற்று. யாழ்ப்பாண நில மானியவுடைமைச் சமுதாய அமைப்புக்கேற்ற முறையில், அச்சமுதாயத்து மேன் மக்களின் பொருளாதார, சமூக மேன்மை தொடர்ந்து நிலைப்பதற்கேற்ற வகையில் ஆங்கிலக் கல்வி புகட்டத் தொடங்கியதும் சைவமும், தமிழும் என்ற கோஷம் வலுவிழக்கத் தொடங்கிற்று. அரசியலிலும் புதிய உணர்வு எதுவும் ஏற்படவில்லை. இவை காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில், ஈழத்துத் தமிழ் இலக்கியம், நாவலர் வகுத்த சமூக அர்ப்பண நிலையிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டுக் கொண்டிருந்தது.

துரையப்பப்பிள்ளை அவர்கள் வட்டுக்கோட்டை செமினறியிற் பயின்றவர்; ரெய்லர் என்னும் கிறித்தவ நாமம் பெற்றிருந்தவர்; 'பாவலர் சரித்திர தீப' ஆசிரியர் ஆணல்ட் சதாசிவம் பிள்ளையின் விருப்புக்குரிய மாணக்கர்களுள் ஒருவர்; 1910 இல் மகாஜனக் கல்லூரியைத் தொடங்கும்வரை கிறித்தவத் தொடர்புகளைப் பேணிவந்தவர்.

கிறித்தவ நெறியிலே இவர் தொடர்ந்து சென்றிருப்பின், தமது ஆசிரியர் சதாசிவம் பிள்ளையைப் போன்றே இவரும், "கிறித்தவத்தைத் தமிழ் மண்ணுடன் இரண்டறக் கலக்க வைக்கும்" பணியிலீடுபட்டிருப்பார். ஆனால் இவரோ சமூகப்பணியையே தமது வாழ்க்கைப் பணியாகக் கொண்டார். தமது இதய வேட்கைக்கியையத் தொழிற்படுவதற்கான திடசித்தத்தை இந்திய சீவியம் ஏற்படுத்திற்று எனலாம். இவர் 1894 முதல் 1898 வரை வடஇந்தியாவில் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

பிள்ளையவர்கள் பற்றிய கட்டுரையொன்றில் வி. முத்துக்குமாரு அவர்கள் குறிப்பிட்டுள்ளவை மிக முக்கியமானவையாகும்: "தனது பராபரிப்பிலிருந்த குழந்தைகளின் நலனிலும், பாடசாலை வேலையிலும் கவனஞ் செலுத்திவந்த அதே வேளையில் அவர், சமூகத்துக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையை என்றுமே புறக்கணித்திடவில்லை. சமூகச் சீர்திருத்தத்துக்கான அவர் திட்டம் வளர்ந்தோர் கல்வி, அறநெறியுறுத்தல், இசை, நாடக மறுமலர்ச்சி ஆகிய பலவற்றைக் கொண்டதாகவிருந்தது..................

திலகர், கோகலே ஆகிய இந்தியப் பெருந்தலைவர்கள் தமது தேசியப் பணியினைத் தொடங்கிய காலத்தில் பம்பாய் மாகாணத்தில் கோலாப்பூர், பெல்காம் ஆகிய இடங்களில் வசித்ததன் பலனாகவே இவர் [மக்கள்] சேவையின்பால் விருப்புடையரானார் எனலாம். குறைபாடுகளை அகற்றுவதற்கான கிளர்ச்சிகளைச் செய்வதற்கெனக் காலத்துக்குக் காலம் இவர் கூட்டங்களை ஒழுங்கு செய்துவந்தார்."

இவரது பாடல்கள் பெரும்பாலும் சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்கான இலக்கிய முயற்சிகளாகவே உள்ளன. சிந்தனைச் சோலையில் இடம்பெறும் இவரது கவிதைகளுள் சிவமணி மாலை தவிர்ந்த மற்றையவை யாவுமே, மேலே குறிப்பிடப்பட்டது போன்று, "சமூக சீர்திருத்தம்" சம்பந்தப் பட்டவையே.

வெகு சன நிலையில், மக்கள் பாடல்களை இசைத்துப் பாடவேண்டும் என்பதற்காகவே இவர் தமது ஆக்கங்களைக் "கீதங்களாக" இயற்றினார். இலக்கியத்தைக் கற்றறிந்தோரது ஆர்வ ஈடுபாடாக மாத்திரம் கொள்ளாது, சாதாரண மக்களது பாடற் பொருளாகவும் கொள்ள இவர் முனைந்தமை, இவரை இக்காலப் புலவர்கள் பலரினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. 'இதோபதேச கீதரச மஞ்சரி' என்ற இவரது பாடற்றொகுதிக்கு "முகவாசகம்" எழுதிய கு. கதிரவேற் பிள்ளை அவர்கள் கூறியுள்ளவை இப் பண்பினை எடுத்துக் காட்டுகின்றன; "நமது தேசத்தில் புலவர் சன்மார்க்க விஷயங்களைச் சார்ந்த கீர்த்தனங்கள் இசைப் பாருளராயினும் ஒரோர் மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டனவாய் அல்லது நரஸ்துதியோடுகலந்தனவாயன்றிப் பெரும் பாலும் இசைத்தாரல்லர். ஆனால் இம் மஞ்சரியில் இசைக்கப் பட்ட கீதங்களோ சர்வசமயிகளும் ஒத்த உள்ளத்தினராய்ப் பாடக்கூடிய கீர்த்தனைகள். தாம் பெற்ற ஆங்கிலோ தமிழ்க் கல்வியறிவின் பயனாய்த் தேச நன்மைக்கேற்ற சிறந்த தேர்ச்சிக்குரிய கருத்துக்களைக் கீர்த்தனங்கள் மூலமாய் இந் நூலைச் செய்தவரே முதன் முதல் வெளிப்படுத்துகிறாரென்று சொல்லலாம்." ஆசிரியரும், தமது நூலின் ஆங்கில முன்னுரையில் சமுதாயத்தின் சீவாதாரமான அமிசங்களை அரித்துத் தின்றுகொண்டிருக்கும் தீயநெறிகளை, அவற்றின் உண்மையான தோற்றத்துடன் எடுத்துக்காட்ட முயன்றுள்ளதாகக் கூறியுள்ளார். இலக்கிய ஆக்கத்தில், தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் பழையனவற்றையே மீண்டும் மீண்டும் பிரதிசெய்யாது, புத்தம் புதிய நெறிகளிற் செல்ல வேண்டும் என்ற தமது கருத்தைத் துரையப்பபிள்ளையவர்கள் தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரையொன்றில் மிக வன்மையாக எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு பார்க்கும் பொழுது இலக்கியத்தை, அல்லது "எழுத்தை" மக்களின் பாற்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இக் கால கட்டத்தில் முக்கிய முனைப்புப் பெறுவதைக் காணலாம்.

இக் கால கட்டத்திலேயே இலங்கையில் தமிழ் நாவல் இலக்கியம் நிலைபேறுடைய இலக்கியமாக வளரத் தொடங்கும் உண்மையையும் நாம் இங்கு அவதானித்தல் வேண்டும். மங்கள நாயகம் தம்பையாவின் 'நொறுங்குண்ட இருதயம்' (1914), பி. வே. திருஞான சம்பந்தம் பிள்ளையின் 'காசி நாதன்–நேசமலர்' (1924), 'கோபால நேச ரத்தினம்' (1928) முதலியன முக்கியமானவையாகும்.

இக்காலகட்டத்தில் ஈழத்து இலக்கியத்தின் ஆக்க நிலைப்பட்ட தேசிய பரிமாணம் நன்கு புலனாகத் தொடங்குகின்றது.

அடுத்து வரும் காலப் பகுதி அதனை வன்மையுடன் நிலை நிறுத்துகின்றதெனலாம்.

## IX

இக் கால கட்டமே இலங்கையின் சிறுகதை, நாவல், பத்திரிகைத்துறை இலக்கிய வரலாற்றில் முக்கியமாகின்றது. இக் கால கட்டத்தில் முக்கிய இடம் பெறுவோரை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

(I) ஆங்கிலக் கல்வி வழியாக ஆக்க இலக்கியத்துக்கு வந்தோர்.

(II) தமிழ்க் கல்வி வழியாக ஆக்க இலக்கியத்துக்கு வந்தோர்.

(III) முற்போக்கு இலக்கியக் கோட்பாடுகளைத் துணிகரமாக முன் வைத்தோர்.

முதலாவது பிரிவினருக்கு உதாரணமாக இலங்கையர் கோன், சி. வைத்தியலிங்கம் ஆகியோரையும், இரண்டாவது பிரிவினருக்கு உதாரணமாக அ. செ. முருகானந்தத்தையும், மூன்றுவது பிரிவினருக்கு உதாரணமாக அ. ந. கந்தசாமி, கே. கணேஷ் ஆகியோரையும் கூறலாம்.

இக்காலகட்டத்தில் இலங்கையில் ஆக்க இலக்கியம் இளைக்கத் தொடங்கியதெனினும், அடுத்துவரும்

1954—70 காலப் பிரிவிலேயே அது தனித்துவமுடைய இலக்கிய வளமாகப் புஷ்பிக்கின்றது.

## X

ஈழத்துத் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கியப் பாரம் பரியம் எனும் பெரு வட்டத்தினுள், தனக்கெனச் சில இயல்புகள் கொண்ட ஒரு தனித் தொகுதியாக — அதே வேளையில் தமிழகத்தின் இலக்கிய வளர்ச்சியோடு இயை புடைய இலக்கியத் தொகுதியாக வளரும் தன்மையினை மேலே கூறிய வரலாற்றுப் பெரு வரைவு எடுத்துக் காட்டு கின்றது.

ஆயினும் இலங்கை எனும் தேச நிலைப்பட்ட வரை யறைக்குள் வைத்துப் பார்க்கும் பொழுது தமிழ் பேசும் இனத்தினர் என்று எடுத்துக் கூறப்பட்ட முப்பெரும் பிரிவினருடைய இலக்கிய ஆக்கங்கள், சிறப்பாக இந்துத் தமிழர்களுடைய இலக்கிய ஆக்கங்களும், முஸ்லிம்களினது இலக்கிய ஆக்கங்களும் முதலில் ஒவ்வொன்றும் தனித் தனிச் சார்புடையனவாக வளர்கின்ற முறைமையினை இங்கு எடுத்துக் கூறுதல் அத்தியாவசியமாகும். முஸ்லீம் களைப் பொறுத்த வரையில் ஈழத்து முஸ்லீம்களது தமிழாக்கங்கள் 1954-இல் தோன்றும் இயக்கம் வளர்ச்சி யடையும் காலம் வரை, அவர்களது மத, பண்பாட்டுத் தனித்துவத்தைவற்புறுத்தியே நிற்கின்றன. இலங்கை வாழ் முஸ்லீம்களின் மதச் சார்பான இலக்கியங்களுக்கு நீண்ட கால மரபொன்றுண்டு. இலங்கையின் தேசிய மலர்ச்சி முதலில் தமிழ், சிங்கள முஸ்லீம் மக்கட் கூட்டத்தினரின் தனித் தனியே பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணும் முயற்சிகள் வழியாகவே தோன்றியது என்பது வரலாற்று உண்மையாகும். இப் பண்பு இலக்கிய வெளிப் பாட்டிலும் தொழிற் படுவதைக் காணலாம். இலங்கை வாழ் இஸ்லா மியரிடையே அம் மலர்ச்சியினை ஏற்படுத்தியவர் சித்தி லெவ்வை என்பவராவர். இவர் பத்தொன்பதாம் நூற்

ற்றாண்டின் பிற்பகுதியில் தமது பணியினை நடத்தினர். இலங்கை முஸ்லிம்களினது மதச் சார்பான இலக்கியங்கள், தமிழ் இலக்கியத்தின் பொது வடிவங்களான ஏசல், கும்மி, பிள்ளைத்தமிழ், திருப்புகழ் காவியம் போன்ற வற்றையும் அராபிய மரபுக்கேயுரிய முனஜாத் போன்ற இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்திற்று. ஆனால் 1954–க்குப் பின்னர் தோன்றிய முஸ்லீம் எழுத்தாளர்கள் (இளங்கீரன், திக்வெல்லைக் கமால், எம். எம். பஃரூப் போன்றோர்) ஈழத் தமிழ் இலக்கியத்தின் பொதுப் பிரதிநிதி களாகவே கருதப் படுகின்றனர்.

இலங்கையில் வாழ்ந்து வருகின்ற இந்தியத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இவர்களது முக்கிய இலக்கிய முயற் சிகள் 1930-க்குப் பின்னரே முகிழ்க்கத் தொடங்குகின்றது. 1954-க்குப் பின்னரே இவர்களது இலக்கிய ஆக்கங்கள் ஈழத்துப் பொது இலக்கிய வளர்ச்சியுடன் இணையத் தொடங்குகின்றது. இந்தியத் தமிழர்களென முன்னர் குறிப் பிடப் பெற்று வந்த இவர்கள் இக் கால கட்டத்தின் பின்னர், இலங்கையின் தமிழ் பேசும் இனத்தினருள் ஒரு பிரிவினராகக் கருதப் பெற்று, அவர்கள் வசிக்கும் பிரதேசத்தைச் சுட்டும் வகையில் ''மலையகத் தமிழர்கள்'' என இன்று குறிப்பிடப் பெறுகின்றனர். கே. கணேஷ் மலையகத் தமிழரே. மலையகத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய நிர்ணய சக்திகளுள் ஒன்றாக அமைந்தது, சி. வி. வேலுப் பிள்ளையின் இலக்கிய முயற்சி களும், ஆக்கங்களுமே. சிதம்பரநாத பாவலர், என். எஸ். எம். ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோர் மலையக வாழ்க்கை முறைகளை ஈழத்துத் தேசிய தமிழ் இலக்கியத்தில் இடம் பெறச் செய்தனர்.

இவ்வாறாக ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனித்துவமும் பொது ஒருமைப்பாடும் கொண்ட ஒரு இலக்கியத் தொகுதி யாக இன்று முகிழ்த்துள்ளது.

★

# 2

# இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சியும்

## (ஒரு வரலாற்று நோக்கு)

## (1954-1970)

---

"பத்து ஆண்டுகட்கு முன் எட்டுப் பேருடன் தோன்றியது எமது ஸ்தாபனம். இன்று இருநூறுக்கு அதிகமான உறுப்பினர்களையும் எட்டுக்கிளைகளையும்கொண்ட, இந்நாட்டு எழுத்தாளர்களின் விரிந்த கேந்திரமாகவும் எமது மக்களின் எதிர்கால இலக்கியபாரம்பரியத்தை நிர்ணயிக்கும் சக்தியாகவும் வளர்ந்துள்ளது" என்று சென்ற 12-ஆம் தேதி கொழும்பில் நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் விரிவு

படுத்தப்பட்ட மத்திய குழுக் கூட்டத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. பிரேம்ஜி குறிப்பிட்டார்''

23-8-1956 அன்று "ஈழகேசரி"யில் வெளியான செய்தி இது. 1946 இல் தொடங்கிய இ. மு. எ. ச. பத்து வருட கால எல்லேக்குட் பெற்றுக் கொண்ட வளர்ச்சியிஃன இது ஓரளவு சுட்டிக்காட்டுகின்றது. ஆயினும் 1946 முதல் 1956 வரைப்பட்ட காலகட்டத்துள்ளும் சில முக்கிய வளர்ச்சிப் படிகளே நாம் அவதானித்துக் கொள்ளலாம்.

1946இல் இச்சங்கம் தோன்றுவதற்குக் காரணமாகவிருந் தோர், அக்காலத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்களாகவிருந்த கே. இராமநாதன், கே. கணேஷ் ஆகியோரே. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உந்துதஃலயும் ஆற்றுப்படுத்தஃலயும் அடிக்கல்லாகக் கொண்டு இந்தியாவில் கே. ஏ. அப்பாஸ் முதலியோரின் தஃலமையில் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்று இராமநாதனும், கணேஷும் இலங்கை முற்போக்கு எழுத் தாளர் சங்கத்திஃனத் தோற்றுவித்தனர்.

மார்க்ஸீய அரசியல் இயக்கமே மக்களிடையே பெரிதும் விருத்தியடையாதிருந்த அந்நாட்களில்,இவ்வெழுத் தாளர் சங்கம், புத்திஜீவிகளின் முயற்சியாகவே நின்று போனமை ஆச்சரியத்தைத் தருவதன்று.

1956இல் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி பெருமாற்றத் துக்கும், ஆட்சியுரிமை விழிப்புக்கும் சமூக உணர்வு விழிப் புக்கும் காரணமாகவிருந்தது, 1953இல் இடதுசாரிக் கட்சி களால் நடத்தப்பெற்ற ஹர்த்தாலேயாகும். இந்நாட்டின் அரசியல் விழிப்புணர்வில் 1954ஆம் வருடம் ஓரளவு முக்கியத் துவத்தைப் பெறுகின்றது. 1954இல் பீறிட்டுக் கிளம்பிய பொருளாதார அதிருப்திக்கு தேசிய உணர்வுக் கட்டுக் கோப்பு அளித்து 1956இன் அரசியற் பெருமாற்றமாக்கியவர் பண்டாரநாயக்கா.

1946இல் தொடங்கப் பெற்ற இ. மு. எ. ச. 1954 முதல் காரிய வேகத்துடன் பணியாற்றத் தொடங்கிற்று. இ.மு.எ.ச.

தனது குறிக்கோள்களையும் அமைப்பு விதிகளையும், சிறு கைந் நூலாக 25-10-1954 அன்று வெளியிட்டது. அவ் வெளி யீட்டிற் காணப்படும் முதல் மூன்று பத்திகளையும் மீட்டும் பார்த்துக்கொள்வது பயன் தருவதாகும்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாருமில்லை உடையாருமில்லை" என்றும், "எல்லாரும் இன்புற்றிருப்பதன்றி வேறொன்றறியேன்" என்றும், மனிதவர்க்கம் யுக யுகாந்திரமாகக் கண்ட இலட்சியக் கனவைச் சாதனையிலாக்க, வர்க்க பேதமற்ற ஒப்பில்லா சமுதாயத்தை சிருஷ்டிக்க மனிதப் பெருங்குடி மக்கள் நடத்தும் போராட்டத்தையும் அதில் தோன்றும் புதிய சமுதாய அமைப்பையும் பிரதிபலிக்கும் சோஷலிஸ்ட் யாதார்த்தவாதம் என்ற இலக்கிய தத்து வத்தை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது இறுதி இலட்சியமாக ஏற்றுக்கொள்கின்றது.

**உடனடி இலட்சியம் :**

என்றாலும் இன்றைய கால கட்டத்தில் மக்களின் சகல பகுதிகளையும் பிரதிபலித்தது, நிரந்தர உலக சமாதானம், தேசிய விமோசனம், உண்மை ஜனநாயகம், உயர்ந்த வாழ்க்கைத்தரம், சிறந்த கலாச்சாரம், நாட்டின் அரசியல், பொருளாதார சமுதாய முன்னேற்றம் இவற்றிற்காக மக்கள் நடத்தும் போராட் டங்களை கருவூலமாகக் கொண்ட மக்கள் இலக்கியமே சங்கத்தின் உடனடியான இலட்சியமாக இருக்கும்.

**நோக்கம் :**

முற்போக்கு எண்ணம் கொண்ட சகல எழுத்தாளர் களையும் ஒரு அணியில் திரட்டி மக்கள் கலாச்சாரம் உயர்ந்த மனித வர்க்கத்துக்குமான இலக்கியம் படைப் பதும், சம அடிப்படையில் சகலதேசிய இனங்களின் மொழி கலாச்சார முன்னேற்றத்திற்காக உழைப்பதும், எழுத்தாளர்களின் நலன்களுக்காகவும் உரிமைகளுக்

காகவும் பாடுபடுவதும் சங்கத்தின் நோக்கமாக இருக்கும்.

சங்கத்தைப் பரவலாக்கும் முயற்சியும் எழுத்தாளர்கள் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியும் பெருமளவில் மேற் கொள்ளப்பட்டன. 10-4-1955இல் வெளியிடப்பெற்ற "எழுத்தாளர்களுக்கு ஒரு வார்த்தை" என்ற துண்டுப் பிரசுரம் சர்வதேசிய நிலையிலும் தேசிய நிலையிலும் அன்று நிலவிய "அபாயகரமான", "ஆபத்தான" கட்டங்களை விளக்கி இறுதியில்,

> "எனவேதான் உங்களை சகோதர பாவத்துடனும் பாசத்துடனும் நெருங்குகின்றோம். காலத்தின் பொறுப்பை உணர்ந்த கடமை உணர்வுடன் அணுகு கிறோம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கொடிக் கீழ் அணிவகுத்து, எழுத்தாளர்களின் உரிமை களைப் பாதுகாத்து நலனுக்காகப் போராடுவதில், இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகத்தையும் இந்த வையகத்திலே நிரந்தர சமாதானத்தையும் நிலைநாட்டு வதில், நம் பழம்பெரும் இலக்கிய பாரம்பரியங்களை வளர்த்தெடுத்து புதுமை இலக்கியங்களைப் படைப்பதில் உங்களின் ஒப்பரிய பொறுப்பை நிறைவேற்றுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்."

என்ற அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அக்காலத்திலே நிலவிய இலக்கிய ஆக்கச் சூழ்நிலையை அவதானிக்கும் பொழுது மேலே தரப்பட்டது போன்ற ஓர் அறைகூவல், முற்றிலும் புதியதும், முன்னர் காணப்படாத ஒழுங்கு நெறியும் கட்டமைப்பும் கொண்ட ஒரு நிறுவனத்தின் அழைப்பாகவும் அமைவதை நாம் காணலாம். 1942 முதல் நிறுவன ரீதியாக இயங்கிவந்த மறுமலர்ச்சிச் சங்கமும், அச் சங்கத்தால் வெளியிடப்பெற்று வந்த "மறுமலர்ச்சி"ச் சஞ்சிகையை வெளியிட்டுவந்த புத்திலக்கிய எழுத்தாளர்களும் இத்தகைய இலட்சியங்களை முன் வைத்து ஒன்று சேர்ந்தவர்களல்லர். நவீன இலக்கிய வகைகளினுற்

கவரப்பட்ட, அவர்கள் இலக்கிய இலட்சியங்கள் பற்றி ஆழமான மதிப்பீடு எதுவும் இல்லாது இணைந்து பணியாற்றி வந்தனர். அதற்கு முன்னர் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் ஈழத்துக் குரலாக விளங்கிய "ஈழகேசரியும்" ஈழத்தின் நவீன இலக்கிய கர்த்தர்களாகத் தென்னிந்திய ஏற்புடைமையுடன் இயங்கி வந்த எழுத்தாளர்களும், இலக்கியத்தைச் சமுதாய சக்தியாக உணர்ந்து அச் சக்தி வளர்ச்சிக்காகத் தொழிற்பட்டவர்களல்லர். ஆயினும் நவீன இலக்கிய வகைகளான சிறுகதை, நாவல், போன்றனவற்றை ஈழத்தின் ஜனரஞ்சகப்படுத்தி நின்றனர். பாரதியின் இலக்கிய மேன்மையையும் சமூக முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறியிருந்தனர். இவை காரணமாக நவீன தமிழ் இலக்கியத்தின் ஏற்புடைமைக்கான ஒரு சூழலை ஏற்படுத்தியிருந்தனர். அந்த அடித்தளத்தின்மீது புதிதாக, இயக்க வேகத்துடன் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஓர் இலக்கியத்தினைக் கட்டியெழுப்பக்கூடியதாக இருந்தது.

இ. மு. எ. ச.வின் தோற்றமும், அமைப்பும் அதுகாலம் வரை இலைமறைகாயாக இருந்த ஒரு சமுதாய சக்தியை முன்னணிக்குக் கொணர்ந்தது.

மறுமலர்ச்சி இயக்கம் தொடங்குவதற்கு முன்னர், ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய ஈடுபாடு ஆங்கிலம் தெரிந்த உயர் சமூகத் தொடர்பு கொண்ட மத்தியதர வர்க்கத்தினரிடையே காணப்பட்டது. தமிழை மாத்திரமே கற்று இலக்கிய உத்வேகமும் ஆர்வமும் பெற்றவர்களின் குழுவாக மறுமலர்ச்சிக் குழு அமைந்தது.

ஈழகேசரியின் ஆரம்ப கால வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கும்பொழுது இது பெரியதொரு முன்னேற்றமேயாகும். ஆனால் மறுமலர்ச்சிக் குழுவின் சமகாலத் தாக்கம் மிகச் சிறியதேயாகும். அவர்களின் இயக்கத்துக்கு ஈழகேசரியே பூரண பிரசுர களமாக அமைந்திருப்பின் மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை தோன்றியிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. 20ம் நூற்றுண்டின் மூன்றும் தசாப்தத்தில் முளையிடத்

தொடங்கிய இவ்வமிசம் இலங்கையில் கல்வி, சமூக மாற்றங்களுடன் இணைந்த வொன்ருகும். நான்காம் ஐந்தாம் தசாப்தத்தில் தாய்மொழிக் கல்வி வளரத் தொடங்கிற்று. அத்துடன் இலவசக்கல்வி முறையினுல் அதுகாலம் வரை கல்வி வாய்ப்பற்றிருந்த அடிநிலைச் சமுதாயத்தினர் பலர் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். புதிதாகத் தோன்றிய இச்சமூகத்தின் இலக்கியக் குரலாக 1954—55இல் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கிளர்ந்தது.

இலக்கிய நிறுவனங்கள் சம்பந்தமான அமைப்பமிசமொன்றும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சிக்கும் வியாப்திக்கும் பெரிதும் உதவிற்று. அதுகாலவரை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தமிழ்க் கலை இலக்கிய முயற்சிக்குத் தலைமை தாங்கிய நிறுவனங்கள் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்து வந்தவர்களின் நிழலிலேயே இயங்கி வந்தன. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஈழத்தின் தமிழ்க்கலை இலக்கியத்துக்கான தலைமையை உத்தியோகத்தர் முகாமிலிருந்து விடுவித்தது. எவரும் உத்தியோகத்தரின் கலை, இலக்கிய முகாமை காரணமாக தமிழ்க்கலை, இலக்கியத் துறைகளால் இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறையே ஒதுக்கப்பட்டு வந்தது, என்னும் வரலாற்றுண்மையையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மேற்கூறிய பண்பு காரணமாக பெரிய உத்தியோகங்களினை வகித்து வராத தமிழ் அறிஞர்களும், எழுத்தாளர்களும் இ. மு. எ. ச.வுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினர்.

இ. மு. எ. ச.வின் கலை, இலக்கியத்துறைத் தலைமைக்கு உதவிய இன்னொரு முக்கிய பண்பு அது ஈழத்து இலக்கியத்தை சமய, இனப் பாகுபாடுகட்கு அப்பாலான ஒரு முயற்சியாகக் கருதியமையும் அவ்வாறு வளர்த்தமையுமாகும். பல்வேறு இலக்கிய ஆசிரியர்களின் பணிகளை, கிறித்தவர் தமிழுக்காற்றிய தொண்டு, முஸ்லீம்கள் தமிழுக்காற்றிய தொண்டு, மட்டக்களப்பு தமிழிலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு, வன்னிப்பகுதி மக்கள் தமிழிலக்கியத்துக்காற்றிய தொண்டு எனத் "தொண்டு" அட்டைகள் கொண்டு கட்டி வந்த இலக்

கிய உலகில், அரசியற் கோட்பாடு என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களை அவ்வாறு பாகுபடுத்தாது தமிழிலக்கியமாகப் போற்றும் பண்பு இ. மு. எ. ச.வின் தோற்றத்தின் பின்னரே இலங்கையில் தொடங்கிற்று.

இத்தகைய காரணங்களினால் இ. மு. எ. ச. ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்திற்று என்று கூறலாம். இ. மு. எ. ச. தோற்றுவித்த இவ்விலக்கிய மாற்றங்களை, 1956இல் முகிழ்த்துக் கிளம்பிய புதிய வரலாற்றுச் சக்திகளின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் பொழுதுதான், இந்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்களின் முக்கியத்துவத்தையும் பூரணத்துவத்தையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய வேகத்துடன் செயற்படத் தொடங்கிய பொழுது, இ. மு. எ. ச. தனது உத்தியோக பூர்வ ஏடான "புதுமை இலக்கியம்" எனும் சஞ்சிகையும் வெளியிடத் தொடங்கிற்று. 1956ஆம் வருட முதல் மாதத்தில் புதுமை இலக்கியத்தின் முதல் இதழ் வெளியாகிற்று.

இவ்வாருக இ. மு. எ. ச. ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் முன்னெப்பொழுதுமில்லாத வகையில் உணர்ச்சி வேகத்துடனும் கருத்து ஈடுபாட்டுடனும் இயங்கத் தொடங்கிற்றெனினும், அது தோன்றிய வேளையில், இலங்கையின் அரசியல் வாழ்க்கையில் முன்னர் காணப்படாத மொழிப் பிரச்சினை விசுவரூபம் எடுத்து நின்ற காலமாகும். மொழிப் பிரச்சினை சம்பந்தமாக இ. மு. எ. ச. எடுத்த தீர்மானம் இச்சங்கத்தின் அடிப்படை அரசியற் கோட்பாட்டினையும் உள்ளார்ந்த தேசிய நோக்கினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

"மொழிப் பிரச்சினை இரண்டு அடிப்படை அம்சங்கள் கொண்டுள்ளது. ஒன்று வரவேற்கத்தக்கது. வாழ்த்துக்குரியது. மற்றது ஆபத்தானது.

முதலாவது அமிசம் வளமிக்க தேசாபிமானத்தை பிரதிபலிப்பது மக்களின் ஜனநாயக உணர்வை கருவூலமாகக் கொண்டது. பல நூற்றுண்டுகளாக அன்னிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கும், அதன் கலாச்சார ரீதியான-மொழி ரீதியான ஆதிபத்தியத்திற்கும், அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள் இன்று தேசிய விழிப் படைந்து விட்டார்கள். தம் தம் கலை, கலாச்சாரம் பற்றியும் மொழி-இலக்கியம் பற்றியும் இன ரீதியான பண்பாடு-பாரம்பரியம் பற்றியும் போதமடைய ஆரம் பித்துள்ளார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியப் பற்று நிறைந்த மக்களின் இந்த விழிப்பை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பேருவகையுடன் வரவேற்கிறது; வாழ்த்துகிறது. இந்த நல்ல திருப்பம் நம் கலைகளும் கலாச்சாரமும் வளர்வதற்கான நல்லதொரு எதிர்காலத்திற்குப் பாதையமைத்துக் கொடுக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

ஆனால் மக்களின் இந்த தேசிய விழிப்பு தவறான பாதையில் திருப்பிவிடப்பட்டுள்ளதை நாம் ஆழ்ந்த துக்கத்துடனும், கவலையுடனும் பார்க்கின்றோம். தேசத்தின் சுயாதீனத்தை வலுப்படுத்தியும், இனங்களினதும் மக்களினதும் ஐக்கியத்தையும் சிநேக பாவத்தையும் ஸ்திரப்படுத்தியும், சகல மக்களினதும் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு உயர்ந்தநாட்டைநிர்ணயிப்பதற்குப் பதிலாக நாட்டில் உருவாகியுள்ள ஒரு மொழிக் கோஷம் சுயாதீனத்தைச் சிதைத்து, இனஒற்றுமையைக் குலைத்து, இனங்களின் உரிமைகளை ஒட்டறுப்பதிலும், மக்களிடை மோதுதல்களை மூட்டிவிட்டு நாட்டை இரத்தக்களரியாக்குவதிலும்தான் இழுத்துச் செல்கின்றது.......

"தனிச் சிங்களத்தால் பாதிக்கப்படும் தமிழ் மக்கள் தம் மொழியையும், கலை கலாச்சாரங்களையும், ஜனநாயக உரிமைகளையும் காக்க விழிப்புணர்ச்சி பெற்று முன்வர வேண்டும் என்று அறை கூவுகின்றோம்...

ஒவ்வொரு கட்சியும் தனது மூலக் கொள்கைகளை முண்டி முன்வையாது தமிழ் பேசும் சகல மக்களும் ஒரு முகப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதும், நாட்டிலுள்ள சகல ஜனநாயக சக்திகளும் அங்கீகரிக்கக்கூடியதுமான ஒரு கொள்கையை ஒன்றுகூடி வகுத்துக்கொள்ள வேண்டுமென்றும் நாம் வேண்டுகின்றோம்......

ஆனல் ஒரு எச்சரிக்கை. இந்த இயக்கம் கட்டுப்பாடு நிறைந்ததாக இருக்கவேண்டும். தமிழ் உரிமையை அடியஸ்திவாரமாகக்கொண்டு இது இருக்கவேண்டுமேயன்றி இன விரோதத்தைப் பரப்புவதாக இருக்கப் படாது......"

மொழிப் பிரச்சனை உக்கிரமடைவதற்கு முன்னரே எடுக்கப்பட்ட இத் தீர்மானம், இன்று பின்னேக்காகப் பார்க்கும்பொழுது தூரதிருஷ்டியுடன் அமைந்துள்ள தன்மையினை உய்த்துணரும் அதேவேளையில், அன்றைய சூழ்நிலையில், நிலைமையை நன்குணர்ந்து எடுக்கப்பட்டதொன்று என்பது தெரிகின்றது.

இத் தீர்மானத்தின் அடிப்படையாக அமைந்துள்ள கருத்து நிலைபாடு, இ. மு. எ. ச. வேற்றுமையிடையே ஒற்றுமையைக் காணும் தேசியப் பொறுப்புணர்வின்பாற்பட்டது என்பது புலனகின்றது. தேசிய ஒருமைப்பாட்டையும் தமிழ் பேசும் மக்களின் கலை இலக்கிய வளர்ச்சியையும், அதனல் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தையும் பேணுவதையே தனது நோக்கமாக இ. மு. எ. ச. கொண்டிருந்தது என்பது நன்கு தெளிவாகின்றது.

இ மு. எ. ச. வகுத்துக்கொண்ட வேலைத்திட்டம் இப் பணியை நன்கு நிறைவேற்றுவதாக அமைந்திருந்தது.

1956 முதல் இ. மு. எ. ச. செயற்படுத்திய இலக்கிய அபிவிருத்தி வேலைகளை இப் பின்னணியிலேயே வைத்து நோக்குதல் வேண்டும்.

இ. மு. எ. ச. வின் வேலைத் திட்டத்தையும் செயற்பாட்டினையும் ஆராய்வதற்கு முன்னர் இ. மு. எ. ச. அங்கத்தவர்

களின் அன்றைய கருத்து நிலைபாட்டினையும் கடமையுணர்ச்சியையும் எடுத்துக் கூறவேண்டுவது அவசியமாகின்றது.

இ. மு. எ. ச. வின் அங்கத்தவர்கள் இலக்கியத்தைப் பொழுதுபோக்கு முயற்சியாகக் கொள்ளாது, இலக்கியம் மூலம் தாம் எண்ணித் துணிந்த தேசப்பணியொன்றினைச் செய்வதாகவே கருதினர். "நமக்குத் தொழில் இலக்கியம், நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்னும் தாரக மந்திரத்தையுடையராய் விளங்கினர் என்று கூறுவது மிகைப்பட்ட கூற்றாகாது. இ. மு. எ. ச. அங்கத்தவர்கள் குறிப்பாக செயற்குழு தேசிய சபை ஆகிய சங்க நிறுவன மட்டத்திற் கடமையாற்றியோர் தமது பொதுக் கடமைகள், பணிகளில் இ. மு. எ. ச. வின் இலக்கிய நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையிற் கடைமையாற்றி வந்தனர்.

இ. மு. எ. ச. செயல்வேகத்துடன் கருமமாற்றத்தொடங்கியபொழுது, முக்கிய இலக்கிய கோஷமாக அமைந்தது, "ஈழத்துத் தமிழ் இலக்கியம்" என்னும் கோட்பாடேயாகும். ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்தின் பிரதியாக அமையாது "ஈழத்தின் மண் வாசனை"யைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

"மண் வாசனை" என்னும் கோஷம் "தேசிய இலக்கியம்" என்னும் கோஷத்துடனும் இந்தியத் தமிழ் இலக்கியம் பற்றிய நோக்குடனும் சம்பந்தப்பட்டு நின்றதாகும். ஆனால் அடிப்படையிற் பார்க்கும்பொழுது மண்வாசனை என்னும் கோஷமே முந்தியதாகும்.

ஈழத்திலே தோன்றும் தமிழ் இலக்கியம், ஈழத்து மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஈழத்து வாழ்க்கைப் பிரச்சினை இலக்கியப் பொருளாகச் சிறுகதை நாவல்களில் இடம்பெற்றபொழுது, ஈழத்துப் பல்வேறு பிரதேசங்களின் வர்ணனை வாழ்க்கை

ASSISTANT REGISTRAR OF BOOKS

முறை விவரணம், பேச்சு வழக்கு ஆகியன இடம்பெற வேண்டுவது அத்தியாவசியமாயிற்று.

இ. மு. எ. ச. வின் இவ்விலக்கிய இயக்கம் வலுவடைந்து வரும் நாட்களில் க. கைலாசபதி தினகரன் பத்திரிகையிற் சேர்ந்தார். சேர்ந்த சில நாட்களுள் அவர் தினகரன் வாரப் பதிப்பின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவ்வாறு நியமனம் பெற்றதும் அவர் ஈழத்தினைக் களமாக, ஈழத்து வாழ்க்கைப் பிரச்சினைகளை இலக்கியப் பொருளாகக் கொண்ட சிறுகதைகள் பிரசுரமாகின. அவ்வாறு வெளியிடப்பெற்ற சிறுகதைகள் "மண்வாசனை" என்ற இலக்கிய கோஷத்துக்கு உதாரணங்களாக விளங்கின. அவர் முழுப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றதும் தினகரன் ஈழத்து தமிழ் இலக்கிய இயக்கத்தில் முதன்மைபெறத் தொடங்கிற்று.

இதனைத் தொடர்ந்து இ. மு. எ. ச. வின் ஆக்க இலக்கியக் கோட்பாடுகளை எடுத்துவிளக்கும் வகையில் "மரகதம்" என்னும் சஞ்சிகை அமைந்தது. மரகதம் சஞ்சிகையை ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் இளங்கீரன் பதிப்பித்தார். "நீதியே நீ கேள்" என்ற அவரது நாவல், அப்பொழுது தினகரனில் தொடர் நாவலாக வெளிவந்தது.

இ.மு.எ.ச.வின் இவ் ஆக்க இலக்கியக் கோட்பாடு படிப்படியாக, அக்காலத்தில் வெளிவந்த பிற சஞ்சிகைகளிலும் முக்கிய இடம் பெறத் தொடங்கிற்று. "சிற்பி" சரவணபவன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற "கலைச்செல்வி" என்னும் சஞ்சிகையும் அத்தகைய சிறு கதைகளை வெளியிடத் தொடங்கிற்று.

இவ்வாறு ஈழத்தின் ஆக்க இலக்கியங்களின் பிரசுரக் களம் விரிவடையத் தொடங்கிற்று. பிரசுரகளவியாப்தியைப் பயன்படுத்திக்கொண்ட இ.மு.எ.ச.இப்புதிய இலக்கிய நெறியினை வளர்ப்பதற்குப் பல விமரிசன அரங்குகளை நடத்திற்று. இ. மு. எ. ச. வின் இதழான "புதுமை இலக்கியத்தில்" "சகோதர விமர்சனம்" என்னும் பகுதியில், ஈழத்து எழுத்

தாளர்களின் ஆக்கங்கள் சகோதர எழுத்தாளர்களால் விமரிசிக்கப்பட்டன.

சகோதர விமர்சனம் என்னும் பகுதியைவிட, "புத்தக விமர்னம்" என்னும் ஒரு தனிப்பகுதியும் புதுமை இலக்கியத்தில் இடம் பெற்றது.

சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதை, கவிதைகளை விமரிசிப்பதற்கென்ற கூட்டங்களும் கூட்டப்பெற்றன.

அச்சேருத இலக்கிய ஆக்கங்களை வாசித்து விமரிசிப்பதற்கெனவும் சிற்சில கூட்டங்கள் கூட்டப்பெற்றன.

இத்தகைய விமரிசன வளர்ச்சி தமிழின் நவீன ஆக்க இலக்கிய வளர்ச்சியிற் புதியதொரு நெறியினைத் தோற்றுவித்ததெனலாம். அதாவது இலக்கிய ஆக்கமும் விமரிசனமும் இணைந்து செல்கின்ற ஒருபண்புஇதனுல் ஏற்பட்டது. இலக்கிய ஆக்கங்கள் இலட்சியத் தன்மையுடையனவாகவும், செம்மையான பொருள், உருவ அமைதியுடையனவாகவும் அமைவதற்கு விமரிசகர்கள் உதவினர். இலக்கிய விமரிசனம் வெறுமனே கோட்பாட்டு மீட்பாக அமையாது பிரயோக விமரிசனமாவதற்கும், விமரிசனத்தில் எழுத்தாளனும் அவனது ஆக்கமும் நுனித்தாராயப் படுவதற்கும் இவ்வியக்கம் பெரிதும் உதவிற்று. தமிழகத்தில், நவீன இலக்கியப் பரிசோதனைக் காலம் என்று விவரிக்கப்படும் மணிக்கொடிக் காலத்திற்கூட, ஆக்கமும் விமரிசனமும் இவ்வாறு இணைக்கபடவில்லை யெனலாம்.

"ஈழத்திலக்கியம்" "மண்வாசனை" என்னும் கோஷங்கள் காரணமாகத் "தேசிய இலக்கியம்" என்னும் கோட்பாடு தோன்றலாயிற்று. ஈழத்து இலக்கியம் மக்கள் கடப்பாடுடைய இலக்கியமாக வளருவதற்கும், வளர்க்கப்படுவதற்கும் "தேசிய இலக்கியம்" என்ற கோட்பாடு அவசியமாயிற்று. இளங்கீரன் தமது மரகதத்தில் தேசிய இலக்கியம் பற்றிப் பல கட்டுரைகளை வெளியிட்டார். இத்தொடரில் வெளிவந்த கட்டுரைகளில் ஏ. ஜே. கனகரட்ண, அ. ந.

கந்தசாமி, தருமுசிவராமு ஆகியோர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவையாகும்.

இவ்விடத்தில் தேசிய இலக்கியம் பற்றி ஏ. ஜே. கனகரட்ணவும் அ. ந. கந்தசாமியும் தேசிய இலக்கியத்திற்குக் கொடுத்த விளக்கங்கள் மீட்டுவது பயன் தருவதாகும்.

"......அது ஒரு தேசியத் தனித்துவத்தை, தேசிய சுபாவத்தை, தேசிய வல்லபத்தைப் பிரதிபலிக்கத்தான் செய்யும். இதன்வழியே, ஒரு தேசிய இலக்கியம், வேற்று நாட்டு இலக்கியங்களுடன் தன்னை வேறுபடுத்தும் சில விசேடத் தனித் தன்மைகளைப் பெற்றுத்தானிருக்கும். வாழ்க்கைத் தனித்துவ அம்சங்கள், மரபுகள், உருவம் முதலியன இந்திய இலக்கியத்தை அமெரிக்க இலக்கியத்திலிருந்து வேறுபடுத்துகின்றன. வாசகரெல்லாரும் இருநாட்டு இலக்கியங்களினதும் முழு உணர்வும் முற்றிலும் ஒப்புக்கொள்வார்கள்."

—ஏ. ஜே. கனகரட்ண

"ஒரு மொழிக்கு ஒரு இலக்கியம் என்பது மொழிகள் சடல் கடந்து பரவி நிலைபெற்ற இக்காலத்துக்கு ஒவ்வாது. கடந்த இருநூறு ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுவரும் ஆங்கிலமொழி பல தேசிய இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இன்று நாம் வெறுமனே ஆங்கில இலக்கியம் என்று கூறினால் அது அமெரிக்க இலக்கியத்தையோ ஆஸ்திரேலிய இலக்கியத்தையோ கனேடிய இலக்கியத்தையோ குறிக்காது.

தேசிய இலக்கியம் என்ற நமதுஇயக்கம் சர்வதேசியத்துக்கு முரண்பட்ட ஒன்றல்ல. உயிருள்ள இலக்கியத்துக்கு தேசிய சமுதாயப் பின்னணி அவசியம். இவ்வித பின்னணியில் உருவாகும் தேசிய இலக்கியமே காலத்தையும் கடலையும் தாண்டி சர்வதேசங்களையும் ஈர்க்கும் வல்லமை பெற்றதாகும்."

—அ. ந. கந்தசாமி

தேசிய இலக்கியம் என்ற கோட்பாடு ஈழத்திலக்கிய வட்டாரங்களின் பல கருத்து முரண்பாடுகளை உண்டாக்கிற்று. தேசிய இலக்கியம் என்ற இக்கோட்பாட்டின் சமகாலத்தாக்கம் பற்றியறிவதற்கு, இக்கட்டுரையாசிரியர் "தேசிய இலக்கியம்" பற்றி எழுதிய கட்டுரையொன்று பெரிதும் உதவும்.

"இவ்வாறு பார்க்கும்பொழுது தமிழகத்துடனுள்ள மொழியொருமை, மதவொருமை, பண்பாட்டொருமை முதலியனவற்ருலும், இலங்கையிலுள்ள சிறப்புப் பண்புகள் காரணமாகவும் தேசிய இலக்கியம் என்ற சொல் பலவித திரிபுவாதங்களுக்கு இடமாயமைந்தது.

ஆனல் ஈழத்தமிழிலக்கியம் தேசிய இலக்கியமாக மிளிரவேண்டுமென விரும்புபவர்கள் தேசிய இலக்கியமெனும்பொழுது தாம் எதைக் கருதுகின்றனர் என்பதை திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். தேசிய இலக்கியம், ஈழத்தமிழிலக்கியத்தில் மலர வேண்டுமென்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் தமது அறிக்கையில் தேசிய இலக்கியத்திற்கு வரைவிலக்கணங் கொடுத்து வெளியிட்ட அறிக்கையில் – ஈழம்வாழ் மக்களிடையே தாம் ஒரு தேசத்தினர், ஒரு நாட்டினர் என்ற உணர்வையும் அவர்களிடையேயுள்ள ஒற்றுமையையும் வளர்ப்பது தேசிய இலக்கியத்தின் நோக்கமாக அமையவேண்டுமென்று கூறியுள்ளார். தேசிய பிரச்சினைகளின் பின்னணியில் மக்களின் நிலையை வைத்து ஆராய்ந்து இலங்கையர் என்ற முறையில் வழிகாண்பதன் அவசியத்தை உணர்த்துவது தேசிய இலக்கியமாகும்.

ஈழத்து இலக்கியம் என்ற கோஷம் இதன் முன்னேடியாக அமைந்தது. ஈழத் தமிழ்மக்கள் இலக்கியம் படைக்க மாட்டாதவர்கள் என்றிருந்த நிலைமையை மாற்றுவதற்காக ஈழத் தமிழிலக்கிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழில் ஈழத்தவருக்

குள்ள திறமையையும் வற்புறுத்தி அவ்வழியில் முன்னோடிகளாக விளங்கிய நாவலர், விபுலானந்தர் முதலியோரைக் காட்டி ஈழத்தில் தமிழிலக்கியம் வளர வேண்டுமென்று வேண்டிய பின்னர் அவ்வாறு வளரும் இலக்கியம் எத்தகையதாக இருக்க வேண்டுமென்பதை விளக்குவதே தேசிய இலக்கியம் என்ற இவ்வியக்க மாகும்.

ஈழத்து இலக்கியம் என்று சொன்னதும் ஒருங்கு திரண்ட சக்திகள் தேசிய இலக்கியம் என்றதும் ஒதுங்குதல் இயற்கையே. தேசியம் எது என்பதுபற்றிய கருத்து வேறுபாட்டினுலும் ஈழத்து இலக்கியம் கோஷமாகவிருந்த காலகட்டத்தில் தனிமனித வாதத் திற்கு இருந்த இடம் இப்பொழுது இல்லாதிருப்ப தனுலும் பலர் மயங்கி நிற்கின்றனர்.

தேசிய இலக்கியம் வளர்வதற்கு உண்மைபூர்வமான கணிப்பு அத்தியாவசியம்; இல்லாவிட்டால் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கும் நிலேயே ஏற்படும். எனவேதான் யதார்த்தம் இக் கால இலக்கியத்தின் அச்சாணியாகின்றது. —தினகரன் 2-8-63.

தேசிய இலக்கியம் என்ற இக்கோட்பாடு பற்றிய சர்ச்சை வியாப்தியடையத் தொடங்கிய பொழுது, வளரும் ஈழத்துத் தேசிய இலக்கியத்துக்கும் தென்னிந்தியத் தமிழிலக்கியத்துக்கும் எத்தகைய உறவுகள் இருத்தல் வேண்டுமென்பது பற்றிய சர்ச்சை உக்கிரமடையத் தொடங்கிற்று. ஈழத்தின் தேசியத் தமிழ் இலக்கியம் தமிழின் ஒருமையைப் பாதிக்கும் என்னும் கருத்து எடுத்துக் கூறப்படவே, தேசிய இலக்கியவாதிகள் அக் கருத்தினே எதிர்க்கத் தொடங்கினர்.

"தமிழ்நாடு தாய்நாடு, ஈழம் சேய்நாடு என்ற பூசாரி மந்திரத்தைக் கிளிப்பிள்ளேயாகச் சொல்ப வர்கள் சேயால் எப்பொழுதுமே முடிச்சில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை உணர வேண்டும். பக்குவ ஞானம் வளர, தான் இன்னமும்,

கொப்பூழ்க் கொடிமூலம் தாயின் உணவினைப் பங்கிட்டு வரமுடியாது என்கின்ற பிரக்ஞையின்பால், தன் சொந்த இலட்சிய அபிலாசைகளுக்கேற்ப ஒரு தனித்துவச் சுதந்திர வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முனைய வேண்டும். ஆகையினால் தேசிய இலக்கியம் தேவை என்ற குரல் நமது தனித்துவ இலக்கியப் பாரம்பரியத்தினைக் கட்டி வளர்க்க வேண்டும் என்ற வேட்கை, மிக இயற்கையானதும், தவிர்க்கமுடியாதது மான ஒன்றாகும்.''

— ஏ. ஜே. கனகரட்ண

இந்தியப் பத்திரிகைகளின் விஷய அடக்கம் சம்பந்தமாகத் தோன்றிய இப்பிரச்சினை அக்காலத்தில், முற்றிலும் எழுத்தாளர் கண்ணோட்டத்தில் வைத்தே பார்க்கப்பட்டது.

"இந்தப் பிரச்சினை ஏன் எழுந்தது? இந்தியப் பத்திரிகைகள் பல இலங்கை மார்க்கட்டில் செல்வாக்குப் பெற்றுள்ளன. இங்கிருந்து லாபத்தைப் பெறும் அவை, இந்தநாட்டு எழுத்தாளர்களுக்கு ஏன் ஆதரவு தரக் கூடாது? என்ற எண்ணமே அடிப்படைக் காரணம்''

தேவன் - யாழ்ப்பாணம்
புதுமை இலக்கியம்-5

அக்டோபர் 1958 புதுமை இலக்கிய இதழில், இப் பிரச்சினைபற்றிப் பிரேம்ஜி, இ. மு. எ. ச. பொதுச் செயலாளர் என்ற முறையில், "நமக்கிடையில்'' என்னும் பகுதியில், "இந்தியப் பத்திரிகைகளும் இலங்கை எழுத்தாளர்களும்'' என்ற தலைப்பில் எழுதும்பொழுது, இ. மு. எ. ச. இப்பிரச்சனைபற்றி நடாத்திய ஒரு கருத்தரங் கத்தில் எடுத்துக் கூறப்பட்ட விடயங்களைப் பத்து அமிசங் களாகத் தொகுத்துக் கூறியிருந்தார். அவற்றில் முக்கிய மானவை பின்வருமாறு-

(1) இந்தியப் பத்திரிகைகளில் இடம் பெற்றவன்தான் எழுத்தாளன் என்ற தப்பிதமான கண்ணோட்டம்.

(2) இரு நாடுகளிலும் ஒரு சிறிய கூட்டமே தர்பார் நடத்துகிறது. புதிய எழுத்தாளர்களை வளர்த்தல் வேண்டும்.

(3) தமிழகப் பத்திரிகைகளின் போட்டியால் நமது நாட்டில் சொந்த சஞ்சிகைகள் தலைதூக்க முடிவதில்லை.

(4) இலங்கை மண்ணில் காலூன்றி நமது மக்களை இதயபூர்வமாக பிரதிபலிக்க வேண்டும். இலக்கிய தாகத்தை, கலாசாரத் தேவைகளைப் பூர்த்திசெய்ய தமிழகத்தைப் பார்த்து நிற்கும் போக்கு ஒழிய வேண்டும்.

1970இல் இப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியபொழுது கடைசி இரண்டு அமிசங்களுமே தலைதூக்கி நின்றன.

1958 அளவில் தொடங்கிய இப்பிரச்சினைக்குத் தூபமிடு வதாக அமைந்தது 1960இல் நடந்தவொரு நிகழ்ச்சி.

1960 அக்டோபர் - நவம்பரில் இலங்கை வந்திருந்த "கங்கை" ஆசிரியர் பகீரதன் என்பவர், 1-11-60இல் தினகரனில் வெளியாகிய பேட்டியொன்றில் தமிழ்நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களைவிட ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பத்து வருடம் பின்தங்கிய நிலையில்தான் இருக்கின்றார்கள்" என்று கூறியிருந்தார். பகீரதனுக்குப் பதிலளிக்குமுகமாக எழுதப்பட்ட கடிதங்கள் பல தினகரனில் வெளியாகின. நவாலியூர் சோ. நடராசன், எம். எஸ். கனக ரத்தினம், கா. சிவத்தம்பி ஆகியோர் இதற்குப் பதில் எழுதினர்.

பகீரதன் கிளப்பிய வாதம் வளர்ந்துவரும் ஈழத்திலக்கிய வேட்கையினை மேலும் வளர்ப்பதாக அமைந்தது. பகீரதன் குறிப்பிட்டதை வைத்துக்கொண்டு, இந்தியத் தமிழ்ச் சிறு கதைபற்றிய ஆய்வே நடைபெறத் தொடங்கிற்று.

"இந்தியத் தமிழ்ச் சிறுகதைகளையும் ஈழத் தமிழ்ச் சிறு கதைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்தியத் தமிழ் எழுத்துலகத்தில் மணிக்கொடிக் குழுவிற்குப் பின்னர், சமீபகாலத்தில் சிறுகதை வளர்ச்சி இந்த ஆரம்பத்திற்கேற்ற வளர்ச்சியுடையதாக அமையவில்லை என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கின்றனர். சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் போன்ற ஓரிரு சிறுகதையாசிரியர்களே சமீபகாலத்தில் தோன்றியுள்ள தலை சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாவார்.

இவர்களைத் தவிரச் சிறுகதையுலகில் பெரியதொரு தேக்கமேற்பட்டிருப்பதை நாம் காணலாம். 1960ம் ஆண்டுத் தீபாவளி மலர்ப் படைப்புக்கள் அங்குள்ள சிறு கதை வரட்சிக்கு நல்ல உதாரணங்கள்"

—சிவத்தம்பி 7-11-60

தென்னிந்தியச் தமிழ்ச் சிறுகதை வரட்சி பற்றிக் குறிப்பிடப்பட்டதைப் பற்றி சி. சு. செல்லப்பா தமது 'எழுத்து' சஞ்சிகையிற் குறிப்பிட்டு எழுதினர்.

பகீரதன் இலங்கையிலிருந்த காலத்தில் இலங்கையில் தங்கிநின்ற 'சரஸ்வதி' ஆசிரியர் விஜயபாஸ்கரன், பின்னர் இதுபற்றிக் குறிப்பிடும்பொழுது,

"......

திரு. பகீரதன் எந்த அளவுகோலைக் கொண்டு இந்த முடிவுக்கு வந்தார் என்பதைத் தெளிவுப்படுத்தவுமில்லை. மனம்போன போக்கில் இவர் கூறிய இக்கருத்து ஈழத்து எழுத்தாளர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. தினகரன் பத்திரிகையில் பல எழுத்தாளர்கள் இது பற்றித் தம் கருத்தைக் காரசாரமாக எழுதினர். தமிழ் நாட்டில் சிறுகதைகள் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றித் தம் கருத்தைச் சொன்னார்கள். பகீரதன் போன்றோர் எழுதியுள்ள சிறுகதைகள் எவ்வளவு தரம் குறைந்தன என்பதை எடுத்துக் காட்டினர்.

தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் எழுத்தைப் படிக்க இலங்கை எழுத்தாளருக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இந்நிலையில் உள்ள அவர்கள் இங்குள்ள ஒவ்வொரு எழுத்தாளரின் படைப்புக்களையும் சரிவர எடைபோட்டு வைக்க முடிகிறது. அதனுல்தான் பகீரதனை மட்டுமல்லாமல் இங்குள்ள ஏனைய எழுத்தாளர்களையும் தரங் கண்டு அவர்களால் விமரிசிக்க முடிகிறது. இதைப் புரிந்து கொள்ளத் திறமையற்ற நமது எழுத்தாள நண்பர்களைக் கண்டு நாம் பரிதாபப்பட வேண்டியிருக் கிறது'' என்று எழுதினுர்.

—சரஸ்வதி (பிப். 1961)

பகீரதன் இந்தியத் தமிழ் இலக்கிய உலகில் சிறிதும் முக்கியத்துவம் பெருதவரெனினும், அவர் இலங்கையில் தங்கியிருந்தபொழுது, இந்திய வர்த்தகப் பத்திரிகைகளின் பிரதிநிதியாகத் தம்மைக் கருதிக் கூறியவை அக்கால கட்டத்தின் ஈழத்திலக்கியத் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்வதாக அமைந்தது.

ஈழத்துத் தேசிய இலக்கியம் எனும் கோட்பாட்டினை இ. மு. எ. ச. எவ்வாறு படிப்படியாக வளர்த்தது என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

ஈழத்துத் தமிழிலக்கியத்தில் புதுமையையும் தேசியக் கட்டுப்பாட்டினையும் வளர்க்க முனைந்த இ. மு. எ. ச. தனது உத்தியோக பூர்வமான வெளியீடான புதுமை இலக்கியத்தில் ''நமது பரம்பரை'' என்னும் பகுதியினை நடாத்திற்று. அத் தொடரில் இந் நூலாசிரியர் எழுதிய ஆறுமுகநாவலர் என்னும் கட்டுரை நவம்பர் 1961 இதழிலும், சித்திலெவ்வையைப் பற்றி முகம்மதுசமீம் எழுதிய கட்டுரை பிப்ரவரி 1962 இதழிலும்; இந் நூலாசிரியர் பாரதியாரின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமியார் பற்றியெழுதிய கட்டுரை ஏப்ரல் 1963 இதழிலும் வெளியாகின. நமது பரம்பரைத் தொடரின் முதற் கட்டுரைக்கு முகவுரையாக எழுதப்பட்ட குறிப்பு அக்காலத்தில் நிலவிய இலக்கிய உணர்வாழத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

"வளர்ந்து வரும் இன்றைய எமது இலக்கிய ஆக்கத்தின் பாரம்பரியத்தையும் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிய வேண்டுவது அவசியம். ஈழத்து எழுத்தாளராகிய நாம் நமக்கென ஓர் இலக்கிய வழியை எவ்வாறு வகுக்க வேண்டும் என்று கர்ச்சிக்கும் இவ் வேளையில் நாம் வந்த வழியைப் பார்த்தல் நல்லது. பழமையின் அடிப்படையில் தோன்றி மிளிரும் புதுமை தான் வளர்ச்சியின் சின்னம். எனவே இக்கட்டுரைத் தொடர், இன்று பலர் கண்டு திடுக்கிடும் புதுமையின் பழமையைக் காட்டுவதுடன் இன்று பல எரிச்சல் குரல் களுக்கிடையேயும் இலக்கிய வேலையில் ஈடுபட்டிருக்கும் ஈழத்து எழுத்தாளன் இலக்கிய அனாதையல்லன் என்பதையும் உணர்த்துவதற்கே எழுதப்படுகின்றது."

இவ்வேளையில், பாரதி தன் சுயசரிதையில் தனது ஞான குருவெனக் குறிப்பிடும் யாழ்ப்பாணச் சாமியார் யாவர் என அறியப்பட்ட தன்மையினையும் எடுத்துக் கூறல் வேண்டும். இப்பிரச்சினையை முதன் முதலிற் கிளப்பியவர் திரு. அ. ந. கந்தசாமி யாவர். சாமியாரது அன்பரும் அவரது வாழ்வை ஐயந்திரிபற அறிந்தவருமாகிய மேலைப் புலோலிச் சபாபதிப் பிள்ளையவர்கள் தக்க ஆதாரங்காட்டி, பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த அருளம்பலச் சுவாமியாரே பாரதியார் குறிப்பிடும் யாழ்ப்பாணத்துச் சாமியாரென நிறுவினர். 1963 மே மாதம் 7, 8, ஆம் தேதிகளில் நடை பெற்ற இ. மு. எ. ச. இரண்டாவது மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியாக, சாமியார் சமாதி கொண்டுள்ள அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலருகிலுள்ள அவர் சமாதியில் யாழ்ப்பாணத்துச் சாமியாருக்கு நினைவுச் சின்னம் நிறுவப் பட்டது.

ஈழத்திலக்கியத்தின் பாரம்பரியத்தினை நிறுவும் முயற்சி களிலொன்றாக ஈழத்தின் கடந்தகால இலக்கியக்காரர்களுக்கு விழாக்கள் பல எடுக்கப்பட்டன. அத்தகைய விழாக்களில் முக்கியமானது ஆறுமுகநாவலர் நினைவாக எடுக்கப்பட்ட விழாக்களாகும்.

இ. மு. எ. ச. நாவலருக்கு விழா எடுக்கப்படுவதற்கு முன்னரும், அவர் நினைவாக விழாக்கள் பல எடுக்கப்பட்டன. ஆனால் அவையாவும் அவரை இந்துசமய குரவராகவே போற்றின. நாவலர் தினத்தன்று குரு பூசை நடத்துவது வழக்கமாகவிருந்தது. இ. மு. எ. ச., 1960 முதல் நாவலருக்கு விழா எடுக்கத் தொடங்கினர். இவ்விழாக்களில் ஆறுமுக நாவலரைத் தேசிய விடுதலை இயக்கத்தின் வீரராகப் போற்றும் பண்பு காணப்பட்டது. நாவலருடைய சைவப் பணியும், தமிழ்ப் பணியும் தேசிய, ஏகாதிபத்திய விரோத இயக்கத்தில் எத்தகைய இடத்தினைப் பெற்றன என்பது வற்புறுத்தப்பட்டது. நாவலரைத் தேசிய இயக்க வீரராக எடுத்து விளக்கும் பண்பு இ. மு. எ. ச. வின் முயற்சி யினாலேயே ஏற்பட்டது. இத்துடன் நாவலரது இலக்கியப் பணியினைத் தற்கால இலக்கிய விமரிசனப் பின்னணியில் வைத்து நோக்கும் பண்பும் இவ்விழாக்களிலே காணப் பட்டது.

நாவலரைத் தேசியவாதியாக எடுத்துணர்த்தியமை யாலேயே 1971 இல் நாவலர் படமுள்ள தபால் முத்திரை வெளியிடப்பெற்றதெனலாம். நாவலர் முத்திரை வெளி யீட்டின் பொழுது கொழும்புக் கலாபவனத்தில் நடந்த கூட்டத்தில், நாவலர் வாழ்ந்த இல்லத்தைத் தேசியச் சொத் தாகப் பேணவேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப் பட்டது. கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ். எஸ். குலதிலகாவின் முயற்சியினாலும், தபால் தந்திப் போக்கு வரத்து அமைச்சர் திரு. செ. குமாரசூரியரது விடா உழைப் பினாலும் நாவலர் வாழ்ந்த இல்லமிருந்த காணி நிலம் அரசினால் சுவீகரிக்கப்பட்டுத் தேசிய தொல்சீர் இடமாகப் பேணப்பட்டது.

இ. மு. எ. ச. வின் முயற்சியினாலேயே நாவலர் தேசிய வீரராகப் போற்றப்படும் தன்மை ஏற்பட்டது என்று துணிந்து கூறலாம்.

நாவலரைத் தேசிய வீரராகப் பரிணமிக்கச் செய்தது போன்று ஈழத்தின் முஸ்லிம் சீர்திருத்த இயக்க வீரரான

சித்திலெவ்வையின் இலக்கிய சமூகப் பணிகளை முன்வைக்க முயன்றதும் இ. மு. எ. ச. வே. சித்திலெவ்வையின் முக்கியத்துவத்தை முதன் முதலில் எடுத்துணர்த்திய பெருமை ஸாகிராக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர், காலஞ்சென்ற ஏ. மெ. ஏ. அஸீஸையே சாரும். ஆனால் தமிழ் எழுத்தாளரிடையே சித்திலெவ்வையின் முக்கியத்துவத்தைப் பரப்பிய பெருமை இ. மு. எ. ச. வையே சாரும். சித்திலெவ்வையைப் பற்றி விரிவான நூலொன்றினை எழுதிய பெருமை, முற்போக்கு எழுத்தாளர் ஏ. இக்பால் அவர்களையே சாரும். அந்நூலில் அவர் சித்திலெவ்வையைத் தேசியவீரராக எடுத்துக் காட்டியுள்ளமை போற்றுதற்குரியதாகும்.

சித்திலெவ்வையின் புகழ் வியாப்தியில் 1963 ஆக்ஸ்பில் மட்டக்களப்பு தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய அறிஞர் சித்திலெவ்வை நினைவு விழா முக்கிய இடம் பெறுகின்றது.

இ. மு. எ. ச. எடுத்த இலக்கிய வீரர் விழாக்களுள் சோமசுந்தரப் புலவர் நினைவு விழாவும் முக்கியமானதாகும். 1961 ஜூலையில் நடந்த இவ்விழாவுக்கென கவிதைப் போட்டியொன்று நடத்தப்பெற்று, வி. கந்தவனம் அவர்கட்கு முதற் பரிசிலாகத் தங்கப்பதக்கம் ஒன்று பரிசளிக்கப்பட்டது.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதி அழியாப் புகழ் பெற்ற ஈழத்தறிஞர் சி. கணேசையர் அவர்கள் மறைந்தார்கள். மறைந்தபொழுது இரங்கற் கூட்டங்களினை இ. மு. எ. ச. நடாத்திற்று. 1960 இல் அவர் கிரார்த்த தினத்தன்றும் இ. மு. எ. ச. விழாவெடுத்தது. 1969 இல் பம்பாயில் நடந்த தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சில்லையூர் செல்வராசன் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, அம்மகாநாட்டில் சி. கணேசையரின் மறைவுக்கு அநுதாபம் தெரிவிக்கும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறாக ஈழத்திலக்கியப் பாரம்பரியத்தினை நிறுவிய இ. மு. எ. ச. ஈழத்து இலக்கியங்களை வெளியிடும் முயற்சி

யிலும் முன்னின்று உழைத்தது. அக் காலகட்டத்தில் ஈழத்திலக்கிய ஆக்கங்கள் அச்சேற்றப்படுவது மிக அருகியே காணப்பட்டன. எனவே வெளியிடப் பெற்ற நூல்களுக்கு வெளியீட்டு விழாக்கள் நடத்துவதிலும் விமரிசனக் கூட்டங்கள் நடத்துவதிலும் இ. மு. எ. ச. பெருங் கவனம் செலுத்திற்று. இ. மு. எ. ச. நடத்திய வெளியீட்டு விமரிசனக் கூட்டங்களுக்கு உதாரணமாகப் பின்வருவன வற்றை எடுத்துக் கூறலாம்.

| நூல் | | வெளியீட்டு விழாத்தினம் | இடம் |
|---|---|---|---|
| காவலூர் இராசதுரையின் "குழந்தை ஒரு தெய்வம்" | — | 6–12–1961 | கொழும்பு |
| நீர்வை பொன்னையனின் "மேடும் பள்ளமும்" | — | 7–1–1962 | " |
| இளங்கீரனின் "நீதியே நீ கேள்", என். கே. ரகுநாதனின் "நிலவிலே பேசுவோம்" ஆகியனவற்றின் அறிமுக விழாவும் | — | 15–12–1963 | கொழும்பு |
| பெனடிக்ற் பாலனின் "குட்டி"யின் வெளியீட்டு விழாவும் | — | 25–12–1963 | யாழ்ப்பாணம் |

ASSISTANT REGISTRAR OF BOOKS
25 APR 1978
MADRAS 600 00?
PUBLIC (I & PR) DEPARTMENT

நூலாசிரியர்களின் சொந்த முயற்சியினால் வெளியாகிய நூல்களுக்கு வெளியீட்டு விழாக்கள் நடத்துவதனால் மாத்திரம் ஈழத்திலக்கிய வளர்ச்சியினை ஏற்படுத்த முடியா தென்பதை நன்குணர்ந்திருந்த இ. மு. எ. ச. முற்போக்கு எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்கு எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தினைத் தொடங்கிற்று.

இது சம்பந்தமாக 'புதுமை இலக்கியம்' ஆறுவது இதழில் வெளியான குறிப்பு முக்கியமானதாகும்.

"இலங்கை எழுத்தாளர்களின் சிருஷ்டிகள் நிரந்தரத்துவம் பெற்று, தமிழ் இலக்கியப் பொக்கிஷத்தை அணி செய்ய வேண்டுமானுல் அவை புத்தக வடிவம் பெற வேண்டும்.

இலங்கையில் பிரசுரத் தொழில் வளராததினுல் எழுத்தாளர்களின் படைப்புகள் அவை வெளியாகும் பத்திரிகை இதழின் ஆயுசுடன் பிராப்தி ஆகிவிடுகின்றன. இந்நிலேமாறி எழுத்தாளர்களின் சிருஷ்டிகளுக்கு சிரஞ்சீவித்துவம் அளிக்கப்பட வேண்டும். இதை இன்றைய நிலேயில் கூட்டான முயற்சிமூலமும் பொதுத் தியாகத்தின் மூலமும்தான் செய்ய முடியும்.

இலங்கை எழுத்தாளர்களின் சிறந்த படைப்புக்களேப் புத்தக வடிவில் வெளியிடுவதென்று இ. மு. எ. சங்கம் தீர்மானித்துள்ளது. இந்த வரிசையில் நண்பர் டானியலின் சிறுகதைத் தொகுப்பை முதலில் வெளியிடுவதென தீர்மானித்துள்ளோம்......

இந்த மகத்தான தேசியப் பணியை நிறைவேற்ற நிதி தந்துதவுமாறு எழுத்தாளர்களேயும் இலக்கிய அன்பர்களேயும் வேண்டிக் கொள்கிருேம்.

புதுமை இலக்கியம் 1-11-59

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் சில நூல்களே வெளியிட்டது. அவற்றுட் சில பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| டானியல் கதைகள் | — | கே. டானியல் |
| சாலேயின் திருப்பம் | — | டொமினிக்ஜீவா |
| குட்டி | — | பெனடிக்ற் பாலன் |

முற்போக்கு எழுத்தாளரின் பிரசுர முயற்சி பற்றிக் குறிப்பிடும் இவ்வேளேயில் ஈழத்தின் ஆக்க இலக்கியங்கள் பல அவ்வாரம்ப கட்டத்தில் சென்னேயிலேயே அச்சிடப் பெற்றன என்ற உண்மையை மனத் திருத்தல் வேண்டும்.

இப்பணியில் ஈழத்து எழுத்தாளர்களுக்குதவியோர், சரஸ்வதி விஜயபாஸ்கரன், தமிழ்ப் புத்தகாலய அதிபர் கண. முத்தையா ஆகியோராவர். இவ்வாரம்பகால நூல் வெளியீடுகளுக்குப் பாலம் அமைத்துக் கொடுத்த பெருமை செ. கணேசலிங்கத்தைச் சாரும்.

மேற்குறிப்பிட்ட பண்பு காரணமாக ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் இலக்கிய ஆற்றல் தமிழகத்தில் நன்கு தெரிய வந்தது. புத்தக வெளியீட்டில் மாத்திரமல்லாது, சிறுகதைப் பிரசுரத்தில் 'தாமரை', 'சரஸ்வதி' ஆகிய சஞ்சிகைகளின் சேவை மிக முக்கியமான தாகும். சரஸ்வதிச் சஞ்சிகையின் அட்டையில் ஈழத்து எழுத்தாளர்கள் பலரின் புகைப் படங்கள் பிரசுரிக்கப் பட்டன.

இ. மு. எ. ச.வின் இம்முயற்சிகள் காரணமாக முற்போக்கு எழுத்தாளரணியைச் சாராதவர்களும் நூல் வெளியீட்டில் பெருங் கவனஞ் செலுத்தத் தொடங்கினர். எழுத்தாளரணியைச் சாராத இலக்கியப் பிரசுரக்களங்களில் முக்கியமாக விளங்கியது எம். ஏ. ரஹ்மான் நடாத்திய "அரசு வெளியீடு" என்னும் நிறுவனமாகும்.

இக்காலகட்டத்தில் வெளியான சிறுகதைத் தொகுதிகள், நாவல்களின் புள்ளி விபரம் இப்பிரசு ரமுயற்சிகளின் தாக்கத்தினை நன்கு விளக்குவதாக உள்ளது.

சிறுகதைத் தொகுதிகள்

1948 — 55 = 01
1956 — 65 = 40
1966 — 70 = 16

நாவல்கள்

1948 — 55 = 10
1956 — 65 = 35
1966 — 70 = 26

இப்பிரசுர முயற்சிகள் ஏற்படுத்திய உந்துதலினல் 'நூல்' என்னும் சஞ்சிகையொன்றும் வெளியிடப் பெற்றது.

இதனை வெளியிட்டவர் அக்காலத்தில் இ. மு. எ. ச. ஆதரவாளராகவிருந்த "நந்தி" செ. சிவஞானசுந்தரம் அவர்களாவர்.

இக்கால கட்டத்திலேதான் கலாச்சார அமைச்சின் கீழ் இயங்கிய சாகித்திய மண்டலம் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பெறும் சிறந்த நூல்களுக்குப் பரிசில் வழங்கியது. 1961ஆம் வருடத்துச் சிறந்த தமிழ் நூல்களுள் முற்போக்கு எழுத்தாளர் டொமினிக் ஜீவாவின் "தண்ணீரும் கண்ணீரும்", முற்போக்கு ஆதரவாளர் திரு கி. லக்ஷ்மணனின் "இந்திய தத்துவ ஞானம்" என்ற நூல்கள் இடம் பெற்றமையும் இப் புதிய இயக்கத்துக்குப் பேரூக்கத்தினை அளித்தது எனலாம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கிய கட்டமாக அமைந்தது இ. மு. எ. ச. நடத்திய அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு ஆகும். இலங்கையின் வரலாற்றில், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் யாவரும் ஒருங்கு கூடிய முதல் மகாநாடு இதுவேயாகும். இம் மகாநாடு 1962 ஏப்ரல் 28, 29ம் திகதிகளில் கொழும்பு சாகிராக் கல்லூரி மண்டபத்திலே கூடியது. 1959 முதலே இத்தகைய ஒரு மகாநாட்டை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், இறுதியில் 1962இலேயே மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டினை வரவேற்று எழுத்தாளர்கள் பலர் விடுத்த செய்திகள் இம் மகாநாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்தன. உதாரணமாகப் பின்வருவனற்றைக் கூறலாம்.

> "நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துச் சிதறியது போலக் கிடக்கும் ஈழத்து எழுத்தாளரைச் சீமெந்து மூடைபோல ஒன்று திரட்டும் முயற்சிதான் இந்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு.
>
> முதல் முயற்சிதான். ஆனல் முதன்மையான முயற்சி என்றும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.
>
> தலைப்பாக்கட்டிகளின் சொந்தப் பொருளாய் விளக்கி வந்த மாநாடுகள் உணர்ச்சி உத்வேகங்

கொண்ட இளைஞர்களின்-எழுத்தாளர்களின் கைகளுக்கு மாறுவதை எண்ணினால் மனம் நிறைகிறது. மாநாடு வெல்க.''

**சொக்கன்**

வனுந்தரத்தின் குரலொலிபோல் மூலைக்கொருவராக நின்று இலக்கியம் படைக்கும் நாம் எப்பொழுதாவது ஒன்று சேர்ந்து இதுவரை சாதித்தவற்றைக் கணக்கெடுக்கவும், இனிமேல் சாதிக்க வேண்டியன எவை என்பது பற்றிய திட்டம் ஒன்றை உருவாக்கவும் வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்துவிட்டோம். இந்த வகையில் மகாநாடு அவசியமே.

**காவலூர் இராசதுரை**

''தமிழ் எழுத்தாளர்கள் தமது நாட்டு இலக்கியப் பாரம்பரியத்தைத் தெளிவாக உணர்ந்துகொள்ளவும், எழுத்தாளர்கள் மத்தியில் நிலவக்கூடிய கருத்து வேறுபாடுகளை இனங் கண்டுகொள்ளவும் மகாநாடு வழிகோலும் என்று நம்புகிறேன். எழுத்தாளர்களை சமுகத்தின் ஒரு முக்கிய அங்கமாகக் காட்டவும் பரந்துபட்ட முறையில் நடைபெறும் இம்மகாநாடு பெரிதும் உதவும்.''

**க. கைலாசபதி**

1962-ல் இம் மகாநாடு கூடியபொழுது நிலவிய இலக்கியச் சூழ்நிலையைப் பின்வரும் புதுமை இலக்கிய ஆசிரியத் தலையங்கம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் இலக்கியப் பரப்பினதும், உலக இலக்கியப் பரப்பினதும் பொதுவான பண்புகளையும் பாரம்பரியங்களையும் பயன்களையும் கையேற்று நமதாக்கிக் கொள்ளவும் இதே வேளையில், நமது மக்களின் வாழ்வோடும், வாழ்க்கைப் பிரச்சினைகளோடும் நமது தேசத்தோடும், தேசியப் பிரச்சினைகளோடும் ஐக்கியப்பட்ட, ஈழத்தின் மரபுவழிவரும் நமது

தேசிய இலக்கியத்தை உருவாக்கவேண்டும் என்ற எழுச்சி எழுத்தாளர்கள் மத்தியிலே தோன்றியிருக்கின்றது.........

வரலாற்றின் தவிர்க்கப்பட முடியாத தேவைகளை ஒட்டி எழுந்த இக்கோஷங்களும் இவை பிரதிபலித்து நிற்கும் இலக்கியச் சித்தாந்தங்களும் இலக்கிய உலகில் பலத்த காரசாரமான வாதத்தையும் கருத்துப்போராட்டத்தையும் தொட்டுள்ளன.

இலக்கியம் பற்றிய எவ்வித பிரக்ஞையும் சிந்தனையும் சித்தாந்தமும் இன்றியிருந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து இலக்கியத்தைப் பற்றிச் சிந்திக்கவும் கருத்துப் பரிமாறவும் எழுத்தாளர்களுக்கு உதவியுள்ளது...........

இலக்கியத்துறையில் ஏற்பட்டுள்ள விழிப்பின், எழுச்சியின் பிரக்ஞைபூர்வமான கருத்தோட்டங்களின் ஒரு இயல்பான, தர்க்கரீதியான முடிவாகவும் பிரகடனமாகவும் எழுத்தாளர் பொதுமகாநாடு அமையும் என்று துணிந்து கூறலாம்.........

இலக்கியத்துறையில் தோன்றியுள்ள கருத்துப் போராட்டம் பல நற்பயன்களைத் தந்துள்ளபோதிலும் சில எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தாமலுமில்லை. கருத்துப் போராட்டத்தையும் கருத்தை அடிநாதமாகக் கொண்ட ஸ்தாபன வெளிப்பாடுகளையும் சிலர் தவறுதலாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றைக் கோஷ்டிச் சண்டைகளாகவும் பிரிவினை முயற்சிகளாகவும் இந்தச் சிலர் தப்பாக விளங்கிக்கொள்கிறார்கள். அல்லது வேண்டுமென்ற விஷமத்தனமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

கருத்துப் போராட்டமும் கருத்தை அடிப்படையாகக்கொண்ட ஸ்தாபன வடிவங்களும் இருக்கும் அதே வேளையில் சகல எழுத்தாளர்கள் மத்தியிலும் உறுதியான ஒருமைப்பாடும் நெருங்கிய நட்புறவும் இருப்பது அவசியம்.........

> இந்த லட்சிய வேட்கையுடன்தான் எழுத்தாளர் பொது மகாநாட்டைக் கூட்ட இது (இ. மு. எ. ச.) தீர்மானித்தது.
>
> —புதுமை இலக்கியம், மார்ச். 1962

மகாநாட்டினை யொட்டிப் புத்தகக் கண்காட்சி, எழுத்தாளர் புகைப்படக் கண்காட்சி ஆகியன நடைபெற்றன. புத்தகக் கண்காட்சியில் ஏறத்தாழ ஒரு நூற்றுண்டுகாலமாக ஈழத்தில் வெளியிடப்பெற்ற நூல்கள் சஞ்சிகைள் காட்சிக்கு வைக்கப்பட்டன. புகைப்படக் கண்காட்சியில் சுமார் நூற்றைம்பது எழுத்தாளர்களின் படங்கள் இடம்பெற்றிருந்தன. இளம் எழுத்தாளர்கள் பலரின் படங்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்ததைக்கண்டு வீரகேசரி விமர்சகர், "பள்ளிக்கூட வியாசம் எழுதுபவர் எழுத்தாளர்களா" என்று கிண்டலாகக் குறிப்பிட்டிருந்தார். புதிய தலைமுறையின் எழுச்சியும் எழுத்துலகப் பிரக்ஞையும் ஒரு சில வட்டாரங்களில் கிண்டல் செய்யப்பட்டன.

மகாநாட்டையொட்டி வெளியிடப்பெற்ற புதுமை இலக்கியம் மகாநாட்டு மலராக அமைந்தது. 120 பக்கங்களைக் கொண்ட அம்மலர், இது காலவரை வெளிவந்த ஈழத்து இலக்கியத்தின் கணிப்பீட்டு மலராக அமைந்தது.

மகாநாட்டில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், வண ஹிஸ்ஸல்லே தம்மரத்தின தேரரும் கௌரவிக்கப்பட்டனர்.

விழா நிகழ்ச்சிகளைத் தினகரன், வீரகேசரி ஆகிய புதினப் பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாகப் பிரசுரஞ் செய்தன.

விழாவின் கலை நிகழ்ச்சிகளாக குற்றம் குற்றமே என்ற கவிதை நாடகமும் (முருகையன் எழுதியது) நாற்றம் நாற்றமே என்ற நகைச்சுவை நாடகமும் இடம் பெற்றன.

மகாநாட்டின் முக்கிய இலக்கிய நிகழ்ச்சிகளாக அமைந்தவை கவியரங்கு, கருத்தரங்கு, தீர்மான நிறைவேற்றம் ஆகியனவே.

இதுகாலம் வரை இலைமறை காயாகக் காணப்பட்டு வந்த கருத்து ரீதியான எதிர்ப்புக்கள் தீர்மானங்கள் நிறைவேற்றும்பொழுது இப்பொழுது வெட்ட வெளிச்ச மாகப் பேசப்பட்டன. அவ்வாறு பேசியோருள் முக்கிய மானவர், எப். எக்ஸ். சி. நடராசாவே ஆவர். கனக செந்தி நாதன் அவர்களது பெயரில் வந்துள்ள ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் அம்மகாநாட்டில் எதிர்க் கருத்துப் பரிவர்த்தனைக்கு இடமளிக்கப் படவில்லை என வரும் கூற்று உண்மையன்று.

மகாநாட்டு நிகழ்ச்சிகளின் நெறிப்பாடு இ.மு.எ.ச. வின் தேசியப் பொறுப்புணர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

கருத்துவேறுபாடுகள் எடுத்துப் பேசப்பட்டனவெனி னும் மகாநாடு எவ்வித குழப்பமுமின்றி நடைபெற்றது.

முன்னர் எதிர்பார்த்தது போன்றே, இம் மகாநாடு ஈழத்திலக்கிய வளர்ச்சியில் ஒரு முக்கிய படி நிலையாக அமைந்தது. இ. மு. எ. ச. வின் இலக்கிய, அரசியற், சமூகக் கோட்பாடுகளில் நம்பிக்கையற்றிருந்தோர் தத்தம் ஸ்தாப னங்களை வலுப்படுத்தவேண்டியதன் அவசியத்தை இம் மகா நாட்டின் மூலம் உணர்ந்துகொண்டனர் எனலாம்.

ஈழத்தில் தமிழ் இலக்கியத்துக்கு புத்தூக்கம் ஏற்படுத் திய இ. மு. எ. ச. இந்தியாவில் நடந்த சில எழுத்தாளர் மகாநாடுகளில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களைப் பிரதி நிதித்துவப்படுத்திற்று. பம்பாயில் நடந்த தமிழ் எழுத் தாளர் மாநாட்டுக்கு சில்லையூர் செல்வராசனும், கல்கத்தா வில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கு க. கைலாச பதியும் இலங்கையினதும் இ. மு. எ. ச. வினதும் பிரதிநிதி யாகச் சென்றனர். 1958 இல் தாஷ்கந்தில் நடந்த ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாட்டுக்கு இ. மு. எ. ச. வின் சார்பில் சங்கச் செயலாளர் பிரேம்ஜி சென்றார். வேறு சில சர்வதேச எழுத்தாளர் அரங்குகளுக்கு இ. மு. எ. ச. வின் பிரதிநிதியாக எச். எம். பி. முஹிதீன் சென்றார்.

இவ்வாறாக ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சியைச் சொந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்களிடையேயும், இந்தியாவிலும், சர்வேதேச அரங்குகளிலும் எடுத்துணர்த்திய இ. மு. எ. ச. 1963 இல் இவ் வளர்ச்சியின் முக்கியத்துவத்தைச் சிங்கள மக்களிடையேயும் எழுத்தாளரிடையேயும் பரப்பும் முயற்சியை மேற்கொண்டது. சிங்கள எழுத்தாளர்களைக் கொண்ட கண்டி இளம் கவிஞர் சங்கமும் (தருணகவி சமாஜய) இ. மு. எ. ச.வும் தமிழ் சிங்கள எழுத்தாளர் ஒற்றுமை மகாநாட்டினை 1963 ம் ஆண்டு செப்டம்பர் 22-திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கண்டி புஷ்பதான மகளிர் மகாவித்தியாலய மண்டபத்திற் கூட்டினர்.

இலங்கை மொழிப்பிரச்சினை அதன் பூரண விசுவ ரூபத்தை முற்றிலும் அடக்கிவிடாது நின்ற அக்கால கட்டத்தில் இத்தகைய மாநாடு புதுமையானவொரு நிகழ்ச்சியாக அமைந்தது. தேசிய ஐக்கியத்தின் அடிப்படையிலேயே தேசிய முன்னேற்றம் ஏற்படலாமென்ற கொள்கையை இம் மகாநாடு வற்புறுத்திற்று.

இம் மகாநாட்டினிறுதியில் சிங்கள தமிழ் எழுத்தாளர்களின் கூட்டு அறிக்கையொன்று வெளியிடப்பெற்றது.

"..........

எழுத்தாளர்களாகிய நாங்கள் தேசத்தின் பாதுகாவலர்களாவோம். எங்கள் நாட்டின் தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் நாட்டை முன்னேற்றிச் செல்வதிலும் எம்மை ஈடுபடுத்துவோம். அதற்காக எழுப்பப்படும் சகல முயற்சிகளையும் பொறுப்புணர்ச்சியுடனும், மனப் பூர்வமாகவும் முன்னெடுத்துச் செல்வோம். மனித குலத்தின் சுபிட்சத்துக்காகவும், சுரண்டல் துன்பத் துயர்கள் போன்ற மக்கள் முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கும் நிலைமைகளை இல்லாதொழித்து சோஷலிச நிர்மாணத்தில் மக்களின் வாழ்க்கை நிலையை ஸ்தாபிக்க நாம் எமது ஐக்கியத்தின் வாயிலாக இலக்கியத்தையும் எழுத்துக்கலைகளையும் பயன்படுத்துவோம்.

வகுப்புவாதம், பரஸ்பரவிரோதம் போன்ற குறுகிய எண்ணங்களினல் பிளவுறுமல் தேசியக் கடமைகளை நிறைவேற்ற நாம் முன்னேறிச் செல்வோம்...''

சிங்கள – தமிழ் எழுத்தாளரின் ஒற்றுமைக் கூட்டமாக அமைந்த இம் மகாநாட்டைப் பாராட்டித் தமிழ், சிங்களப் பத்திரிகைகள் எழுதின. "லங்காதீம்'' என்னும் சிங்களப் பத்திரிகை 'சிங்கள – தமிழ் எழுத்தாளர் சந்திப்பு' என்னும் தலைப்பில் 1963 செப்டம்பர் 27 ம் திகதியன்று ஆசிரியத் தலையங்கம் எழுதிற்று. இம்மகாநாட்டைப் பற்றிய தினகரன் விவரணக் கட்டுரையினிறுதியில்,

> "இனத்தாலும் மொழியாலும் வேறுபாடிருந்தாலும் இந்நாட்டு மக்கள் அனைவரும் இலங்கை மாதாவின் புதல்வர்கள். அவர்கள் பரஸ்பரம் கலந்து பழகி ஒருவரை யொருவர் புரிந்துகொண்டு விட்டால் எந்த பூசலையும் ஒற்றுமையாகத் தீர்த்துக்கொள்ள முடியும். இந்த நிலையை ஏற்படுத்துவதற்கு முன் முயற்சியாக முதல் நிகழ்ச்சியாக சிங்கள தமிழ் எழுத்தாளர் மகாநாடு அமைந்தது. ஆகவே இந்த மகாநாடு வரலாற்றில் நிகழ்ந்த புதுமை மட்டுமல்ல; சரித்திரத்தைத் திருப்பப் போகின்ற நிகழ்ச்சியுமாகும்''

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இலக்கிய மகாநாடுகள் பலவற்றை நடத்திய இ. மு. எ.ச. தனது சங்கத்தின் மகாநாடுகளை இருதடவைகள் நடத்தி உள்ளது. முதலாவது மகாநாடு 1957 ஜுன் 16ஆம் திகதியன்று நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு 1963 மே, 7ஆம், 8ஆம், தினங்களில் பருத்தித்துறை வியாபாரி மூலையிலும் (யாழ்ப்பாணத்துச் சாமியார் சமாதியருகில்) யாழ்ப்பாண நகர மண்டபத்திலும் நடைபெற்றது. இம் மகாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைந்தவை யாழ்ப்பாணத்துச் சாமியாருக்கு நினைவுச் சின்னத் திறப்பு விழாவும்,

"பத்தாண்டுகளில் ஈழத்தின் தமிழ் இலக்கியம்" என்ற உரைக்கோவையுமாகும்.

இ. மு. எ. ச. வின் இலக்கிய நடவடிக்கைகளால் ஏற்பட்ட எதிர் விளைவுகளையும் அவற்றினை எதிர்க்க இ. மு. எ. ச. எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் பற்றி ஆராய்வதற்கு முன்னர், 1963 ஆம் ஆண்டளவில் இ. மு. எ. ச. வின் நடவடிக்கைகள் எத்தகைய இலக்கியச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தன என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இ. மு. எ. ச. வின் இலக்கியப்பணி வளர வளர, நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இ. மு. எ. ச. கிளைகள் தோன்றலாயின. இவற்றுள் முக்கியமானவை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு தெற்கு (அக்கரைப்பற்று), கண்டி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட கிளைகளாகும்.

இ. மு. எ. ச. வன்மையாகக் கருமமாற்றிக் கொண்டிருந் தமையால், இந்நிறுவனமே ஈழத்திலக்கியத்தினை பிரதிநிதித் துவப்படுத்தும் முதன்மையான நிறுவனமாக விளங்கிற்று என்பதையும் நாம் காணலாம். 1956-1965க் காலப்பிரிவில் இ. மு. எ. ச. எவ்வாறு இலக்கிய முதன்மை பெற்றிருந்தது என்பதனை, அதன் அடிப்படைக் கருத்துக்களை ஆதரிக்காத 'சுதந்திரன்' பத்திரிகை 1960இல் (இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10வதுதேசிய மாநாட்டுச் சிறப்பிதழில்) பிரசுரித்த கட்டுரையொன்றிற் காணலாம்.

இ. மு. எ. ச. வின் செயற்றிறன் காரணமாக, இக்கால கட்டத்தில் இச்சங்கம் சில எழுத்தாளர் சங்கங்கள் தோன்று வதற்கும் வேறுசில எழுத்தாளர் சங்கங்கள் சொல் வேகத்துடன் இயங்குவதற்கும் தலையாக விருந்தது. இளம் எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்துக்கும் யாழ் எழுத்தாளர் சங்கம், மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் போன்றவை நன்கு இயங்குவதற்கும் இ. மு. எ. ச. உந்து சக்தியாக விளங்கிற்று.

இ. மு. எ. ச. தனது நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்து இலக்கியப் போக்கின்மீதும் குறிப்பிட்டளவு தாக்கத்தினை ஏற்படுத்திற்று என்று கூறலாம். இதற்கு இருமுக்கிய காரணிகள் அடித்தளமாயமைந்தன. முதலாவது முற்போக்கு எழுத்தாளர் பலரின் இலக்கிய ஆக்கங்கள் சென்னையிலே வெளியிடப் பெற்றமையாகும். இரண்டாவது முற்போக்கு எழுத்தாளர்களினது ஆக்கங்களும் கட்டுரைகளும் இ. மு. எ. ச. சங்கச் செய்திகளும் "சரஸ்வதி", "தாமரை" ஆகிய சஞ்சிகைகளில் வெளியாகின. முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டினை எதிர்த்த "எழுத்து" ச் சஞ்சிகைகூட இ. மு. எ. ச. வை சார்ந்த எழுத்தாளர் பலரது கட்டுரைகளைப் பிரசுரம் செய்தது. 'கலைச்செல்வி' என்னும் இலங்கைச் சஞ்சிகையில் க. கைலாசபதி எழுதிய பொருள் மரபும் விமரிசனக் குரல்களும் என்னும் கட்டுரையைப் பிரசுரித்து அதனையும், தி. க. சிவசங்கரனது 'இப்படியும் ஒரு கருத்து' எனும் கட்டுரையினையும் தாக்கி எழுதினர். சி. சு. செல்லப்பா அக்கட்டுரைப் பொருளை எதிர்த்து இக்கட்டுரை ஆசிரியர் பிப்ரவரி 1962 புதுமை இலக்கியம் இதழில் எழுதிய 'எழுத்து'க்குப் பதில் என்ற கட்டுரையை மீண்டும் பிரசுரித்தமையை இங்கு உதாரணமாகக் கூறலாம்.

அக்காலகட்டத்தில் இ.மு.எ.ச. தமிழகத்து முற்போக்கு வாதிகளிடையே முற்போக்கு இலக்கியத்தின் நம்பிக்கை ஒளியாக விளங்கிற்று என பாலதண்டாயுதம் 1973 இல் மல்லிகைச் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றிற் கூறியிருந்தார்.

இதுவரை கூறப்பட்டது இ. மு. எ. ச. வின் தன்னிலையான வளர்ச்சி, அது மேற்கொண்ட நடவடிக்கைகளின் வளர்ச்சியின் தாக்கம் பற்றியுமேயாகும்.

இ. மு. எ. ச. வின் நடவடிக்கைகள் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்தனவெனினும் அவை காரணமாக அது எழுத்தாளர்கள் அறிஞர்களது ஆதரவைப் பெற்ற

தெனினும், அதனை எல்லோரும் ஆதரித்தனர் என்று கூறிவிட முடியாது.

இ. மு. எ. ச. வின் எதிரணியைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்னர் இ. மு. எ. ச. வின் அரசியலடிப்படை பற்றியும், அது இயங்கி வந்த நெறிமுறை பற்றியும் குறிப்பிடுதல் அவசியம். இ. மு. எ. ச. தொடங்கிய நாள் முதல் அது பிரதானமாக, மார்க்ஸீய அரசியல் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டவர்களது இலக்கிய நிறுவனமாகவே அமைந்தது. ஆரம்பத்திலிருந்தே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த எழுத்தாளர்களின் இலக்கிய முன்னணியாகவே இயங்கி வந்தது. இதன் பொதுச் செயலாளரும் முக்கிய செயலவை உறுப்பினர் சிலரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களாகவே இருந்து வந்தனர். பிரேம்ஜி, எச். எம். பி. முஹிதீன், நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா டானியல் முதலியோர் கட்சி அங்கத்தவர்களாகவே இருந்தனர். ஆயினும் இ. மு. எ. ச. அங்கத்தவர்கள் எல்லோரும் கட்சி அங்கத்தவர்களல்லர். பொதுவான இடதுசாரிகளும், மார்க்சீய சித்தாந்தத்தினைப் பொதுப் படையாக ஏற்றுக்கொண்டவர்களும் இ. மு. எ. ச. வின் அங்கத்தவர்களாகிச் செயலாற்றி வந்தனர். இத்தகையோர் கட்சியின் அங்கத்தவர்களாகவிடினும், இ. மு. எ. ச. வின் அரசியற் கடப்பாடுகளை ஏற்று இயங்கி வந்தனர். ஆனால் இ. மு. எ. ச. கம்யூனிஸவாதிகளின் இலக்கிய அணியாக மாத்திரம் இயங்காது, அரசியற் சார்பற்ற ஆனால் முற்போக்கு வாதத்தை, புத்திஜீவிகள் என்ற முறையில் ஏற்றுக் கொண்டவர்களின் கருத்துகளையும் பிரதிபலிக்கும் பரவலான இயக்கமாகவே இது இயங்கி வந்தது. இதன் பயனாக அரசியற் சார்பற்ற பல அறிஞர்கள் அதன் வளர்ச்சிக் கட்டமொவ்வொன்றிலும் அதனை ஆதரித்து வந்தனர். கட்சி ஸ்தாபனமாக மாத்திரம் அமைந்து விடாது, கலை, இலக்கியத் துறையின் பொதுவான முற்போக்கு நிலைப்பட்ட வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட யாவரினதும் நிறுவன

மாகவே இ. மு. எ. ச. அமையவேண்டும் என்ற எண்ணத் துணிவுடனேயே அது இயங்கியும் இயக்கப்பட்டும் வந்தது. இதன் காரணமாக அது பொதுவான ஓர் நிறுவனமாகவும், அதே வேளையில் கட்டமைப்பும் கட்டுப்பாடுமுள்ள ஒரு நிறுவனமாகவும் இயங்கி வந்தது.

இ. மு. எ. ச வின் வளர்ச்சிக் கட்டங்களை நுணுகி ஆராயும்பொழுது, ஒவ்வொரு கட்டத்திலும் அது, அவ்வக் கால வரலாற்று இலக்கியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முனையும் கோஷங்களை முன் வைத்து இயங்கி வந்தது என்பது தெரியவரும். முதலில் ஈழத்திலக்கியம் என்ற கோஷத்தையும் "மண்வாசனை" என்ற கோஷத்தையும் முன் வைத்து நின்ற இ. மு. எ. ச, ஈழத்திலக்கிய வளர்ச்சி எழுத்தாளர்கள், எழுத்தாளர் நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டபொழுது, அடுத்தபடியாக "தேசிய இலக்கியம்" என்ற கோஷத்தை முன்வைத்தது. தேசிய வாதத்தினை வற்புறுத்திய பின்னர் தேசிய இலக்கியத்துக்கு அச்சாணியாக அமையவேண்டிய யதார்த்த வாதத்தை வற்புறுத்தத் தொடங்கிற்று. 1963 ஆம் ஆண்டளவில் யதார்த்த வாதமே அதன் முக்கிய இலக்கிய கோஷமாகவிருந்தது.

இலக்கியத்தில் "முற்போக்கு" வாதமென்பது மார்க்ஸிஸ வளர்ச்சியினை வற்புறுத்தும் வாதமென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இலங்கையில் முற்போக்கு இலக்கிய வாதத்தையும், அதன் நிறுவன அமைப்பான இ. மு. எ. ச. வையும் எதிர்த்தோரை இருவகையினராகப் பிரித்தலவசியமாகின்றது.

(அ) முற்போக்கு வாதத்தினை எதிர்த்த நவீன இலக்கிய ஆக்க எழுத்தாளர்கள், விமரிசகர்கள்.

(ஆ) மற்றையோர் தமிழ் மொழியின் இலக்கண, இலக்கியத் தூய்மைவாதிகள் இவர்களைப் பழமை வாதிகள் எனலாம். இலக்கிய இலக்கணங்களின் 'பழமை' போற்றப்படவேண்டுமென்பதும்

புதுமை, பழமையைப் புறக்கணிக்கின்றது என்பதும் இவர்கள் வாதமாகும்.

நவீன இலக்கிய சிருஷ்டியாளர்களாகவும் விமரிசகர்களாகவும் விளங்கிய எழுத்தாளர்களுள் முற்போக்கு வாதத்தினை ஏற்காது நின்ற எழுத்தாளர்களை மேலும் இரு பிரிவினராக வகுக்கலாம்.

(அ—1) இலக்கியத்தில் எவ்விதத்திலும் அரசியல் கலக்கக்கூடாது; இலக்கியம் அரசியலுக்கு அப்பாற்பட்டது என்ற கலை, இலக்கியத் தூய்மைவாதிகள்.

(அ—2) முற்போக்கு இலக்கிய வாதத்தின் அச்சாணியான அரசியற் கோட்பாட்டை எதிர்த்தவர்கள். அதாவது பொதுவுடமை எதிர்ப்பு வாதிகள்.

ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிநெறி அன்றிருந்த நிலையில், அ-2 பிரிவினர் தம்முடைய சொந்த அரசியல் நோக்குகளினை வெட்ட வெளிச்சமாக எடுத்துக்கூற முடியாத ஒரு நிலைமையிருந்தமையால், அவர்களும் அ–1 பிரிவினரின் கூற்றுக்களையும் இ. மு. எ. ச. வுக்கெதிராகப் பயன்படுத்தினர் எனலாம்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது ஈழத்திலக்கியம் எனும் கோஷம் மாத்திரமே முன் வைக்கப்பட்டபொழுது அதனை ஒவ்வொரு பிரிவினரும் வரவேற்றனர் எனலாம். 'அ–1' பிரிவுக்குள்ளடங்கக் கூடியவர்களான வ.அ. இராசரத்தினம், அருள் செல்வநாயகம், அ. லோகநாதன், சோ. நடராசா, ரி. பாக்கியநாயகம், நாகராஜன் முதலியோரும், 'அ-2' என்ற பிரிவுக்குள் வரக்கூடியவர்களான கா. பொ. இரத்தினம் மகாகவி போன்ருேரும், 'ஆ' பிரிவுக்கே உரியவர்களான இளமுருகனர், எவ். எக்ஸ். ஸி நடராசா ஆகியோரும் இ. மு. எ. ச. கூட்டிய இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பொது மகாநாட்டை வரவேற்று

விடுத்த செய்திகள் இதற்குப் போதிய சான்ருகும். ஆனல் அச் செய்திகள் மூலமே அவர்களது அடிப்படைநிலை பாட்டினையும் அறிந்துகொள்ளக்கூடியதாகவும் இருந்தது என்பதனையும் எடுத்துக் கூறல் அவசியமாகும்.

முற்போக்கு இலக்கியத்தினை ஆரம்ப காலத்தில் எதிர்த்த நவீன இலக்கிய எழுத்தாளர்களின் கருத்துக்களினை ஓரளவு பூரணமாகப் பிரதிபலிப்பது "தமிழோசை" என்னும் சஞ்சிகையில் வந்த கட்டுரையாகும்.

> "இன்று இலக்கியத்தில் - சிறப்பாகச் சிறுகதைத் துறையில், "முற்போக்கு இலக்கியம், முற்போக்கு இலக்கியம்" என்று முழக்கியடிக்கப் படுகின்றதே, இது எந்த அளவுக்கு உண்மை? உண்மையில் அவை முற்போக்கு இலக்கியம்தானு? அந்த "லேபல்" — முற்போக்கு இலக்கியம் என்ற முத்திரைதான் - ஒட்டப் படாமல் வெளியாகும் படைப்புக்கள் யாவும் பிற்போக்கு ரகத்தைச் சேர்ந்தவையா?' 'கோஷ்டி மனப்பான்மை' அரசியலில் மட்டுமல்ல, இலக்கியத்திலும் இன்று நுழைந்து விட்டது! அதன் காரணம்தான் முற்போக்கு இலக்கியம் என்ற புதிய சலசலப்பு. 'முற்போக்கு இலக்கிய கர்த்தாக்கள்' எனத் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வோர் தம்முள் கருதுகின்ற "முற்போக்குத் தனத்தை" மற்ற எழுத்தாளர்களது சிருஷ்டிகளில் காணமுடியாவிட்டாலும் சமுதாயத்துக்கு வேண்டிய முற்போக்குக் கருத்துக்கள் உண்டு. ஆமாம், கருஇன்றி எப்படி உரு தோன்ற முடியும்? முற்போக்கு என முத்திரை பதித்துக் கொள்வோர்களது "நினைப்பு" இலக்கிய ரசிகர்களது சிரிப்புக்கிடமாகின்றது."
>
> — தமிழோசை — 15-6-59

இத்தகைய எதிர்ப்புக்களை விட, வேறு சில நிறைவு நெறிப்பட்ட எதிர்ப்புக்களும் நடத்தப்பெற்றன. 'கலைச்செல்வி' சஞ்சிகையின் ஆசிரியர் சிற்பி அவர்கள் முற்போக்கு இலக்கியம் பற்றி ஒரு விவாத மேடையினை

நடாத்தினர். "கலைச்செல்வி"யின் 1961 பொங்கல் இதழில் முதற்கட்டுரையாக, 'முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன?' என்ற இக்கட்டுரையாசிரியரது கட்டுரை வெளியாகிற்று. அதற்குப் பதிலிறுக்கு முகமாக சோ. நடராஜாவும், மு. தளையசிங்கமும் எழுதினர். இதில் சோ. நடராஜாவின் கட்டுரை அங்கதம் சார்ந்ததாகவும், மு. தளையசிங்கத்தின் கட்டுரை ஆழமான நோக்குடையதாகவும் அமைந்திருந்தது.

'அ-1' பிரிவினர் கருத்து ரீதியான எதிர்ப்பினைத் தொடர்ந்து நடத்திய அதே வேளையில் தமது ஆக்கங்களிலும் கவனஞ்செலுத்தி வந்தனர். இதனால் ஈழத்திலக்கியம் அளவிலும் ஆழத்திலும் வளர்ந்ததெனக் கூறலாம்.

இலக்கியத்தில் பழைமை வாதத்தினை முன் வைத்தவர்கள் தம் எதிர்ப்பினை இரு துறைகளிலே தெரிவித்தனர்.

முதலாவதாக அவர்கள் நவீன இலக்கிய வகைகளான சிறுகதை, நாவல் ஆகியனவற்றையே எதிர்த்தனர். சோ. நடராஜா அவர்கள் ஒருமுறை சிறுகதை எழுத்தாளர்களைச் "**சிறுகத்தை**" எழுத்தாளர்களென விவரித்தார்.

இரண்டாவதாக அவர்கள் பேச்சு மொழி இலக்கியத்தில் இடம்பெறக் கூடாதென வாதித்தனர். ஈழத்தின் நவீன இலக்கியங்களில் ஈழத்தின் பேச்சுமொழி சிறுகதை நாவல்களில் இடம்பெறக்கூடாதென வாதித்தனர். கொடுந் தமிழ் வழக்கு "இழிசினர்" வழக்கு என்றும், அவ்வாறு கொடுந் தமிழ் வழக்கில் எழுதி வந்தால், தமிழ் படிப்படியாக மாறி மலையாளம் போன்று பிறிதொரு மொழி தோன்றி விடுமென்றும் வாதிட்டனர். பேச்சு மொழியினைப் பேண வேண்டுமெனில், அதனை நாடக வாயிலாகப் பாதுகாக்கலாம் என்றும் கூறினர். நவீன தமிழ் இலக்கிய ஆக்கங்களை எழுதுவோர் பண்டைய தமிழ் இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப்பெற்றவராக இருத்தல் வேண்டுமென்பதும் இவர்கள் வாதமாகும்.

இலக்கியத்தின் பழைமை வாதத்தைப் பேண விரும்புவோர் அக் காலகட்டத்தில் சாகித்திய மண்டலத்தின் தமிழ் இலக்கியக்குழுவில் முதன்மை பெற்றிருந்தனர்.

''இழிசினர் வழக்கு'' என்னும் வாதமும், தமிழ் இலக்கண இலக்கிய அறிவின்மை என்னும் வாதமும் நவீன தமிழ் இலக்கிய ஆக்க எழுத்தாளர்களுள் பலரின் சமூகப் பின்னணியைத் தாக்குவதாகவும் அமைந்தபடியால், இவ்வாதத்திற்கு இலக்கிய வரலாற்று அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் இ. மு. எ. ச. பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்தது.

இத்தகைய சூழ்நிலையிலேதான் ''மரபுப்போர்'' என்னும் மிக முக்கியமான இலக்கிய வாதம் ஆரம்பமாயிற்று.

இலக்கியப் பழமை வாதத்தினை முன் வைத்துச் செயலாற்றி வந்த நவாலியூர் சோ. இளமுருகனார் அவர்கள் இலக்கியக் கூட்டமொன்றிற் பேசும்பொழுது தற்காலத் தமிழலக்கியத்தில் தமிழ் மரபு காணப்படவில்லை என்றும் தமிழ் மொழியின் இலக்கண வரம்பு மீறப்படுவது தமிழ் மரபிற்கு எதிரானது என்றும் குறிப்பிட்டார்.

இதனை இக்கருத்தினை எதிர்க்கும் முகமாக இக்கட்டுரையாசிரியர் 1—12—62தினகரனில் 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்ற கட்டுரையொன்றினை எழுதினர். தற்காலத் தமிழ் இலக்கியம் தமிழ் மரபுக்குப் புறம்பானதா என்ற மேற்றலைப்புடன் இக் கட்டுரை வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து அக் கருத்தினை முதலிலே தெரிவித்த திரு. இளமுருகனார் பதிலிறுத்தார். எதிர்த்தெழுதப்பட்ட கட்டுரையிற் காணப்பட்ட இலக்கண வழுக்களை எடுத்துக் காட்டியும், கட்டுரையின் பொருளை எதிர்த்தும் எழுதினர். இளமுருகனாரின் பதில் ஆக்க இலக்கிய எழுத்தாளர் பலரை அவரவர் கருத்துக்களை எழுதுமாறு தூண்டிற்று. இளங்கீரன் (19-1-63 தினகரன்) சொக்கன், முதலியோரும் வேறு பல எழுத்தாளர்களும் இவ்விவாதத்திற் பங்கு கொண்டனர்.

சிருஷ்டி இலக்கிய கர்த்தாக்களுக்கும் பழைமையை மாத்திரம் பேண விரும்புபவர்களுக்கும் ஏற்பட்ட போராட்டமாகவே இவ் விவாதம் அமைந்தது.

தமது கருத்துக்களைத் "தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்" என்னும் நிறுவனத்தின் கொள்கையென எடுத்துக் கூறிய திரு. இளமுருகனுர் அவர்கள்,

> "தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார், அவர் (சிவத்தம்பியின்) பொருந்தாமைகளையும் போலி முடிபுகளையும் நிரல்பட நிறுத்திச் சொற்ருெடர் தோறும் நுழைந்து ஆராய்ந்து எழுதிய வச்சிர குடாரம் அனைய மறுப்புரைகளிற் பலவற்றைத் தினகரன் வெளியிடவில்லை. திரு. சிவத்தம்பியின் பக்கல் நின்று அவர்தங் 'கொடுந்தமிழ் வழக்கை நிலைநாட்ட முயன்ருேர் பலருடைய கட்டுரைகளை அத்தினகரன் இடையீடின்றி வெளியிட்டு வந்தது."

எனக் குற்றஞ்சாட்டித் தமது கருத்துக்கள் யாவற்றையும் சுபக்கம், பரபக்கம் என்ற முறைமைக்கேற்ப எழுதிச் செந்தமிழ் வழக்கு என்னும் நூலாக (1962) வெளியிட்டார். இவ்விவாதம் ஏறத்தாழ ஏழு, எட்டு மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது.

அறிவுப் போராட்டமாகவே நடைபெற்று வந்த இவ் விவாதம் தனி மனித வாதத்தின் வற்புறுத்திய சில சிருஷ்டியெழுத்தாளர்களின் எழுத்துக்களினுல், இ. மு. எ. ச. அங்கத்தவர்களைத் தாக்கும் போராட்டமாகவும் ஒரே வேளைகளில் மாறிற்று. அவ்வாறு மாறும் தன்மையினைக் கலாநிதி சு வித்தியானந்தன் வன்மையாகக் கண்டித்தார்.

இவ் விவாதம் நடைபெற்றபொழுது தினகரன் பத்திரிகையின் இலக்கியப் பகுதிப் பொறுப்பினை திரு. க. தில்லைநாதன் ஏற்றிருந்தார்.

மரபுப் போராட்டம் ஒருபுறமும், ஆக்க இலக்கிய எழுத்தாளர்களிடையே பிரிவு மறுபுறமுமாக ஈழத்து

இலக்கியக் களம் போர்க்களமாக விளங்கிய கட்டத்தில் 1963இல், 1962ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற்றெரிவு நடைபெற்றது. மண்டல ஆட்சியிலிருந்தோர் தமிழ் இலக்கியம் பற்றித் தெரிந்த கருத்துப் பற்றிப் பலத்த சர்ச்சை எழுந்தது. இந்நிலையில் 1963ஆம் ஆண்டின் சாகித்திய மண்டலம் நடத்திய தமிழ் இலக்கிய விழா 5-10-1963அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விழாத் தலைவராக தமிழறிஞர் திரு. சு. நடேசபிள்ளை பங்கு பற்றினுர். கூட்டத்தின் தொடக்கத்தில் இ. மு. எ. ச. பொதுச்செயலாளர் பிரேம்ஜி அவர்கள் நூற்றேர்வு எவ்வாறு நடைபெற்றதென்று வினவினுர். அதனைத் தொடர்ந்து கூட்டத்திற் குழப்பமேற்பட்டது. குழப்பத்தினிடையே ஆவேசங்கொண்ட சிலர், கூழ் முட்டைகளை எறிந்தனர். தலைமை தாங்கிய திரு. நடேச பிள்ளையையும் மேடையை விட்டு இறங்குமாறு நிர்ப்பந்தித்தனர்.

இக் கூட்டத்திலே ஏற்பட்ட இப்பிரச்சினை நிகழ்வு இ. மு. எ. ச.வைப் பெரிதும் பாதித்தது என்பதுண்மை ஆகும். சுதந்திரன் பத்திரிகை அதனைச் செய்தது இ. மு. எ. ச.வின் முக்கிய அங்கத்தவர்களே என்று வாதிட்டது.

சாகித்திய தின விழாவில் ஏற்பட்ட இச்சம்பவம் காரணமாக எழுத்தாளரிடையே மாத்திரம் காணப்பட்ட இலக்கிய விவாதம் நாடு முழுவதும் தெரியவந்தது. இச் சம்பவத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு இ. மு. எ. ச.வின் இலக்கியக் கோட்பாடுகளைத் தாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

> "தேசிய இலக்கியம், சிருஷ்டியிலக்கியம், யதார்த்த இலக்கியம் என்று என்னென்னவோ அர்த்தமற்ற அவசியமில்லாத சர்ச்சைகளையெல்லாம் கிளப்பிவிட்டுக் குழப்பியடிப்பதைச் சில தமிழ் எழுத்தாளர்கள் தொழிலாகக் கொண்டு கட்சிக் கண்ணேட்டத்துடன் பிரசார இலக்கியங்கள் படைக்கப்படுவது அருவருக்கத் தக்கதென்று திரு. நாவேந்தன் சுட்டிக் காட்டியிருப்பதை இங்கு நாம் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

இலக்கியப் படைப்பில் குறுகிய மனப்பான்மையும் சுயநலமும் கட்சிக் கண்ணேட்டமும் தலைவிரித்தாடும் பொழுதுதான் போட்டியும் பொறுமையும் துவேஷமும் தலையெடுக்கின்றன. இது தமிழ் மரபுக்கே விரோதமானது. இது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் மாறுனது, தமிழ்ப் பண்புக்கு மாறுனவர்களிடம் தமிழ் இலக்கியத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?"

சாகித்திய விழாச் சம்பவங்களின் பின்னர் இ .மு. எ. ச. தனது இலக்கியப் பணியினை முந்திய வேகத்துடன் தொடர்ந்து செய்ய முடியாத அரசியல் நிலைமையொன்று ஏற்பட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினுள் 1963ஆம் ஆண்டு சில கருத்துப் போராட்டங்கள் நிகழ்ந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, இரசியக் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே தோன்றிய கருத்து வேறுபாடு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை பாதித்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைகளை எடுத்தோதி வந்த திரு. என். சண்முகதாசன் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். அவரை விலக்கும் தீர்மானம் 1963 அக்டோபர் 25, 27ம் திகதிகளில் நடந்த மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நீண்ட காலமாக கட்சியின் அகப் போராட்டமாக இருந்துவந்த இப் பிரச்சினை முற்போக்கு இலக்கிய அணியினைப் பெரிதும் தாக்கவில்லை. ஆனல் சண்முகதாசன் அவர்கள் விலக்கப்பட்டு அவர் இன்னெரு கட்சியை (இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற அதே பெயருடன்) தொடங்கினுர். அக் கட்சி தனது உத்தியோக பூர்வமான ஏடாகத் "தொழிலாளி" என்ற பத்திரிகையை நடத்தத் தொடங்கியபொழுது, இ. மு. எ. ச.வின் ஒருமைப்பாடு பாதிக்கப்பட்டது. இ. மு. எ. ச.வின் எழுத்தாளர்கள் இரு பிரிவிலுமிருந்தமையால், இ.மு. எ. ச.வின் இயக்க உத்வேகம் குறையத் தொடங்கிற்று. இதனுல் முற்போக்கு இயக்கத்தின் தாக்கமும் குறையத் தொடங்கிற்று.

இ. மு. எ. ச.வினுள் ஏற்பட்ட இப்பெரும் பிரச்சினை சாகித்திய தின விழாச் சம்பவத்தையொட்டி நிகழவே

இ. மு. எ. ச.வின் இயக்கமின்மைக்குக் காரணம் விழாச் சம்பவமே என்று அதனை எதிர்த்தோரால் எடுத்துக் கூறப்பட்டது.

முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டினையும் சங்க அமைப்பினையும் பொறுத்தவரையில் பிளவு எதுவும் ஏற்படாது தவிர்க்கப்பட்டது. ஆயினும் சீனச் சார்புடைய முற்போக்கு எழுத்தாளர்கள் தமது இலக்கியக் கோட்பாடுகளை 'வசந்தம்' என்னும் சஞ்சிகை மூலம் வளர்த்து வந்தனர்.

இ. மு. எ. ச.வின் இயக்க வேகம் குறைந்த வேளையில், முற்போக்கு இலக்கியப் பணியினைத் தொடர்ந்து செய்வதற்கென டொமினிக் ஜீவா "மல்லிகை" என்னும் சஞ்சிகையை 1964இல் ஆரம்பித்தார். இச் சஞ்சிகை தொடர்ந்து முற்போக்கு இலக்கியக் கொள்கைகளைப் பரவலான முறையிற் பரப்பும் பணியினை மேற் கொண்டது.

இந்நிலையில் 1965இல் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டது. யு. என். பி.யின் தலைமையில் தமிழரசுக் கட்சி உட்பட ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து "தேசிய அரசாங்கம்" என்று குறிப்பிடப் பெற்ற ஆட்சியினை நடத்தத் தொடங்கின. தேசிய இலக்கிய வாதத்தினைக் கோட்பாட்டு ரீதியாக எதிர்த்து வந்த தமிழரசுக் கட்சி எழுத்தாளர்கள் தேசிய அரசாங்கத்தினை ஆதரிக்கும் அதே வேளையில் தேசிய இலக்கியம் என்னும் கோட்பாட்டினை எதிர்க்கும் நிலை நிலவத் தொடங்கிற்று. இதன் காரணமாக ஈழத்தின் இலக்கிய நிலைமை பற்றி அவர்கள் புனர் ஆய்வு நடத்த வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. இச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைவதே, "இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10வது தேசிய மாநாட்டுச் சிறப்பிதழாக வெளி வந்த சுதந்திரனில் வெளியான "இயக்கமும் இலக்கியமும்" என்ற கட்டுரையாகும். அக்கட்டுரையின் இறுதிப் பந்தி முக்கியமான ஒரு கருத்தை எடுத்துக் கூறுவதை அவதானித்தல் வேண்டும்.

1956 இல் இருந்த சூழ்நிலையல்ல 1966 இல் இருப்பது. போராட்டக் கருவிகள் கீழே வைக்கப்பட்டுள்ளன. சகசமான நிலையும் உருவாகியுள்ளது. சிந்திக்கும் அவகாசம் கிடைத்துள்ளது. இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி இலக்கிய இயக்கத்தையும் தம்முடன் (தமிழரசுக் கட்சியுடன்) இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இச் செயலால் அரசியல் ஆதாயம் கிடைத்ததுடன் உண்மையாகவே ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பயனுள்ள தொண்டும் இயற்றலாம்.''

இ. மு. எ. ச. வின் இயக்க வேகம் குறைந்து நின்ற வேளையில் தோன்றிய "நற்போக்கு இலக்கிய வாதம்'' பற்றி இக்கட்டத்தில் நோக்குதல் அவசியம். இக்கோட்பாட்டினை முன் வைத்தவர், எஸ். பொன்னுத்துரை என்பவராவர். இவர் ஆரம்பத்தில் இ. மு. எ. ச. வுடன் இணைந்து இயங்கி வந்தவர். இலக்கியத்தில் தனிமனித வாதத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்திவந்த பொன்னுத்துரை அவர்கள் ஈழநாட்டின் தலைசிறந்த நாவல், சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர். வசனநடை கைவந்த வல்லாளர். ஆனால் இவரது தனிமனிதவாத நோக்குக் காரணமாக இயக்க நெறியில் கூட்டுக் கட்டுப்பாட்டுடன் இயக்கிவந்த இ. மு. எ. ச. இயக்கத்தினருடன் இவரால் இணைந்து செயற்படமுடியாது போயிற்று. அவர் தனக்கெனத் தனியானவோர் இலக்கியக் கோட்பாட்டினை முன்வைக்க முயன்றார். இ. மு. எ. ச. நடாத்திய விழாவொன்றில் சு. நடேசபிள்ளை உரையாற்றியபொழுது கூறிய இலக்கியம் நற்போக்கினையுடையதாக விருத்தல் வேண்டும் என்ற தொடரை அடிப்படையாகக் கொண்டு இவர் நற்போக்கு வாதம் என்னும் இலக்கியக் கோட்பாட்டினை முன் வைத்தார். நற்போக்குவாதத்தின் இலக்கிய அடிப்படைகள் பற்றி அவர் எடுத்துக் கூறியன கருத்துமயக்கங்களையுடையதாகவிருந்தன. இவரது இ. மு. எ. ச எதிர்ப்புணர்வினை முற்போக்கு இலக்கிய எதிர்ப்பாளர்கள் நன்கு பயன்படுத்தினர். இவரது விமரிசனம் எழுத்துக்களின் பிரசுரக் களமாக இளம்பிறை என்னும் சஞ்சிகை விளங்கியது.

இ. மு. எ. ச. வின் இயக்கவேகம் குறையக் குறைய, இ. மு. எ. ச. வை எதிர்த்தோரின் இயக்க வேகமும் குறைந்தது. 1965 க்குப் பின்வரும் இக்காலகட்டத்தில் புதிய ஒரு எழுத்தாளர் தலைமுறை தோன்றத் தொடங்கிற்று. இலக்கிய இயக்கங்கள் தேக்கமுற்று நின்றமையால், இவர்களது எழுத்துக்களும் சிந்தனைகளும் பெறவேண்டிய தாக்கத்தினைப் பெற முடியாது போயிற்று. ஆயினும் அவர்களும் படிப்படியாக இலக்கியத்தின் சமூகப் பொறுப்பினை உணர்ந்தோர் அல்லாதோர் என்ற அடிப்படையிற் பிரியத்தொடங்கினர். 1966க்குப் பின்னர் மு. தளையசிங்கத்தினால் தொடங்கப் பெற்ற "மார்க்ஸீயத்துக்கு அப்பாலான" இலக்கிய நெறி சிலரைக் கவர்ந்தது.

1970 இல் நாட்டிலேற்பட்ட புதிய அரசியல் மாற்றம் காரணமாக அரசியலரங்கில் முற்போக்குவாதம் வலுப் பெற்றது. இதனையொட்டி முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

1970 இன் பின்னர் நாட்டிலேற்பட்ட இன சௌஜன்யத்தைப் பிரதிபலிப்பதாக அச் சிநேக பாவத்தை முழுத் தேசத்தினதும் முன்னேற்றத்துக்காய் பயன்படுத்துவதாகவும் அமைகின்றது இ. மு. எ. ச. காட்டும் தேசிய ஒருமைப்பாடு மகாநாடு.

1970 இன் பின்னர் இ.மு.எ.ச. வின் இயக்கப் பலாபலன் 1956-1965 முதல் அது முன் வைத்த கோரிக்கைகள் சிலவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்தமையேயாகும். தென்னிந்தியத் தமிழ்ச் சஞ்சிகைகளின் இறக்குமதித் தொகைக் கட்டுப்பாடு, நாவலர் இல்லம் தேசியச் சொத்தாகப் பிரகடனப் படுத்தப்பட்டமை ஆகியனவற்றை முக்கியமாகக் குறிப்பிடல் வேண்டும். இவற்றினை நிறைவேற்றுவதற்குக் கூட்டணி அரசின் தபால், தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் ஆற்றியபணி மிக முக்கியமானதாகும். சஞ்சிகை இறக்குமதிக் கட்டுப்பாட்டினால், ஈழத்திலுள்ள மல்லிகை, சிரித்திரன் போன்ற

சஞ்சிகைகள் விற்பனை அதிகரித்தது மாத்திரமல்லாது, வீரகேசரி நிறுவனம் புத்தகப் பிரசுரத்தையும் மேற்கொள்ளத் தொடங்கிற்று. வீரகேசரியின் நூற்பிரசுர முயற்சியின் வெற்றி இ. மு. எ. ச. வின் தேசிய இலக்கியக் கோஷத்தின் வெற்றியேயாகும்.

இ. மு. எ. ச. வின் எதிர்கால நோக்கங்கள் நடவடிக்கைகள் பற்றி ஆராயாது விடுத்து அதன் கடந்தகாலச் சாதனைகளை மாத்திரம் மனதிற்கொண்டு பார்க்கும் பொழுது இலங்கையின் இலக்கிய வரலாற்றில் அது வகித்துள்ள இடம் தெளிவாகும். அவை பின்வருமாறு.

(I) வகுப்புவாதக் கோஷங்களினால் இலங்கை பிளவுற்றும், தமிழ் பேசும் மக்கள் தனிப்பட்டும் நின்ற வேளையில். இ. மு. எ. ச. தனது தேசிய இலக்கியக் கோட்பாட்டினால், ஈழத்துத் தமிழ்பேசும் மக்களை இலங்கையின் இன்றியமையாத அங்கமாக்கியமை.

(II) இப்பணியினை அது நிறைவேற்றிய முறைமைச் சிறப்புக் காரணமாகச் சிங்கள எழுத்தாளர்களும் புத்திஜீவிகளும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைத் தேசத்தின் இலக்கியத்தின் ஓர் அங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளமை.

(III) ஈழத்துத் தமிழ் மக்களின் பண்பாட்டுத் துறையின் முதற் குரலாக விளங்கி சாதி, சமய, பேதமற்ற வகையில் தமிழ் பேசும் மக்களை இணைக்க முயன்றமை.

★

ASSISTANT REGISTRAR OF ...
25 APR 1978
MADRAS (600 ...)
PUBLIC (I & PR.) DEPARTMENT

## 3

# ஈழத்தின் ஆக்க இலக்கியநூல் வெளியீடு

## (1948-1970)

---

### I

ஈழம் முழுவதும், ஒருங்கிணைந்த அரசியல் தனித்துவமும் சுவாதீனமுமுள்ள ஒரு தனி நாடாக உலக அரசியலரங்கில் இயக்கத்தொடங்கி இப்பொழுது இருபத்தொரு வருடங்களாகி விட்டன. அதாவது, இலங்கை சுதந்திரம் பெற்று இருபத்தொரு வருடங்களாகி விட்டன. ஈழம் தனது சுதந்திரத்தை இழப்பதற்கு முன்னர் அது தனியொரு இராச்சியமாக விளங்கவில்லை. 1948–இல் பெற்ற அரசியற் சுதந்திரத்துடனேயே அது பூரணமான, நன்கிணைக்கப்பெற்ற தனியரசாகிற்று. எனவேதான் 1948–இல் இலங்கைக்குக்

கிட்டிய அரசியற் சுதந்திரம், இலங்கையின் வரலாற்றில் முக்கியமான ஒரு தேசிய நிகழ்ச்சியாக விளங்குகின்றது.

1948-இல் ஆரம்பித்த அத்தேசியப்பிணைப்பின் பின்னர், ஈழத்தின் சகல துறைகளிலும் வளர்ச்சிகள் பல ஏற்பட்டன. பொதுப்படையாகத் தேசத்தின் அமைப்பிலும், சிறப்பாகத் தேசிய இனங்கள் ஒவ்வொன்றினது அமைப்பிலும் பல முன்னேற்றங்கள் — படிப்படியாக ஏற்பட்டன. அம் முன்னேற்றத்தை விரும்பாத சக்திகள் இந்த இருபத்தொரு வருட காலத்தில், எப்பொழுதும் தொழிற்பட்டு நின்றனவெனினும், — நிற்கின்றனவெனினும் — நாடு வளர்ந்து கொண்டே செல்கின்றது. முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும். தேசத்தின் பொதுப்படையான— அரசியற், சமூக, பொருளாதார, பண்பாட்டு—வளர்ச்சியின் சிறந்த சின்னங்களில் ஒன்றாக அமைவது இலக்கியமாகும். மக்கள் யுகத்தில் இலக்கியம் உயர்நிலைச் சமூகத்தின் இயக்க சக்திகளான குரவர்களின் சொத்தாக மாத்திரமல்லாது நாட்டில் வாழும் எல்லா மக்களையும் பிரதிபலிப்பதாக இருப்பதால்—இது சனநாயகம், வாக்குரிமை முதலியன ஏற்படுத்திய தவிர்க்கமுடியாத முன்னேற்றமாகும்—. இலங்கையிலும் இவ் இலக்கிய வளர்ச்சி விரிந்து பரந்து வரும் வெகுசன சமூக, அரசியல் ஈடுபாட்டினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்கின்ற மக்களின் வாழ்விலும் இப்புதிய அரசியலுணர்வு, சமூக விழிப்பு, பொருளாதார மாற்றம் ஆகியன ஏற்பட ஏற்பட அவைகளைப் பற்றிய 'எழுத்து' க்கள் தோன்றலாயின. வடமாகாணத்தில் மாத்திரமல்லாது, கிழக்கு மாகாணத்திலும், தெற்கு, மத்திய மாகாணங்களிலும், மேற்கு மாகாணத்திலும் வாழும், தமிழ் பேசும் மக்கள் இலக்கியப் பொருளாகினர். இப் பண்பு முன்னர் எக் காலத்திலும் இருக்கவில்லை. முஸ்லீம்கள் தமிழுக்காற்றிய 'தொண்டு' மட்டக்களப்புத் தமிழுக்காற்றிய 'தொண்டு' என்று இவ் வளர்ச்சி

களுக்குச் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் விருது வழங்கப்பட்டதெனினும், சுதந்திரத்தின் பின்னரே, இம் மக்கட் குழுவினர் தம் வாழ்க்கையைத் தமது மொழியில் எழுதித் தமது அநுபவங்களைப் பிறதேசத்து தமிழ்ப் பேசும் மக்களுடன் பகிர்ந்து கொள்ளத்தொடங்கினர். அதாவது சுதந்திர காலம்வரை (மத, பிரதேச உணர்வுகளால்) தனித் தனித் தனியாகக் கிடந்த தமிழ் இலக்கிய முயற்சிகள் இப் பொழுது ஒன்றாக இணைக்கப்பட்டன. முன்னர் வேற்றுமைகள் வலியுறுத்தப்பட்டன. பின்னர் வேற்றுமையில் ஒற்றுமை காணப்பட்டது—காணப்படுகின்றது. இளங்கீரன் முஸ்லீம்கள் தமிழுக்காற்றிய தொண்டின் ஓர் அமிச மாகவோ; டொமினிக் ஜீவா கிறித்தவம் தமிழுக்காற்றிய தொண்டின் அமிசமாகவோ நினைக்கப்படாது (தொண்டுப் பட்டியல்காரர்கள் தயவுசெய்து கவனிக்க!) இவர்கள் யாவரும் ஈழத்துத் தேசிய இலக்கியத்தின் பிரதிநிதி களாகக் கவனிக்கப்படுகின்றனர்.

இந்த வளர்ச்சி நாட்டின் அரசியல் வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் முக்கியமான இடம் பெற வேண்டிய ஒன்றாகும்.

தேசிய வளர்ச்சியில் இவ்விலக்கிய முன்னேற்றங்கள் பெறுமிடம் ஒருபுறமிருக்க, தமிழ் பயிலப்படும் நாடு களில் தமிழ் இலக்கியம் அடைந்த முன்னேற்றத்திலும் இது மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. உண் மையைக் கூறினல், முன்னெக்காலத்தையும்விட, 1948க்குப் பின்னரே, ஈழத்தின் தமிழ் இலக்கியவளர்ச்சி, பொதுப் படையான தமிழ் இலக்கிய வளர்ச்சி, பொதுப்படையான தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றது. சுதந்திர காலத்துக்கு முன்னர் ஈழத்தில் ஏற்பட்ட தமிழ் இலக்கிய இயக்கங்கள் தமிழின் பொதுப்படையான முன்னேற்றத்துக்கும் பாரம்பரியமான (மத, இலக்கணத்) தூய்மைக்காகவும் போராடினவேயன்றி, அவை ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை வெளிப் பாட்டைத் தமிழ் இலக்கியத்தின் ஒரு தனி அமிசமாக

நிலைநிறுத்தவில்லை. தெளிவாகக் கூறுவதானால், முந்திய இலக்கிய முயற்சிகள் ஈழத்தின் தனித்துவத்தைத் தமிழின் ஓர் அமிசமாக வற்புறுத்தத் தயங்கின, மாறாக, ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கை, புராதன தமிழ் பாரம்பரியத்துக்கு (சைவ சித்தாந்த நெறியே தமிழர் பாரம்பரிய நெறி என வற்புறுத்தப்பட்டது) இயைவதாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தின. சுருக்கமாகக் கூறுவதானால், சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி, தமிழ் இலக்கியப் பரப்பில் விரிவு வட்டத்தை ஏற்படுத்திற்று.

இக்காரணத்தினால், இக் காலப் பிரிவில் ஈழத்தில் ஏற்பட்டுள்ள இலக்கிய வளர்ச்சி பற்றி ஊன்றி ஆராய்வது தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடுடையோர் (இந்தியாவிலுள்ளவர்கள் உட்பட) யாவரதும் கடமையாகும்.

இக்காலப்பிரிவில் ஏற்பட்ட இலக்கிய முன்னேற்றத்தின் சிறப்பமிசமாக அமைவது ஆக்க இலக்கியமேயாகும். ஆக்க இலக்கியங்களின் வளர்ச்சியைக் கொண்டு, நாம் இந்நாட்டில் தமிழ்பேசும் மக்களிடையே ஏற்பட்ட தேசியப் பிணைப்புணர்வையும் அதன் மூலமாகத் தமிழ் இலக்கியப் பரப்பு விரிவில் ஏற்பட்ட வளர்ச்சியையும் நாம் ஓரளவு மட்டிடலாம்.

## II

இலக்கிய வளர்ச்சி பற்றிய ஆய்வு பன்முகப்பட்ட ஒன்றாகும். மிகவிரிந்த நிலையில் அது வரலாற்றில் ஒரு பிரிவு. இங்கு, இவ்விலக்கிய வளர்ச்சியின் பிரத்தியட்ச நிலையான நூல் வெளியீடு பற்றியும், அந்நூல் வெளியீட்டிற் காணப்படும் முக்கிய பண்புகள் பற்றியும், அப் பண்புகள் மூலம் இவ்விலக்கிய வளர்ச்சியின் நெறிபற்றியும் சிறிது ஆராயப்படும். இந்த ஆய்வு அண்மைக்கால இலக்கிய இயக்கத்தில் 'கண்டதுண்டு கேட்டதில்லை' யாகவிருந்த சில அமிசங்களை வலியுறுத்த உதவும்.

இத்தகைய ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்வதில் எம்மிற் சிலருக்கு இலக்கிய இயக்கங்களிற் பங்கெடுத்துக் கொண்டவர்கள் என்ற முறையிலும், அக்காலப் பகுதியில் நடந்தேறிய இலக்கிய நிகழ்ச்சிகளின் தன்மைகளை நேரடியாக அறிந்தவர்கள் என்ற முறையிலும்—வாய்ப்பான ஓர் இடம் உண்டு. வாழ்க்கையனுபவ அறிவைக் கொண்டு சில பண்புகளை துலக்கமாக விளக்கலாம்.

ஆனால் இந்த வாழ்க்கையனுபவ அறிவு துணைப்பொருள் தான். இம் முயற்சியின் அடிப்படைத் தேவையாக அமைவது நூலகவியல் நெறிகளுக்கியைய அட்டவணைப்படுத்தப்பட்ட நூற்பட்டியலேயாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்பட்டியலாக மாத்திரமே கணிக்கும் இலக்கிய சிரேஷ்டர்கள் வாழும் ஈழத்தில், பட்டியல்களுக்குத் தட்டுப்பாடு இருக்க முடியாதே எனப் பலர் எண்ணுவர். இருப்பினும், பூரணமான பட்டியல் இல்லையென்பது கசப்பான உண்மையாகும்.

ஆயினும் இத்துறையில் பேருதவி செய்யும் மூன்று நூற்பட்டியல்கள் கைக்கெட்டின.

ஒன்று கனக செந்திநாதனல் தொகுக்கப்பட்டு யாழ் இலக்கிய வட்டத்தினல் (1966 இல்) பிரசுரிக்கப்பட்டது. **'ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி'** எனும் இத்தொகுப்பு வரதரின் பலகுறிப்பு, ஆரம்பப் பதிப்புக்களிலிருந்து எடுக்கப் பட்டதாகும். இதில் 1950–க்கு முன்னர் வெளிவந்த நூல்களின் பெயர்கள் காணப்படவில்லை.

மற்றது, **1-3-71**-இல் வெளிவந்த வரதரின் பலகுறிப்பு நான்காவது பதிப்பிலுள்ள புத்தகப் பிரிவிலுள்ள பட்டியலாகும். இப்பதிப்பில் 1955-க்குப் பின் வெளிவந்த நூல்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 'வழி காட்டி'யிற் காணப்படாத பொருள் அடிப்படையான நூற் பகுப்பு முறை இப்பதிப்பில் காணப்படுகின்றது. இதனையும் கனக செந்திநாதனே தொகுத்துள்ளார்.

மூன்ருவது, அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளை, 1971 பெப்ரவரி 4—15–ஆம்

திகதிகளில் நடத்திய ஈழத்துத் தற்காலத் தமிழ் நூற் காட்சி (1948 – 1970) யின் பொழுது வெளியிடப்பெற்ற தேர்ந்த நூற் பட்டியல் ஆகும். இப் பட்டியலிலுள்ள நூற்பகுப்பும், அட்டவணை முறையும் நூலகவியல் நெறிகளுக்கியைய மேற் கொள்ளப்பட்டுள்ளன. அந்த அளவில் இத்தொகுதி, மற்றையவற்றிலும் பார்க்கப் பயனுடைத்தாயுள்ளது என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இப்பட்டியலைக் கலாநிதி க. கைலாசபதியும், திரு. எஸ். எம். கமால்தீனும் தயாரித்துள்ளனர். (வரதரின் பல குறிப்பில், நூற்பகுப்பும் அட்டவணையும் நூலக நெறிகளுக்கியையச் செய்யப்படின் அது அக் கையேட்டின் பெறுமதியை மேலும் உயர்த்தும்).

இம் மூன்று தொகுதிகளில் ஒன்றுவது 'பூரணமான பட்டியல்' என்ற உணர்வுடன் வெளியிடப்படவில்லை. ஒவ்வொரு பட்டியலும் அதனதன் பூரணமின்மையை வலியுறுத்தியே செல்கின்றது. ஒரு பட்டியலில் இடம்பெறும் சில நூல்கள் இன்னொரு பட்டியலிற் காணப்படவில்லை. ஒரு பட்டியலில் சிறுகதை நூலாகக் கொள்ளப்பட்டுள்ள ஒரு நூல், இன்னொன்றில் நாவலாகக் கொள்ளப்பட்டுள்ளது. (பொ. சண்முகநாதனின் வெள்ளரி வண்டி) இவ்வாறு இப் பட்டியல்களிற் சில உள்ளார்ந்த குறைபாடுகள் காணப்படுகின்றனவென்பது உண்மையே. இத்தகைய பட்டியல் தொகுப்பு, அரசாங்கச் சுவடித் திணைக்களத்திலுள்ள நூல்களையும் குறிப்புக்களையும் பதிவுகளையும் கொண்டு தயாரிக்கப்படுகின்றபொழுதே, பூரணத்துவம் பெறும். இத்தகைய முயற்சிகள் தவருகச் செய்யப்படுவதால், பிழையான தகவல்கள் உண்மையானவையாக உலாவத் தொடங்கிவிடும் என்பதற்காகவே நூலகவியல் வல்லுநர் இப் பணியினை விருப்பு முயற்சியாளரிடமிருந்து எடுத்துத் தாம் செய்து வருகின்றனர். நூற்சேகரிப்புக்கும் புத்தகப் பட்டியல் தயாரிப்புக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

ஆயினும் விருப்பு முயற்சியாளரின் முன்னேடிச் சேவை முக்கியமானதாகும்.

இப்பொழுதுள்ள நிலையில் இப்பட்டியல்கள் தனித் தனியே பூரணமற்றவையாக இருப்பினும் ஒன்றாக இணைத்து ஆய்கின்ற பொழுது அவைதரும் தகவல்கள் 'கிடைப்பனவற்றுள் நம்பிக்கையானவை'யாக இருக்கும். மேலும் இப் பட்டியல்கள் பூரணமற்றவையெனினும், இவற்றிலுள்ள தகவல்கள் மாதிரிக் கணிப்பீட்டுக்குப் பெரிதும் உதவும். ஈழத்துத் தற்காலத் தமிழ் இலக்கிய வெளியீடுகள் பற்றிய அறிவு, எவ்வாறு இக்காலப்பிரிவின் இலக்கியப் பண்புகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் எடுத்துக் காட்டுகின்றன என்பதைக் காட்டுவதற்காகவே இம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. 'பொய் பச்சைப் பொய், புள்ளிவிவரங்கள்' என்ற பிரபல ஆங்கில மேற்கோள் வாசகத்தை அறியாது இம் முயற்சி மேற் கொள்ளப்படவில்லை. அத்துணை வன்மையாகக் கண்டிக்கப் பட்டபின்னரும், புள்ளி விபரமே, திட்ட வகுப்புக்களுக்குத் தொடர்ந்து உதவிவருகின்றது.

இக்கட்டுரையில், ஆக்க இலக்கிய நூல்களே ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளன. ஆக்க இலக்கியம் என்ற பெரும் பிரிவின்கீழ், புனைகதை, நாடகம், கவிதை என்பன எடுக்கப் பட்டுள்ளன. புனைகதை சிறுகதை—நாவல் என வகுக்கப் பட்டுள்ளது. குறுநாவல்கள் நாவல்களுடனேயே பட்டியல் களிற் காணப்படுகின்றன. அப்பகுப்பு முறையே இங்கும் மேற்கொள்ளப்படுகின்றது. கவிதை நாடகங்கள், கவிதைக் குள் அடங்குபவையாகக் கொள்ளப்படாது, நாடகத்தின் பாற் படுபவையாகக் கொள்ளப்படுவதே முறையாகும். அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தினரின் பட்டி யலில் மேற்கொள்ளப்பட்டுள்ள இம்முறையே பொருத் தமானதென்பது பிற சர்வதேசிய நூல்பட்டியல்களைப் பார்க்கும் பொழுது புலனாகின்றது. இலக்கிய வடிவம் ஒன்றின் பண்பும் பணியும் பற்றி இரசிகர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் நூல் விவரத்தையே எத்துணை பாதிக்கும் என்பதற்கு இது உதாரணமாகும்.

இத்துறைகள் ஒவ்வொன்றிலும் முழுக் காலப் பிரிவிலும் வந்த நூல்களின் தொகையை முதலிற் குறிப்பிட்டு விட்டு, அடுத்து அவற்றை 1948 முதல் 1955, 1956 முதல் 1965, 1966 முதல் 1970 என்று வகுத்து ஒவ்வொரு காலப் பிரிவிலும் வெளிவந்துள்ள நூல்களின் தொகை குறிப்பிடப்படும். 1948 முதல் 1970 வரையிலான காலப்பிரிவை இவ்வாறு வகுப்பதற்குப் பல முக்கியமான காரணங்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது, அரசியல் பற்றிய காரணமாகும். 1948 முதல் 1955 வரையுள்ள காலப் பகுதியில், அரசியற் சுதந்திரம் சமூக விழிப்பினையுணர்த்தும் சக்தியாகக் காணப்படவில்லை. முன்னர் நிலவிய குடியேற்ற நாட்டு முறைமையே அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிகார வலுவுடைய ஆட்சிக் கோட்பாடாக விளங்கிற்று. அரசியலதிகாரத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் மக்கள் ஈடுபாட்டுக்கு முக்கிய இடமளிக்கப்படவில்லை. இக்காலத்தில் தேசியம் அரசியற் சித்தாந்தமாக முகிழ்க்காது இருந்தது. நாட்டின் இலக்கிய வளர்ச்சியை எடுத்துக் கொண்டாலும் இத்தகைய தேசியநோக்கின்மையை நாம் நன்கு காணலாம். அரசியலில் மக்கள் பங்கு பெயரளவில் நிலவிற்றெனினும், சமூக நிலையில் பொதுமக்கள் விழிப்புக் காணப்படவில்லை. மக்களின் பண்பாட்டினடியாக விழிப்பு ஏற்படாதிருந்த காலம் இது.

1956-இல் தொடங்கும் காலப்பகுதியில், இந்நாட்டில் முதன் முதலில் 'சமூகப்புரட்சி' ஏற்பட்டதென்பதை எவரும் ஒத்துக்கொள்வர். 1956-இல் தொடங்கும் புதியயுகம், பெரும்பான்மை மக்களின் முன்னேற்ற காலமே என்று சிலர் கூறுவதுண்டு. இதற்கு எதிராக இரண்டு காரணங்களைக் காட்டலாம். ஒன்று 1948—1955-இல் சிறுபான்மை இனத்தினரின் கலை பண்பாட்டுக்கு இடமளிக்கப்படாதிருந்ததாகும். சிறுபான்மையினருள் விதேசிய நெறியற்றுக் கிடந்தவர்கள் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். அப்படிக் கருதியவர்கள் அந்த அந்த இனத்தைச் சேர்ந்தவர்களே. தமிழ்க் கல்வி, தமிழ்க் கலைகள் பற்றிய

தேசிய நிலைப்பட்ட விழிப்புணர்வு, 1948—55 இல் இருந்தது என்று எவராலும் கூறமுடியாது. இரண்டாவது, பெரும்பான்மைச் சமூகத்தினரின் விழிப்பின் காரணமாகச் சிறுபான்மை இனத்தவர்களும் விழிப்படைந்தனர். எனவே 1956-இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தமிழ் பேசும் மக்களிடையேயும் முன்னர் காணப்படாத விழிப்பை ஏற்படுத்திற்று. இக் காலத்திலிருந்தே தமிழர்கள் தாமும் இலங்கையின் தேசிய இனக் குழுக்களில் ஒரு பிரிவினர் என்பதையுணர்ந்து செயற்பட்டனர். மேலும் சிங்கள மக்களின் மொழிக்கும் பண்பாட்டுக்கும் அவர்களது வாழ்க்கையில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம், தமிழ் மொழிக்கும் பண்பாட்டுக்கும் தமிழினத்தவர் வாழ்க்கையில் முக்கிய இடம் வழங்கப்பட்டது. சிங்கள மொழி மூலக் கல்வி தமிழ்மொழி மூலக் கல்விக்கு வித்திட்டது. சிங்களத்தை அரசாங்க மொழியாக நெறியாக ஏற்படுத்திய சட்டத்தின் பயனாக, தமிழ்ப் பிரதேசங்களின் ஆட்சிக்குத் தமிழ் மொழி முக்கியமாக்கப்பட்டது. இவ்வாறு சகல துறைகளிலும் தமிழ் இடம்பெறத் தொடங்கியதால் தென்னிந்தியத் தமிழரிலும் பார்க்க இலங்கைத் தமிழர் சில துறைகளில் முன்னேற்றமடைந்தனர். தாய்மொழியில் உயர் கல்வி, பயிற்றப்பட்டமையைச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

1956-இல் தொடங்கிய இப்புதிய அரசியல் வளர்ச்சி, 1965-இல் தடைப்பட்டது. தேசிய உணர்வு வெளிப்பாட்டின் ஆரம்ப காலத்திற் காணப்படும் தவிர்க்க முடியாத, மிகையாரவாரமும், புதிய இன்னல்களுமே தேசியவாதத்தின் உண்மையான சொரூபமெனத் தப்பாகக் கணக்கிடப்பட்ட படியால் (அவ்வாறு தப்பாகக் கணக்கிடப் படுவதும் வரலாற்றுப் பண்புகளில் ஒன்று) பழைமையைப் பேணுவதற்கான அரசியற் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. பழைமையான நட்புறவைப் பேணுவதே தேசியம் என்ற கோட்பாட்டினடிப்படையில் அரசியல் இணக்கங்களும்

ஆட்சியமைப்பும் அமைந்தது. எனவே எவ்வாறு நோக்கினும் 1965 ஒரு முக்கிய கட்டமாகவே அமைந்தது.

கலை, இலக்கியத் துறையைப் பொறுத்தமட்டில், 1956 மிக முக்கியமான ஒரு கால வரை நிலை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வர். 1948—55-இல் கலை, இலக்கியத்துக்கு முக்கியத்துவமளிக்காததனாலேயே (அதாவது தேசியப் பாரம்பரியத்து முதலிடம் கொடுக்காததனாலேயே) 1956 புரட்சி ஏற்பட்டதென்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். சிங்கள மக்களின் முன்னேற்றத்தில் 1956-இல் எத்துணை முக்கிய முண்டோ, அத்துணை முக்கியம் தமிழ்பேசும் மக்கள் வாழ்விலும் உண்டு. தமிழ் பேசும் மக்கள் என்ற அரசியற் கோட்பாடு தோன்றியதே 1956-க்குப் பின்னரே.

ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சியை எடுக்குமிடத்தும், 1956 முக்கியமான இடம் பெறுகின்றது. ஒரு தசாப்த காலமாக ஈழத் தமிழலக்கியத்தின் உந்து சக்தியாக (நேரடியாகவும் எதிர்மறையாகவும்) விளங்கிய முற்போக்கு இலக்கிய இயக்கம் இக்காலத்திலேயே தோன்றி வளர்ந்தது 1956-க்குப் பின்னர் அது முழுமூச்சுடன் தொழிற்படத் தொடங்கிய பொழுது, 'ஈழத்திலக்கியம்' என்ற குடைக் கீழ் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் யாவரையும் அது ஒன்று படுத்திற்று. 1963 வரை அவ்வியக்கமே ஈழத் தமிழிலக்கியத்தின் முதன்மைச் சக்தியாக விளங்கிற்று. அரசியல் நிலைபாடு கொண்ட அவ்வியக்கத்தின் பண்பும் பணியும் துல்லியமடைய அடைய, இலக்கியப் பிரச்சினை ஈழத்திலக்கியம் என்ற பொது நிலையிலிருந்து விடுபட்டு, யதார்த்தம், தேசிய இலக்கியம் என்பன பற்றியதாக மாறிற்று. தேசியத்தின் முதல் விழிப்பில் ஒன்று சேர்ந்த ஈழத் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் ஆர்வ வேகங் குறைய அரசியற் காரணங்களால் பிரியத் தொடங்கினர். முற்போக்கு இலக்கிய, இயக்கம் எத்துணை அரசியற் சார்புடையதாகவிருந்ததோ அத்துணை அரசியற் சார்புடையதாகவே முற்போக்கு விரோத இயக்கமுமிருந்தது. அரசியற் கோட்பாடொன்றை

எதிர்ப்பதும் அரசியல்தான். ஏறத்தாழ இதே வேளையில் முற்போக்கு இலக்கிய இயக்கத்தினரிடையேயும் அரசியல் வேறுபாடுகள் ஏற்பட்டன. இவ்வேறுபாடு அடிப்படைக் கொள்கைகளில் ஏற்பட்ட வேறுபாடு அன்று. செயல்வேகம், செயல் நோக்கு, என்பதைப் பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக அவ்வணிக்குள் பிளவேற்பட்டது. உட்பிளவும், வெளிப்பிரிவும் இயக்கத்தைத் தாக்கவே, இலக்கிய வளர்ச்சி வேகம் குன்றிற்று. இலக்கிய வரலாறும் அரசியல் வரலாறும் இணைந்தன. இரண்டிலும் 1965 இன்னொரு முக்கிய கட்டமாயிற்று.

1956 முதல் 1965 வரையிலான இக்காலகட்டமே ஈழத் தமிழிலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்ட மாகும். காலத்திற்கேற்ற மனிதர்கள் தோன்றுவார்கள் என்பதற்கிணங்க இக்காலகட்டத்தில்; பலரின் தனிப்பட்ட செயல் திறனும் தீட்சண்ய புத்தியாலும் இலக்கிய இயக்கம் ஓங்கி வளர்ந்தது. தேச முன்னேற்றம் பற்றிய அரசியற் கருத்து வேறுபாடுடையோர், ஒருமைப்பட்ட இலக்கிய (தேசிய) உணர்வினால் ஒருமித்துச் செயலாற்றிய காலம் அது. உண்மையிலேயே பண்டிதரும் (அதாவது தமிழ்ப் புலமைக்குப் பரீட்சைச் சான்று வைத்திருந்தோரும்) 'பாமரரும் (அத்தகைய புலமைச் சான்று இல்லாத, அதுகாலவரை தமிழ் இலக்கியத்தைப் பற்றிய உணர் வில்லாத பாமர குடும்பங்களைச் சேர்ந்த ஆனால் ஆக்க இலக்கியத்திறனும் நுண்ணுணர்வும் கொண்ட எழுத்தாளர் களும்) ஒன்றுபட்டுக் கடமையாற்றிய காலம் அது. இலக்கியத்தின் பண்பு, பணிபற்றிய கோட்பாடுகள் விரிவடைந்த காலம் அது. யாவற்றுக்கும் மேலாக இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான அரசியல் சமூக நிலைப்பட்ட உந்து சக்தியொன்று வேண்டுமென்பதை யாவரும் உணர்ந்த (வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாவிடினும்) காலம் அது.

1965-இல் மாற்றம் ஏற்பட்டது. கருத்துக்கள் எவ்வாறு காலத்தை மாற்றுவதற்கான முதற் சக்தியாக அமைகின்றனவோ அவ்வாறே அவை காலத்தின் நடை

முறைகளின் அடியாகவும் தோன்றுகின்றன. அதாவது ஒரு குறிப்பிட்ட கால நடைமுறைகள் தொடர்ந்து நிலைப்பதன் மூலம் சில கருத்துக்களை, சமூக நியதிகள்; நன்மை தீமை பற்றிய கோட்பாடுகளை, வாய்ப்பானவை வாய்ப்பற்றவை என்ற திருஷ்டாந்தங்களை மக்கள் மனதில் நிலைபெறச் செய்துவிடுகின்றன. இவை காலத்தின் நடைமுறைக் கருத்துக்களாக எடுத்துக் கூறப்படுவது வழக்கம். ஆனால் மாற்றத்தின் அவசியத்தை உணர்த்தும் முற்போக்குக் கருத்துக்களுக்கும், நடைமுறைச் செல்வாக்கால் வளரும் கோட்பாடுகளுக்கும் ஏற்படும் மோதல் உண்மையில் அடிநிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமூக முரண்பாட்டின் வெளித்தோற்றமே. புதிய சமுதாய அமைப்பை வேண்டும் கருத்துக்களை இந்த வர்த்தமான நிலைபாட்டுக் கருத்துக்கள் எதிர்ப்பது வழக்கம். ஆனால் இந்த வர்த்தமானக் கருத்துக்கள் சமூகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். (கண்ணுக்குப் புலனாகாத) மாற்றங்களைக் கணக்கெடுப்பதில்லை. இதனால் இக் கருத்தையுடையோர் படிப்படியாக மாற்றத்தையே எதிர்க்கும் நிலையினராகி விடுகின்றனர். மாற்றத்தை எதிர்ப்பவர்கள் மாற்றத்தை விரும்புபவர்களை விட வன்மையான முறையில் தமது கருத்துக்களை நிலைநிறுத்தப் பார்ப்பார். அவ்வாறு நிலை நிறுத்த முனையும் பொழுது, அவர்கள் தமது மாற்ற விரோதக் கருத்துக்களுக்குப் புதிய வியாக்கியானங்கள், விளக்கங்கள் (இது உண்மையில் மாரீசவாதமே) கொடுப்பது வழக்கமே. இந்தப் பண்பிற்கியையவே; 1965-இல் ஏற்பட்ட மாற்றத்துக்குத் தவறான புதிய விளக்கங்களும், வியாக்கி யானங்களும் கொடுத்து தமது முன்னேற்ற விரோதநிலையை விளக்கப் பார்த்தனர் இதன் அடி உண்மையை அறியாத பலர் முன்னேற்ற விரோதக் கோட்பாட்டை, சிறந்த முன்னேற்றக் கோட்பாடாக நம்பித் தடுமாறுவர்.

மாற்ற காலத்தில், தீர்க்கமான கருத்துத் தெளிவின்மையால் ஏற்படும் தவறுகள், மாற்றத்தின் புதுமை, அப்புது நிலை தோற்றுவிக்கும் புதிய பிரச்சினைகள்

ஆகியன காரணமாகப் புதுமைநெறியைப் பலர் வெறுப்பது வழக்கம். ஆனால் புதுமை சில வெற்றிகளை ஏற்கனவே ஈட்டிக்கொண்டால், அவற்றை விட்டுவிட்டுப் பின்நோக்க முடியாத நிலைமையும், புதுமையை மனம் விரும்பி ஏற்காத ஒரு நிலைமையும் ஏற்படும், இந்நிலையில் முற்போக்கு நெறி ஸ்தம்பிக்கும். முற்போக்கின் ஸ்தம்பித நிலையே பிற்போக்கின் பெருத்த வெற்றியாகக் கருதப்படும்.

இவ்விஸ்தம்பித நிலை, மேற்சொன்ன காரணமாக உண்டாவதே. ஆட்சியதிகாரம் கொண்டு ஸ்தம்பித நிலையைப் பேணினும், சமூக நிலையில் முன்னர் தொடங்கிய முற்போக்கு ஊற்றுத் தொடர்ந்து பாய்ந்து கொண்டே இருக்கும். ஆட்சித்தடை (அணை) இருப்பின் அவ்வூற்று நீர் தேங்கிப் பெருகி அத்தடையை மீறிப்பாயும். இது இயக்க வியலுண்மை.

1965—70-ன் அரசியல் வரலாற்றுண்மை இதுவே. 1965-இல் ஆட்சியதிகாரம் மாறியதும், முற்போக்குச் சக்திக்கு அணைபோடுவதும், போடப்படும் அணையின் தேவைக்குப் புதுமுறையான · விளக்கம் கொடுப்பதுமே முக்கிய முயற்சியாகவிருந்தது. 19/0-இல் தேர்தல் முடிவுகள் இந்நிலைமையைப் புறங்கண்டன.

1965—70-இல் காணப்பட்ட மாற்றம் அரசியல் மாற்றமே. முற்போக்குத் தொடர்ச்சி ஸ்தம்பிதமானதே இதன் அரசியற் சாதனை. ஸ்தம்பிதமடைவதாலும் முற்போக்கு வாதம் அழிந்து விடுவதில்லை. இலக்கியத்திலும் இக்காலத்தில் முற்போக்குத் தடைப்படுகிறது.

ஈழத்துத் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் முற்போக்குச் சக்திகள் 1965 அளவில் முன்னேற்றச் செயலற்று நிற்பதற்கான அகக் காரணங்களை முன்னரே பார்த்தோம். 1965-இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் அந் நிலையை வலுப்படச் செய்தது. அதாவது ஸ்தம்பிதம் தற்காலிகமாக • ஸ்திரப்படுத்தப்பட்டது. ஆனால் மாற்ற விரோதிகளின் கண்களில் இது இலக்கிய முற்போக்கு

நெறிக்குத் தாம் வழங்கிய இறுதியடியாகவே தோன்றிற்று. இதனல் முற்போக்கு இலக்கியவாதம் ஈழத் தமிழிலக்கியத்தில் முடிவுற்று விட்டதாகவே பலர் எண்ணத் தொடங்கி விட்டனர்

ஆனல் ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டை எதிர்த்தோருக்கு தனிப்பட்ட ஓர் இலக்கிய நோக்கு இருக்கவில்லை. அவர்கள் முற்போக்கு வாதத்தின் எதிரிகளாக இருந்தவர்களேயன்றித் தாம் தம்மளவில் ஒருமித்தோ, தனித்தோ தனிப்பட்ட ஒரு இலக்கியக் கோட்பாட்டை நிறுவ விரும்பியவர்களல்லர். தப்பித் தவறித் தமக்கென ஓர் இலக்கியக் கோட்பாட்டையுடையோராயிருந்தவர்களும், அக்கோட்பாட்டை (முன்னர்) முற்போக்கு இலக்கியக் குழுவின் வழியாகவே பெற்றுக்கொண்டவர்களாவார். ஈழத்திலக்கிய முன்னேற்றம், சமுதாயத்தைப் பிரதிபலித்தல் (இது யதார்த்த வாதத்தை தம் வாயாற் கூறத் தயங்கியவர்களின் கோட்பாடு) போன்ற சோட்பாடுகள் முற்போக்கு இலக்கியகாரரிடமிருந்து கடன் வாங்கப்பட்டவையே. முற்போக்கை முன்னர் எதிர்த்த சில உயர்ந்தோர் (சாதியால் சமூக அந்தஸ்தால்) முன் வைத்த இழிசனர் இலக்கியக் கோட்பாட்டை இக்காலத்தில் எவருமே முன் வைக்க விரும்பவுமில்லை; முடியவுமில்லை!

இந்த இலக்கிய உயர் சாதியார் தமது சகாக்கள், தத்தமது கிராமத்து வட்டாரங்களிலிருந்த கோயில்கள்மீது பாடிய செய்யுட்களையே தேசிய எழுச்சி இலக்கியமென நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனல், முற்போக்குக் கொள்கைகளை வெறுத்தும், விரும்பாதுமிருந்த ஆக்க இலக்கியகாரர் இவற்றில் ஒன்றைத் தானும் இலக்கியக் கோட்பாடுகளாகக் கொள்ள முடியாதவர்களாக நின்றனர்.

ஆனல் முற்போக்கு இலக்கியத்தின் பத்தாண்டுகால வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படைக் கோட்பாட்டு நெறிப்பாடு வேண்டுமென்பதை உணர்த்தியிருந்தது. எனவே

முற்போக்கரல்லாத 'இவ்விலக்கிய' காரர்களுக்கு ஒரு புதிய இலக்கியக் கோட்பாடு தேவைப்பட்டது. ஆனல் இவர்கள் முற்போக்கு இலக்கியகாரர் முன்னர் எடுத்துக் கூறிய நெறிப்பாடுகளை எடுத்துக் கொள்ள முடியாதவர்களாகவும் இருந்தனர். புதிய பரம்பரையினராகத் தோன்றிய எழுத்தாளர்களும் வரலாற்றுப் பின்னணி காரணமாகப் புதிய இலக்கிய கோட்பாடொன்றினை வேண்டி நின்றனர். இதன் காரணமாகப் புதிய இலக்கிய விளக்கங்களும், கோட்பாடு வியாக்கியானங்களும் தொடங்கப் பெற்றன. உண்மையில் முற்போக்கு இலக்கியகாரர்களல்லாதோர் இக்காலத்தில் தமக்கென ஓர் இலக்கியக் கோட்பாட்டைத் தேடும் முயற்சியிலீடுபட்டனர். இதன் காரணமாக கடந்த கால வரலாற்றுக்குப் புதிய விளக்கங்கள் தோன்றத் தொடங்கின. முற்போக்கு இலக்கியத்தின் தத்துவ அடிப்படையான மார்க்சீயத்துக் கப்பால் சென்றுதான் இக் கோட்பாட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சிலர் எண்ணினர். இத்தகைய கோட்பாட்டுத் தேடல் முயற்சியில் மு. தளையசிங்கத்தின் 'போர்ப்பறை'யில் வரும் கட்டுரைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தளையசிங்கத்தின் இந்நூல் இக்காலத்து இலக்கியத் தேக்கத்தை எடுத்து விளக்க உதவும் முயற்சியாகவே அமைந்துள்ளது. அவரது புதிய 'மார்க்ஸீயத்துக்கு அப்பாலான' கோட்பாட்டுத் தேடல் முயற்சி தனிப்பட ஆராயப்பட வேண்டியதொன்றும். இவ்விடத்தில், அந் நூல், 1965–க்குப் பின் தோன்றிய தேக்கத்தை வன்மையாக எடுத்துணர்த்தும் நூல் என்பதையும், அத்தேக்கத்தை யுடைத்தெறிவதற்கு எடுக்கப்பட்ட நேர்மையான முயற்சி யென்பதையும் மாத்திரம் குறிப்பிட்டுச் சொல்லலாம். இன்னுமொன்று, இலக்கியகாரராகவே ஆரம்பித்த தளையசிங்கம் படிப்படியாகச் சமுதாயப் பிரச்சினைகளினுல் ஈர்க்கப் பட்டு இறுதியில், அரசியற் சித்தாந்தத்தைப் பொறுத்த வரையில், அருகலைவியல் முரணறுவாதத்தை மேற்கொண்டுள்ளமை, இலக்கியம் தன்னுள் முடிந்த முடிபாக அமைவதில்லை என்றவுண்மையைக் காட்டுகின்றது. முற்போக்கு

102955

இலக்கியகாரர்களிலும் பலர் இலக்கியத்துக்குச் சமுதாய நோக்குத் தேடியே மார்க்ஸீய வாதிகளாயினர் என்பதை மனத்திருத்துதல் அவசியம். இலக்கிய நேர்மையுள்ளோர் இத்தகைய கோட்பாட்டுத் தேடல் முயற்சியில் முனைந்து நிற்க முற்போக்கு எதிர்வாதிகள் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டும் வாழ்கின்றனர். 1965 முதல் 70 வரையிலான ஈழத்திலக்கிய முயற்சிகளின் தத்துவார்த்த நிலைமை இதுவேயாகும்.

இதுவரை காலப்பகுப்பின் அவசியம் பற்றியும், ஒவ்வொரு காலப் பிரிவினது பொதுப்பண்புகள் பற்றியும் ஆராய்ந்தோம். மேற்போந்த காலப்பிரிவுகளின் பண்பு விளக்கத்தில் தனி மனித வாத விகாரங்களைப் பற்றிக் குறிப்பிடாமைக்குக் காரணம், தனி மனித வாதம் அடிப்படையான வரலாற்றோட்டத்தில் என்றும் தற்காலிகமானதென்பதனுலேயே. மேலும் ஆக்க இலக்கியகாரனின் தத்துவத்தை அவனது ஆக்கங்கள் பிரதிபலித்தல் வேண்டும். தனது ஆக்கங்களிற் காணப்படாத இலக்கியக் கோட்பாட்டைப் பற்றிப் பேசும் ஆக்க இலக்கியகாரன் தன்னைத் தான் அறியாதவனுகின்முன். தானே இயக்கமென்பவன் இயக்கத்தின் தன்மையை அறியாதவன். இத்தகைய போலித் தத்துவக் 'கடச்சல்' பயந்தோடிய பல்லியின் விடுபட்ட வால் ஆடும் மயக்க ஆட்டமேயாகும்.

## IV

அடுத்து, வெளியீடுகளின் பிரசுரவியல் ஆராயப்பட வேண்டியவொன்றுகும். நூற்பிரசுரத்தின் நிதிப்பகைப்புலம் முக்கியமானவொன்றுகும். அச்சிடப்பட்ட நியதியும் விநியோக முறைமையும், நிதிப்பகைப்புலத்தை எடுத்துக் காட்டுவன. ஆக்க இலக்கிய கர்த்தனின் ஆக்கம் வெளியிடப்பட்டு விற்பனையாகும்பொழுது, அவை தனி இலக்கியத் திறனைச் சமுதாய வளர்ச்சியுடன் இணைத்து விடுகின்றன. இலக்கிய இயக்கத்தின் மேற்கொண்ட வளர்ச்சியை இது தீர்மானிக்கும் பிரசுர இடம், பிரசுரப் பதிப்புக்கள் போன்ற

விபரங்கள் இலக்கிய வளர்ச்சியின் உண்மையான நெறியைக் காட்டி நிற்கும்.

மேற்கூறப்பட்ட விபரங்களைப் பூரணமாக எடுத்துக் கூறுவதற்குக் குறிப்பிட்ட வெளியீடுகள் போதிய ஆதாரங்களைத் தரமாட்டா. ஆனால் இத்துறையில் உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாகவும், நூல் வெளியீடுகளின் பின்னணியை ஓரளவு தெரிந்திருந்ததன் காரணமாகவும் பிறரிடம் கேட்டறிந்ததைக் கொண்டும் இவ் விபரங்களை எடுத்துக்கூற முடிகின்றது.

பிரசுர விபரங்களின் பின்னர் இறுதியாக இவ்வெளியீட்டு விபரங்கள் மூலம் நாம் உய்த்துணரக்கூடியதாகவுள்ள பொதுப்படையான உண்மைகள் சில எடுத்துக் கூறப்படும்.

## V

### புனைகதை

(அ) சிறு கதை (ஆ) நாவல்

**(அ) சிறுகதை**

1. 1948–70 இல் வெளியான நூல்களின் தொகை— 57
2. வெளியிடப்பட்ட காலப்பிரிவு 1948–55 — 01
   1956–65 — 40
   1966–70 — 16
3. பல ஆசிரியர்களின் தொகுப்பு நூல்களாக வெளிவந்தமை 08
4. சிறுகதைப் போட்டி வைத்து வெளியிடப்பட்டவை 02
5. ஒன்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளை வெளியிட்ட ஆசிரியர் தொகை 05
6. ஒரு நூல் மாத்திரம் வந்த ஆசிரியர் தொகை — 34
7. பிரசுர நிதி விபரம்

1. ஆசிரியர் மூலதனத்துடன்வெளியிடப்பட்டவை (நூலாசிரியர் முழுத் தொகையையோ அன்றேல் தொகையில் ஒரு பெரும் பகுதியையோ கொடுத்து அச்சிடுவித்தவை)—41

2. அச்சகத் தொழிலிலோ பிரசுரத் தொழிலிலோ தொழில் முறையாக ஈடுபட்டிருந்த ஆசிரியர் தொகை — 04

3. ஆசிரியரது அல்லாத பிறர் நிதிகொண்டு பிரசுரிக்கப்பட்டவை — 10

4. பிரசுரநிதி விபரம் தெரியாதவை — 02

8. இந்தியாவில்அச்சடிக்கப் பெற்றவை — 1I

9. மொழிப் பெயர்ப்புக்கள் — இல்லை

(ஆ) நாவல்

1. 1948-70இல் வெளியான நூல்களின் தொகை — 71

2. வெளியிடப்பட்ட காலப் பிரிவு 1948-55 — 10
 1956-65 — 35
 1966-70 — 26

3. ஒன்றுக்கு மேற்பட்ட நாவல்களை வெளியிட்ட ஆசிரியர் தொகை — 08

4. ஒரு நாவலே வெளியிட்ட ஆசிரியர் தொகை— 37

5. ஆசிரியர் பலர் எழுதிய தொடர் நாவல் — 01

6. பிரசுர நிதி விபரம்

1. ஆசிரியர் மூலதனத்துடன் அச்சிடுவிக்கப் பெற்றவை — 45

2. அச்சுத் தொழிலே அல்லது பிரசுரத் தொழிலைத் தொழில் முறையாகக் கொண்ட ஆசிரியர் தொகை — 10

3. ஆசிரியரல்லாத பிறருடைய மூலதனத்தைக் கொண்டு பிரசுரிக்கப்பட்டவை — 11
4. பிரசுர நிதி விபரம் தெரியாதவை — 05

7. இந்தியாவில் அச்சடிக்கப் பெற்றவை — 15
8. மொழி பெயர்ப்புக்கள் — 05

**புனைகதைத் துறைகள்பற்றிய குறிப்புகள்**

புள்ளி விபரத்திற் காணப்பட்டது போன்று இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்ட எழுத்தாளர் தொகை மிகமிகக் குறைவே. வெளியிடப்பட்ட புத்தகங்களும் பதிப்புக்கு ஆயிரம் பிரதிகளே அச்சிடப் பட்டன. இவற்றுள்ளும் முழுப் பிரதிகளும் விற்பனையாகின என்று சொல்லிவிட முடியாது.

அச்சிடப்பட்ட நூல்களின் விற்பனை விநியோகத்திலும் ஆசிரியரே நேரடியாகத் தலையிட வேண்டியிருந்ததெனலாம். பெரும்பாலான ஆசிரியர்கள் அச்சிடுவதற்கான பணத்தைத் தாமே முதலீடு செய்தமையால் இந்நிலைமை ஏற்பட்டது. ஒரேயொரு பிரசுர நிலையத்தைத் தவிர வேறெந்தப் பிரசுர நிலையமும் இத்தகைய புதிய ஆக்கங்களைப் பிரசுரிக்க முன் வந்ததெனக் கூற முடியாது. இலங்கையின் நிலைபாடுடைய பிரசுரகர்த்தாக்கள் புனை கதைகளை அச்சிட முன் வரவில்லை யென்றே கூறல் வேண்டும்.

பதிப்பு எண்ணிக்கை கொண்டும் விற்பனை விநியோகச் சீர்மையின்மை கொண்டும் பார்க்கும்பொழுது இப் புதிய நூல்களுக்கு வெகுசன வாசக வட்டம் இருக்கவில்லை என்பது துல்லியமாகப் புலப்படுகின்றது. தென்னிந்திய நாவல்களின் விற்பனையோடு ஒப்பிட்டு நோக்கும்பொழுது இவ்வுண்மை மேலும் நன்கு தெரிய வருகின்றது. இலங்கையில் தென்னிந்திய நாவல்கள், சிறு கதைத் தொகுதிகள் விற்பனை பற்றிய நம்பகமான புள்ளி விபரங்கள் இல்லையெனினும், இலங்கைத் தமிழ் புனைகதை வெளியீடுகள் தமிழகத்துப்

புனைகதைகள் போன்று இலங்கையில் விற்கப்படவில்லை என்பது எல்லோர்க்கும் தெரிந்த உண்மையேயாகும்.

ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளின் விற்பனைக் குறைவுக்கு ஒரு முக்கிய காரணம், அவை நாட்டின் கல்வியமைப்புடன் இணைக்கப்படாதிருக்கப்படுவதாகும். சிங்களத்தில், கல்விப் பொதுத் தராதர உயர்நிலைப் பரீட்சைக்கு வாழும் ஆசிரியர்களின் நூல்களே பாடப் புத்தகங்களாக உள்ளன. தமிழில் இந்நிலைமையில்லை. இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் பாட புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளமை குறைவு. நவீன இலக்கியவகைளான நாவல், சிறுகதைகளைப் பொறுத்த வரையில் பிரசித்தி பெற்ற தமிழக எழுத்தாளர்களது நூல்கள்கூட பாட புத்தகங்களாக வைக்கப்படவில்லை. பேச்சுத் தமிழ் பற்றித் தவருன எண்ணம் நிலவியதாலேயே இந்நூல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளரின் நூல்களின் விற்பனைக் குறைவுக்கு இவ்வெழுத்தாளரின் இலக்கிய நெறிச் செவ்வியும் ஒரு காரணமாகும். எமது எழுத்தாளர்களது இலக்கிய ஆக்கங்களில் இலக்கியப் பண்பு பெரிதும் போற்றப்படுவதால், அது பொழுது போக்குக்கான வாசக நூலாக அமைவதில்லை. சனரஞ்சகத் தென்னிந்திய எழுத்தாளரின் ஆக்கங்கள் பொழுதுபோக்கு அமிசங்கள் நிறைந்தனவாகவுள்ளன. எமது எழுத்தாளர்களின் இலக்கிய நெறிப்பட்ட செம்மை போற்றப்பட வேண்டியதே. ஆனல் இலங்கையிலுள்ள பொதுவான வாசகர்களிடத்து இவை பெரு மதிப்பைப் பெறுவதில்லை. விற்பனைக்குறைவுக்கு இதுவும் ஒரு காரணமாகும். இக்கண்ணேட்டங்கொண்டு பார்க்கும்பொழுது எமது இலக்கிய இயக்கமும், இலக்கிய ஆக்கங்களும் பொதுவில் எழுத்தாளர் சம்பந்தப்பட்டனவாகவும் காணப்படுகின்றனவே தவிரப் பொதுநிலை வாசகர்களைக் கவருவனவாக அமையவில்லை. இன்னெரு வகையிற் கூறினல், எமது இலக்கிய இயக்கங்களின் தாக்கம் இன்னும் எமது மக்களிடையே பூரணமாகச் சுவறவில்லை. தமிழகத்தின் மேன்மையிலுள்ள நம்பிக்கை எமது எழுத்தாளரின் ஆக்கத்

திறனிலுள்ள நம்பிக்கையின்மை (இது குடியேற்ற நாட்டாட்சி முறைமை எம்மிடையே தோற்றுவித்த சுய அவநம்பிக்கை காரணமாகத் தோன்றியதாகும்) ஆகியனவும் இதற்குக் காரணமாகும்.

புனைகதைத் துறையின் விற்பனை நிலைமையும் அதன் பின்னணியாக அமையும் வாசகப் பண்பையும் பார்த்த நாம், அடுத்து புனைகதைத் துறையில் ஏற்படும் சில இலக்கிய மாற்றங்களைக் கவனிப்போம்.

சிறுகதையில் 1948—55இல் ஒரு புத்தகம் மாத்திரமே வெளிவந்துள்ளதாக உள்ள கையேடுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் 1956—65–இல் இத்தொகை திடீரென 40 ஆக உயர்கின்றது. பின்னர் அடுத்துவரும் 5 வருட காலப்பிரிவில் வெளியிடப்பட்ட நூல்களின் தொகை 16 ஆகி விடுகின்றது. ஆனால் நாவல் துறையிலே 1948—55–இல் பத்து நூல்களும், 1956—65–இல் 35 நூல்களும் 1966—70–இல் 26 நூல்களும் வெளியாகின்றன.

இப்புள்ளி விபரம் 1956—65–க்காலப் பிரிவைச் சிறுகதையின் உன்னத காலமாகக் காட்டுகின்றது. அத்துடன் 1966–70க்கான புள்ளிவிபரங்கள் நாவல்களே வளர்ச்சியுறுகின்றன என்ற உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

இது புனைகதைத் துறையில் சிறுகதை, நாவல்களின் வளர்ச்சியின் சமூகவியலுண்மையை நிலைநிறுத்துவதாக அமைகின்றது.

சிறுகதை, நாவலின் வளர்ச்சி நெறிபற்றிய விளக்கம் ஒன்றினை இக் கட்டுரையாசிரியர் தமது 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

சமுதாய அமைப்பிலும் மனித உறவிலும் மாற்றங்கள் தோன்றி வளர்ந்து வரும் கால கட்டத்தில் வாழும் ஆக்க இலக்கிய கர்தாக்களின் உணர்வினைத் தாக்குவது புதிய சூழ்நிலையில் தோன்றும் மனித இன்னல் அல்லது புதிய

சூழ்நிலையால் ஏற்படும் நடைமுறையே. இதுவே சிறு கதையின் கருவாக அமையும். குறிப்பிட்ட ஒரு சம்ப வத்தில் (நிகழ்ச்சியில்) மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை.

சமுதாயத்தில் தோன்றி வளரும் அம் மாற்றங்களை நன்கு புலப்படப் புலப்பட அவற்றைப் பற்றிய அறிவு நன்கு தெளிவடையும். அப்பொழுது அம் மாற்றங்களை மனித வாழ்வுடன் தொடர்புறுத்திப் பார்க்கக் கூடிய அறிவுப் பின்னணி ஏற்படுகின்றது. ஏற்படவே சிறுகதையின் முக்கியத்துவம் குறையத் தொடங்கி நாவலின் முக்கியத் துவம் வளரத் தொடங்கும்.

ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் பற்றி குறிப்பிடும் பொழுது 'இலங்கை எழுத்தாளர் பலர், இலக்கிய நோக்கு டனும் தத்துவ நெறியுடனும் எழுதுபவராதலின் சிறுகதை யாசிரியர் நிலையிலிருந்து நாவலாசிரியர்களாக வளர்ச்சி யுறுவதைக் காணலாம்' என்று 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலில் வரும் குறிப்புக் கூறுகின்றது.

புனைகதைத் துறைபற்றிய இவ் வளர்ச்சி நெறி இப்புள்ளி விபரங்களால் ஊர்ஜிதப் படுத்தப்படுவதை நாம் இன்று துல்லியமாகக் காணக்கூடியதாக உள்ளது.

புனைகதை வளர்ச்சியின் இன்னொரு முக்கிய அம்சம் மொழிபெயர்ப்புக்கள் அதிகம் இல்லாமையாகும். இது தமிழகத்துப் புனைகதை வளர்ச்சிக்கும் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வளர்ச்சிக்கும் காணப்படும் முக்கிய வேறு பாடாகும். இங்கு பல மேனாட்டுப் புனைகதைகளும், பிற இந்திய மொழிகளிலுள்ள புனைகதைகளும் மொழி பெயர்க் கப்பட்டுள்ளன. இதற்கு முக்கிய காரணம் தமிழகத்தின் பிரசுரத்துறை முன்னேற்றமேயாகும். அரசாங்கமே, இந்திய மொழிகளில் வரும் புனைகதைகளின் மொழி

பெயர்ப்பை ஊக்கிவருகின்றது. தமிழகத்தில் வெளியாகும் மொழி பெயர்ப்பு நூல்களை ஈழத்தவரும் வாங்கி வாசிப்பதற்கான விநியோக வாய்ப்புக்கள் இருப்பதனால் ஓரளவுக்கு பிறமொழிக் கதைகளை அறிவதற்கான வசதியிருந்ததென்றே கூற வேண்டும். ஆனால் இலங்கையிலுள்ள பெரும்பான்மை மொழியான சிங்கள மொழியிலிருந்து ஒரேயொரு நூல்—மார்ட்டின் விக்கிரமசிங்காவின் 'கம்பெறலிய' மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சாகித்திய மண்டலத்தால் வெளியிடப்பட்ட இம் மொழிபெயர்ப்பு விற்பனை வெற்றியீட்டவில்லை. ஆயினும் சிங்களச் சிறுகதைகள் சஞ்சிகைகள் பலவற்றிலும் தினப்பத்திரிகைகளின் வாரப்பதிப்புக்களிலும் வெளியாகின.

சுய ஆக்கங்களையே விற்பனை செய்துகொள்ள முடியாத நிலையில், மொழிபெயர்ப்பிற் கவனஞ் செலுத்துவதென்பது முடியாதவொன்றேயாகும். ஆயினும், இக்காலப் பிரிவுகளிற் காணப்பட்ட இலக்கிய வளர்ச்சியின் ஒரு முக்கிய பண்பினை மொழிபெயர்ப்புக் குறைவு திறம்பட எடுத்துக் காட்டுகின்றது. இக் காலகட்டத்தில், ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் தமது 'வெளிப்பாட்டுத் திறனை' வெளிக்கொணருவதிலேயே அதிக கவனஞ் செலுத்தினர். தமது சூழலையையும் தமது பிரச்சினைகளையும், சித்திரித்துக் காட்டுவதும் அவற்றை மதிப்பார்ந்த இலக்கியப் பொருளாக நிறுவுவதுமே அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது.

உண்மையில் அதற்காக அவர்கள் ஒரு போராட்டத்தையே நடத்த வேண்டியிருந்தது. இதனால் ஈழத்து வாழ்க்கை பற்றிய புனைகதைகளே முக்கிய இடம் பெற்றன. இக்கால கட்டங்களிற் பிரதேசச் சூழ்நிலையைச் சித்தரிப்பதே இலக்கியக் கோட்பாடாகக் காணப்பட்டது.

மேலும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளரிடையே இரு சமூக நிலைப்பட்டோரைக் காணமுடியும். இச்சமூக நிலைபாடு 1953—65—இல் மிகத் துல்லியமாகத் தெரிந்தது. ஒரு பிரிவினர் ஆங்கில மூலங் கல்வி பெற்றுத் தமிழார்வத்

தினால் தமிழிலக்கியம் படைக்க முன் வந்தவர்கள்; இவர்கள் பிறமொழி இலக்கியங்களை ஆங்கிலத்திற் படித்தறியக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். மற்ற பிரிவினர் தமிழ் மொழிமூலம் கல்வி பெற்றவர்கள். உண்மையில் இவர்களே ஆக்க இலக்கியத்தின் வேகத்தை நிர்ணயித்தவர்களாவர். தாம் வாழ்ந்த, தமக்குப் பழக்கமான வாழ்க்கைச் சூழலின் சுகதுக்கங்களைச் சித்தரிக்க முனைந்தனர். அவர்களைப் பொறுத்தமட்டில், அதுவே முக்கிய இலக்கிய வேட்கையாக இருந்தது. தாம் வாழ்ந்த சமுதாயத்தின் (அதுவரை அறியப் படாத) அற்புத ஓவியர்களாக மாறினர். உண்மையில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைக்குத் தமிழக இலக்கிய அரங் கிலும், ஓரளவுக்கு உலக அரங்கிலும் (செக், இரசிய, ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் மூலம்) கணிப்பு நிலையைப் பெற்றுக் கொடுத்தோர் இவர்களே. தாம் கண்டறிந்த ஒரே வாழ்க்கை முறையை அம்மண்ணுக்கேயுரிய பிடிப்புடனும் (இலக்கிய) நாதத்துடனும் எடுத்துக் கூறினர். இது இலக்கிய உலகில் ஒரு புதுக்குரலை, அதுவரை கேட்கப்படாத குரலை வெளிக் கொணர்ந்தது. இத்தகைய சூழ்நிலையிலும் மொழி பெயர்ப்புக்கள் முக்கியத்துவம் பெறுவதில்லையென்பது இலக்கிய வரலாறு காட்டும் உண்மையாகும்.

புனைகதைத் துறை பற்றிய இன்னுமொரு குறிப்பு ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் சில இந்தியாவில் அச்சிடப் பட்டமையாகும். இலங்கையை விடத் தமிழகத்தில் அச்சுக் கூலி முதலியன குறைவெனினும், இந்தியப் பிரசுரத்தால் குறிப்பிட்ட ஆக்கம் பெருந்தொகையான இலக்கிய வாச கரை எட்டிற்று என்றே கூறவேண்டும். இந்தியாவில் அச் சடிக்கப்பெற்ற 15 நாவல்களில் 7 நாவல்கள் ஒருவரால் எழு தப்பட்டவையாகும். இது தனிப்பட்ட வாய்ப்பினை உணர்த்து வதாக அமையலாம். புனைகதைகள் பல உள்ளூரில் அச்சடிக் கப்பட, அச்சடிக்கப்பட அச்சடிப்புத் தரமும் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளமையை நாம் காணலாம். இலங்கை யிலுள்ள தமிழ் அச்சுவசதிகளை நோக்குமிடத்து இம் முன் னேற்றம் மிக்க ஊக்கம் தருவதாக அமைந்துள்ளது.

# VI

## கவிதை

| | | | |
|---|---|---|---|
| 1. | 1948-70 இல் வெளியான நூல்களின் தொகை | | ...98 |
| 2. | வெளியிடப்பட்ட காலப்பிரிவு | 1948-55 | ...09 |
| | | 1956-65 | ...38 |
| | | 1966-70 | ...43 |
| | விபரம் தரப்படாதவை | | ...19 |
| 3. | பல கவிஞர்களின் ஆக்கங்களைக் கொண்ட தொகுதிகளின் தொகை | | ...09 |
| 4. | ஒன்றுக்கு மேற்பட்ட கவிதை நூல்களை வெளியிட்ட கவிஞர் தொகை | | ...17 |
| 5. | பிரசுரநிதி விபரம் | | |
| | 1. ஆசிரியர் மூலதனத்துடன் அச்சிடுவிக்கப் பெற்றவை | | ...60 |
| | 2. பிறரால் அச்சிடுவிக்கப் பெற்றவை | | ...17 |
| | 3. நிதி விபரம் தெரியாதவை | | ...21 |
| 6. | ஒரு பதிப்புக்குமேல் வெளிவந்த கவிதை நூல் | | ...01 |
| 7. | இந்தியாவில் அச்சடிக்கப் பெற்றவை | | ...02 |
| 8. | மொழி பெயர்ப்புக்கள் | | ...07 |

கவிதை வெளியீடுகளை ஆராயும்பொழுது மிக முக்கியமான உண்மையொன்றினை மனத்திருத்துதலவசியமாகும். கவிதையை இலக்கிய வாகனமாகக் கொள்வோர் இருவகைப்படுவர்—(அ) கவிதையையே—திட்டவட்டமாகக் கூறுவதனால், செய்யுள் யாப்பே—உண்மையான இலக்கிய வடிவமெனக் கருதுவோர் (ஆ) கவிதையை உணர்ச்சி வெளிப்பாட்டு இலக்கிய வாகனமாகக் கொள்பவர். புதிய பரம்பரைக் கவிஞர்கள் இரண்டாவது பிரிவினுள்ளேயே வருவர். முதலாவது பிரிவினர் தம்மை மரபு நெறிவருவோர் என நினைத்துக் கொள்வர். இவர்கள் வசனத்திற் கூறப்படக் கூடியனவற்றையும் செய்யுள் யாப்பிலேயே கூறுவர். இக்காலப் பிரிவினுள் வரும் கவிதை (செய்யுள்) நூலொன்று வசனத்தில் ஏற்கனவேயுள்ள ஒரு கதையினைச் செய்யுள்

வடிவிலே தந்துள்ளது. கவிதை நூல்களின் தொகை புனைகதை நூல்களின் தொகையிலும் பார்க்க அதிகமாக இருப்பதற்கு இதுவொரு முக்கிய காரணமாகும். நூற்பட்டியல்களில் இடம்பெற்ற கவிதை நூல்களைவிடப் பிரதேச கோயில்களைப்பற்றிப் புலவர்கள் பாடிய பாக்கள் அநேகமுள்ளன. ஆனால் இவை இலக்கிய உந்துதல்கள் காரணமாக 'யாக்கப்' பெற்றவையன்று.

கவிதை நூல்களின் தொகை அதிகமாய்க் காணப் படினும் தற்காலக் கவிதை நூல்களுக்கான வாசக வட்டம் மிகச் சுருங்கியதென்பது அனுபவவுண்மையாகும்.

தற்காலத் தமிழ்க் கவிதைத் துறையில் ஈழம் முக்கிய இடம் வகிக்கின்றதுண்மையெனினும், 'கணையாழி', 'கசடதபற', 'வானம்பாடி' போன்ற தமிழகத்து சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டு வரும் "புது"க்கவிதைகள் ஈழத்தில் 1970க்குப் பின்னரே தொகுதிகளாக வெளியிடப் பெற்றன. இக்காலத்து ஈழத்துச் சஞ்சிகைகளைப் பார்க்கும் பொழுதும் இந் நவ இயக்கம் ஈழத்திற் பெருவெற்றியீட்ட வில்லை என்பது தெரியவரும். பொதுவில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் ஓசையடிப்படையைவிடுத்து சென்றுவிடவில்லை என்பது புலனாகின்றது.

கவிதைத்துறையில், இரண்டு நூல்கள் மாத்திரமே இந்தியாவில் அச்சிடப் பெற்றுள்ளன என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். கவிதைப் பிரசுரத் துறையில் புனைகதைப் பிரசுரத்துக்குரிய நிதியுதவிதானும் இல்லையென்பதும் நடைமுறை உண்மையாகும். இதனால் பல கவிஞர் தமது ஆக்கங்களைத் தாமே மூலதனமிட்டு வெளியிட வேண்டி யுள்ளது.

புனைகதை, நாடக இலக்கியங்களிற் காணப்படாத மதச் செல்வாக்கினைக் கவிதைத்துறையிற் காணலாம். சைவம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய மதங்களின் நன்னெறிக் கருத்துக்கள், இறை ஈடுபாடுணர்வுகள் ஆகியன. கவிதை நூல்கள் பலவற்றின் பொருளாக அமைந்துள்ளன.

# VII

## நாடகம்

1. 1948—70-இல் வெளியான நூல்களின் தொகை...49
2. வெளியிடப்பட்ட காலப்பிரிவு

1948–55—05
1956–65—21
1966–70—19
விபரம் தரப்படாதவை —04

3. பிரசுர நிதிவிபரம்
   1. ஆசிரியர் மூலதனத்துடன் வெளியிடப்பட்டவை...36
   2. பிறரால் பிரசுரிக்கப்பட்டவை ...13
4. போட்டிப் பரிசில்களாக வெளியிடப்பட்டவை ...03
5. போட்டிக்காக எழுதப்பெற்றுப் பின்னர் ஆசிரியரால் பிரசுரிக்கப் பட்டவை ...07
6. கிராமிய நாடகங்கள் (பதிப்புக்கள்) ...09
7. கவிதை நாடகங்கள் ...06
8. மொழிபெயர்ப்பு நாடகங்கள் ...03
9. இந்தியாவில் அச்சிடப்பெற்றது ...01
10. நாடக நூற்பொருள் பற்றிய விபரங்கள் (நவீன முறை நாடக நூல்கள் பற்றியது)
    1. வரலாற்று, ஐதிகக்கதை நாடகங்கள் ...30
    2. வர்த்தமானச் சமூகப் பிரச்சினைகள் பற்றிய நாடகங்கள் ...10

கவிதை, புனைகதைத் துறைகளிற் காணப்படாத புதிய பல அமிசங்கள் நாடகத் துறையிற் காணப்படுகின்றன.

நாடகம் எப்பொழுது இலக்கியமாகின்றது என்பது முக்கியமானவொரு பிரச்சினையாகும்.

தமிழில் நாடக இலக்கியம் (மேனாடுகளிற் கொள்ளப் படும் முறையில்) இல்லை என்பது நிதரிசமான உண்மை

யாகும். பரணி, குறவஞ்சி, குறம், பள்ளு முதலியன தோற்றத்தில் நாடக வடிவங்களே. அவை பின்னர் இலக்கியப் பிரபந்தங்களாக்கப்பட்டன. வசன நாடக நூல்கள் என்று சொல்லப்படுபவை உண்மையில் 18-ஆம் நூற்றுண்டுக்குப் பின்னரே தோன்றுகின்றன.

உலகின் சிறந்த நாடக இலக்கியங்களாகப் போற்றப்படும் நாடக நூல்கள் சமகால நாடக மேடைத் தேவைகளுக்காகவே எழுதப்பட்டன. ஈஸ்கிலஸ், சொஃபொக்கிளிஸ், மெனுன்டர் செனெக்கா, சேக்ஸ்பியர், மொலியே, செக்கோவ், ரெனசி வில்லியம்ஸ், பிறெஃற், இயனஸ்கேர, பின்றறர் முதலிய நாடகாசிரியர் யாவரும் நாடக மேடைத் தேவைகளுக்காகவே எழுதினர். ஆக்கங்களின் இலக்கியச் சிறப்புக் காரணமாக அவை இலக்கியமாக முகிழ்ந்தன; போற்றப்பட்டன. நாடகம் உயர் தர இலக்கியமாகவும் போற்றப்படும் சமுதாயங்களில் நாடகம் சமூக வரையறையற்ற கலையாகும். இந்தியாவில் இந் நிலைமையிருக்கவில்லை. (காளிதாசனின் நாடகங்கள் அரண்மனைத் தேவைகட்கான நாடகங்களே) இங்கு நாடகம் சமூக அந்தஸ்துக் குறைந்தவர்களாலேயே பயிலப்பட்டது. இவ்வுண்மை தமிழ் நாட்டுக்கும் பொருந்தும். இதன் காரணமாக ஆட்டத்திற் பயன்படுத்தப்பட்டவை இலக்கியமாக மிளிரவில்லை. இதனுலேயே 'பாடல்' இலக்கியமாக, 'விலக்கு' இலக்கியமாகாமலிருந்தது. அண்மைக்காலம் வரை நாடகத்தின் நிலை இதுவே. இன்றும் நாம் நாடகம் என்று சொல்வது ஆங்கில அறிவுடைய மத்தியதர வர்க்கத்தினரின் கலை முயற்சியையே. பாரம்பரிய நாடகங்களை (கூத்துக்களை) நாம் இன்றும் 'நாகரிகமற்றவை' என்ற கண்கொண்டே நோக்குகின்றோம்.

இப்பின்னணி காரணமாக நாடகங்கள் இலக்கியமாக ஏற்கப்படுவது குறைவே. ஆயினும் மேனுட்டுத் தாக்கம் காரணமாக இத்துறை வளர்ந்து வருகின்றது. மேடையேற்றப்பட முடியாத நாடகங்கள் இலக்கியப் போர்வையுடன் அளிக்கப்பட்டமை மாற்ற நிலைமையை உணர்த்தி நிற்கின்றன. மற்றும் வளரும் நாடகமேடைத் தேவைகளுக்கு

நாடகங்கள் எழுதப்படும் பொழுதுதான் உண்மையான நாடக இலக்கியம் தோன்றும். ஈழத்திலும் வெளியான நாடகங்கள் பல இலக்கியமாகக் கொள்ளப்பெற்று எழுதப் பட்டவையே. தமிழில் நாடக எழுத்துப் பிரதி—என்ற கோட்பாடு இன்னும் அந்நியமான வொன்ருகவேயுள்ளது. இந்நிலைமை மாறுதல் வேண்டும். மாற்றுவதற்கான சூழ்நிலையை அண்ணுத்துரை, கருணுநிதி போன்ருேரின் நாடகங்கள் ஏற்படுத்தியுள்ளன. அவை அரசியல் இயக்கத் தோடு சம்பந்தப்பட்டபடியினுலேயே இம்மாற்றங்கள் ஏற்பட்டன. (திரைப்பட 'வசனங்கள்' நூல்களாக வெளி யிடப்படத் தொடங்கியதும் இதனுலேயே.)

மேடைக்கான நாடகங்கள் எழுதப்படுவதைப் போட்டி முறை மூலம் இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழு ஊக்கப்படுத்திற்று. பரிசில் பெற்ற நாடகங்களை அது வெளி யிட்டும் உதவிற்று.

ஈழத்து நாடக நூல்களைப் பொருள்கொண்டு ஆராயும் பொழுது வரலாற்று நாடகங்களே அதிகமாக இருப்பதைக் காணலாம். ஐதிகக் கதை கூறும் நாடகங்களாக்கப் பட்டுள்ளன. 1956-க்குப் பின் இலங்கைத் தமிழரிடையே தோன்றிய இன உணர்வும், தி. மு. க.வின் நாடகத்துறைச் செல்வாக்கும் இதற்குக் காரணங்களாகும். புனைகதைகளிலும் பார்க்க, நாடகம் மூலம் மொழியபிமானத்தை எடுத் துணர்த்துவது சுலபமாகும். கவிதைக்கும் இக்கூற்றுப் பொருந்தும்.

சமூகப் பிரச்சனைகளைப் பொருளாகக் கொண்ட நாடகங் களின் தொகை மிக மிகக் குறைவே. பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் நாடகங்கள் இத்துறையில் முன்னுேடியாக விளங்குகின்றன.

நாடகப் பிரிவில் மொழி பெயர்ப்புக்கள் மிக மிகக் குறைவாகவேயுள்ளன. நவீன உலக நாடக அரங்கில் முக்கிய இடம் வகிக்கும் நாடகாசிரியர்களது ஆக்கங்கள் ஒன்ருவது தமிழில் வெளியிடப்படவில்லை. கவிதை நாடக நூல்கள் ஆறு வெளியாகியுள்ளன. தமிழகத்தை விட இலங்கையில் கவிதை

நாடகங்கள் மேடையேற்றத்தில் வெற்றியீட்டியுள்ளன என்பது திருப்தியளிக்கும் உண்மையாகும்.

ஆனல் ஓரங்க நாடகங்கள் அதிகமாக நூல்வடிவில் வெளிவரவில்லையென்றே கூறவேண்டும். இதுவரையில் ஓரங்க நாடகம் எனக் கூறப்படத்தக்க நாடகம் ஒன்றே அச்சிடப் பட்டுள்ளதெனலாம்.

ஈழத்துத் தமிழ் நாடகத் துறையின் அண்மைக்காலச் சாதனைகளில் ஒன்று கிராமிய நாடக மறுமலர்ச்சியாகும். இத்துறையில் பேராசிரியர் வித்தியானந்தனின் சேவை மதிப்பிடற்கரியவொன்ருகும். கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு மூலமும் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் மூலமும் அவர் ஆற்றிய தொண்டின் காரணமாகவே இம்மாற்றம் ஏற்பட்டதெனலாம். கிராமிய நாடகப் பதிப்புக்கள் வெளிவந்த கால விபரம் இவ்வுண்மையை விளக்கும்.

1948—55 —00

1956—65 —04

1966—70 —05

கலாநிதி வித்தியானந்தன் 1956 முதல் தமிழ் நாடகக் குழுவின் தலைவராக இருந்துள்ளார். 1967-க்குப் பின்னர் 70வரையில் அவர் அப் பதவியிலிருக்கவில்லை. அக்காலத்தில் கிராமிய நாடக முன்னேற்றம் தடைப்பட்டது.

உள்ள புள்ளி விபரங்களின்படி ஒரேயொரு நாடகநூலே தமிழகத்தில் அச்சடிக்கப் பெற்றுள்ளது. அதுவும் சாகுந்தலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

நாடகத்துறையில் சமூக முற்போக்குக் கருத்துக்கள் முக்கிய இடம் பெறத் தொடங்கியமை அண்மையிலேயேயாகும். முருகையன் எழுதிய கடூழியம், சுந்தரலிங்கத்தின் விழிப்பு ஆகியன இத்துறையில் முதற்படிகளாக அமைந்துள்ளன. ஆனல் இவை இன்னும் அச்சுப் பதிவு செய்யப்படவில்லை. பிரதேச வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கவிதை நாடகங்களும், வசன நாடகங்களும் ஒரு சிலவே அச்சேறி உள்ளன.

## VIII

1940—70இல் வந்துள்ள ஆக்க இலக்கிய நூல்கள் ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் அறிவு நிலைப்பட்ட தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. கோட்பாடு நெறிகளைக் கை விடாது, ஆனால் சுருங்கிய அறிவு நிலை வட்டத்தை விட்டு இலக்கிய வளர்ச்சி மேற்செல்லின் ஈழத்து இலக்கிய வெளியீடுகளுக்கான விற்பனை அதிகரிக்கும்.

ஈழத்திலக்கிய வெளியீட்டு வளர்ச்சியை நலியச் செய்த முக்கியமான அமிசம், தமிழகத்திலிருந்து வரும் இலக்கியங்களின் 'போட்டி'யாகும். பிரசுர வசதி, சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் தமிழகம் ஈழத்தை விட எவ்வளவோ முன்னேறியுள்ளது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளன் இப் போட்டியை எதிர்த்தே செயற்பட வேண்டியுள்ளது. சிங்கள எழுத்தாளர்களுக்கு இப்பிரச்சினையில்லையெனலாம். இத் தகைய போட்டிக்கிடையேயும் தமது இலக்கியத்தரத்தையும், திறனையும் நிலைநிறுத்தியுள்ள ஈழத்துத் தமிழ் எழுத்தாளரின் சாதனை போற்றப்படவேண்டியதாகும்.

நாம் இப்பொழுது பார்த்துள்ள இம் முழுக்காலப் பகுதியையும் வருங்காலத்திற்கு பின்னேக்காகப் பார்க்கும் இலக்கிய வரலாற்று மாணவன், 1948—1955 ஒன்றை ஒரு பிரிவாகவும், 1956-க்குப் பின் வரும் பிரிவை இன்னொரு பிரிவாகவும் (அதன் முடிவு இன்னும் ஏற்பட்டுவிடவில்லை) கொள்ளலாம். ஆனல் இவ்வாறு நுண்ணிதாகச் சம காலத்திலேயே நாம் இலக்கிய வளர்ச்சி நெறிகளைக் கூறுபடுத்தப் பார்ப்பது எமது வளர்ச்சியினை நாம் விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் உதவும். சமகால சரித்திரச் சூழலை ஆராய்ந்து அந்நிலைக்கும் தேவைக்குமியையவே ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் தமது முன்னேற்றப் பாதையை வளர்த்துள்ளனர் என்பது இவ் இருபத்துமூன்று வருடகால இலக்கிய வரலாறு காட்டும் உண்மையாகும். இப்பண்பு 1947-க்குப் பின் அண்மைக் காலம் வரை தமிழகத்தில் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

இம் முழுக்காலப் பிரிவின் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது ஈழத்துத் தமிழ் ஆக்க இலக்கியமானது, இலக்கியத்தைச் சமுதாய நல்வேட்கைக்கான கோட்பாடாக எண்ணித் துணிந்து செயலாற்றுபவர்களாலேயே பெரிதும் வளர்க்கப்பட்டுள்ளதென்பதுண்மையாகும். இதன் காரண மாக இலக்கிய வளர்ச்சி பற்றிய முன்னேற்றக் கருத்துத் தெரிவு எழுத்தாளனிடம் எப்பொழுதும் (அவன் எந்தக் கட்சியினனுஞ்சரி) காணப்படுகிறது. இத்தகைய சமுதாய உணர்வு தமிழகத்து எழுத்தாளர் பலரிடத்து இல்லை என்பது பகிரங்க ரகசியமாகும். இலக்கியத்தை வெறும் பொழுது போக்கமிசமாகக் கொள்வதை இத்தகைய நோக்குத் தடை சொல்கின்றது. இலக்கிய வளர்ச்சியை இது எவ்வாறு தடுக்கின்றது என்பதை முன்னரே பார்த்தோம்.

இலக்கியமென்பது எழுத்தாளனின் சுய வெளிப்பாட்டுத் திறனுக்கு முக்கியத்துவம் வழங்குவது என்றகோட்பாட்டின் வன்மையான தொழிற்பாடு காரணமாக, ஆக்க இலக்கியத் துறையில் முன்னேற்றமடைந்தவை புனைகதை, கவிதை ஆகியனவே. ஆக்க இலக்கியத் துறையினுள் அடங்க வேண்டிய (ஆனால் சுயதிறன் வெளிப்பாட்டுக்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் கொடுக்காது, கருத்துத் தெளிவு, மொழித் திறன், எடுத்துரைக்கும் ஆற்றல் ஆகிய பலதிறப்பட்ட ஆக்கத் தொழிற்பாடுகளால் மாத்திரமே சிறக்கக்கூடியதான) குழந்தை இலக்கியம் நன்கு வளர்க்கப்படாமையை இங்கு குறிப்பிடல் வேண்டும். வளர்ந்த வாசகர்களிடையே நாம் எதிர்பார்க்கும் மண் வாசனை வேட்கை, தேசிய உணர்வு முதலியனவற்றைக் குழந்தைகள் நிலையில் உண்டாக்குதல் அவசியமாகும். அதற்கான ஆக்கத்திறனிற் பூரண கவனஞ் செலுத்தப்பட வேண்டுவதசியமாகும்.

ஆக்க இலக்கியம் கல்வியமைப்புடன் நன்கு பிணைக்கப் பட வேண்டுவதன் அவசியத்தை இத்துறையும் உணர்த்து கின்றது.

ஆக்க இலக்கியமென்பது நாட்டு வளர்ச்சியின் உந்து சக்தி; வரலாற்றின் கண்ணாடி.



★

# 4

# 1970க்குப் பின் ஈழத்திலக்கியத்தில் தோன்றிய முக்கிய வளர்ச்சி நெறிகள்

முந்திய அத்தியாயங்களாக அமைந்த இரு கட்டுரைகளும் இலங்கையில் தமிழ் இலக்கியமானது தேசிய இலக்கியமாக முகிழ்த்தெழுந்த முறையினையும் அம் முகிழ்ப்புக் காரணமாகவும், அம் முகிழ்ப்பில் பரிணமிப்பாகவும் அமைந்த பண்புகளையும் எடுத்துக் கூறியுள்ளன. 1970ம் தசாப்தத்தின் இறுதியை நெருங்கிக்கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில், 1970க்குப் பின்னர் தோன்றியுள்ள முக்கிய வளர்ச்சி நெறிகளை இந்நூலிற் சுட்டிக் காட்டுவது அத்தியாவசியமாகின்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக 1948—70க் காலகட்டத்திற்குச் செய்யப்பட்டது போன்ற, சான்றுதார வழி நிறுவப்பெற்ற ஆழமான ஆய்வு,

1970க்குப் பின்வரும் காலகட்டம் பற்றிச் செய்யப்படவில்லை. ஆயினும் இக்கால கட்டத்திலே மேற்கிளம்பிய முக்கிய இலக்கிய வளர்ச்சி நெறி அமிசங்களைப் பருவரைவாக எடுத்துக் கூறலாம். வர்த்தமான நிகழ்வுகளுக்கு அண்மித்த தாகவுள்ள வளர்ச்சி நெறிகளை அவ்வாறு குறிப்பிடுவதுதான் ஓரளவுக்குப் பொருத்தமான முறையுமாகும்.

1970க்குப்பின் ஈழத்திலக்கிய வளர்ச்சி நெறியில் முதலாவதாக எடுத்துக் கூறப்பட வேண்டுவது, ஈழத்துத் தேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் ஸ்திரப்பாட்டுக்கு அரசாங்க மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையே ஆகும். 1970-இல் பதவியேற்ற அரசாங்கத் தில் இடதுசாரிக் கட்சிகளும் (பொதுவுடமைக் கட்சியாரும் சமசமாஜக் கட்சியினரும்) மந்திரி சபை மட்டத்திற் கூட்டாட்சி நடத்தியமையால், ஈழத்துத்தமிழ் இலக்கியத்தின் தேசியப் பரிணமத்திற்காக முன்னின்றுழைத்த முற்போக்கு இலக்கிய இயக்கத்தினர் இப்பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்குவதில் இடம் பெற்றனர்.

ஈழத்தின் தனித்துவமான வளர்ச்சிக்கும், வியாப்திக்கும் ஊறுகத் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் வர்த்தகமயப் படுத்தப்பட்ட சஞ்சிகைகளின் செல்வாக்குத் தொழிற்பட்டதென்பது பரவலாக நிலவிய கருத்தாகும். இலங்கையை பன்னெடுங்காலமாகத் தமது இலக்கியச் சந்தையாக மாத்திரம் பயன்படுத்தி, இலங்கையின் இலக்கிய ஆக்கங்களுக்கு எவ்வித ஊக்கமும் கொடுக்காதிருந்து வந்த தமிழகத்து வணிகச் சஞ்சிகைகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது. இதன் பயனாக ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் தினமணிக் கதிர் ஆகிய சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் வாரத்துக்கு நாலாயிரம் பிரதிகளும், கலைமகள், தீபம், தாமரை, ஜனசக்தி, மாத ஜோதிடம், அம்புலிமாமா, ஆராய்ச்சி முதலியன ஒவ்வொன்றும் இரண்டாயிரம் பிரதிகளும் இறக்குமதி செய்யப்படுவதற்கு இடமளிக்கப்பட்டன. திரைப் படங்கள் பற்றிய சஞ்சிகைகள் தடை செய்யப்பட்டன.

இரண்டு மூன்று வருடத்திற்கொருமுறை இப்பட்டியல் மீண்டும் பரிசீலிக்கப் பெற்று, புதியன சேர்க்கப்படுவதற்கும் இடம் வகுக்கப் பெற்றிருந்தது.

இவ்விறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பெற்ற அதே வேளையில், இலங்கை அரசாங்கம் தனது அந்நியச் செலாவணித் தொகைப் பிரச்னையைச் சமாளித்துக் கொள்வதற்காக இறக்குமதிகளைக் குறைத்தது. இப்பொழுதுக் குறைப்பினுட் புத்தகங்களும் இடம் பெற்றன. ஆங்கிலப் புத்தகங்களும் இக் குறைப்பினுற் பாதிக்கப் பெற்றன. ஆனுல் ஆங்கிலச் சஞ்சிகைகளின் இறக்குமதியில் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப் பெறவில்லை. தமிழைப் பொறுத்த வரையில், தேசிய இலக்கியத் தேவைகள் நிமித்தமாகவே அந் நடவடிக்கை எடுக்கப்பட்டதெனக் கூறப்பட்டது. இது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்த இனநிலைப்பட்ட கட்சிகளினுலும் அக் கட்சிகளைச் சார்ந்த இலக்கியவாதிகளினுலும் வன்மையாகக் கண்டிக்கப் பெற்றது. உலகப் பொதுவான தமிழின உணர்வை இலங்கையில் அடக்குவதற்குச் செய்த முயற்சியாகவே இது அவர்களால் எடுத்துக் கூறப்பெற்றது. அத்துடன், தமிழகத்திலிருந்து அத்தகைய சஞ்சிகைகளை அதுகால வரை கட்டுப்பாடெதுவுமின்றி ஏற்றுமதி செய்து, அதன் பயனுக அதிக இலாபம் பெற்ற நிறுவனங்களாலும் இது கண்டிக்கப் பெற்றது.

இக்கட்டுப்பாட்டின் சாதக, பாதக அமிசங்கள் எவ்வாறு எடுத்துக் கூறப்பட்டனவென்பதை விடுத்து, இக் கட்டுப்பாடு ஏற்படுத்திய பன்முகப்பட்ட தாக்கங்களை அறிதல் அவசியமாகின்றது.

அவற்றுள் முக்கியமாக எடுத்துக் கூறப்படத்தக்கது இலங்கையிற் பிரசுரிக்கப் பெற்ற சஞ்சிகைகள் பிரசுர நிலை பேறுடைமை பெற்றதேயாகும். இதனுல் "மல்லிகை" எனும் இலக்கிய சஞ்சிகையும், "சிரித்திரன்" எனும் சஞ்சிகையும் தத்தம் வாசக வட்டத்தைப் பெருக்கிக் கொண்டது மாத்திரமல்லாது, நிலையான பிரசுரங்களாகவும் வெளிவரத்

தொடங்கின. திரைப்படத் துறையினைப் பொறுத்த வரையில் "கீதா" எனும் புதிய தமிழ்ச் சஞ்சிகையொன்று இலங்கையிற் பிரசுரிக்கப்படலாயிற்று. இவற்றைவிட சிறுவர் இலக்கியச் சஞ்சிகைகளும் எழத்தொடங்கின. அந்நியச் செலாவணிப் பிரச்சினையும் சஞ்சிகை இறக்குமதி கட்டுப்பாடும் ஒருங்கியங்கிவந்த காரணத்தினல் தளர்வுற்றிருந்த தமிழ்ப் புத்தக இறக்குமதிக்கு ஈடு செய்யும் வகையில், இலங்கையில் புதிய வர்த்தக அமைப்புடைய ஒரு பிரசுர நிறுவனம் இலங்கையின் முக்கிய தமிழ்த் தினசரிகளுள் ஒன்முன "வீரகேசரி"யினை வெளியிடும் நிறுவனத்தினரால் "வீரகேசரிப் பிரசுரங்கள்" என்ற பெயரிலே தொடங்கப் பெற்றது.

வீரகேசரிப் பிரசுர நிறுவனத்தின் தோற்ற முக்கியத்துவம் பற்றி ஆராய்வதற்கு முன்னர், இலங்கையிலிருந்து தமிழ் இலக்கியங்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசாங்கச் செலாவணி விதிகள் தடையாயிருந்தமையையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். தமிழ்நாட்டு வாசகர் ஒருவர் இலங்கைத் தமிழ் சஞ்சிகைகளுக்குச் சந்தாப் பணம் கட்டுவதற்குக்கூட அனுமதி வழங்கப்படுதல் இயலாதென எடுத்துக் கூறப்பட்டது. இக்காரணமும், புத்தக இறக்குமதி துறையில் ஏற்கனவே நிலவிய ஒவ்வா நெறிகளும் நிலைமையைச் சிக்கற்படுத்தவே முதலாளித்துவச் சந்தை விதிகளின் இயல்பான தொழிற்பாட்டிற்கியைய வீரகேசரிப் பிரசுர நிறுவனம் தோன்றிற்று.

வீரகேசரிப் பிரசுர நிறுவன அமைப்பு ஈழத்தின் இலக்கியச் செல்நெறியைப் பெரிதும் மாற்றிற்று எனலாம். இலங்கைத் தமிழ்ப் புத்தகத் துறையினைப் பொறுத்தவரையில், இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக நிலைபேறுடைய வர்த்தக நிறுவனமொன்று, அதுவும் நாளிதழொன்றினை நடத்திவரும் நிறுவனமொன்று, பாடப் புத்தகங்களல்லாத இலக்கியப் புத்தகங்களை வெளியிடத் தொடங்கிற்று. நாளிதழுக்கிருந்த விநியோக அமைப்பு

மூலமும், நாளிதழ் வழங்கிய விளம்பர வாய்ப்பு மூலமும் இந்நிறுவனம் வெகு சீக்கிரத்தில் ஸ்திரமான நிறுவன அமைப்பாக இயங்கத் தொடங்கிற்று. வீரகேசரிப் பிரசுரம் என்ற இலச்சினையுடன் புனைகதைகள், பயண நூல்கள் முதலியன வற்றையும், ஜனமித்திரன் என்ற இலச்சினையுடன் (மித்திரன் என்பது வீரகேசரி நிறுவனத்தின் நாளாந்த மாலையிதழாகும்) இலக்கியக் கணிப்பற்ற பரபரப்பூட்டும் விடயங்கள், வாழ்க்கை வரலாறுகள் பற்றிய நூல்களையும் சில நாவல்களையும் வெளியிடத் தொடங்கிற்று. 1977இல் நான் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி நான்கு வருட காலத்துள் இவ்விரு பிரசுரங்களின் வழியாக வெளிவந்த 65 நூல்கள் ஏறத்தாழ ஒரு லட்சத்துப் பதினாறாயிரம் வாசகர்களால் வாசிக்கப்பெற்றன என்பது தெரிய வந்தது.

இலக்கிய பிரசுரமான வீரகேசரிப் பிரசுர வரிசையில் ஈழத்தின் ஆக்க இலக்கிய கர்த்தர்கள், ஏற்கனவே இலக்கிய மதிப்புப் பெற்றிருந்த டானியல், கதிர்காமநாதன், சொக்கன், கனக செந்திநாதன், அருள் சுப்பிரமணியம், செங்கை ஆழியான் போன்றோரது ஆக்கங்கள் இடம் பெற்றன.

வீரகேசரிப் பிரசுர நிறுவனத்தின் தோற்றம் இலங்கையின் தமிழிலக்கிய வரலாற்றில், முதல் தடவையாக வர்த்தக நோக்குடன் இயங்கும் பிரசுர நிறுவனத்தினை எடுத்துக் காட்டுகின்றது. வெகுசன ருசிக்கேற்ப ஆக்கங்கள் அமைய வேண்டுமென ஆசிரியர்கள் பணிக்கப் பெற்றனர். பணிப்புப் பெறாத ஆசிரியர்களும் அப் பண்புக்கேற்ற வகையிலேயே தமது ஆக்க இலக்கியங்களை அமைக்கத் தொடங்கினர். எனினும், வீரகேசரிப் பிரசுர நிறுவனம் வாயிலாக 1970 க்குப் பின்னர் இலங்கையில் எழுந்த முக்கிய நாவல்களுள் பல வெளி வந்தன எனும் உண்மை மறுக்கப்பட முடியாததாகும். செங்கையாழியானின் "வாடைக் காற்று" பாலமனோகரனின் "நிலக்கிளி" போன்றவை உதாரணமாகும்.

வீரகேசரிப் பிரசுர நிறுவனம் பிற பிரசுர கர்த்தர்களின் நூல்களுக்கும் ஒரோ வேளைகளில் விநியோக உரிமையையும் பெற்றிருந்தது. அருள் சுப்பிரமணியத்தின் "அவர்களுக்கு வயது வந்து விட்டது" எனும் நாவலை இதற்கு உதாரண மாகக் கூறலாம்.

நூலாசிரியனே பிரசுரகர்த்தனாகவும் விநியோகஸ்த னாகவும் இயங்கி வந்த ஈழத்து ஆக்க இலக்கியப் பிரசுரத் துறையில், வீரகேசரி நிறுவனம் பெருமாற்றத்தை ஏற் படுத்தி ஆசிரியராகவும், பிரசுரகர்த்தர்களாகவும் இயங்கும் தனி நபர் பிரசுர முயற்சிகளுக்கு வாய்ப்பளிக்காது தடுத் துள்ளதெனலாம்.

ஆனால் அதே வேளையில் இந்நிறுவனத்தின் வெற்றிச் சாதனைகள் பிறரை இத்துறையில் நிறுவன ரீதியாக இயங்க ஊக்கியுள்ளது. வரதர் வெளியீடு, மாணிக்கம் பிரசுரம் ஆகியனவற்றை உதாரணமாகக் கூறலாம். தனிநபர் பிர சுரகர்த்தர்களின் மீதான இவ்வணிக நிலைத் தாக்கம் முற் போக்குப் பொருள் அமைதியுடைய நூற்பிரசுரத்துக்குத் தடையாக இருத்தல் கூடாதெனும்நோக்கத்துடன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உபநிறுவனமான எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப் பெற்றது.

இவ்வாறாக இலக்கிய பிரசுர முறைமை பெரிதும் மாறி யுள்ளமை, 1970 க்குப் பின் காணப்படும் இலக்கியப் பண்பு களில் ஒன்றாகும். அடுத்து, முக்கிய இடம் பெறுவது சிங்கள தமிழ் எழுத்தாளர் கூட்டுறவும் இலக்கியப் பரிவர்த்தனையு மாகும். 1970 முதல் 77 வரை ஆட்சியிலிருந்த அரசாங் கத்தில் இடதுசாரிக் கட்சிகள் 1975 வரை கணிசமான வலு வுடன் இயங்கி வந்தமையால் இக்கூட்டுறவு வளர வாய்ப் புக்கள் ஏற்பட்டன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாட்டை வற்புறுத்தியதன் காரண

மாகவும், பொதுவுடமைக் கட்சி சார்புடைய மக்கள் எழுத்தாளர் முன்னணி சிங்கள-தமிழ் எழுத்தாளர்களை ஒரே நிறுவனத்தில் அங்கம் வகிக்க ஊக்கியமையாலும் தேசிய புத்தக அபிவிருத்திச் சபை, சாகித்திய மண்டலம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் சிங்கள-தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் ஓரளவு சம கவனம் செலுத்தியமையாலும் இக் கூட்டுறவு பலப்படுவதற்கு வாய்ப்புக்கள் பல தோன்றின. இதன் காரணமாகச் சிங்கள சிறுகதைகள் தமிழிலும் தமிழ்ச் சிறுகதைகள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. இத்துறையில் கனகரத்தினம், சிவா சுப்பிரமணியம், நாணயக்கார வஜ்ரசேன ஆகியோரது பணி கணிசமானதாகும். ஆயினும், சிங்கள இலக்கியங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அளவுக்குத் தமிழ் இலக்கியங்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட வில்லையெனலாம்.

நாடகத்துறையில் இக் கூட்டுறவு நன்கு துலங்கிற்றெனலாம். இலங்கைக் கலாசாரப் பேரவையினுல் தனித் தனியே நடாத்தப் பெற்று வந்த வருடாந்த நாடக விழா, 1977 இல் முதல் தடவையாக இரு நாடகத் துறைகளையும் இணைந்த தேசிய நாடக விழாவாகக் கொண்டாடப் பெற்றது.

தேசிய இணைப்புச் சக்திகள், இடதுசாரி இயக்கம் காரணமாக ஒன்றிணைந்து தொழிற்பட்ட இதே காலப் பிரிவில் தமிழின் தனித்துவத்தை வற்புறுத்தும் இலக்கிய வாதிகளின் இலக்கிய இயக்கங்களும் முனைப்புடன் இயங்கி வந்தன. "சுடர்" என்னும் அவர்களது சஞ்சிகை இவ்வியக்கத்தின் நிலைக்களனுக விளங்கிற்று.

மேலும் இக் காலகட்டத்தில் மார்க்ஸீய நெறி சார்ந்த முற்போக்கணியினருடன் சாராமலும், அதே வேளையில் இனவாதச் சார்புடையோருடன் சாராமலும் இயங்கிய ஒரு தனிநிலை இயக்கத்தினரும் வலிமை பெற்றனர்.

"மார்க்ஸீயத்துக்கு அப்பாலான" விமர்சனத்திலும் ஆக்க நெறிகளிலும் ஈடுபட்டு வந்த இவர்களுக்கு மு. தளைய சிங்கம் வழிகாட்டியாக விளங்கினர். அவரின் மறைவின் பின்னர் இவர்கள் மார்க்ஸீய எதிர்ப்பு நிலைப்பட்ட அழகியல் வாதிகளாக மாறினர் எனலாம். இக்குழுவினரின் தோற்றம் ஈழத்து இலக்கிய விமரிசனப் போக்கில் ஒரு முக்கிய மாற்றத்தையுண்டாக்கிற்றெனலாம்.

இலக்கியச் சூழல் பற்றிய இக்கால கட்டப் பண்புகளில் முக்கியமானதாக அமைவது, சஞ்சிகை இறக்குமதிக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்ட பொழுது எடுத்துக் கூறப்பட்ட தமிழக இலக்கியத் தொடர்புச் சிதைவு பற்றிய பயம் பொய்யாக்கப் பட்டமையாகும். அதற்கு முற்றிலும் மாறாக, இக்கால கட்டத்தில் தமிழகத்து இலக்கிய இயக்கங்களுடன் ஈழத்து இலக்கியகர்த்தர்கள் பூரணமான தொடர்பு கொண்டிருந்தனர். ஈழத்து முற்போக்குவாதி களுக்கும் தமிழகத்து முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு மிடையே நிலவி வந்த ஒற்றுமையையும், கருத்துப் பரிவர்த்தனையையும், அதே போன்று மார்க்ஸீய எதிர்ப் பணியினரான தமிழகத்து இலக்கியவாதிகளுக்கும் ஈழத்து இலக்கியவாதிகள் சிலருக்குமிருந்த தொடர்பையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். இக்கூட்டுறவின் இலக்கிய முனைப்பினை புதுக்கவிதை இயக்கத்தின் முனைப்பிலும் இலக்கிய விமரிசன முனைப்பிலும் காணக் கூடியதாக இருந்தது. 1970 க்கு முன்னர் காணப்பட்டது போன்று, இக்கால கட்டத்திலும் ஈழத்து இலக்கியகர்த்தர்களின் பிரசுரங்கள், சிறப்பாக இலக்கிய விமரிசனப் பிரசுரங்கள் தமிழ் நாட்டிலிருந்து வெளியிடப் பெற்றன.

1970 க்கு பின்னர் தோன்றி முகிழ்ந்த ஈழத்து இலக்கியச் செல் நெறிகளைப் பொறுத்தவரையில் மிக முக்கிய இடம் பெறுவது புதுக்கவிதை இயக்கம் ஈழத்திற் பெற்ற வேகமான

வளர்ச்சியே. ஈழவாணன், கனகராசன் ஆகியோரது புதுக் கவிதைத் தொகுதிகள் வெளியாயின. புதுக்கவிதையின் இலக்கிய ஏற்புடைமை பற்றி மு. பொன்னம்பலம், முருகையன், கைலாசபதி, எம். சிறீபதி, யோகராசா, கா. சிவத்தம்பி ஆகியோர் விமரிசனக் கட்டுரைகளை எழுதினர். புதுக்கவிதையின் வரலாறு பற்றி சிறீபதியும் யோகராசாவும் செய்த ஆய்வுகள் முக்கியமானவையாகும். 'தீபத்'தில் வல்லிக்கண்ணனது புதுக்கவிதை பற்றிய கட்டுரைத் தொடர் வெளிவருமுன்னரே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவென்பது கவனிக்கப் படவேண்டிய ஒன்றாகும்.

புதுக்கவிதை வியாப்தியினை அடுத்து முக்கியத்துவம் பெறுவது, மேலே குறிப்பிடப் பெற்ற "மார்க்ஸீயத்துக்கு அப்பாலான" மெய்யுட் பாட்டு விமரிசன முறைமை ஆகும். மெய்யுள் என்பது மனிதனது ஆத்ம மலர்ச்சியை எடுத்துக் காட்டும் இலக்கிய வடிவமாக பொருளாக முகிழ்க்கும் நவ இலக்கிய அம்சம் என இக்குழுவினர் வாதிட்டனர். மு. தளையசிங்கத்தினால் தொடங்கி வைக்கப் பெற்ற இவ்வியக்கம் அவர் மறைவின் பின்னர் ஓரளவு வலுவிழந்த தெனலாம்.

இதே வேளையில் பொதுப்படையான முற்போக்கு வாதத்துக்கும் மேற்சென்று பிண்டப் பிரமாணமான மார்க்ஸீய விமரிசனக் கோட்பாடுகளை இலக்கிய அளவு கோலாகக் கொள்ள வேண்டுமென்ற இயக்கமும் இக்கால கட்டத்தில் வலுவடையத் தொடங்கிற்று.

புனைகதைத் துறையினைப் பொறுத்த வரையில் அதுகால வரை ஈழத்து இலக்கியத்திற் பெரு முக்கியத்துவம் பெறாதிருந்த பிரதேசங்களைக் களமாகக் கொண்டு நாவல்கள், சிறுகதைகள் எழுதப்படும் பண்பும் வலிமை பெறத் தொடங்குகின்றது. வன்னியப் பிரதேச வாழ்க்கையைச் சித்தரிக்கும் பால மனோகரனின் "நிலக்கிளி"

இதற்கு நல்ல உதாரணமாகும். திருகோண மலையைக் களமாகக் கொண்டதாயினும், தமிழ்—சிங்கள உறவை கலையழகும் யதார்த்தமும் அற்புதமாக இணையச் சித்திரித்த அருள் சுப்பிரமணியத்தின் "அவர்களுக்கு வயது வந்து விட்டது" எனும் நாவலும் இக்கால கட்டத்திலேயே (1974) தோன்றியது. ஆனால் இவ்விரு ஆசிரியர்களும் பின்னர் வீரகேசரிப்பிரசுர வெளியீடுகளாக வந்த அவர்களது நாவல்களில் தமது ஆக்கத் திறனின் வளர்ச்சியினைக் காட்டத் தவறி விட்டனரெனலாம். இதனை சுய குறைபாடாக மாத்திரம் கொள்ளாது வர்த்தகமயப் படுத்தப் பட்ட இலக்கிய வெளியீட்டு முறைமையின் தாக்கமாகவும் கொள்ளல் வேண்டும்.

இலக்கியச் செல் நெறிகளை விடுத்து இலக்கிய வளர்ச்சியின் கல்வித்துறைத் தொடர்பினை நோக்கும் பொழுது, 1970 க்குப் பின்னர் கல்வித் துறையில் நவீன இலக்கியக் கோட்டுபாடுகள் கனிஷ்ட பாடசாலை நிலையிலிருந்தே இலக்கியங் கற்பித்தலில் முக்கிய இடம் பெற்றன.

★

# 5

# ஈழத்தில் தமிழ் இலக்கிய விமரிசனம்

தற்காலத்தமிழ் இலக்கியத்தின் பன்முகப்பட்ட பல்தேச நிலைப்பட்ட சமகால வளர்ச்சியில், இலங்கை—விமரிசனத் துறையில் முன்னணியில் நிற்கின்றமை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஓர் உண்மையாகும்.

இலங்கையினது விமரிசனத்துறை முதன்மையும், விமரிசனத்துறைக்கு இலங்கையில் வழங்கப் பெறும் முக்கியத்துவமும் எவ்வாறு ஏற்பட்டுள்ளன என்பதை நோக்கல் வேண்டும். உயர்தமிழ் இலக்கியக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதாரமாக அமையும் விமரிசன நூல்கள் இலங்கையரால் எழுதப்பட்டு வரும் பண்பு கனகசபைப் பிள்ளையின் "1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்" என்ற நூல் முதல் நின்று நிலவி வருகின்றதென்பது கண்கூடு.

இதைவிட முக்கியமானது, விமரிசன நூல்கள், ஆராய்ச்சிகள் இலங்கையில் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள இலக்கியப் பயில்நிலைப் பின்னணியாகும். இங்குள்ள இலக்கியப் பயில்வாளர்கள் (எழுத்தாளர்கள், ஆசிரியர், மாணவர் அறிவு நிலைப்பட்ட வாசகர்கள்) யாவரும் இலக்கிய ஆக்கத்தையும் மதிப்பீட்டையும் இணைத்து நோக்கும் பண்பாகும். ஆக்க இலக்கியங்களை யாதேனுமொரு இலக்கியக் கோட்பாட்டுக்கு—அன்றேல் கண்ணோட்டத்துக் கியைய எழுத முனைவதிலும், வாசிக்கும் இலக்கியங்கள் முழுமையான ஒரு வாழ்க்கைநோக்கினை—அன்றேல் கண்ணோட்டத்தினை ஏற்படுத்துகின்றனவா என்று பார்ப்பதிலும் எழுத்தாளர்களும் வாசகர்களும் கவனஞ் செலுத்தி வந்துள்ளமை ஒருமுக்கிய அமிசமாகும். பொதுப்படையான வாசகர்களை உள்ளடக்காத இலக்கிய சர்ச்சை எதுவும் இலங்கையில் இதுவரை நடந்ததில்லையெனலாம். மேலும் ஆக்க இலக்கியகர்த்தர் எனத் தம்மைக் கருதிக்கொண்ட யாவருமே விமரிசனத்துறையிலும் ஈடுபாடு செலுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் எழுத்தாளர்—வாசகர் நிலையில் இலக்கிய விமரிசனத்தின் பயன்பாட்டினை அறிந்து கொள்வது அவசிய மாகின்றது.

இலக்கியம் ஆற்றல் மிக்க தொடர்பு முறைமை என்னும் உணர்வு அறிவு ரீதியாக ஏற்பட்டுத் தொழிற்படுகின்ற பொழுதுதான், இலக்கியத்தின் தன்மை, அதன் நோக்கம், அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆகியன பற்றிய அறிவு நிலைநின்ற தேடுதல் ஆரம்பமாகின்றது. இத்தேடுதல் முயற்சியே இலக்கிய விமரிசனமாகும். இது ஒரு முனையில் இலக்கியக் கோட்பாட்டு ஆய்வாகவும் மறுமுனையில் அக்கோட்பாடுகளைப் பிரயோகித்துத் தனிப்பட்ட—அன்றேல் ஒரு தொகுதியான ஆக்கங்களை ஆராயும் ஆய்வாகவும் அமையும். இவ்விரண்டும் ஒரு நாணயத்தின் இருபுறங்கள் போன்றனவே.

இலக்கியத்தின் "தொடர்பு முக்கியத்துவம்" விளங்கிக் கொள்ளப்படும் பொழுது, அதாவது எழுத வேண்டியன பற்றிய எண்ணத்துணிபும் உணர்ச்சித் தெளிவும் ஏற்படுகின்ற பொழுது, அதற்கு முன்னர் தோன்றிய ஆக்கங்கள் பற்றியும், சமகாலச் சிந்தனைகள் பற்றியும் "பாரம்பரியம்", "மரபு" பற்றியும் ஆய்வுகள் தோன்றும். இலக்கிய விமரிசனம் கோட்பாட்டு நிலையிலும் பிரயோக ஆய்வு நிலையிலும் பாரம்பரியத்துக்கும் சமகால இலக்கிய நிகழ்வுகளுக்கும் எதிர்கால இலக்கியத் தேவைகளுக்கும் இணைப்பினையும் இயைபினையும் ஏற்படுத்துகின்றது—அன்றேல் ஏற்படுத்த முனைகின்றது எனலாம். மூன்று காலங்களையும் உள்ளடக்காத இலக்கிய விமரிசன உணர்வு உண்மையான இலக்கிய விமரிசன ஆக்கங்களுக்கு இடமளிக்க முடியாது. இலக்கியக் கோட்பாடுகள் விமரிசன நிலைப்பட்ட ஆய்வுகளிடையே தோன்றுபவை. பிரயோக விமரிசனங்கள் இலக்கியக் கோட்பாடுகள் வழிநின்று செய்யப்படும் நுண்ணிதான ஆய்வுகளேயாகும்.

இத்தகைய இலக்கிய போதம் சிறப்பாக இலங்கையில் ஏற்பட்ட தன்மையினையும் முறைமையினையும் இருநிலைப் படுத்தி ஆராயலாம்.

அ. இந்நிலைமை ஏற்படுவதற்கான அடிப்படை வரலாற்று, கல்விக் காரணிகள்.

ஆ. இலக்கிய விமரிசன மரபின் படி நிலையான ஆழ அகல வளர்ச்சி. இவ்வளர்ச்சிப் படிகள், கடந்த காலத்து விமரிசன மரபுத் தேட்டங்களை பயன் படுத்திக் கொண்டுள்ள முறைமை.

முதலில் வரலாற்றுக் காரணிகளை நோக்குவோம்.

இலங்கையில் தனிப்பட்ட இலக்கிய ஆர்வமும் தனிப் பட்ட இலக்கிய முயற்சிகளும் தோன்றிய காலந்தொட்டே, இலக்கியங்களை இலங்கையின் சமூக, பண்பாட்டுக் கோலத் துடன் இணைத்துப் பார்ப்பதில் ஆர்வம் காட்டப் பெற்று வந்துள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் நிலவிய கல்வியமைப்பில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசனரிமார் தோற்றுவித்த கல்விப் பாரம்பரியத்தில் இப்பண்பை நாம் காணலாம். ஆங்கில வழி வந்த நவீன அறிவியற்றுறைகளை இலங்கையின்பால் ஆற்றுப்படுத்துவதற்கான மொழி பெயர்ப்பு முயற்சிகளை அமெரிக்க மிசனரிமார் மேற்கொண்டிருந்தனர். மேலும் அப்புதிய கல்வித் துறைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழிலும் அவ்வத் துறைகளை வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது பிரயோக விவேகமுள்ள அறிவாளர் பரம்பரையொன்றினைத் தோற்றுவிக்க உதவிற்று.

இதைவிட ஈழத்தின் பாரம்பரிய "சைவத்தமிழ்" அறிஞர்களைப் பொருத்தவரையில், சைவசித்தாந்தப் பாரம்பரியத்தில் வரும் இலக்கியங்களை 'இனங்கண்டறிந்து' போற்றுவதிலும், சைவசித்தாந்தக் கலாசாரத்தினைப் பேணுவதிலும் அவர்கள் அதிக கவனஞ்செலுத்தி வந்தனர். யாழ்ப்பாணத் தமிழ்ப் பாரம்பரியத்தில் கந்தபுராணம், பெரியபுராணத்துக்கு வழங்கப்பட்ட முதன்மைக்கு எடுத்துக் கூறப்பட்ட இலக்கிய, தத்துவ காரணங்களை மனங்கொள்ளல் அவசியமாகும். சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களை, அவை "நரஸ்துதி" செய்கின்றன என்பதாய்ப் பெரிதுங் கொண்டாடாது விட்டமையை இந்நோக்கிற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அதாவது, தமிழகத்து இலக்கியங்களைத் தமதாக்கிக் கொள்ளும் பொழுது தமது பண்பாட்டுத் தேவைகளுக்கேற்றவையையும், தமது தனித்துவத்துக்கு உரமூட்டுவனவற்றையுமே இவர்கள் ஏற்றுக் கொண்டனர் எனும் உண்மை இதனால் புலப்படுகின்றது. இந்நோக்கு இலக்கிய ஏற்புடைமைக்கு அடிப்படையான ஒரு திறனாய்வு நோக்கினை அஸ்திவாரமாக்கிக் கொள்கின்றது. நடைமுறைத் தூய்மையும், கண்ணோட்ட இலட்சிய நேர்மையுள்ள வகையிலேயே மதமும் இலக்கியமும் இணைக்கப்படவேண்டுமென்றும் போற்றப்படவேண்டுமென்றும் இவ்வியக்கம் வற்புறுத்திற்று. இவ்வாதாரசுருதியான விமரிசன நோக்கு

ஆறுமுகநாவலர் காலத்துக்கு முன்னரே நிலவியிருப்பினும் அவர் காலம் முதலே முனைப்புடன் போற்றப்பட்டு வந்ததெனலாம்.

மேற்கூறிய பண்பின் தொடர்ச்சி முற்றிலும் வேறு பட்ட ஒரு வரலாற்றுக் கால கட்டத்தில், தேசிய இலக்கியக் கோஷமாக முகிழ்த்தது ஆச்சரியமன்று.

அடுத்தது, இலங்கைத் தமிழ் இலக்கியப் பயில்வாளர்கள், இந்தியத் தமிழிலக்கியப் பயில்வாளரிலும் பார்க்க பிறதேச, பிறபண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிவதற்கும் தழுவி யமைத்துக் கொள்வதற்கும் இருந்த வாய்ப்புக்களாகும்.

இதற்கான ஊற்று இலங்கையில் ஆங்கில ஆட்சி யமைக்கப்பட்டிருந்த முறைமையே ஆகும். மேலே கூறிய கிறித்துவ மிசனரிக் கல்வியமைப்பு இப்பண்பினை வளர்த்தது. மேனாட்டார் வருகையும் வழியாக வரும் அவர்களது இலக்கியப் பரிச்சயமும் ஒப்பியல் நோக்கினை இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் இன்றியமையாப் பண்பாக நிறுவிற்று எனலாம். ஆறுமுக நாவலரது இலக்கிய முயற்சிகளுக்கு இப்பரிச்சயங்கள் பெரிதும் உதவியுள்ளன என்பது வரலாறு நிறுவும் உண்மையாகும். மிசனரிமார்களின் மொழி பெயர்ப்புப் பணி இதற்குப் பசளையாக அமைந்ததெனலாம்.

இலங்கையின் இலக்கியக் கல்வியமைப்பு-போதனை முறைமை இலக்கிய விமரிசன உணர்வினை வளர்ப்பதற்கு வாய்ப்பாக இருந்தது. பாரம்பரியக் கல்வி நிலையில் இப்பண்பு தொழிற்பட்ட முறைமையினையும், மிசனரிமார்களது கல்வி நிலையங்களில் இது நிறுவப்பட்ட முறையினையும் ஏற்கனவே பார்த்தோம்.

இலக்கிய விமரிசன ஆய்வுநோக்கு வளர்வதற்கு, 1942 முதல் தனிப்பட்ட பல்கலைக்கழகமாக இயங்கி வந்த இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை, நடைமுறைப் படுத்தி வந்த பாட விதான அமைப்பு முக்கிய பங்காற்று

கின்றது. இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறையின் இப் பணி 1950, 60களிலே அதிமுக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் சுவாமி விபுலானந்தர் ஆவர். இவர் தமது முக்கிய ஆராய்ச்சி நூலான யாழ்நூலில், பௌதிக விஞ்ஞானத்தையும் தமிழறிவையும் இணைத்த ஆய்வு முறை பின்பற்றப்படுவதைக் காண்கிறோம்.

விபுலானந்தரின் தனிப்பட்ட ஆய்வு நெறியிலும் பார்க்க முக்கிய இடம் வகிப்பது தமிழ் இலக்கிய வரலாறு எனும்பாட நிர்ணயமே.

இலக்கியத்தை முழுமையாகப் பார்க்கும் பண்பு விமரிசனத்துக்கு அச்சாணியாகும். தமிழ் இலக்கியத்தினை முழுமையாக எடுத்துக்காட்டி அம் முழுமையின் செல்நெறிகளையும் பாங்குகளையும் உணர்த்துவது இலக்கிய வரலாறு எனும் பாடமேயாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை முதன் முறையாக, வரன்முறையான பாடமாகப் போதித்தது இலங்கைப் பல்கலைக் கழகமே ஆகும். இது, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தீட்சண்ய நோக்கினால் ஏற்படுத்தப் பெற்ற புரட்சிகர மாற்றமாகும்.

அடுத்து, இலக்கிய விமரிசனத்தையும் முதன் முதலில் ஒரு பாடமாக, சிறப்புத் தமிழ் மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, தமிழை ஒரு பாடமாகப் பயின்ற பொதுக் கலை மாணவர்களுக்குப் பயிற்றிய பெருமையும் இலங்கைப் பல்கலைக்கழகத்துக்குண்டு. தமிழக அறிஞர்கள் விமரிசன நூல்களென கண்ணோட்டத் தெளிவற்ற ஆங்கில மேற்கோட் கலவைகளை வெளியிட்டு வந்த காலத்தில் ஐ. ஏ. றிச்சாட்சின் இலக்கிய விமரிசனக் கோட்பாடுகளுக்கு இயையத் தமது விரிவுரைகளை அமைத்து மாணவரின் இலக்கியக் கண்ணோட்டத்தினை செம்மைப் படுத்தியவர் பேராசிரியர் செல்வநாயகம் ஆவர். இவரே முதன்முதலில் வரலாற்று நோக்கில் எழுதப் பெற்றதும், பின்னர் பலராலும் கடப்பாட்டுத் தெரிவிப்புடனும் அல்லாமலும் பின்பற்றப் பட்டதுமான தமிழ் இலக்கிய வரலாற்று நூலை எழுதியவர்.

மேலும், இலக்கிய வெளிப்பாடு என்பது உயர் இலக்கிய வகைகள் பற்றிய வரையறைப்பட்ட ஆய்வாக மாத்திரம் இருத்தல் முடியாது; அது நாட்டுப் பாடல், நாட்டுக்கூத்து முதலியனவற்றையும் உள்ளடக்குமென்பதைத் தனது ஆய்வு களின் மூலம் தெளிவாக்கியவர் பேராசிரியர் வித்தியா னந்தன் ஆவர். யாவற்றுக்கும் மேலாக, முதன் முதலில் நவீன தமிழ் இலக்கியங்களை சிறப்புத் தமிழ்த் தேர்வுக்குப் பாடநூல்களாக்கிய பெருமையும் இலங்கைப் பல்கலைக் கழ கத்தையே சாரும். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இம் முன்னேடிச் சாதனை பற்றி மறைமலையடிகள் தமது 'சிந்தனைக் கட்டுரைகள்' நூல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 1950 களிலேயே "புதுமைப்பித்தன் கதைகள்" பாட புத்தகமாக விதிக்கப் பெற்றிருந்தது. இதனல் தற்காலத் தமிழ் இலக்கிய ஆக்க எழுத்தாளர்கள் பரீட்சைத் தேவைகளுக்காக வரன் முறையாக ஆராயப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழகம் வேறு தனித்தனிப் பல்கலைக் கழகங்களின் தோற்றத்துக்கு இடமளித்தபொழுது (1971ன் பின்னர் இவை தனியொரு பல்கலைக் கழகத்தின் பல்வேறு வளாகங்களாக ஆக்கப் பெற்றன). அத்தகைய பல்கலைக் கழக மொவ்வொன்றிலும் பட்டதாரி மாணவ நிலையில் தமி ழிலக்கியம் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட்டது. உதாரணமாகக் கொழும்புப் பல்கலைக் கழகத்திற் கைலா சபதி பாடாந்தரத் திறனய்வு (*Textual criticism*), இலக்கியக் கோட்பாடுகள் (*Literary concept*) எனும் பாடங்களையும், பூலோக சிங்கம் ஈழத்தின் இலக்கியவரலாறு எனும் துறை யையும் பயிற்றி வந்தனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தில்லைநாதனும் வித்தியானந்தனும் நாடக வரலாற்றினை போதித்தனர். வித்தியோதயப் பல்கலைக் கழகத்தில், இலக் கியவரலாறு எனும் பாடம் "சமூக சிந்தனையும் இலக்கிய வளர்ச்சியும்" என்ற பெயரின் கீழ் இந்நூலாசிரியரால் புதி தாக அமைக்கபெற்றுப் பயிற்றுவிக்கப்பட்டது. அத்துடன் அங்கு மொழி பெயர்ப்பு முறைகளும் பயிற்சியும் பொதுத் தேர்வுக்கான உப-பாடமாக்கப் பெற்றது.

இத்தகைய பாடவிதான அமைப்புக்களின் முன்னணி வழியாக வந்த மாணவர்கள் விமரிசனத்துறையில் முன்னணி இடத்தினை பெறத் தொடங்கினர். பெரும்பாலான பட்டதாரிகள் ஆசிரியர்களாக தொழில் மேற்கொண்டமையால் இவ்வனுகு முறைகள் தேசப் பொதுவாக்கப்பட்டன.

இவற்றுடன், நவீன இலக்கியமும் விமரிசனமும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை நிலையிலும் பாடசாலைகளில் உயர் வகுப்புக்களிலும் மிக முக்கியமான துறைகளாக அமைக்கப் பெற்றன. இவை காரணமாக ஆசிரியர்கள் மட்டத்திலும் வாசகர்கள் மட்டத்திலும் நவீன இலக்கியக் கோட்பாடுகள், விமரிசன மரபுகள் பற்றிய அறிவு பரப்புப் பெற்றது.

இலங்கையிற் கல்வியும் இலக்கியமும் சனநாயகப் படுத்தப்பட்ட முறைமையும் வேகமும் தமிழகத்திலிருந்து வேறுபட்டதென்பதையும், இலங்கைத் தமிழ் மக்களின் எழுத்தறிவு விகிதமும் (70%க்கு மேல்) தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதமும் (39.9%) வேறுபட்டனவென்பதையும் மனத்திருத்தி நோக்கும்பொழுது மேற்கூறிய பண்புகளின் பொது நிலைப்பட்ட தாக்கத்தினை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

இவற்ருல், இலக்கிய விமரிசனம் முனைப்படைவதற்கான கல்விப் பின்னணியொன்று இலங்கையில் நிலவிற்று என்பதும் தெளிவாகின்றது.

ஆக்க இலக்கிய கர்த்தர்களின் மட்டத்திலும், ஆக்க இலக்கியப் பிரசுர மட்டத்திலும் நிலவிய பண்புகளும் விமரிசன உணர்வு முனைப்புக்கு உதவிற்று எனலாம். முதலாவதாக எடுத்துக் கூறப்பட வேண்டியது, மிக்க அண்மைக் காலம் வரை இலக்கியப் பிரசுரம் வர்த்தக மயப்படுத்தப் படாதிருந்தமையாகும். இதன் காரணமாக இலக்கிய ஆக்கம் என்பது கருத்து நிலைப்பட்ட ஒரு முயற்சியாகக் கொள்ளப்பட்டது. இந்நிலை வாசக வரையறைகளை

ஏற்படுத்தியது உண்மையே. ஆனல் எழுத்தாளர்களிடையே மிகக் கூரிய விமரிசனப் பிரக்ஞையை ஏற்படுத்திற்று.

இத்தகைய விமரிசனப் பிரக்ஞை காரணமாக ஆக்க இலக்கிய கர்த்தர்களுக்கும் விமரிசகர்களுக்குமிடையே ஒருவர் கருத்துரைகளினுல் மற்றவர் நன்மையடையும் ஒரு பரஸ்பர நல்லுறவு நிலை நிலவிற்று. இது ஒவ்வொரு கருத்துக் குழுவையும் சார்ந்த இலக்கிய கர்த்தர்களிடையேயும் விமரிசகர்களிடையேயும் காணப்பட்டது. எதிர் கருத்துக் கொண்டோருடன் வன்மையான கருத்து மோதல்கள் இருந்தவிடத்தும் விமரிசகன் கூறுவதை ஆக்க இலக்கிய கர்த்தன் எதிர்நோக்கி நிற்கும் பண்பு வளரத் தொடங்கிற்று.

இவ்வாறு பல காரணிகளினுல் முனைப்புப் பெற்ற இலக்கிய விமரிசன நோக்கின் பிரத்தியட்ச தொழிற்பாட்டினைக் கீழ்க்காணும் இரு அமிசங்களிலும் காணக் கூடியதாக இருந்ததெனலாம்—

அ. விமரிசனம் இலக்கிய ஆக்க நெறிகளுக்கு வளமூட்டும் தன்மை.

ஆ. தமிழகத்து இலக்கியங்களின் இயைபை நிர்ணயித்துக் கொள்வதிலுள்ள சிரத்தையும் கவனமும்.

இலக்கியம் தொடர்பு முறைமையாக இயங்கும் முறைமையை உணர்ந்தோர் நிலையில் இலக்கிய விமரிசனம் முக்கிய இடம் பெறுவது இயல்பே. ஆனல் அது "வெகுசனத்" தொடர்பு முறைமையாக மாறிச் சந்தை விதிகளுக்கு ஆட்படும் பொழுது இலக்கிய விமரிசனம் தரநிர்ணய சத்தியாகத் தொழிற்பட முடியாது.

இலக்கிய விமரிசன முனைப்புக்கான காரணிகளைப் பார்த்த நாம் அடுத்து, எம்முறையில் வளர்க்கப்பட்டதென்பதனைப் பார்ப்போம். இங்கு ஈழத்தின் இலக்கிய

விமரிசன மரபில் முக்கிய இடம் பெறுபவர்களின் பெயர் களே—அதாவது குறிப்பிட்ட செல் நெறிகளின் பிரதிநிதி களாக விளங்குபவர்களின் பெயர்களே குறிப்பிடப்படும்.

வரலாற்று நிலைப்படுத்திப் பார்க்கும்பொழுது பின்வரும் குழுவினர் ஈழத்தின் இலக்கிய விமசரின மரபு வளர்ச்சியில் யில் முக்கிய இடம் பெறுகின்றனர் எனலாம்.

1. ஈழத்து இலக்கிய உரைகாரர்கள்.
2. ஆசிரியப் பரம்பரை முக்யஸ்தர்கள்.
3. பத்திரிகைத் தொடர்புடைய அழகியல் வாத விமரிசகர்கள்.
4. அ. மறுமலர்ச்சிக் குழுவினரிடையே தோன்றிய சமூக நோக்குடைய, இலக்கிய விமரிசனத் திறன் வாய்ந்த ஆக்க இலக்கிய கர்த்தர்கள்.

   ஆ. முற்போக்க இலக்கிய வாதத்தின் முன் னோடிகள்.
5. அ. பல்கலைக்கழக வழி வந்த முற்போக்கு விமரிச கர்கள்.

   ஆ. முற்போக்கு இலக்கியத் தாக்கம் காரணமாக அதனை ஆதரித்தும் எதிர்த்தும் நின்ற ஆக்க இலக்கிய கர்த்தர்களாகிய விமரிசகர்கள்.
6. கல்விப் பயிற்சி வழியாக இலக்கிய விமரிசனத்தைத் தமது ஆய்வுத் துறையாகக் கொண்டுள்ள விமரிசக ஆய்வாளர்கள்

இவர்களின் முதலாவது பிரிவினரே காலத்தால் முந்திய வர்களாவர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி யிலும் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் இவர்களின் பணி முக்கியத்துவம் பெற்றன. இக்குழுவினருள் முக்கிய இடம் பெறுவோர்களுள் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள், புராணபழ மரபு, கம்பராமாயண விளக்க

மரபில் முக்கிய இடம் பெற்றவரான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, கந்தபுராண உரையாசிரியர்களான உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர், வல்வை வயித்தியலிங்கம் பிள்ளை ஆகியோராவார். இப்பெரு மரபின் இறுதி மலர் களாக தொல்காப்பிய உரையாசிரியர் கணேசையர், திருவாசக விளக்க உரையாசிரியர் நவநீத கிருஷ்ண பாரதி யார், பதிற்றுப்பத்து உரையாசிரியர் அருளம்பலவானர் ஆகியோரைக் கொள்ளல் வேண்டும்.

அடுத்து முக்கிய இடம் பெறுபவர்கள் நிறுவன அமைப் புடன் நிலவிய உயர்கல்வி நிலையங்களில் சிறப்பாக ஆசிரிய கலாசாலைகளிலும் பல்கலைக் கழகத்திலும் கடமையாற்றிய ஆசிரியப் பெருமக்களாவர். இவர்களுள் முக்கிய இடம் பெறுவோர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, பொ. கிருஷ்ணபிள்ளை, ச. மகாலிங்கசிவம், சுவாமி விபுலானந்தர். வி செல்வநாயகம் முதலியோராவர்.

1930 களில் துளிர்விடத் தொடங்கிய மணிக்கொடியின் சமகால ஆக்க எழுத்தாளர்களுள் விமரிசன உணர்வுடன் தொழிற்பட்டு விமரிசனத்தை இலக்கிய ஆக்கத்தின் அடிநாத மாக்கியவர்களுள் முக்கியமானோராக அ. செ. முருகானந் தத்தையும் அ. ந. கந்தசாமியையும் குறிப்பிடல் வேண்டும். இதே காலப் பிரிவில் முற்போக்கு இலக்கிய வாதத்தின் முன்னோடியாக விளங்கிய "பாரதி" எனும் சஞ்சிகையை நடத்திவந்த ஆக்க இலக்கிய கர்த்தரான கே.. கணேஷ் முக்கிய இடத்தைப் பெறுபவராவர்.

பல்கலைக்கழக வழி வந்த விமரிசகர்களின் முக்கிய இலக்கியப் பணி பண்டைய காலம் முதல் தற்காலம் வரை உள்ள தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியை வற்புறுத்திய மையே. இவர்களுள் நவீன சமூக, பொருளியற் கோட்பாடு களிடையில் தமிழ் இலக்கியத்தை விளக்கும் பணியில் முதலி டம் பெற்ற அதே வேளையில் முற்போக்கு இலக்கிய இயக் கத்துடனும் இணைந்து நின்று தொழிற்பட்டனர். இவர் களுள் தமிழகத்து விமர்சகர்களுடன் (ரகுநாதன், எஸ். ராம

கிருஷ்ணன், அ. சீனிவாசராகவன் போன்ரோருடன்) தொடர்பு கொண்டு தம்பணியினை ஆற்றி வந்தனர்.

இவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய வர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, இ. முருகையன், சி. தில்லைநாதன் ஆகியோராவர். எம். எம். பஷீரூப் முற் போக்கு இயக்கத்தைச் சார்ந்து நிற்கவில்லை யெனினும் அவரது விமரிசனக் கட்டுரைகள் முற்போக்குக் கண்ணோட்ட வளர்ச்சிக்கு உதவின. 1960 களில் முற்போக்கு நெறிச் செல்லாத சில விமர்சகர்கள் தோன்றினர். இவர்களுள் முக்கியமானவர் மு. தளையசிங்கமாவர்.

முற்போக்கு வாதத்தை விமரிசன ரீதியாக எடுத்து விளக்கிய ஆக்க இலக்கியகர்த்தர்களுள் இளங்கிரனர் நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா, ரகுநாதன் போன்ரோர் முக்கியமானோராவர். முற்போக்கு வாதத்தை முனைப்புடன் எதிர்த்த ஆக்க இலக்கிய விமரிசகர்களுள் முக்கியமானவர் எஸ். பொன்னுத்துரையாவர்.

ஆருவதாகக் குறிப்பிடப் பெற்றுள்ள விமரிசக ஆய் வாளர்களுள் முக்கியமாகக் குறிப்பிடபட வேண்டியவர்கள், கவிதை வரலாற்றில் ஈடுபாடுடைய யோகராசா, புதுக் கவிதை வரலாற்றினை எழுதிய எம். சிறீபதி, நவாலிலக்கிய ஆய்வாளர்கள் சிவநேசச் செல்வன், சுப்பிரமணிய ஐயர், சண்முகலிங்கம், நாடகத்துறை ஆய்வாளர் மௌனகுரு, பொது இலக்கிய வரலாற்றுய்வாளர் சித்திரலேகா மௌ னகுரு, அழகியற் கோட்பாட்டின் விளக்கவாதி யோகராசா முதலியோராவர். இவர்களுடன் தமிழிலக்கிய வளர்ச்சி நெறிகளை ஆங்கில மொழி வாசகர்களுக்கு எடுத்துக் கூறும் முக்கிய பணியினைச் செய்து வரும் கே. எஸ். சிவகுமாரன் பெயர் சேர்க்கப்படுதல் அவசியமாகும்.

★

# 6

# ஈழத்துத் தமிழ் நாடகங்கள்—
# வகைகளும் வளர்ச்சியும்

நாடக வளர்ச்சியை பல்வேறு நோக்குகளிலிருந்து அணுகலாம். நாடகத்தின் உருவ அமைப்பு, நாடகப் பொருள்—கதை—அமைப்பு, நடிப்பு முறைகள், நாடகத்தின் சமூக முக்கியத்துவம், நாடகம் எவ்வாறு கருத்துப் பரிவர்த்தனைச் சாதகமாக விளங்குகின்றது எனும் தன்மை ஆய்வு, எனப் பலப்பல கண்ணோட்டங்களில் ஆராயலாம்.

இலங்கையிற் பயிலப்படும் தமிழ் நாடக வகைகளின் வளர்ச்சி பற்றியறிய முனையும் நாம், முதன் முதலில் அவற்றை வகைப்படுத்தும் முறையினை அறிந்து கொள்ளல் வேண்டும்.

வகையின் தன்மை வகைப் படுத்துபவரின் தேவையையும் நோக்கையும் பொறுத்துள்ளது. இலங்கையிலுள்ள தமிழ் நாடகங்களைப் பொறுத்தமட்டில், வர்த்தமான ஆசிரியர்கள், விமரிசகர், பார்வையாளர், முதலியோர் நாட்டுக் கூத்து, தற்கால நாடகங்கள் என்ற பகுப்பினையே பெரிதும் கூறுவர்.

இவ்வாறு பிரிப்பதிலே சில இடர்பாடுகள் உள்ளன. ஒன்று இப்பகுப்பு முறை, நாட்டுக் கூத்து மரபையும், முற்றிலும் தற்கால மரபையும் சாராத, பார்சி வழிவந்த ஸ்பெஷல் நாடக அரங்கினைப் புறக்கணித்து விடுகின்றது. இன்னொன்று தற்கால சமூகப் பிரச்சினைகளைக் கொண்டு அரங்கேற்றப்படும் நாட்டுக் கூத்து முறை நாடகத்தினை எவ்வகைக்குள்ளேகொண்டு வருவதென்பதாகும். நாட்டுக் கூத்து, தற்கால நாடகம் என்னும் இப்பிரிவு உண்மையில் ஆட்ட உத்திபற்றியதாகவேயுள்ளது. நாடக அரங்கேற்ற உத்தி முறைகள் கொண்டு நாடகங்களை வகைப்படுத்த முயன்றால், வகையின் தொகை பெருகலாம். சிங்கள நாடக உலகில் நவீன நாடகங்கள் பல மரபு வழிவரும் ஆட்ட உத்திகளையே பயன்படுத்துகின்றன.

கீழைத்தேய நாடகங்களை வகைப்படுத்தி ஆராயும் ஆராய்ச்சியாளர் சிலர் சமயச் சடங்கான நாடகங்கள், அவையல்லாத நாடகங்கள் என வகுப்பர். சமயச் சடங்காக அரங்கேற்றப்படும் நாடகங்கள் பல உள்ளன. மேலும் சமயச் சடங்காக அரங்கேற்றப்படும் நாடகங்கள் சடங்கு என்ற பார்வை வட்டத்துள் மாத்திரம் வைத்து இரசிக்கப் படுவதில்லையென்பதும் இன்றைய இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் அக அமைப்பு, கலைவடிவங்களை அவற்றின் பூர்வீக நிலையான சமயக் காரணங்களாகக் கொள்ளும் நிலையினது அல்ல என்பதும் இத்தகைய வகைப்படுத்தலைபயனற்றதாக்கி விடுகின்றது.

கலைத்துறையைச் சேர்ந்தனவற்றை வகைப்படுத்தும் பொழுது அவ்வக்கலையின் வரலாற்று ரீதியான நிலைமை யாது என்பதை அறிதல் அவசியமாகின்றது. வரலாற்று

நிலைப்பட்ட முறையில் வகைப்படுத்தினால், வளர்ச்சியை அறிவது சுலபமாகலாம். எனவே கருத்து நிலைமையைக் கணக்கெடுத்தே நாடகங்களை வகைப்படுத்தல் வேண்டும்.

நாடகங்களின் கதை இயைபு, ரசனை நெறிகள், தனித்துவம் ஆகிய பண்புகளை உரைகல்லாகக் கொண்டு பார்க்கையில் மரபுவழி நாடகங்கள், நவீன நெறி நாடகங்கள் என இரண்டு பெரும்பிரிவுகளாக வகுக்கலாம்.

எமது நாட்டின் வரலாறு காரணமாக இரு கிளைப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்நிய ஆட்சியும், ஏகாதிபத்திய ஆட்சி முறையினால் ஏற்பட்ட சமூகநிலைத் தாக்கமும் இதற்குக் காரணமாக அமைந்தன. நாடகம் பற்றிய உண்மையான மக்கள் மரபு, அம்மக்களின் பொருளாதார, அரசியல், பராதினம் காரணமாகக் கிராமியக் கலைகளாகத் தாழ்ந்தன. அந்நிய ஆட்சிக்காலத்துச் சுதேச வளர்ச்சி நெறி வர்க்க நிலைப்பட்டு நிற்பதைக் காண்கிறோம். ஆங்கிலப் பரிச்சயமுடைய மத்திய தர வர்க்கத்தின் வளர்ச்சி, அவ் வர்க்கம் போன்றே முற்றிலும் புதிய கோட்பாடுகளைக் கலையிலாயினும் சரி, அரசியலிலும் சரி—கொண்டுவந்தது. பல்லாண்டு காலமாக நிலவிவந்த இவ்வேறுபாடு காரணமாக கிராமப்புறங்களிலும் (அதாவது புராதன பொருளாதார சமூக அமைப்புக்கள் உடையாத இடங்களிலும்) மேனாட்டுத் தொடர்புள்ள நகர்ப்புறங்களிலும் (அதாவது புதிய பொருளாதார அமைப்பும் சமூக உறவு முறையும் ஏற்பட்ட பகுதிகளிலும்) நாடகக் கலை தனித்தனி கோலத்துடன் வளர்ந்தது. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டபொழுது தோன்றிய கலை பற்றிய விழிப்புக்கூட புராதனக் கலை வடிவங்களை இருந்த நிலையில் வைத்தே பேண விரும்பின. இதனால் உருவ அமைப்பு நிலையிலும் சமூக ஏற்புடைமை நிலையிலும் வேறுபட்ட வகைகளாகவே இக்கலை உருவங்கள் போற்றப்பட்டன. எனவே மரபுவழி நாடகங்கள், நவீன நாடகங்கள் என்ற இரு பெரும் பிரிவுகளை வகுத்துக் கொள்வது பிழையாகாது.

மரபுவழி நாடகங்கள் எனும்பொழுது அவை எத்தகைய சூழலிலே பயிலப்படுகின்றன என்பது தெரிய வருகின்றது. அதாவது புராதன பொருளாதார சமூக அமைப்புக்கள் பூரணமாக உடைக்கப்படாத இடங்களிற் பயிலப்படுவனவற்றையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

இத்தகைய மரபுநிலைச்சூழலிற் பயிலப்படும் நாடகங்களை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், சிலாபப் பகுதி, மலையகம் ஆகிய இடங்களிற் காணலாம். இப்பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் பயிலப்படும் மரபுவழி நாடகங்களை ஆராய்ந்தால், மரபுவழி வரும் நாடகங்களுள் உள்ள வேறுபாடுகளையும் அறியலாம்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் சிலாபப் பகுதி ஆகிய இடங்களிலுள்ள மரபுவழி நாடகங்கள் பற்றிய விவரண ஆய்வுகள் பல எழுதப்பட்டுள்ளன. இத்துறையில் மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றிப் பலர் எழுதியுள்ளனர். நாடக நிலைப்பட்ட நோக்குடன் விரிவாக ஆராய்ந்துள்ளவர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களே. இவர் மன்னாரிலுள்ள மரபு வழி வரும் நாடகங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளார். புத்தளம், சிலாபப் பகுதி நாடகங்கள் பற்றிச் சிறிது கூறியுள்ளார். யாழ்ப்பாணத்து மரபு வழி நாடக மரபுகள் பற்றிப் பூரணமாக விளக்கம் அறிஞருலகில் இன்னும் ஏற்படவில்லை என்றே கூறல்வேண்டும். மலையகத்திலுள்ள மரபு வழி நாடகங்கள் பற்றி அறிமுக ஆய்வு கூட இன்னுஞ் செய்யப் படவில்லை.

இலங்கையில் பயிலப்படும் மரபுவழி நாடகங்களுள், புராதன சம்பிரதாயங்களுடன் நெறி பிறழாது போற்றப் பட்டு வருபவை மட்டக்களப்பிலுள்ள மரபு வழி நாடகங்களே. இவற்றை நாட்டுக்கூத்து என்பர். நாட்டுக் கூத்து எனும் சொற்றொடரில் வரும் கூத்து எனுஞ் சொல் கதை தழுவிவரும் ஆட்டத்தைக் குறிப்பது. 'நாட்டு' எனுஞ் சொல் கிராமத்தைக் குறிப்பது. அதுவே புராதனத்தை

எடுத்துணர்த்துவதாக உள்ளது. இது நவீன மயமாக்கற் சூழலில் நவீன நெறிக்குட்படாத ஒரு கலை வடிவத்துக்கு இடப்பட்ட அடைமொழியாகவே அமைந்துள்ளது எனலாம்.

மட்டக்களப்பிலுள்ள நாட்டுக் கூத்துக்கள், வடமோடி, தென்மோடி என இருவகைப் படுத்திக் கூறப்படும். யாழ்ப் பாணத்திலுள்ள நாட்டுக்கூத்துகளும் இவ்வாறு வகைப் படுத்திக் கூறப்படுவதுண்டெனினும், வேறுபாடுகளை மட்டக் களப்பு மரபிற் காண்பது போன்று யாழ்ப்பாணத்திற் காண முடியாது.

இவ்வுட் பிரிவுகள் பற்றி ஆராய்வதற்கு முன்னர் நாட்டுக் கூத்துக்கள் என வழங்கும் நாடகங்களுக்கு, சங்க காலத்தில் அரங்கேறிய நாடகங்களுக்குள்ள ஒற்றுமைகள் சிலவற்றை அறிந்து கொள்ளல் நன்று. இந்த ஒரு அமிசமே தனியொரு கட்டுரையாக விரிக்கப்படக் கூடியது. அதனை மிகச் சுருக்கமாக நோக்குவோம். குரங்கு பலாப்பழத்தை வைத்திருக்கும் காட்சியொன்றை விவரிக்கும் புலவர் ஒருவர் கோடியர் தமது முழவுடன் நிற்பதை உவமை கூறுகின்றார் (அகம் 352). இன்றும் அண்ணாவியார் மத்தளத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு வட்டக்களரியில், ஆட்டக்காரருக்கு (ஏறத் தாழ)ப் பின்பக்கத்திலே நின்று வாசிக்கின்றார். சங்க காலத்திலும் கூத்துக்கள் விழாக் காலத்தில் மன்றிலும்—பொது இடத்திலும்—தெருவிலும் நடைபெற்றன (பட்டினப் பாலை 252 புறம் 29) அகநானூறு—3-ம் பாடலில் வரும் 'தொகுசொற் கோடியர்' என வரும் வரிகட்குத் தரப்பட்டி ருக்கும் உரைகளும், கோடியர் பற்றிய ஆட்ட விவரக் குறிப்புகளும், இன்றைய நாட்டுக் கூத்துக்களில் வரும் கட்டியக்காரன் விருத்தம், சபைக்கவி ஆகியன சங்ககால மரபைச் சேர்ந்தவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன. மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்கள் மரபுத் தொடர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

கதையமைப்பு, உடை, இசையமைப்பு ஆகிய ஒவ்வொரு துறையிலும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் ஒன்றுக்

கொன்று வேறுபடும். இவை பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் வித்தியானந்தன் இவற்றின் வேறுபாட்டைப் பின் வருமாறு எடுத்துக் கூறுவார். 'வடமோடிக் கூத்துக்கள் போர் பற்றியனவாக, இறுதியில் அவலச் சுவையுடன் முடிவனவாயிருக்கும். தென்மோடி நாடகங்கள் காதல் பற்றியனவாய் மங்கல முடிவுடையனவாயிருக்கும். தென் மோடி இசை தமிழ் நாட்டினிசையாகவுள்ளது. வட மோடியில் பின் இசை மரபுகளும் கலந்து வருகின்றன. தென் மோடி ஆட்டங்கள் நுண்ணியவை.'

வடமோடி, தென்மோடி என்ற பதப்பிரயோகம் தமிழ் நாட்டின் மரபுவழி நாடக வரலாற்றிற் பயன்படுத்தப் படுவதில்லை. வடமோடி, தென்மோடி என்னும் பகுப்பினை உணர்ந்து கொள்வதற்கு உதவியாக ஆந்திரத்து யட்சகானமும், மலையாளத்துக் கதகளியும் அமைந்துள்ளன. வடமோடி நாடகங்களுக்கும் யட்சகானங்களுக்குமுள்ள ஒற்றுமைகளையும் பேராசிரியர் வித்தியானந்தன் தொட்டுக் காட்டியுள்ளார். ரங்கநாத் என்பார் கூறும் விவரங்களை வைத்துக் கொண்டு பார்க்கும் பொழுது இவ்வொற்றுமைகள் ஆராயப்பட வேண்டியனவே. கதகளியிற் காணப்படும் ஒற்றுமைகளிலும் பார்க்க, யட்சகானத்துடனுள்ள ஒற்றுமைகளே முக்கியமானவையாகும். யட்சகானங்கள் என்ற அப்பெயருடனே தமிழில் நாடகங்கள் இருந்ததாகப் பம்மல் சம்பந்த முதலியார் கூறுகின்றார்.

வடமோடி என்னும் சொற்றொடர் வடக்கேயுள்ள பாணி என்ற கருத்தினைத் தருவதாகும். தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வடக்கேயுள்ள பாணி என இதனை விரித்துப் பொருள் கொள்ளலாம். கன்னட, தெலுங்குப் பிரதேசங்களில் வழங்கிய நாடக மரபினையொட்டிய நாடகங்கள் என்றே வடமோடி நாடகங்களைக் கொள்ள வேண்டும். யட்சகானம், பயலாட்டா (வயலாட்டம்) ஆகிய நாடக மரபுகளிற் காணப்படும் ஆடல் மரபினையும், உடையமைப்பினையும் வடமோடி நாடகங்களிற் காணலாம்.

வடமோடி நாடகங்கள் வடஇந்தியக் கதைகளான இராமாயணம் மகாபாரதத்தைக் கதைப் பொருளாகக் கொண்டுள்ளன எனும் விளக்கம் ஒன்றும் உள்ளது. இராமாயணம், மகாபாரதம் ஆகிய கதைகள் இந்தியாவின் வடபுலத்துக்கேயுரியன வென்ற கருத்து இந்திய மக்களிடையே கிடையாது. இந்தியாவின் எப்பகுதியில் வாழ்பவர்களும் இவ்விரு கதைகளையும் தத்தம் பிரதேசத்துடன் இணைத்தே கூறுவர்; தென்பகுதி மக்கள் கூறும் கதைகளே மகாபாரதத்தில் போர்களை விரித்துக் கூறுவனவாக உள்ளன என ஆராய்ச்சியாளர் கூறுவர். இந்தியாவை வடக்குத் தெற்காகப் பிரித்துப் பார்க்கும் வழக்குக் கிறித்தவப் பாதிரிகளின் தாக்குதலின் பின்னர் தோன்றிய திராவிட இன உணர்வு வாதத்தினையடுத்தே தோன்றியது. எனவே இதனை நாம் பொதுவானவோர் இந்தியப் பண்பாட்டுணர்வாகக் கொள்ளக் கூடாது.

எனவே வடமோடியில் வரும் 'வட' என்னும் சொல்லை வடஇந்தியாவாகக் கொள்ளாது தமிழ்ப் பிரதேசத்துக்கு வடக்கேயுள்ள பகுதி, அதாவது தெலுங்கு, கன்னடப் பகுதி என்று கொள்வதே பொருந்தும்.

இவ்வாறு நோக்கும் பொழுது தென்மோடி என்பது தமிழ் நாட்டின் தெற்குப்பகுதிகளிற் காணப்படும் மரபைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும்.

மன்னாரிலும் இத்தகைய ஒரு பிரிவு காணப்படுகின்றது. அங்குள்ள மரபு வழி நாடகங்கள் மாதோட்டப் பங்கு, யாழ்ப்பாணப் பங்கு என இரு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. இப்பிரிவு பெரும்பாலும் கூத்தின் செய்யுளமைப்புப் பற்றியதாயிருக்கும். அங்கு வாசகப்பா என்ற ஒரு பிரிவும் உண்டு. நாடகங்களின் சுருக்கங்களாக அமைவனவே வாசகப்பாக்கள். உரையிடையிட்ட பாக்களையே அதாவது வசனம் கலந்த பாக்களையே இவ்வாறு குறிப்பிடுவர். வாசகப்பா கதைகூறும் உத்தியே. இதனைத் தொடர்நிலைச் செய்யுள் பற்றிய ஓர் உத்தியாகவே கொள்ளல் வேண்டும்.

மன்னார்ப் பகுதி நாடகங்கள் பெரும்பாலும் கத்தோலிக்க கிறித்தவ நாடகங்களே இலங்கையின் கத்தோலிக்கக் கிறித்தவ நாடகங்களை ஆராய்ந்த எம். எச். குணதிலக்க மன்னார்ப் பகுதிக் கத்தோலிக்க நாடகங்களில் போர்த்துக்கேய மரபில் வரும் நாடக சம்பிரதாயங்கள் போற்றப்பட்டுள்ளன என்று கூறுகின்றார். கத்தோலிக்க நாடகங்களை ஆராயும் பொழுது அவற்றிற் காணப்படும் போர்த்துக்கேய மரபுகளைக் கண்டறிந்த பின்னரே, அவற்றிலுள்ள தமிழ் நாடகப் பண்புகள் பற்றி எடுத்துக் கூறவேண்டும். தமது மதத்தைப் பரப்பிய கத்தோலிக்க மதகுருமார், தம் நாட்டு மரபையும், தமிழ் நாட்டு மரபையும் இணைத்தே நாடகங்களை அரங்கேற்றினர். மன்னார் கத்தோலிக்க நாடக உருவங்களைக் கலப்புருவங்களாகவே கொள்ளுதல் வேண்டும்.

மலையகத் தொழிலாளரிடையே காணப்பெறும் காமன் கூத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு மரபுவழிக் கூத்தாகும். மனிதவியலாளர் கொள்கைபடி இது கருவளச் சடங்கை அடிப்படையாகக் கொண்டது. தென்னிந்தியாவிலுள்ள லாவணி என்னும் பாரம்பரியக் கலைவடிவத்திலும் காம தகனம் பொருளாகப் பேசப் படுகின்றது. மலையகத் தொழிலாளர், 19-நூற்றுண்டில் இலங்கை வந்தடைந்த தமது மூதாதையர் தமது பிறப்பிடங்களிற் பயின்று வந்த காவடி, கரகம் போன்ற கலைவடிவங்களை இன்றும் போற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரம்பரிய நாடக வடிவங்களில் ஒன்று விலாசம் என்பதாகும். இதன் அமைப்பு முறை என்ன என்பது இன்னும் பூரணமாக ஆராயப்படவில்லை. விலாசம் என்ற பெயர் நூல் வடிவத்தில் எழுதப்பெற்ற நாடகங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. அரிச்சந்திர விலாசம், பூதத் தம்பி விலாசம் என்பன நூலாகவுள்ள நாடகங்களின் பெயராகும் தமிழில் முதன் முதலிற் றோன்றிய சமூக நாடகமும் விலாசம் என்றே கூறப்பட்டுள்ளது. காசி விஸ்வநாத முதலியார் டம்பாச்சாரியின் அழிவு பற்றிய நாடகத்தை டம்பாச்சாரி

விலாசம் என்றே குறிப்பிட்டார். எனவே விலாசம் என்ற பெயரை மாத்திரம் கொண்டு அதன் பண்புகளை மட்டிட முடியாதிருக்கின்றது. ஆனால் மரபுவழிவரும் விலாச நாடகங்களைப் பார்க்கும் பொழுது இந் நாடகங்களில் சாஸ்திரீய கர்நாடக இசை முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். விலாசம் என்பது நாடக நூலைக் குறிக்கும் எனத் தமிழ் லெக்சிக்கன் கூறும்.

மரபுவழி நாடக வகைகளின் பொதுப் பண்புகளையும் சிறப்புப் பண்புகளையும் பாத்தமை, இனி அவை போற்றிப் பேணப்பட்டு வந்தமைக்கான காரணங்களை அறிதல் வேண்டும்.

இந்நாடகங்களைப் பேணி வந்தோர் தமது பொருளாதார சமூக நிலைகள் காரணமாக ஒதுக்கப்பட்டு வாழ்ந்தமை ஒரு முக்கிய காரணமாகும்.

மரபுவழி நாடகங்களுட் பெரும்பாலானவை சமய வழி பாட்டுச் சடங்குகளுடன் சம்பந்தப் பட்டவையாக விளங்கியமையால் அவை தொடர்ந்து போற்றப்பட்டு வந்தன. மத நம்பிக்கைகளின் அறுத் தொடர்ச்சி நாடகங் களும் தொடர்ந்து நிலைப்பதற்கு உதவிற்று.

மரபுவழி நாடகங்கள் ஒரே வேளைகளில் சாதியமைப் புடனும் இணைந்து நின்றமையாற் குறிப்பிட்ட குழுவினராலேயே இந் நாடகங்கள் ஆட்டப்பட்டு வந்தன.

இலங்கைத் தமிழரிடையே நிலவுடைமைச் சமுதாய அமைப்பு விவசாயப் பிரதேசங்களில் தொடர்ந்து நிலவி வந்தமையால் இந்நாடகங்கள் நின்று நிலவின. அப்பொருளாதார அமைப்பு முற்றிலும் அழியாதிருக்கும் வரை அதன் கலைவடிவங்களும் தொடர்ந்து வாழும். அடிப் படையமைப்பு மாறியபின்னரும் கூடக் கலைவடிவங்கள் தொடர்ந்து வாழும் என்பர். மரபுவழி நாடகங்கள் வன்மை யுடன் காணப்படுவதற்கான காரணங்கள் தெளிவாகின்றன.

தேசிய உணர்வு ஏற்பட்ட பொழுதும், கடந்த காலப் புறக்கணிப்பால் அவற்றுக்கு ஏற்பட்ட தாழ்வினை நினைத்து

அவற்றைப் பேணுவதற்குப் பிரக்ஞை பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனாலும் மரபுவழி நாடகங்கள் முக்கிய கலைவடிவங்களாகத் தொடர்ந்து விளங்குகின்றன.

அடுத்து மரபுவழி நாடகங்களுக்கும், நவீன நாடகங் களுக்கும் வரலாற்று முறையிலும், கலைப்பண்பிலும் இடைப் பட்ட விளக்கமாகக் கூறுவதானால்—பாலம் போன்றமைந்த நாடக வகைபற்றிப் பேசுதல் வேண்டும். அதுதான் பார்சி நாடக இயக்க வழி வந்த நாடகங்களாகும். பார்சி நாடக இயக்கம் தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் பயனாகத் தோன்றியது இது. 'ஸ்பெஷல் நாடகங்கள்' என இவை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மேடையேற்றப்பட்டுவந்தன. இலங்கையில் இவை 'டிறாமாமோடி நாடகங்கள்' எனச் சமகாலத்தவரால் குறிப்பிடப் பெற்றன. அண்ணாவி மரபு நாடகங்கள் எனவும், குறிப்பிடப்படுகின்றன. கொட்டகைக் கூத்து என்ற பொருந்தாப் பெயரும் சிலரால் வழங்கப்பெற்று வருகிறது. இம்மரபு நாடகங்களை வளர்த்த பெருமை சங்கரதாஸ்சுவாமிகளுக்குண்டு. சங்கரதாஸ் சுவாமிகளே யாழ்ப்பாணத்திற் சிறிது காலம் தங்கியிருந்தார். இவ்வகை நாடகங்களின் சிறந்த நடிகர்களாகிய எம். ஆர். கோவிந்தசாமி, எஸ். ஜி. கிட்டப்பா, வேலு நாயக்கர் முதலியோர் யாழ்ப்பாணத்தில் நடித்தனர். இந் நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட பொழுது யாழ்ப் பாணத்தில் புதியதொரு நாடக விழிப்பு உண்டாயிற்று. யாழ்ப்பாணத்தவர் பலர் இம் மரபு நாடகங்களில் நடிக்கத் தொடங்கினர். நாட்டுக் கூத்து மரபிற் காணப்படாத காட்சியமைப்பு, விறுவிறுப்பான கதையோட்டம் இந்நாடகங்களிற் காணப்பட்டன. ஆனால் இந்திய நடிகர் களது நாடகங்களுக்குக் கிடைத்த வரவேற்பு உள்ளூர் நடிகர்களது நாடகங்களுக்குக் கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும். இதனாலேயே முதன் முதலில் நகர்ப் புறங்களிலும் மேடையிடப் பெற்ற இந் நாடகங்கள் படிப் படியாகக் கிராமியச் சூழலைச் சென்றடைந்தன. மத்தியதர நிலவுடைமை வர்க்கங்களினது ஆதரவு இல்லாது போகவே

இதுவும் ஏறத்தாழக் கிராமிய நாடகமாகவே மாறியது. ஆனால் இந்நாடகங்களே வளர்ந்து வரும், ஆங்கிலந் தெரிந்த மத்தியவர்க்கத்தினருக்கு—புதிதாகத் தோன்றிய நகரவாசிகளுக்கு தமிழ் நாடகம் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்திற்று.

இம்மரபு இப்பொழுது தளர் நிலையை எய்தியுள்ளது. ஆயினும் காங்கேசன்துறை வி வைரமுத்துவின் நடிப்புத் திறன் இசை ஆற்றல் காரணமாக ஓரளவு போற்றப்பட்டு வருகின்றது.

பார்சிச் செல்வாக்கல் தோன்றிய நாடகம் பற்றிய ஆய்வு எம்மை நவீன நாடக வளர்ச்சிக் காலத்துக்கு இட்டு வந்துவிடுகின்றது.

நவீன நாடக வளர்ச்சி பற்றிய ஆய்வு, மரபுவழி பற்றிய நாடக ஆய்விலும் சிக்கலுடையதாக இருக்கின்றது. ஏனெனில் இங்கு நாம் உருவ அமைப்புக் கொண்டு, நாடகங்களை வகைப்படுத்த முடியாதிருக்கின்றது. நாடகப் பொருளை அடிப்படையாகக் கொண்டும், நாடக மொழி நடையை அடிப்படையாகக் கொண்டும் பலர் பலவகையாகப் பிரிப்பர். நாடக வரலாறு இல்லாததனாலேயே இத்தகைய தடுமாற்றம் ஏற்படுகின்றது.

நாடக வகைகளைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் நவீன நெறிகள் ஈழத்துத் தமிழ் நாடகத் துறையில் வந்தடைந்த வரலாற்றுப் போக்கினை அறிந்து கொள்ளல் அவசியமாகும்.

ஈழத்தில் நவீன தமிழ் நாடக மரபு கலையரசு சொர்ணலிங்கத்துடனேயே ஆரம்பமாகின்றது. ஸ்பெஷல் நாடக மரபு என்னும் பார்சிச் செல்வாக்கு வழி வந்த நாடகங்களே தனது நாடக ஆர்வத்தினை வளர்த்ததாகக் கலையரசு அவர்கள் தமது நூலிற் குறிப்பிட்டுள்ளார். இவர் தமது குருவான பம்மல் சம்பந்த முதலியார் வழிச் சென்று இலங்கையில்; அக்காலத்திற் பெருமதிப்புப் பெற்றிருந்த ஆங்கில நாடகக் கோட்பாடுகளுக்கியைய குறைந்த நேரத்தில், பொருத்தமான அரங்க அமைப்பும், வேடப் புனைவும், நடிப்புத் துரிதமும் கொண்ட நாடகங்களை மேடை

யேற்றினர். தமிழ் நாட்டில் வழிவழியாக வந்த பௌராணிக இதிகாசக் கதைகளும், ஆங்கில நாடகங்களின் தமிழாக்கமுமே இவர்களது நாடகங்களின் கதைப் பொருளாக அமைந்தன. சம்பந்த முதலியாரும் இத்தகைய நாடகங்களையே மேடையேற்றினர்.

நாடகத்துறையில் வளரும் மத்தியதர வர்க்கத்துக் கேற்ற ஒழுக்க சீலர்களை இவர், தமது குருவைப் போன்று, வற்புறுத்தினர். ஸ்பெஷல் நாடகங்களில் பெண்கள் பங்கு பற்றி வந்தனர். இவர்களிற் பலர் தேவதாசிக் குடும்பத் தொடர்புடையவர்கள். இதன் காரணமாக உயர் குடும்பத்தினர் நாடகத்தைப் பயில் தொழிலாக ஏற்றுக் கொள்ளவில்லை. சம்பந்த முதலியாரும் அவரைப் போன்று சொர்ணலிங்கமும், பெண்கள் வேடத்தில் ஆண்களை நடிக்கச் செய்தனர். இதனால் நாடகம் மத்தியதர வர்க்கத் தமிழர்க்கு ஏற்புடைத்தான ஒரு கலை வடிவமாயிற்று. ஆனால் கதை யமைப்பிலோ, கருத்து முனைப்பிலோ புதிய மாற்றமெதுவு மிருக்கவில்லை. மனோகரா, வேதாள உலகம், சபாபதி போன்ற நாடகங்களை இவர்கள் மேடையேற்றினர். ஷேக்ஸ் பியரின் நாடகங்களையும் தமிழ்ப்படுத்தி மேடையிட்டனர். அமலாதித்தன், வெனிஸ் நகர வணிகன் போன்ற நாடகங்கள் மேடையிடப்படலாயின. சமூகப் பிரச்சினைகள், தேசியப் பிரச்சினைகள் இவர்களின் நாடகங்களில் இடம் பெறவில்லை.

பிற சனரஞ்சகக் காட்சிகள் இல்லாத அக்கால கட்டத்தில் நகர்ப்புறத் தமிழர் இந்நாடகங்களைப் பெரிதும் விரும்பிப் பார்த்தனர்.

ஆனால் மத்தியதர வர்க்க நிலைப்பட்ட தமிழ் நாடக வளர்ச்சி கலையரசு அவர்களுடன் நின்றுவிடவில்லை. இலங்கைப் பல்கலைக் கழகமும் அதன் விளைகளமாக அமைத்தது. பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் நாடகங்கள் பல்கலைக்கழக அரங்குக்காக எழுதப்பட்டு நடிக்கப்பட்டன. இவருடைய நாடகங்கள் முற்றிலும் சமூக உணர்வுடையன வாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்துக் குடும்பப் பிரச்சினைகள் சமூகப் பிரச்சினைகள் யாவற்றையும்

பேராசிரியர் கணபதிப் பிள்ளை தமது நாடகங்களில் அலசி ஆராய்ந்தார். பேராசிரியருடைய நாடகங்கள் 1936 முதல் மேடையேற்றப்பட்டு வந்தன.

பல்கலைக்கழக நிலையில் சுதேசச் சமூக உணர்வு நாடகத்தில் வளர்க்கப்பட்டு வந்த அதே காலகட்டத்தில் இன்னொரு முக்கிய மாற்றம் ஏற்படலாயிற்று. ஏறத்தாழ 1940-க்குப்பின்னர் தமிழ் திரைப்படங்கள் சனரஞ்சகமாயின. 1948 முதல் வேலைக்காரி முதல்—தமிழ் திரைப் படங்கள் சமூக மாற்றத்திற்கான சாதனமாக மாற்றப்படவே திரைப் படங்களைப் பிரதி பண்ணும் நாடகங்கள் தோன்றலாயின. இந்தக் காலகட்டத்தில் நாடகத்தைச் சுய திறனைக் காட்டுவதற்கான ஒரு வாயிலாகக் கொண்ட இளம் வயதினர் அந் நோக்குடன் நாடகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். சமூகத்தின் பிற ஆக்கியற்றுறைகளிலே ஈடுபடாது, ஈடுபட வாய்ப்பில்லாத, ஆனால் சுயதிறமை பற்றிய தன்னம்பிக்கை உள்ள இளைஞர்கள் நாடகம், சமூக மாற்றச் சாதனமாகத் தென்னிந்தியாவில் மாற்றப்பட்டதைக் கண்டு, இங்கும் அத்தகைய நெறியிற் செல்ல விரும்பினர். இத்தகையோருக்கு நாடகமும், நாடகத்திற்கான பூர்வாங்க முயற்சிகளும், நிறைவற்ற அன்றாட வாழ்க்கையினின்றும் தம்மை விடுவித்துத் தாம் வாழ விரும்பும் இலட்சிய உலகின் நெறிக்கேற்பக் கண நேரந்தானும் வாழ இடமளிப்பவையாய் அமைந்தன. இதனால் அத்தகையோர் நாடகங்கள் பல தயாரிக்கத் தொடங்கினர்.

இத்தகைய சூழ்நிலையிலேதான், 1956-க்குப் பின்னர், சிங்கள நாடக உலகில் புதியதொரு விழிப்பு ஏற்பட்டது. தமிழ் நாடகத்துறையில் இப்புதிய விழிப்புணர்வினை இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஏற்படுத்திற்று.

இப்புத்துலகம் காரணமாக மேனாட்டு நாடகப் பரிச்சயம் சமூகப் பிரச்சினையுணர்வு, தேசிய உணர்வுக்கடப்பாடு கொண்ட புத்திஜீவிகள் நாடக உலகிற்கு வந்தனர்.

இவ்வாறாக நவீன தமிழ் நாடகம் பன்முகப்பட்டு வளர்ந்தது.

இவ்வளர்ச்சி நெறிகள் எத்தகைய நவீன நாடக வகைகளை அன்றேல் நாடக வடிவங்களைத் தோன்றுவித்துள்ளன என நோக்குவோம்.

நாடகத்தை தனியொரு கலைவடிவமாகக் கொண்டு பார்க்கும் பொழுது மேலே குறிப்பிட்ட வளர்ச்சியால் மூன்று வகைப்பட்ட நவீன நாடகங்கள் தோன்றியுள்ளன என்பது தெரியவரும்.

(அ) வரலாற்றுக் கதைகளையும், ஐதீகக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள்.

(ஆ) யாழ்ப்பாண வாழ்க்கையைச் சித்திரிக்கும் பிரதேச மொழிவழக்கு நாடகங்கள் (சற்று விரிவான நிலையில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துச் சமூகப் பிரச்சனைகளைச் சித்திரிக்கும் நாடகங்களையும் இதனுள் அடக்க வேண்டிவரும்).

(இ) பொதுவான சமூகப் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் பொதுத்தர மொழி வழக்கினைக் கொண்ட நாடகங்கள்.

இவை மூன்றும் நவீன அரங்க உத்திநெறிகளைப் பயன் படுத்தி அரங்கேற்றப் படுகின்றனவெனினும், அரங்க நிர்மாணம், ஒலி, ஒளி அமைப்பு என்பனவற்றைப் பொறுத்த வரையில் முதலாவதே முக்கிய இடம் பெறுகின்றது. திரைப் படங்களின் பாதிப்பினை முதலாம், மூன்றும் வகை நாடகங் களிற் பெரிதும் காணலாம். நடிப்பு, மேடையமைப்பு முதலியனவற்றில் இவை திரைப்படப் பாணிகளைப் பின்பற்றுவது கண்கூடு. இவ்விருவகை நாடகங்களிலுமே நாடக எழுத்துப் பிரதி பற்றிய பிரக்ஞை அதிகம் காணப் படுகின்றது. ஆயினும் பொதுவாக இவ்விருவகை நாடகங் களிலுமே பேச்சிலும் பார்க்கக் காட்சிக்கே முக்கியத்துவம் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது. பாத்திரங்களின் உரையாடல் இலக்கிய வழிப்பட்ட உணர்ச்சி வெளிப்பாடாக அமையாது திரைப்படபாணியைப் பின்பற்றுவதாகவே உள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடகவகைகளுள் இரண்டாவதாகவுள்ள யாழ்ப்பான வழக்கு மொழி நாடகம் தனியே ஆராயப்பட வேண்டுவது. கொழும்பு நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கையிலும் பார்க்கச் சிறந்தது என்ற ஏகாதிபத்திய தாசானுதாச உணர்வு மேலிட்டு நின்ற காலத்தில் கிராமப் புறத்துக் கதாபாத்திரங்களைக் கேலிக்கிடமாகச் சித்திரிக்கும் ஒரு பண்பு நிலவியது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களின் சிந்தனை நெறியும், பேச்சு மொழியும், யாழ்ப்பாணச் சமூகத்தின் அடிப்படை முரண்பாடுகளை எடுத்துக்காட்டின. இப்பண்பு நாடகத்தை நகைச்சுவையுடையதாக்கிற்று. மேலும் பார்சி மரபுவழி வந்த ஸ்பெஷல் நாடகமரபிலோ நாட்டுக்கூத்து மரபிலோ, மொழிநடையைக் கொண்டு நடிகரிடையேயும், பார்ப்போரிடையேயும், ஓர் அந்நியோந்நிய உறவினை ஏற்படுத்த முடியவில்லை. நாடகத்தில் யாழ்ப்பாணப் பேச்சு மொழி கையாளப்பட்டதும் அந்த உணர்வு ஏற்பட்டது. ரசிகர்கள் தம்மை மறந்த நிலையில் நாடகத்தில் ஈடுபாடு காட்டும்பொழுது ஏற்படும் கலகலப்புணர்வும் இந்நாடகங்களிலே காணப்பட்டன.

மேற்குறிப்பட்ட பண்புகளின் தொழிற்பாட்டினைப் பூரணமாக விளங்கிக் கொள்ளாத சிலர், யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு என்பது சிரிப்பூட்டுதற்கானது என்ற தப்பபிப்பிராயத்துடன் பேச்சு மொழியுடன் அங்கசேஷ்டைகளையும் நையாண்டியையும் இணைத்துச் சிரிப்பினை ஏற்படுத்தினர். இதனுல் ஈழத்து வழக்கு மொழிப்பேச்சு நாடகத்தில் சிரிப்பூட்டுவதற்கான நிச்சயமான வழி என்னும் நிலை ஏற்பட்டது. இத்தகைய நாடகங்கள் தயாரிப்பு நிலையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தின எனக் கூறுதல் முடியாது. நாடக எழுத்துப் பிரதியும் இத்தகைய நாடகங்களில் முக்கிய இடம் பெறுவதில்லை.

நவீன நாடகங்களின் வளர்ச்சியை ஆராயும் பொழுது வானெலி என்னும் வெகுசனத் தொடர்பு சாதனத்தின் முக்கியத்துவத்தினையும் நாம் மனங் கொள்ளல் வேண்டும்.

செவிப் புலனுக்கேயுரியதும் தொழில் நுட்ப வழிவருவதுமான இச்சாதனம் நாடகங்களை ஒலிபரப்பத் தொடங்கிற்று. வானொலி வன்மையானதோர் சாதனமாக வளர வளர வானொலி நாடகங்களின் முக்கியத்துவம் வளரத் தொடங்கிற்று. வானொலியிலும் மேற்குறிப்பிட்ட மூன்று வகை நாடகங்களும் செவிப்புலனுகர்வுக்கேற்ற வகையில் தயாரித்தளிக்கப்பட்டன. முதலாம், மூன்றும் வகை நாடகங்களின் இலக்கியத்தரத்தை உயர்த்திய அளவுக்கு வானொலி இரண்டாம் வகை நாடகத்தினை இழி நிலைக்குத் தள்ளியது. மேடை நாடகங்களில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் தவறுக விளங்கப்பட்டுக் கேலி நாடகங்களுக்கு வழிவகுத்தது போன்று வானொலியில் ஒலிபரப்பப்பட்ட 'விதானையார் வீட்டில்' 'சிருப்பர் குடும்பம்' ஆகிய தொடர் நாடகங்கள் நையாண்டி நாடகங்கள் பலவற்றுக்கு வழி கோலின.

ஆயினும் இந்நிலை இப்பொழுது படிப்படியாக மாறி வருகின்றது. கேலி மொழி வழக்கு நாடகங்கள் படிப்படியாக குறைந்து வருகின்றன.

நாடகங்களைக் காட்சிக்கலையும் இலக்கியமும் இணைந்த கலை வடிவங்களாகப் படைக்கும் பண்பு முளை விடும் அதே நேரத்தில், நகைச்சுவை நாடகங்கள் சமூக முரண்பாடுகளை எடுத்துக்காட்டி முற்போக்கு வழியைக் கூறுவனவாகப் பரிணமிக்கத் தொடங்கியுள்ளன. முந்தியதற்கு உதாரணமாக 'கடுழியம்', 'வீடும் வெளியும்', 'காலங்கள் அழுவதில்லை' போன்றவற்றையும், பிந்தியதற்கு உதாரணமாக 'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு' போன்றவற்றையும் கூறலாம்.

இக்கட்டத்தில் கவிதை நாடகத்தின் நாடக முக்கியத்துவத்தைப்பற்றி ஆராயவேண்டுவதவசியமாகின்றது.

கவிதை நாடகம், வசன நாடகம் என்ற பிரிவு நாடக இலக்கியத்தின்பாற்பட்ட ஒரு பிரிவாகும். கவிதை நடையைக் கையாளும் பொழுது உணர்ச்சி முனைப்பும்,

எண்ண வெளிப்பாட்டுச் செறிவும் முரண்பாட்டுச் சித்தரிப்பில் தெளிவும், உணர்வுத் தாக்கமும் அதிகம் ஏற்படுகின்றன. (ஏற்படல் வேண்டும்) ஆனால் அதே வேளையில் இது உயர்ந்த ரசனை மட்டத்தை வேண்டி நிற்கும்.

நவீன நாடகங்கள் நாடெங்கணும் வரவேற்கப் படுகின்றனவா எனும் பிரச்சினையும், நாடகத்தை மக்கள் வெகுசனத் தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்து கின்றார்களா எனும் பிரச்சினையும் எழுவது இயல்பே.

நாடகத்தை தொழில் முறையாகக் கொண்டுள்ளோர் தொகையை ஆராயின் மரபுவழி நாடகத்துறையிலுள்ளோர் தொகை கூடுதலாகவும், நவீன நாடகத் துறையிலுள்ளோர் தொகை குறைவாகவும் காணப்படும். தொழில் முறையாக இயங்காத நவீன நாடக இயக்கம் பெருவெற்றிகளை ஈட்ட முடியாது. எமது சமுதாய அமைப்பில் விருப்பு முயற்சிகள் வரையறுக்கப்பட்ட நன்மைகளையே தருவனவாகவுள்ளன.

கருத்துக் கடப்பாடும், ஆர்வ உத்வேகமும் இல்லாத தொழில் முறை நடிகர்களால் நாடகக்கலை நிலைகுலையுமே தவிர வளராது. இவ்விரு உண்மைகளையும் எடுத்து விளக்கு வதற்கு ஈழத்துத் தமிழ் நாடக உலகிற் போதிய உதாரணங்கள் உள.

★

7

# யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் 'யாழ்ப்பாணத்து மனிதன்' என்பவன், தனிப்பட்ட ஒரு கருத்துருவாக—கோட்பாடாகக் காணப்படுகிறான். இலங்கையின் பிற மக்கட் குழுவினரிலிருந்து சுலபமாகப் பிரித்தறியக் கூடிய பண்புகளையும், குணநெறிகளையும் கொண்டவனாக இவன் கருதப்படுகின்றான். இலங்கைத் தமிழரது சமீபகால அரசியல், சமூக வாழ்க்கை காரணமாக, இவனது தனித்துவத்தையும், மற்றவர்களினின்று பிரிநிலைப்பட்டு நிற்கும் பண்பையும் அழுத்திக் கூறும் பண்பு இப்பொழுது சிறிது குறைந்துள்ளதெனினும், சமூகவியலாளர் நோக்கில் இவன் தனிப்பட்டவொரு 'பிரகிருதி' யாகவே இன்னும் உள்ளான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. யாழ்ப்பாணத்து மனிதனின் கிடுகு (வேலி)த் திரை அவனை மற்றவர்களிடமிருந்து

பிரித்துவைக்கின்றது என்ற குற்றச்சாட்டு இன்னும் முற்றாக நிராகரிக்கப்படவில்லை.

இந்த உண்மையை உணர்ந்து அந்த 'மனிதனை'—சமூகப் பிராணியை அவன் இயற்கைச் சூழல் எனும் பின்னணியில் வைத்து ஆராய்வது முக்கியம். யாழ்ப்பாணத்து மனிதனின் வளர்ச்சியில் ஈடுபாடுடையவர்களும், யாழ்ப்பாணத்து மனிதனை அறிய விரும்புபவர்களும் இம்முயற்சியிலிறங்க வேண்டுவது அத்தியாவசியமாகும். அரசியல்வாதி முதல் இலக்கிய ஆர்வலர் வரை யாவருக்கும் இப்பணி முக்கியமான தாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணத்து மனிதனின் வாழ்க்கை முழுவதையும் சமூகவியல், மனிதவியல் நெறிப்படி நோக்கிக்கண்ட ஆராய்ச்சிகள் மிகச் சிலவே. மனிதவியல் நெறிசார்ந்த ஓரிரு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன வெனினும் அவை பூரணமானவையன்று. உள்ளவைதானும் எல்லோரும் படித்தறியக்கூடிய அளவுக்குச் சுலபமாகப் பெறக் கூடியனவாக இல்லை. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு விளங்கும் அரசியற் கட்சிகள் கூட இத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அத் தகைய ஆராய்ச்சிகள் அவ்வப்பயில் நெறிகட்கியையச் செய் யப்பட வேண்டியவை. (சிங்கள மக்களைப் பற்றி இத்தகைய ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.)

எனினும், ஒன்றும் வாய்ப்பாக இல்லையே என்பதற்காகத் தொடர்ந்து வாளாவிருக்காது இத்துறையில், சிந்தனை தூண் டப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் வகையில், பொதுப்படையாக, யாழ்ப்பாணத்து வாழ்க்கையின் சமூக வியற் பின்னணியைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட் டுரையின் நோக்கமாகும். இச் சஞ்சிகையின் தேவைகட் கியையக் கருத்துக்கள் பொதுப்படையாகக்கூறப்படுகின்றன வெனினும், அவை சான்றுகளுடன் கூடியவையே.

இலங்கைத் தமிழர் எனும்பொழுது இலங்கையில் வாழும் தமிழ் இனத்தவர் எல்லோரையும்—கிழக்கு மாகா ணத்தில் வாழ்பவர்கள், மேற்கு வட மேற்கு மாகாணங்

களில் வாழ்பவர்கள் பிற மாகாணங்களில் வாழ்க்கை நடத்தும் தமிழர்கள்—குறிப்பிடவேண்டுமென்பது உண்மை யெனினும், இந்நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை மயினத்தினராகிய சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், இலங்கைத் தமிழர் என்ற கோட்பாடு இலங்கையின் வட பாகத்தில் வாழும் தமிழர்களையே குறிப்பிடுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையே. இதன் காரணமாக கிழக்கு மாகாணத் தமிழரிடையே நிரந்தரமான ஒரு மனக் காழ்ப்பு உண்டென்பதும் உண்மையாகும். சிங்கள மக்களின் இக்கருத்து எத்துணை பொருத்தமானது என்பது பிரச்சினை அன்று; கருத்து இதுவே என்பதுதான் முக்கியம்.

சிங்கள மக்கள், தாம் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களிலுள்ள தமிழர்களைக் கொண்டே இக்கருத்தினைப் பெற்றுள்ளனர். இக்கருத்து இந்நூற்றுண்டின் மூன்றும் நாலாம் சகாப்தம் முதல் நிலவிவருகின்றது. மொழியால், நடையுடைபாவனைகளால், முயற்சி நெறிகளால் வேறுபட்ட இத்தமிழரைச் சிங்கள மக்கள் சுலபமாக இனங்கண்டுகொண் டனர். சிங்கள மக்கள் அறிந்த யாழ்ப்பாணத்தார் இருதரப் பட்டவர்கள். ஒரு குழுவினர் சிங்களப் பிரதேசங்களில் வியாபாரம் செய்தவர்கள்; செய்பவர்கள் (இப்பொழுது இத் தொகை மிக மிக அருகியுள்ளது) மற்றையோர் அரசாங்க உத்தியோகத்தர்கள். உயர்நிலை அதிகாரிகளாக மாத்திர மல்லாது, பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நடுநிலை அதிகாரிகளாகவும் யாழ்ப்பாணத் தமிழர்கள், சிங்களப் பிரதேசங்களிற் கடமையாற்றி வந்தனர். சுகா தாரப் பரிசோதகர், ஓவர்சியர், புகையிரத நிலைய அதிபர் தபாற்கந்தோர் அதிபர் போன்ற பதவிகள் வகித்துவந்தோர் பலர். பொதுசனத் தொடர்புடைய பதவிகளை வகித்து வந்தமையால், இவர்கள், கிராமப்புறச்சிங்கள மக்களிடையே அந்நிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஆட்சியின்வீசுகரங்கள் என மதிக்கப்பட்டமை ஆச்சரியமான ஒன்றன்று. பதவிநிலை காரணமாக மாத்திரமல்லாது, பதவியை வகித்த வர்கள், தாம் அரசாங்கத்தின் கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள் என்ற எண்ணங் காரணமாக, தமது பதவி அதிகாரங்களைக்

கையாண்ட முறையும், அவ்வதிகாரங்களால் தமது 'சொந்த' நிலையை முன்னேற்றிக் கொண்ட முறையும் இவர்களைமேலும்அம்மக்களிடமிருந்து அகலப்பிரித்திருந்தது. யாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது இவ்வுத்தியோகத் தர்கள், வியாபாரிகளின் பண்பாட்டு வேறுபாடே. தாம் தொழிலாற்றும் பிரதேச வாழ்க்கையுடன் இணைந்து செல்ல முடியாத அளவுக்கு மொழி, மதம், கண்ணோட்டங்கள் இவர் களைப் பாரதீனப்படுத்தி வைத்திருந்தன. இவற்றால் அடி நிலைச் சிங்கள மக்கள் இவர்களை எப்பொழுதும் தம்மிலிருந்து வேறுபட்டவர்களாகவே கருதினர். இவை காரணமாக, இவர்கள் தங்கள் நலனில் ஆர்வமுடையவர்களல்லர் என்ற கருத்து அவர்களிடையே வேர்விட்டு வளர்ந்தது.

மத்திய நிலைச் சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாணத் தமிழரைப் பற்றிய கருத்துப்பதிவுக்கு காரண மாக இருந்தவர்கள் அரசாங்க உத்தியோகத்திலிருந்த தமிழர்களே. இந்நிலையில் ஆங்கில மொழி ஓரளவு பாலம் அமைக்கும் தொடர்பாக இருந்ததெனினும், முன் கூறிய பண்பாட்டு வேறுபாடு யாழ்பாணத்தவர்கட்குரிய ஒதுங்கு நிலை வாழ்க்கையும் அவர்களை நீருள் எண்ணெய்போன்று பிரித்துக் காட்டியது. 1930, 1940 ம் சகாப்தங்களில் இவ்வுணர்வு வேறுபாடு இருந்த அளவுநிலையினைலனரோல் எழுதிய 'அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறார்' (*He comes from Jaffna*) செனற்றர் (*Senator*) முதலிய நாட கங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆங்கில ஆட்சியில் உத்தியோகம் பெறுவதற்கு வேண்டிய ஆங்கிலக் கல்வி வசதி யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நன்கு வாய்த்திருந்தமையால் தமிழர்களைப் பற்றிய ஒரு விரோத உணர்வு அக்காலத்தில் இலைமறை காயாக நிலவிவந்தது. இன வாரிப் பிரதி நிதித்துவ வழி வளர்ந்து வந்த சனநாயகக் கட்சி முறை மத்திய தர நிலையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களைப் பிரித்து நோக்கும் பண்பையும் இறுதியில் இனவாதக்கோஷத்தையும் வளர்த்தது ஆங்கிலக் கோமாற்கே தாமென்றும் மீளா வாளாய் அவர் தம் கொய்மலர்ச் சேவடியிணையைக் குறுகி

நின்றுகொண்டு, அந்தப் பலத்தால் நாம் ஆர்க்கும் குடியல்லோம், சிங்கள மக்களை அஞ்சோம் என்ற ஏகாதிபத்திய தாசானுதாச நோக்கு தமிழ் உத்தியோகத்தர்களை சிங்களவரிடமிருந்து பிரித்தது. சுதந்திரத்திற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் எழுப்பப்பெற்ற 'ஐம்பதுக் கைம்பது' கோஷம், சுதந்திர இலங்கையில் சிங்கள மக்கள், தமிழர்—யாழ்ப்பாணத்தார்—பாற்கொண்ட நோக்குக்கு அடித்தளமமைத்தது. சிங்கள மக்கள் தமிழரின் அரசியல் நோக்கினை நன்கு விளங்காமலிருந்திருக்கலாம். ஆனல் ஆங்கிலமறியாத சிங்கள மக்களுக்கு எமது நிலையை நாமும் என்றும் விளக்கவில்லை அரை நூற்ருண்டு காலமாக இனவாரி அரசியலுக்குப் பழக்கப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர், இனக் கோஷங்களையே அரசியற் கோரிக்கைகளாக்கினர். ஐம்பதுக் கைம்பது போய்த் தமிழரசாயிற்று. அவர்களிடையேயும் அது தனிச் சிங்கள கோரிக்கையாயிற்று. சுதந்திரத்திற்குப் பின்வந்த தேசிய எழுச்சிகளின் அடிப்படை உண்மையை உணராது ஏகாதிபத்திய காலத்துக்கேற்ற சலுகைளை நாம் வலியுறுத்த வலியுறுத்தச் சிங்கள மக்களிடையே, நாம் என்றென்றுமே பிறத்தியார்தான் என்ற எண்ணம் வளர்ந்தது. முந்திய காலத்தில் நிலவி வந்த பண்பாட்டு வேறுபாட்டுணர்வு, இந்த அரசியல் வேறுபாட்டு உணர்வுடன் சங்கமித்து இனப்பிரிவினை வாதத்துக்கு இடமளித்தது. சிங்கள மக்களின் நோக்கில், தமிழர்கள் சிங்களவருக்குரிய நாட்டை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ள முயலுபவர்களாயினர். தென்னிந்தியாவின் அண்மையும் மொழியொருமையும் இப்பயத்தை அதிகரித்தது. யாழ்ப்பாணம் என்பது எங்கோ தூரத்தேயுள்ள இடமென்ற எண்ணம் படித்த சிங்கள மக்களிடையேகூட நிலவுவதை இன்றும் காணலாம்.

மொத்தப் பயனுகச் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத் தமிழரிலிருந்து பராதீனப்பட்ட நிலையினையடைந்தனர். அடிநிலைச் சமுதாய அமைப்பில், பண்பாட்டு நோக்கில், பல ஒற்றுமைகளிருந்தும் இவ்வேறுபாட்டுணர்வு வளர்ந்தது.

சுருக்கமாகக் கூறின், சிங்கள மக்களிடத்தே யாழ்ப்பாணத் தாரைப் பற்றி அரசியற் சந்தேகமும், குண நல ஒதுங்கு நிலையும் காணப்படுகின்றது.

சிங்கள மக்களின் நிலை இவ்வாறிருக்க இந்நாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தாரல்லாத பிற தமிழ் பேசும் இனத்தினரின் நிலையை ஆராய்வோம். இவர்களுள் முஸ்லிம்கள் முக்கியமானோர். இலங்கை முஸ்லிம்கள் மொழியில் ஒற்றுமைப்பட்டவர்களெனினும் மதத்தால், பண்பாட்டால் வேறுபட்டவர்கள். கிழக்கு மாகாணம், தென்மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகிய இடங்களிலே இவர்கள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். வடக்கில், மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் குறிப்பிடத்தக்க முஸ்லிம் சனத்தொகையுண்டு. முஸ்லிம்கள் இவ்வாறு பரவலாகக் காணப்பட்டாலும், தென், மேல் மத்திய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களே இந்நாட்டின் முஸ்லிம் வெகுசன அபிப்பிராயத்தை உருவாக்குபவர்களாகவும் வெளியிடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இம் முப்பெரும் பிரிவுகளில் வாழும் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள் பெரும் பான்மை யாழ்ப்பாணத் தமிழாசிரியர்களே. முஸ்லிம் பிள்ளைகளை முஸ்லிம் ஆசிரியர்களே பயிற்றவேண்டுமென்ற கோஷத்தின் காரணமாக இவர்கள் தமிழாசிரியர்களை... 'யாழ்ப்பாணத்து 'மாஸ்ரர்மாரை' படிப்படியாகத் தம் பகுதிகளில் குறைக்கவேண்டுமென்றனர். தங்களுக்குரிய கல்வி வசதிகள் பெருக்கப்பட்டுத் தாமும் அரசாங்க உத்தியோகங்களில் அமரவேண்டுமெனக் கோரினர். அவர்களிடத்தும் வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கத்தினரே இக்கோஷங்களைக் கிளப்பினர். தங்கள் பகுதிகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை பதச்சோறாக வைத்து இவர்கள் யாழ்ப்பாணத்தவர்களை மதிப்பிட்டனர். பல ஆசிரியர்களது சேவைகள் நன்கு மதிக்கப்பட்டதெனினும், பொதுவில், இவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் தம் முன்னேற்றத்துக்குத் தடையானவர்களென்றே கருதத் தொடங்கினார்கள். இக் கருத்து சரியானதா என்பதுபற்றி நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை.

அத்தகைய கருத்து நிலவிற்று என்பதை அறிந்து கொள்வது தான் முக்கியம். பண்பாட்டு வேறுபாடு, ஒதுக்கல் நிலை வாழ்வு, முஸ்லிம்களின் தமிழ்த் தரம் பற்றிய யாழ்ப் பாணத்து மாஸ்ரர் மாரின் கருத்து முதலியன இதற்குக் காரணமாக அமைந்தன. சரியோ பிழையோ வைரமான கருத்து ஒன்று நிலவத்தொடங்கிற்று. முஸ்லிம் மக்களின் இக் கருத்துக்கு அரசியற் காரணங்களும் உள. எவ்வாறுயினும் எண்ணியக் கருத்து உண்மையென்பதை மறுத்துவிட முடியாது.

தமிழ் பேசும் மக்களிற் பண்பாட்டில் வேறுபட்ட குழுவினரின் கருத்து இவ்வாறிருக்க தமிழினத்தவர் என்ற வரைவிலக்கணத்துள் வரும் பிற தமிழர்கள் யாழ்ப்பாணத்த வரைப் பற்றி என்ன நினைக்கின்ருர்களென்பதைப் பார்ப் போம். இத்தகைய பிரிவினருள் முதலில் இடம் பெற வேண்டியவர்கள் மலையகத்துத் தமிழராகிய தோட்டப் பகுதியினர். இவர்களுடன் தொடர்பு கொண்ட யாழ்ப் பாணத்தவர்களுள் முக்கியமானவர்கள் தோட்டப் பாட சாலை ஆசிரியர்களும், தோட்டங்களிற் கடமையாற்றுபவர் களுமே. அங்கொருவர் இங்கொருவராகச் சில யாழ்ப் பாணத்தவர்கள் தோட்டத்துரையாகவோ 'சின்ன துரை' யாகவோ இருக்கின்ருர்களெனினும், வணிக விவசாயத்தின் வர்க்க அடிப்படை காரணமாக அவர்களது வாழ்க்கை தோட்டத் தொழிலாளரது அன்று வாழ்க்கைக்கு அப் பாற்பட்டதாகவே இருக்கின்றது. தொழிலாளரது வாழ்க்கை யுடனிணைந்து காணப்படும் யாழ்ப்பாணத்தார் பாடசாலை ஆசிரியர்தான். தோட்டப்பகுதியினர் தமது ஆசிரியரின் தன்மை, நோக்கம் பற்றி எத்தகைய மதிப்பீட்டினை வைத்திருக்கின்ருர்களென்பதை அஞ்சலியில் வெளி வந்து கொண்டிருக்கும். 'மாறுதல்கள்' எனும் தொடர்கதையில் வரும் குறிப்பொன்று துலக்கமாக வெளிக்காட்டுகின்றது. 'ஒரு நூறு நூற்றைம்பதாவது (பிள்ளைகள்) வந்தால், இதை ட்றிபள் செஷனுக்கி இன்ஸ்பெக்டரை 'றெக்கமண்ட்' பண்ணச் சொல்லி எலிமண்டறி ஸ்கூல் லீவிங் சேடிபிக்

கட்டுடன் இருக்கும் மனுஷியைப் பிடித்துப் போடலாம்' என்று ஆசிரியர் அங்கலாய்த்துக் கொண்டு கிடக்கும் பொழுது...' (அஞ்சலி, ஒகஸ்ட் 71 இதழ் பக் 11) ஆசிரியர் பாடசாலைக்குச் செய்ய முனையும் முன்னேற்றங்கள் எவ்வாறு சுய நோக்குடனிணைந்துள்ளன வென்பதை இந்த மலையகத்து நாவலாசிரியர் நன்கு சித்தரிக்கின்றார். யாழ்ப்பாணத்தார் தம்முடைய நன்மைக்காகவே எதையும் செய்பவர்கள் என்ற எண்ணம் மலையகத்து மக்களிடையேயும் வேரோடியுள்ளது. அரசியற்றுறையிலும் யாழ்ப்பாணத்தார் தம்மைக் கை விட்டுவிட்டதாகவே மலையகத்துத் தமிழ் மக்கள் நம்பு கின்றனர்.

இந்திய வமிசாவழியினரான தமிழர் இத்தகைய கருத்தைக் கொண்டிருக்க நிரந்தர இலங்கைத் தமிழ்ப் பிரசைகளான கிழக்கு மாகாணத் தமிழர்களுடைய நோக்கும் வேறுபாடுடையதன்று. கிழக்கு மாகாணத் தமிழர்கள் வடபகுதித் தமிழர்களுடன் அந்நியோந்நியப் பிணைப்புக் கொண்டவர்களல்லரென்பது ஊரறிந்த உண்மை 'யாழ்ப்பாணிகள்' என்ற பதப் பிரயோகத்தின் உணர்ச்சிப் பகைப் புலத்தின் ஆழத்தை நாம் மறந்துவிடக்கூடாது. இலங்கைத் தமிழர்கள் என்ற முறையில் தமக்குரிய சில உரிமைகள் சலுகைகளைத் தாம் அநுபவிக்க முடியாத அளவுக் குத் தம்மை யாழ்ப்பாணத்தவர் தள்ளி வைத்துள்ளனர் என்ற விரக்தியுணர்வு மட்டக்களப்புத் தமிழ் மக்கள் பலரிடையே காணப்படுவது உண்மை. 1956க்குப் பின் இலங்கையின் அரசியலரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் யாழ்ப் பணத்தவரையும் கிழக்கு மாகாணத்தவரையும் இணைக்க உதவியுள்ளது, உண்மையெனினும் மேற்கூறிய கருத்து தொடர்ந்து நிலவுகின்றது என்பது பலர் வெளியே எடுத்துச் சொல்லவிரும்பாத உண்மையாகும். அரசாங்க ஊழியர்கள், வர்த்தகர்கள் முதலியோரே இப்பகுதி மக்களுடன் முக்கிய தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத்தவராவர். வடபகுதித் தமிழருக்கும் இப்பகுதிகளுக்கு அரசியலில் ஒருமைப்பட்ட கருத்தில்லை என்பதைப் பொதுத்தேர்தல்கள் பலமுறை நன்கு

எடுத்துக்காட்டியுள்ளன. இங்கும் நாம் யாழ்ப்பாணத்தார் பற்றிய கருத்தின் நியாய அநியாயங்களை ஆராயவேண்டியது இல்லை; கருத்து உள்ளது எனும் உண்மையே முக்கியமாகும்.

இவ்வாறு பார்க்கும் பொழுது வடபகுதியில் வாழும் தமிழர்கள் மாத்திரமே தனியொரு குழுவினராகக் கருதப் படுகின்றனர் என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் நிலைமை அதுவன்று. வடபகுதியிலுள்ள தமிழ் வன்னிப் பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தவருக் கெதிரான ஓர் உணர்வு உண்டு. வன்னிப் பகுதியின் வளத்தை யாழ்ப்பாணத்த வர்கள் சூறையாடுகின்றனர் என்றவொரு அபிப்பிராயம் அப்பகுதியில் நிலவுகின்றதென்பதும், அவ்வுணர்வைப் பயன்படுத்தி அங்கு வாழ்கின்ற யாழ்ப்பாண மக்களை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் இன்று எம்மிற் பலர் குறிப்பிட விரும்பா உண்மையாகும்.

இவ்வாறு இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரிவினரும் யாழ்ப்பாணத்தவரைக் குற்றஞ் சாட்டுகின்றனர். இவற்றுக் கிணையாக யாழ்ப்பாணத்தவர்களும் மேற்கூறிய பிரி வினர் ஒவ்வொருவருக்கெதிராகவும் கூறும் குறைகள் உள்ளன. ஆனால் அவ்வப் பிரிவினரைப் பற்றி நாம் இங்கு ஆராயாததால் இவ்விடத்து நாம் அவற்றை எடுத்துக் கூறவோ ஆராயவோ வேண்டிய அவசியமில்லை.

ஆகவே, நாம் இப்பொழுது யாழ்ப்பாணக்குடா நாட்டுள் வந்துவிடுகிறோம். குடா நாட்டில் வாழ்பவர்களே உண்மையான யாழ்ப்பாணத்தவர்கள் என்ற நிலையை எய்தி விடுகிறோம். இது உண்மையான நிலைமையா என்பதை இனி ஆராய வேண்டும்.

யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் தமிழர்களும் ஒரு சில முஸ்லிம்களும் வாழ்கின்றனர்.

இவர்களுள் முஸ்லிம்கள் உண்மையான 'யாழ்ப்பாணத் தமிழராக, யாழ்ப்பாணத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படுவ தில்லை. எனவே நாம் தமிழர்களைத்தான் எடுத்துக்கொள்ளல் வேண்டும். இந்த நிலையிலாவது ஒருமை உணர்வும்

கூட்டுணர்வும் நிலவுகின்றதா என்பதைப் பார்த்தல் வேண்டும். இக்கட்டத்திற்றுன் யாழ்ப்பாணத்தின் அக முரண்பாடுகள் தென்படத் தொடங்குகின்றன. அதாவது சமயமும் சாதியும் இவ்விடத்திற்றுன் முக்கிய பிரிவினைச் சக்திகளாக முகிழ்த்து நிற்கின்றன.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் கிறித்தவர்களை 'வேதக்காரர்' என்றும் சைவர்களைத் 'தமிழர்கள்' என்றும் குறிப்பிடும் மரபொன்றுண்டு. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் கிறித்தவர்கள் உள்ளனரெனினும், கிறித்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் கலாசார வாழ்வினின்றும் ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மை மக்கள் சைவ மதத்தவராதலால், மதம் மாற்றப்பட்டவர்களான கிறித்தவர்கள் சைவர்களினின்றும் ஒதுங்கி வாழுமாறு கிறித்தவ மத போதகர்களால் ஊக்கப்படுத்தப்பட்டு வந்தமை வரலாற்று உண்மையாகும். கிறித்தவர்களையும் றேமன் கத்தோலிக்க வேதத்தினர் எனவும் புரோட்டஸ்தாந்து வேதத்தினர் எனவும் வகுக்கலாம். இவர்களுள் பண்பாட்டொதுக்கம் கத்தோலிக்க வேதத்தினரிடையிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. உயர் சாதியினருள்ளும் கத்தோலிக்கர் பலருள்ளனரெனினும் உயர் சாதியினரல்லாதவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினருமே பெரும்பான்மையினர். மேற்குறிப்பிட்ட பண்பாட்டொதுக்கத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆயினும் அவர்களது மத உணர்வே இவ் வொதுக்க நிலைக்கு முக்கியமான காரணமாகும். யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக்காலம் வரை இம்மத ஒதுக்கீட்டுணர்வு அடிதடி சண்டை நிலையை எய்தி நின்றதென்பதும் வரலாற்றுண்மை. புரோட்டஸ்தாந்தப் பிரிவுகளுள் வருபவர்கள் பெரும்பான்மையும் உயர் சாதியினராகக் காணப்படுவது கண்கூடு. ஒல்லாந்த, ஆங்கில ஆட்சிக் காலங்களில் மதம் மாற்றப்பட்டவர்களாதலால் இவர்கள் பெரும்பாலும் உத்தியோகத்தினராகவே உள்ளனர். கமவாழ்க்கையை தனிப் பொருளாதார முயற்சியாக மேற்கொண்டுள்ள

புரோட்டஸ்தாந்தினர் மிகமிகச் சிலரே. உண்மையில் அத்தகையோர் இல்லையென்றே கூறலாம். இவர்களே யாழ்ப்பாண வாழ்க்கையில் 'மேனாட்டு நெறிமாற்ற முகவர்' களாக (*Agents of Westernisation*) விளங்கிவந்துள்ளன ரென்று கூறலாம். இதன் காரணமாக இவர்கள் தேசிய வாழ்வுடன் இணையாதவர்களென்ற குற்றசாட்டு ஓரளவு நிலவிவருகின்றது. புரோட்டஸ்தாந்துக் கிறித்தவர்களும், ரோமன் கத்தோலிக்கர்களும் தமது மதங்காரணமாக (இம் மதத்தினர் உத்தியோக இடங்களிலும் காணப் பட்டதால்) யாழ்ப்பாணத்துக்கு வெளியே, சிறப்பாகக் கொழும்பில் பிற மக்களுடன்—அதாவது தம்மதங்களைச் சார்ந்த பிற இனத்தினருடன்—இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்கள் தாம் யாழ்ப்பாணத்துச் சைவமக்களிலும் பார்க்க விரிந்த மனப்பான்மை உடையவர்கள் என்று கருதிக் கொள்துவண்டு. உத்தியோகங் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தின் தொடர்பற்றுப் போனவர்களின் தொகையை எடுத்தாராய்ந்தால் அத்தகையோருள் கிறித்தவர்களே அதிகமானோர் என்பது தெரியவரும். இத்தகைய பண்பியற் காரணங்களால் யாழ்ப்பாணத் தாருள்ளும் கிறித்தவர்கள் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டுமே நிற்கின்றனர்.

மீதியாக உள்ளவர்கள் சைவ மக்களே. சைவமக்கள் என்ற நிலையில் வைத்துப்பார்க்கும் பொழுது சாதி பேதம் முக்கிய இடம் வகிப்பதைப் பார்க்கின்றோம்...சைமன் காசிச் செட்டி என்பவர் 1834-இல் தாம் வெளியிட்ட *The castes, customs, Manners and Literature of the Tamils* (தமிழரின் சாதி, சம்பிரதாயங்கள், இலக்கியம்) எனும் நூலில் ஏறத்தாழ 65க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் பல சாதிகள் இன்றைய கணக்கீட்டில் இடம்பெற முடியாதவை என்பதுண்மையே. சமூக அதிகார நிலையினைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணத்துச் சாதிக்குழுக்களை மூன்று பிரிவாக வகுக்கலாம்:—

(அ) உயர் சாதியினர்

(ஆ) உயர்சாதியல்லாதார்

(இ) குடிமக்கள்

உயர் சாதியினருள் இன்று முக்கிய இடம் பெறுவோர் வெள்ளாளரே. ஒல்லாந்தர் காலத்தில் அகம்படியார், மடப் பள்ளியார், வெள்ளாளர் முதலியோர் உயர்சாதியினராகக் கருதப்பட்டுவந்தனர். பிராமணர் மிக உயர் சாதியின ரெனினும் யாழ்ப்பாணத்து வாழ்க்கையில் அதிகார மேன்மை உடையவர்கள் வெள்ளாளரே.

நட்டுவர், செட்டியார், சேணியர், கைக்கோலியர், தட்டார், கொல்லர், திமிலர், முக்குவர் முதலியோர் (இப் பட்டியல் பூரணமானதன்று) உயர்சாதியல்லாதோர் எனக் கருதப்படுகின்றனர். பொதுப்படையாகக் கூறினல், விவசாய வாழ்க்கையை மேற்கொள்ளாதவர்கள் இப் பிரிவினுட் கொண்டுவரப்பட்டனர் என்று கூறலாம்.

"கரையார்" என அழைக்கப்பெறும் மீனவக் குடியினர் வெள்ளாளர்களால் தமக்குச் சமமானவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை யெனினும், இவர்கள் சம அந்தஸ் துடையவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

மூன்ருவதாக உள்ள குடிமக்கள் குழுவினர் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் சிறப்பமிசமாவர். கோவியர், நளவர், பள்ளர், சாண்டார், சிவியார் என்போர் குடிமக்களென ஒல்லாந்தரால் கணக்கிடப்பட்டனர். இவர்கள் வெள்ளாளரின் விவசாய வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அவர்களின் அடிநிலை மக்களாக நடத்தப்பட்டு வந்தனர். குடிமக்கள் என்போர் வெள்ளாள மக்களுக்குக் குடும்ப ஊழியம் செய்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் பொதுப்படையான அதிகார வரன் முறை இதுவே. எனினும், இடத்துக்கிடம், காலத்துக்குக் காலம் உயர்வு தாழ்வு நோக்க மாற்றமுற்றே வந்தது. இது உயர் சாதினரல்லாதோர் எனப்பட்டவர்கள் சம்பந்தமாகவே பெரும்பாலும் தொழிற்பட்டு வந்தது. எந்

நிலையிலும் அதிகார மேன்மையும் உயர்வும் வெள்ளாள ரிடத்தேயே இருந்து வந்தது.

பிராமணர்கள் யாழ்ப்பாணச் சாதியமைப்பில் அதிகார மேன்மையுடையவர்களாக இருக்கவில்லை. தமிழ் நாட்டின் சமூக அமைப்புக்கும் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்புக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இதுவாகும். தமிழ் நாட்டைப் போன்று, யாழ்ப்பாணத்திற் பிராமணர் நிலச் சொந்தக் காரர்களாக விளங்கவில்லை. யாழ்ப்பாணத்துப் பிராமணர் பெரும்பாலும் புரோகித வாழ்க்கையை மேற்கொண்டிருந்த மையே இதற்குக் காரணமாகும்.

சாதியமைப்பின் முக்கிய அமிசங்கள் சாதிக்குள்ளேயே திருமணஞ் செய்து கொள்ளல், குறைந்தோர் எனக் கருதப் படுவோருடன் சம ஆசனம், சம போசனம் வைத்துக் கொள்ளாமை, அடிநிலைச் சாதியினர் எனக் கருதப் படுவோரை கோயில் முதலிய இடங்களுக்குள் புகவிடாமை என்பனவாகும். இவற்றுள் திருமணந் தவிர்ந்த மற்றையவை உண்மையில் அந்தஸ்துச் சின்னங்களாகவே தொழிற் பட்டன.

யாழ்ப்பாணத்துப் பொருளாதார சமூக வாழ்க்கையில் வெள்ளாள மேலாண்மை யாழ்ப்பாண வரலாற்றின் ஆரம்ப காலம் தொட்டே காணப்படும் ஒரு பண்பாகும். யாழ்ப்பாணத்தில் எவ்வாறு குடியேற்றம் நடந்தது என்பதைக் கட்டுக்கதை உருவில் தெரிவிக்கும் இலக்கியச் சான்றுகளை (யாழ்ப்பாண வைபவமாலை, போன்ற நூல்கள்) ஆராயும் பொழுது, யாழ்ப்பாணத்தில் முதன் முதலிற் குடியேறியவர்களுள் அதிகார நிலையிலிருந்தோர் விவசாய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்களே என்பது தெரியவரும். யாழ்ப்பாண அரசுக் காலத்திலும் இவர்களே பிரதேசப் பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றி வந்தனர் என்பது தெரியவரும். அந்நியராட்சிக் காலத்திலும் இவர்கள் அந்நியனைப் பேணி வந்தனர் என்பதும், அவ்வதிகார நிலையை விட்டுக் கொடுக்காது காலத்திற்கேற்றவாறு தமது கட்டுப்பாட்டதிகாரத்தைத் தம் கைகளினுள்ளேயே வைத்திருந்தனர் என்பதும் தெரியவரும். போத்துக்கேயர்

காலத்து ஒரு சிறிது மாறிற்றெனினும் இது பொதுப் படையான ஓர் உண்மையாகும்.

இவ்வரலாற்றுப் பண்பு காரணமாக, யாழ்ப்பாணத்து வரலாற்றைப் பின்னேக்காகப் பார்க்கும் சிலர் 'வெள்ளாளர் மேலாண்மைக் கோட்பாட்டினை' (The theory of Vellala domination) எடுத்துரைப்பர். போத்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியாவணங்களை ஆராயும்பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகின்றது. ஒல்லாந்தர் கால யாழ்ப்பாண ஆட்சி முறையை நன்கு எடுத்துக் காட்டுவதாக அமையும் சுவார் டெக்குறான் நினைவேட்டில் *Memoir Left by Hendrick Zwaardecroon* (1697) *Colombo* 1911) இப்பிரச்சினை பற்றிய குறிப்புக்காணப்படுகின்றது. ஒல்லாந்தார் ஆட்சிக்காலத்தில், வெள்ளாளர் மற்றைய சாதியினரை அடக்கி வந்தனர் என்றும், தாழ்ந்த சாதியினர் தமக்கெதிராக முறைப்பாடுகள் சமர்ப்பிக்க முடியாத வண்ணம் அடக்கி வைத்திருந்தன ரென்றும் அந்நிலைமையைத்தான் மாற்றியமைக்க முனைந்த தாகவும் கூறியுள்ளார். பன்னெடுங்காலமாக இருந்துவரும் வெள்ளாள மேன்மைக்கு இவர்கள் இடங்கொடுத்து வந்தனர் என்பது 1661இல் எழுதப்பட்ட ஓர் அறிவுறுத்தக் குறிப்பிலிருந்து பெறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முக்கிய தமிழ்ப் பிரதானிகள் புரட்டொஸ்தாந்து மதத்தைத் தழுவியிருந்தனரென்பது அவர்களது பெயர்களால் தெரியப் படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் இம் முறைமை தொடர்ந்து நிலவி வந்தது. ஒல்லாந்தர் காலத்தைப் போலவே, ஆங்கில ஆட்சியின் முற்கூற்றிலும், பெரும் பதவிகள் சாதியதிகாரவடிப்படையிலேயே வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியமைப்பை மாற்றி ஆங்கிலக் கல்வியைப் பதவி நுழைவுச் சீட்டாக்கிய பொழுதும் இந் நன்மையை இவர்களே பெற்றனர். கிறித்தவக் கல்லூரிகள் ஆங்கிலம் கற்பிப்பதால் தேசிய வாழ்வின் பண்பாட்டடிப்படை தகர்க்கப்படுகின்றதென்பதை உணர்ந்து செயற்பட்ட ஆறுமுக நாவலர் சாதிவாதியாக இருந்தாரென்பதை அவரது பல்வேறு கட்டுரைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

நாவலரின் சாதிவாதத்தினுல் உயர்சாதியரல்லாத சைவத் தமிழறிஞர் ஒருவர் நாவலரைக் கண்டிக்க நேர்ந்தமை இன்றைய இலக்கிய வரலாற்றேடுகளிற் காணப்படாத உண்மையாகும். தேசிய வாதம் கூட யாழ்ப்பாணத்தில் சாதியடிப்படையைப் பேணுவதற்கான ஓர் அம்சமாக மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பலர் கிறித்தவத்தைத் தழுவியமைக்குக் காரணம் உயர்சாதிச் சைவர்கள் அவர்களை அடக்கி வைத்திருந் தமையே என்பது கிறித்தவ ஏடுகளிலிருந்து புலனுகின்றது. சைவ ஆங்கிலப் பாடசாலைகளிலே தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்குப் பலகாலமாக இடம் வழங்கப்படாதிருந்தது. ஆரம்பப்பாடசாலைகள் கூட சாதியடிப்படையில் இயங்கி வந்ததென்பது பலரறிந்த உண்மை.

இவ்வாறு கல்வி வசதியினுல் உத்தியோக வாய்ப்புக்கள் பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து—யாழ்ப்பாணத்தவர்கள் என்ற பூரண உணர்வுடன், வெளிப்பிரதேசங்கட்குச் சென்றவர்கள் பெரும்பாலும் உயர்சாதிமக்களே. கிறித்த வர்களும் அவ்வாறு வெளியே சென்றனரெனினும் அவர்கள் முன்னர் குறிப்பிட்டவாறு, ஒதுக்கு நிலை வாழ்க்கையை மேற்கொண்டவர்களல்லர். ஏறத்தாழ 1945 வரையில் பெரும்பான்மையும் இந்நிலைமை காணப்பட்டது. வெள்ளாளர் அல்லாதாரும் சிறு தொகையினர் சென்ற துண்மையே ஆனுல் அவர்கள் பிற இடங்களிற்றும் யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட சாதியினரல்லர் என்று நிறுவவேண்டிய சமூகத் தேவையிருந்ததன் காரணமாக அவர்களும் பெரும்பான்மையினரின் வாழ்க்கை நெறியையே மேற்கொள்ள வேண்டியிருந்ததெனலாம்.

ஆனுல் இவ்வெள்ளாள மேலாண்மையானது உண்மை யில், யாழ்ப்பாணத்துப் பொருளாதார அமைப்பின் சமூக வெளிப்பாடே. எனவே இதனை வெறும் சாதிப் பிரச்சினை யாகக் கொண்டு எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுவதால் பிரச்சினையின் அடியுண்மையை அறியாது போய்விடும் ஆபத்து ஏற்படும்.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பு விவசாய மேன்மையடிப்படையில் நிறுவப்பட்டது. குடியேறிய நாள்முதல் அந்நியராட்சி வரை விவசாய நிலச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் வெள்ளாளரே. விவசாயப் பொருளாதார அடிப்படை காரணமாகவே குடி மக்கள் என்ற கோட்பாடு தோன்றிற்று. விவசாயத் தொழிலாளர்கள் குடிமக்களாயினர். நிலவுடைமைச் சமுதாயமாகவே இது இயங்கி வந்தது. யாழ்ப்பாணத்து அரசின் தோற்றத்தை ஆராயும் பொழுது பிரதேச நிலவுடைமையாளரிடையே மன்னன் சிறந்த நிலையை எய்தியிருந்தான் என்பது தெரியவரும். நிலவுடைமை யாட்சிக்குள்ள பன்முகப் படுத்தப்பட்ட அதிகார நெறி (*decentralised authority*) காரணமாக நிலவுடைமையாளரே அதிகாரிகளாகவுமிருந்தனர். யாழ்ப்பாணப் புவியியலமைப்புக் காரணமாக பிற தொழில்களும் அங்கு (அந்தப் பூர்வீக உற்பத்திச் சாதன நிலையில்) வளரமுடியவில்லை. இதனால் விவசாய நிலவுடைமையாளர் மிக முக்கிய இடத்தைப் பெற்றனர். யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமுதாயத்தின் சிறப்பமிசங்களில் மேற்கூறியது முக்கியமானது. (யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமுதாய அமைப்பின் சிறப்பமிசங்கள் பற்றி கணேசலிங்கனின் 'சடங்கு' எனும் நாவலுக்கான முன்னுரையிலும் சில கூறப்பட்டுள்ளன) இந்தச் சூழ்நிலையில் இயல்பாகவே பொருளாதார அரசியல், சமூக மேன்மைகள் இயைந்து கிடந்தன.

ஆனால் இப் பொருளாதாரம் விவசாயப் பெருக்கத்துக்கான வாய்ப்புக்களைக் கொண்டதன்று. நிலத்தினமைப்பு நீர்வசதியின்மை, சாதனமின்மை, போதாமை முதலியன காரணமாக இது வளரக் கூடிய ஒன்ருக இருக்க வில்லை. ஆனல் அன்றைய நிலையில் மீன் பிடித்தலைத் தவிர்த்த (மீன் பிடித்தலிலும் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்குத்தான் சிறிது சுயாதீனமிருந்தது. உள்ளூர் ஆறுகளில் மீன்பிடித்தோர் நிலைமை மற்றையோரைப் போன்றேயிருந்தது) மற்றைய தொழில்கள் யாவும் விவசாயத்தை நோக்கியதாகவே—அதை நம்பி வாழ்வனவாகவே இருந்தன. இதனுல் விவசாய நிலவுடைமையாளரின் சமூக கட்டுப்பாட்டதிகாரம் (*Social*

control) பூரணமானதாக இருந்தது. அதாவது அவர்களே மேன்மையாளராக இருந்தனர் மேனிலையிருப்பவர்களிடம் மேலாண்மை செல்வது இயல்பே.

பின்னர் அந்நிய ஆட்சி நிறுவப்பட்டபொழுதும் அடிப் படைப் பொருளாதார அமைப்பு மாற்றப்படாதிருந்தது.

ஆங்கில ஆட்சியின் கீழ் ஆங்கிலக் கல்வி, உள்ளதிலும் பார்க்க ஸ்திரமான ஒரு பொருளாதார பலத்தை—உத்தி யோகங்களை—அளித்தபொழுது அதனை மேல்நிலையிலிருந்த வர்களே பெற்றுக்கொண்டனர். தமிழ் நாட்டிலும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. அங்கு பிராமணர்கள் பெற்றுக் கொண்டார்கள். பொருளாதார, சமூக அதிகாரத்துக்குப் பழக்கப்பட்டவர்கள், இப்புதிய பொருளாதார, சமூக பலத்தை மற்றவர்களுக்குச் சுவற விடாது தடுத்தமையும் இயல்பே. இச்சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணத்து வெள்ளாளக் குடியினர் பலர் தாம் உத்தியோகம் பார்க்கத் தொடங்கி மேனிலையை வகிக்கத் தொடங்கிய பின்னர் தங்களது வறிய சுற்றத்தினர் அவ்வழியிற் சென்று மேனிலை எய்துவதைத் தடுத்தனர் என்னும் உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. பெரிய உத்தியோகத்தர் பலர் தமது வறிய சுற் றத்தினரின் குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி வசதியளிக் காததும், வசதியை மறுத்தும் வந்தனரென்பதும் யாழ்ப் பாணச் சமூகத்தை நன்கறிந்தோர் அறிவர். (தனிச் சிங்கள மொழி உபயோகம் வெள்ளாள மக்களின் மேலாண்மை யைத் தகர்த்து அவர்களையும் மற்றச் சாதியினரைப் போல் சலுகையற்றவர்களாக்கி விடுமென்பதற்காகவே சிங்கள மொழிச் சட்டத்தைத் தமிழர் சிலர் எதிர்க்கின்றனர் என ல. ச. ச. க. யைச் சேர்ந்த திரு காராள சிங்கத்தின் கருத்தை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ளல் நன்று.)

இவ்வாறாக, உத்தியோகத் தனியுரிமை மேனிலையிலி ருந்த மக்களிடமே சென்றமை வியப்புக்குரிய வொன்றல்ல.

வியாபாரத்தைப் பொறுத்தமட்டில், இத்தகைய கல்வி வசதிகள் பெருமளவிற் கிடையாத தீவுப்பகுதியினரே பெரும்பாலும் வெளிப்பிரதேசங்களில் கடைகள் நிறுவினர். இன்றும் இந்நிலைமை ஓரளவு தொடர்ந்து நிலவுவதைக்

காணலாம். காரை தீவு, புங்குடு தீவு முதலிய தீவுகளைச் சேர்ந்தவர்கள் இத்துறையில் முன்னோடிகளாக விளங்கினர்.

இத்தகைய விரிவற்ற சமுதாய அமைப்பிலுள்ளார் (*closed groups*) பிற இடங்களுக்குச் சென்றபொழுது மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியும், தம்முள்தாம் நெருங்கி இணைந்தும் வாழ்ந்தமையும், தமது நலன்களைத் தொடர்ந்து பேண முனைந்தமையும் இயற்கையே. உத்தியோகமும், வியாபாரமும் குடும்ப மேனிலைக்காகவும் அம் மேனிலையைப் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே. எனவேதான் அவர்கள் தாம் சென்ற பிற இடங்களிலும் அவ்வுணர்வுடன் வாழ்ந்துவந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பிற பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் அவ்வப்பிரதேச மக்களுடன் இணைந்து வாழாது சொந்தக் கிராமத்தையும், சொந்தக் குடும்பத்தையும் நோக்கியே வாழ்ந்து வந்ததும் இதனாலேயே.

கட்டுப்பாடுகள் நிறைந்த இக் கட்டுக் கோப்பிலிருந்து விடுபட்டு எப்படியோ கல்வி வசதிபெற்று மேனிலை எய்திய உயர்நிலையற்ற சாதியினருடன் (அவ்வாறு பெறுவதற்கான வாய்ப்புக்கள் அரசாங்கத்தால் என்றுமே வழங்கப்பட்டு வந்தன அவற்றைப் பயன்படுத்த முடியாதிருந்தமையாற்றான் மற்றைய சாதியினர் கீழ் நிலையிலிருந்தனர்) உயர் சாதியினர் பிறதேசங்களில் சமவாழ்வு நடத்தியும் வந்தனர். மீண்டும் அந்த விரிவற்ற சமுதாயத்துக்குத் திரும்பும் பொழுது, பழையபடி சம்பிராதாயங்களைப் பேணிவந்தனர். இதனால்தான் 'ஆணையிறவுக் கங்காலை எல்லாரும் ஒண்டு தான்' என்ற தொடர் வழக்கில் வரலாயிற்று (இக்கருத்து உண்மையான யாழ்ப்பாணத்தின் சமுக வெல்லை ஆணையிறவே என்பதையும் காட்டுகின்றது.)

யாழ்ப்பாணத்து மனிதனைப் பற்றி கூறப்படும் கருத்துக்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையுணர்ந்தும் யாழ்ப்பாணத்துப் பின்னணி இதுதான். (முன்னர் கூறியது போல, கருத்துக் கூறுபவர்களின் பின்னணியும் கருத்தின் தன்மையைத் தீர்மானிப்பதில் முக்கிய இடம் பெறும். ஆனால் இங்கு நாம் அதை ஆராயவேண்டுவதில்லை)

யாழ்ப்பாணத்துக்கேயுரிய சிறப்பான சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கான திறவு கோலும் இதுதான். சாதிப்பிரச்சினை, தமிழரசியற் கட்சிகளின் அமைப்பும் அவற்றின் நோக்கங்களும் பற்றிய பிரச்சினை ஆகியனவற்றை விளங்கிக்கொள்ள இக் கண்ணோட்டம் பயன்படும்.

பிற தமிழ்ப்பிரதேசத்தினர் மனதிலுள்ள யாழ்ப்பாண மேலாண்மை பற்றிய கருத்தையும் விளங்கிக்கொள்ள இது உதவலாம். மொழியொருமையிலும் பார்க்க தமது குறுகிய சமூக ஒருமையை யாழ்ப்பாணத்தார் விரும்பியமையே இதற்குக் காரணம். வன்னிப் பகுதி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள சமுதாய பொருளாதார அமைப்பு யாழ்ப்பாணத்து அமைப்பினின்றும் வேறுபட்டன வென்பதையும் மனத்திலிருத்திக்கொள்ளல் வேண்டும்.

ஆனால் நாம் இதுவரை பார்த்த இந்த 'யாழ்ப்பாணத்தான்' தொடர்ந்தும் மாருது இருக்கின்ருனா அல்லது மாறி வருகின்ருனா என்பதுதான் முக்கிய பிரச்சினையாகும்.

யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; ஏற்பட்டு வருகின்றன. இலவசக்கல்வி, தமிழ் மொழி மூலம்கல்வி, மாறிவரும் தேசிய அரசியல் நிலைமை, வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றிய உணர்வு, (இரகசிய வாக்கெடுப்பளித்த துணிவு), குடியேற்ற திட்டங்கட்குச் செல்லல், விவசாயமல்லாத பொருளதார முயற்சிகளின் வளர்ச்சி ஆகியன யாழ்ப்பாணத்து அகவாழ்க்கையை மாற்றி வருகின்றன.

இலவசக் கல்வியால் பல சாதியினரும் கல்விவசதியைப் பெறுகின்றனர். இதனுலும், தமிழ் மொழி மூலக் கல்வியினுலும் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் கல்வித் தனியுரிமை இப்பொழுது பூரணமாகத் தகர்க்கப்பட்டுள்ளது. சாதியமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கம்மாளச் சாதியினர் (artisans) ஒன்ருகவும் தாழ்த்தப்பட்டோர் ஒன்ருகவும் இணையுமளவுக்கு கலப்பு மணங்கள் நடைபெறு கின்றன. சாதி உயர்வு, தாழ்வுகளை மதிக்காத கலப்பு

மணங்களும் உண்டு. கற்றோரிடையே சாதிச் சம்பிரதாயங்கள் போற்றப்படுவது குறைகின்றது. ஆணையிறவுக்கப்பால் குடியேற்றங்கட்குச் செல்வதால், பிரதேச உணர்வு குறைகின்றது. புதிய பொருளதார முயற்சிகளால் சாதித் தொழிலடிப்படை அருகுகின்றது. அரசியல் மாற்றங்கள் காரணமாக தமிழ் பேசும் இனம் எனப் பிற பிரதேசத் தமிழரையும் முஸ்லிம்களையும் இணைத்துக்கொள்வதற்கான எண்ணம் வளர்க்கப்படுகின்றது. இவற்றாலேற்படும் மாற்றங்களால் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவேண்டுமென்ற தேசிய உணர்வு பிறக்கின்றது. தமிழ் பேசும் இனம் என்ற கோட்பாடு பொருளாதார அடிப்படையற்றவொன்றான படியால் அக்கோஷம் தற்காலிகமானதாகவே இருக்கும். தேசிய நிலையில் சமவாய்ப்பும், இன நேசமும் ஏற்படும் பொழுது இக்கோட்பாடு மறைந்துவிடும். இத்தகைய புதிய சூழ்நிலையில் தோன்றுபவன் பழைய யாழ்ப்பாணத் தானாக இருக்க முடியாது. இம்மாற்றங்கள் தோற்றுவிக்கும் புதிய தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இப்பொருளாதார அரசியல் மாற்றங்கள் பூரணமாக ஏற்பட்ட பின்னரே புதிய சமூக ஏற்பாடு தனிப்பட்ட கருத்துருவம் பெறும். அப்பொழுதுதான் பழைய 'யாழ்ப் பாணத்தான்' என்பவன் இல்லாது போய்விட்டான் என்ற உணர்வு ஏற்படும்.

நாளை வரவிருக்கும் சமுதாய மாற்றத்தின் முன்னோடி இன்றைய அறிவியக்கங்களே. வளர்ச்சிப் படியாகக் கொள்ளப்பட்ட தேசிய இலக்கியக் கோஷம் நாளை வருவதை உணர்த்துவதாகும். அந்த இலக்கியக் கோஷத்தை முன்வைத்த பெருமை, பிணக்கும் சுரண்டலுமற்ற புதியதொரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க விரும்பும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் எல்லோர்க்கும் உரியதாகும்.

102955

20 B.
3-54